## 12th Advanced Tamil Unit 1 Questions

### 1] கவிதையியல்

1) பேசுபவர், எதிர் வினையாற்றுபவர் ஆகிய இருவருக்குமான உரையாடல் வடிவம் எது?

A) கவிதை

B) கதை

**C) நாடகம்**

D) கட்டுரை

**விளக்கம்: கவிதை, கதை, நாடகம், கட்டுரை என்ற நான்கும் இலக்கிய வடிவங்களான உள்ளன.**

**பேசுபவர், எதிர் வினையாற்றுபவர் ஆகிய இருவருக்குமான உரையாடல் வடிவம் நாடகம் ஆகும்.**

2) சீன மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் எது?

A) கி.மு 1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை

B) கி.மு 5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 4ஆம் நூற்றாண்டு வரை

**C) கி.மு 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை**

D) கி.மு 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை

**விளக்கம்: கி.மு 1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை – இலத்தீன்**

**கி.மு 5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 4ஆம் நூற்றாண்டு வரை – கிரேக்கம்**

**கி.மு 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை –சீன மொழி**

**கி.மு 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை – சமஸ்கிருதம்**

3) சங்கப்புலவர்களில் பெண்பாற்புலவர்கள் எண்ணிக்கை எத்தனை?

**A) 49**

B) 47

C) 48

D) 51

**விளக்கம்: தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் என அறியப்படுகின்றன. பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவற்றைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பர். இவை தமிழ்மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் கூறுகளை அறிய உதவுகின்றன.**

**சங்கப்பாடல்களின் எண்ணிக்கை 2381. இவற்றுள் அகத்திணைப்பாடல்கள் 1862. புறத்திணைப்பாடல்கள் 519. சங்கப்புலவர் எண்ணிக்கை 473. பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 49.**

4) சிறுபஞ்சமூலத்திற்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) சிறுவழுதுணை

**B) பெருவழுதுணை**

C) நெருஞ்சி

D) பெருமல்லி

**விளக்கம்: மருந்து பொருட்களாலான நூல்கள்:**

winmeen.com

**சிறுபஞ்சமூலம் – நெருஞ்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி**

**ஏலாதி– ஏலம், இலவங்கம், நாககேசுரம், திப்பிலி, சுக்கு, மிளகு.**

**திரிகடுகம் – சுக்கு, மிளகு, திப்பிலி.**

5) புதிய ஆத்திச்சூடியை எழுதியவர் யார்?

A) ஔவையார்

B) பாரதிதாசன்

C) நாமக்கல் கவிஞர்

**D) பாரதியார்**

**விளக்கம்: புதிய ஆத்திச்சூடி – பாரதியார்**

6) சிலம்பின் சிறுநகை என்ற காப்பியத்தை எழுதியவர் யார்?

A) முடியரசன்

B) சுத்தானந்த பாரதி

**C) சாலை இளந்திரையன்**

D) புலவர் குழந்தை

**விளக்கம்: பழங்காப்பிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும், புதுக்கவிதை போன்ற புதிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும் இருபதாம் நூற்றாண்டில் படைக்கப்பட்டன. சாலை இளந்திரையன் சிலம்பின் சிறுநகை என்ற காப்பியத்தை இயற்றினார். இது பழங்காப்பிய மரபைப் பின்பற்றி படைக்கப்பட்டது.**

7) கவிதையின் வடிவம், உள்ளடக்கம், வெளிப்பாட்டு முறை என அனைத்துக் கூறுகளையும் விளக்குவது எது?

A) நன்னூல்

**B) தொல்காப்பியம்**

C) அகத்தியம்

D) தண்டியலங்காரம்

**விளக்கம்: இலக்கியவியல் பற்றிய பேச்சு என்பது தமிழில் செய்யுளாகவே தொடங்குகிறது. தொல்காப்பியச் செய்யுள் கவிதையின் வடிவம், உள்ளடக்கம், வெளிப்பாட்டு முறை என அனைத்துக் கூறுகளையும் விளக்குகிறது.**

8) திருப்பதிகம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) குலசேகராழ்வார்

B) தொண்டரடிப்பொடியாழ்வார்

C) பெரியாழ்வார்

**D) திருபாணாழ்வார்**

**விளக்கம்: குலசேகராழ்வார் – பெருமாள் திருமொழி**

**தொண்டரடிப்பொடியாழ்வார் – திருமலை, திருப்பள்ளியெழுச்சி**

**பெரியாழ்வார் – திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி**

**திருபாணாழ்வார் – திருப்பதிகம்**

9) தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களில் ஐவகை இலக்கணங்களைக் கூறுகிறது?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களில் ஐவகை இலக்கணங்களைக் கூறுகிறது.**

**1. எழுத்து அதிகாரம் – எழுத்துக்களின் ஒலி மற்றும் வரிவடிவங்களின் தோற்றம், வகை, அளவு, எழுத்துகள் சொல்லாக மாறுதல், சொற்கள் புணர்தல் போன்றவை விளக்கப்படுகின்றன.**

**2. சொல் அதிகாரம் – சொற்களின் வகை, உருபுகள், சொற்கள் இணைந்து தொடராக மாறுதல் போன்றவை விளக்கப்படுகின்றன.**

**3. பொருள் அதிகாரம் – நேர்ப்பொருள் தரும் சொற்றொடர் பற்றிப் பேசாமல் புனைவாக உருவாக்கப்படும் சொற்றொடர்களின் மொழியையும் அதன் பொருளையும் பேசுகின்றது.**

10) காலம், இடம், பாத்திரங்கள் ஆகிய மூவோர்மைகள் இலக்கியத்தின் அடிப்படைக் கூறுகள் என்பது யாருடைய வரையறை?

A) தண்டி

B) ஷேக்ஸ்பியர்

**C) அரிஸ்டாட்டில்**

D) தொல்காப்பியர்

**விளக்கம்: காலம், இடம், பாத்திரங்கள் ஆகிய மூவோர்மைகள் இலக்கியத்தின் அடிப்படைக்கூறுகள் என்பது அரிஸ்டாட்டிலின் வரையறை. இம்மூன்றிற்கும் இடையேயுள்ள வினையோர்மைகள் பற்றிய இக்கோட்பாடே உலக இலக்கியத்தின் அடிப்படை.**

11) படைப்பாளன் தன் கருத்துக்களை உணர்ச்சிகளோடு வெளிப்படுத்தும் வடிவம் எது?

**A) கவிதை**

B) கதை

C) கட்டுரை

D) நாடகம்

**விளக்கம்: கவிதை, கதை, நாடகம், கட்டுரை என்ற நான்கும் இலக்கிய வடிவங்களாக உள்ளன. இவ்வடிவங்களுக்குள் பல வகைகள் உள்ளன.**

**கவிதை – படைப்பாளன் தன் கருத்துக்களை உணர்ச்சிகளோடு வெளிப்படுத்தும் வடிவம்.**

**நாடகம் – பேசுபவர், எதிர் வினையாற்றுபவர் ஆகிய இருவருக்குமான உரையாடல் வடிவம்**

**கதை – படைப்பாளரே அனைத்துப் பாத்திரங்களையும் இயங்கச் செய்யும் வடிவம்**

**கட்டுரை – படைப்பாளன் தன் கருத்துக்களை முன்னிலைப்படுத்தி எழுதும் வடிவம்.**

12) தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகள் 34 ஆகும். இதில் பொருந்தாதது எது?

A) எச்சம்

B) தொன்மை

C) தோல்

**D) தளை**

**விளக்கம்: தொல்காப்பியர் செய்யுளின் உறுப்புகள் 34 என்று குறிப்பிடுகிறார்.**

**அவை, மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தொடை, யாப்பு, தூக்கு, மரபு, பா, நோக்கு, கூற்று, அளவு, திணை, கைகோள், கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு. வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.**

13) ஏலாதி என்ற அறநூலை எழுதியவர் யார்?

**A) கணிமேதாவியார்**

B) கூடலூர் கிழார்

C) முன்றுறையரையனார்

D) பெருவாயின் முள்ளியார்

**விளக்கம்: ஆசாரக்கோவை – பெருவாயின்முள்ளியார்**

**பழமொழி நானூறு – முன்றுறையரையனார்**

**ஏலாதி – கணிமேதாவியார்**

**முதுமொழிக்காஞ்சி – கூடலூர்கிழார்.**

14) பின்வருவனவற்றில் ஔவையார் பாடாத நூல் எது?

A) ஆத்திச்சூடி

**B) நீதிபேதம்**

C) கொன்றை வேந்தன்

D) நல்வழி

**விளக்கம்: ஔவையார் பாடிய நூல்கள்:**

**ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி**

**நீதி பேதம் – வேதநாயகர்**

15) கூற்றுகளை ஆராய்க.

1. டெல்லி சுல்தான்கள் படையெடுப்பின் காரணமாகத் தமிழகத்தில் இசுலாம் பரவியது.

2. இசுலாமியப் பாடல்கள் மொழிபெயர்ப்புப் பாடல்களாகவும், நேரடிப் பாடல்களாகவும் இருவகைகளில் பாடப்பெற்றன.

3. 17–ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேலைநாட்டவர் பெருமளவில் தமிழகத்திற்கு வருகைபுரிந்தனர். அவர்களுள் கிறித்துவ மதபோதகர்களும் அடங்குவர்.

4. தமிழில் கிறித்துவ இலக்கியங்கள் பல்கிப்பெருக காரணம், தமிழகத்திற்கு வந்த கிறித்துவ மதப்போதகர்களின் பன்மொழிப் புலமை, பல்துறை அறிவு மற்றும் தமிழின்வழி தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பியதே ஆகும்.

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

**C) 3 மட்டும் தவறு**

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: 15–ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேலைநாட்டவர் பெருமளவில் தமிழகத்திற்கு வருகைபுரிந்தனர். அவர்களுள் கிறித்துவ மதபோதகர்களும் அடங்குவர்.**

16) இராவண காவியம் என்ற காப்பியத்தை இயற்றியவர் யார்?

A) கவிமணி தேசிக விநாயகம்

B) கண்ணதாசன்

C) சுத்தானந்த பாரதி

**D) புலவர் குழந்தை**

**விளக்கம்: பழங்காப்பிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும், புதுக்கவிதை போன்ற புதிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும் இருபதாம் நூற்றாண்டில் படைக்கப்பட்டன. புலவர் குழந்தை எழுதிய இராவண காப்பியம் பழங்காப்பிய மரபைப் பின்பற்றி படைக்கப்பட்டவை.**

17) கூற்று: திரிகடும் என்ற நூலை எழுதியவர் கணிமேதாவியார்.

காரணம்: சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயைத் தீர்ப்பதால் இந்நூல் திரிகடும் எனப் பெயர் பெற்றது.

A) கூற்று சரி, காரணம் தவறு

**B) கூற்று தவறு, காரணம் சரி**

C) கூற்று, காரணம் இரண்டும்சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று.அதில் முதலாவதாக அமைந்த நூல் திரிகடுகம் ஆகும். இது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயைத் தீர்ப்பதால் இந்நூல் திரிகடும் எனப் பெயர் பெற்றது. 100 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்.**

18) ஏலாதிக்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

A) நாகசேசுரம்

B) திப்பிலி

**C) சிறுமல்லி**

D) இலவங்கம்

**விளக்கம்: மருந்து பொருட்களாலான நூல்கள்:**

**சிறுபஞ்சமூலம் – நெருஞ்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி**

**ஏலாதி – ஏலம், இலவங்கம், நாகசேசுரம், திப்பிலி, சுக்கு, மிளகு.**

**திரிகடுகம் – சுக்கு, மிளகு, திப்பிலி.**

19) கூற்றுகளை ஆராய்க.

1. சங்ககாலச் சமுதாயம் இயற்கை சார்ந்த சமுதாயமாக விளங்கியது.

2. சங்ககாலத்தில் திணைநிலைச்சமூகம் நிலைபெற்றிருந்தது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சங்ககாலச் சமுதாயம் இயற்கை சார்ந்த சமுதாயமாக விளங்கியது.**

**2. சங்ககாலத்தில் திணைநிலைச்சமூகம் நிலைபெற்றிருந்தது.**

20) இலத்தீன் மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் எது?

**A) கி.மு1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை**

B) கி.மு5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 4ஆம் நூற்றாண்டு வரை

C) கி.மு8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை

D) கி.மு4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை

**விளக்கம்: கி.மு 1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை – இலத்தீன்**

**கி.மு 5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 4ஆம் நூற்றாண்டு வரை – கிரேக்கம்**

**கி.மு 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை – சீன மொழி**

**கி.மு 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை – சமஸ்கிருதம்.**

21) படைப்பாளரே அனைத்துப் பாத்திரங்களையும் இயங்கச் செய்யும் வடிவம் எது?

A) கவிதை

**B) கதை**

C) கட்டுரை

D) நாடகம்

**விளக்கம்: கவிதை, கதை, நாடகம், கட்டுரை என்ற நான்கும் இலக்கிய வடிவங்களாக உள்ளன. இவ்வடிவங்களுக்குள் பல வகைகள் உள்ளன.**

**கவிதை – படைப்பாளன் தன் கருத்துக்களை உணர்ச்சிகளோடு வெளிப்படுத்தும் வடிவம்.**

**நாடகம் – பேசுபவர், எதிர் வினையாற்றுபவர் ஆகிய இருவருக்குமான உரையாடல் வடிவம்**

**கதை – படைப்பாளரே அனைத்துப் பாத்திரங்களையும் இயங்கச் செய்யும் வடிவம்**

**கட்டுரை – படைப்பாளன் தன் கருத்துக்களை முன்னிலைப்படுத்தி எழுதும் வடிவம்.**

22) புறவடிவத்தில் உள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் பா எத்தனை வகைப்படும்?

A) 2

B) 3

**C) 4**

D) 5

**விளக்கம்: செய்யுளியலில் ஒரு பாவின் உறுப்புகள் 34 என வரையறை செய்துள்ள தொல்காப்பியம் அடிகளின் அளவு, அடிவரையறை, உண்டாக்கப்படும் ஒலியளவு போன்றவற்றையும் விரிவாகப் பேசுகின்றது. அவற்றைப் பாக்களின் புறவடிவம் எனக் கொள்ளலாம். புறவடிவத்தில் உள்ள வேறுபாடுகளின் அடிப்படையில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என வகைப்படுத்தப்படுவதை இவ்வியல் வழி அறிகிறோம்.**

23) இளம்பூரனார் கீழ்க்காணும் எந்த நூலுக்கு உரை எழுதியுள்ளார்?

A) அகத்தியம்

B) தண்டியலங்காரம்

**C) தொல்காப்பியம்**

D) நன்னூல்

**விளக்கம்: இளம்பூரனார் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியுள்ளார். பாக்களின் புறவடிவத்தைச் செய்யுளில் கூறிய தொல்காப்பியர், அதன் உள்ளடகத்தைப் பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களில் கூறியுள்ளார். கவிதை எப்படி உருவாக்குவது? எப்படி வாசிப்பது? என்பதற்கான விரிவான பதில் தொல்காப்பியத்தில் கிடைக்கிறது.**

24) கூற்றுகளை ஆராய்க.

1. சங்க இலக்கியங்களின் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி2–ஆம் நூற்றாண்டு வரையான காலம் என்பர்.

2. ஐங்குநூற்றில் முல்லைத்திணைப் பாடல்களை எழுதியவர் பேயனார் ஆவார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சங்க இலக்கியங்களின் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2–ஆம் நூற்றறாண்டு வரையான காலம் என்பர்.**

**2. ஐங்குநூற்றில் முல்லைத்திணைப் பாடல்களை எழுதியவர் பேயனார் ஆவார்.**

25) தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகள் 34 ஆகும். இதில் பொருந்தாதது எது?

A) மெய்ப்பாடு

B) யாப்பு

**C) தோள்**

D) விருந்து

**விளக்கம்: தொல்காப்பியர் செய்யுளின் உறுப்புகள் 34 என்று குறிப்பிடுகிறார்.**

**அவை, மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தொடை, யாப்பு, தூக்கு, மரபு, பா, நோக்கு, கூற்று, அளவு, திணை, கைகோள், கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு. வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.**

26) கூத்தாற்றுப்படை என்று அழைக்கப்படும் நூல் எது?

A) பட்டினப்பாலை

**B) மலைபடுகடாம்**

C) முல்லைப்பாட்டு

D) நெடுநல்வாடை

**விளக்கம்: கூத்தாராற்றுப்படை என்று அழைக்கப்படும் நூல் மலைபடுகடாம் ஆகும். இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். இது புறம் சார்ந்த நூல் ஆகும்.**

27) கூற்றுகளை ஆராய்க.

1. தன்மனத்திற்குள் தோன்றும் அகநிலைப்பட்ட புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல். ஒருதலைக்காமம், பொருந்தாக்காமம் ஆகிய உணர்வுகளை உரிப்பொருளாகக் கொண்டு அகக்கவிதைகள் எழுதப்படுகின்றன.

2. புறவாழ்க்கை குறித்து எழுதப்படுவனவற்றைப் புறத்திணைகள் என்று தொல்காப்பியர் வரையறுத்துள்ளார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தன்மனத்திற்குள் தோன்றும் அகநிலைப்பட்ட புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல். ஒருதலைக்காமம், பொருந்தாக்காமம் ஆகிய உணர்வுகளை உரிப்பொருளாகக் கொண்டு அகக்கவிதைகள் எழுதப்படுகின்றன. இவற்றை அகத்திணைகள் என தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்**

**2. புறவாழ்க்கை குறித்து எழுதப்படுவனவற்றைப் புறவாழ்க்கை என்று தொல்காப்பியர் வரையறுத்துள்ளார்.**

28) அரிஸ்டாட்டில் பாத்திரங்களையும் அவற்றின் செயல்களையும் கீழ்க்காணும் எதனை மையப்படுத்தியே அமைத்துள்ளார்?

**A) முதற்பொருள்**

B) கருப்பொருள்

C) உரிப்பொருள்

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: முதற்பொருள் என்பதும் நிலமும் பொழுதும். இலக்கிய உருவாக்கத்தை நாடகத்தின் வழியாக விளக்கும் அரிஸ்டாட்டில் இவ்விரண்டையும் மையப்படுத்துகிறார். பாத்திரங்களையும் அவற்றின் செயல்களையும் முதற்பொருளை மையப்படுத்தியே அமைத்துள்ளார்.**

29) கூற்றுகளை ஆராய்க.

1. ஓரை என்றால் 'ஒலி எழுப்புதல்' என்று பொருள்.

2. ஓரை என்பது சங்ககால இளம் மகளிர் விளையாடிய விளையாட்டுகளில் ஒன்றாகும்.

3. இது ஆரவாரம் எழுமாறு ஆடப்படும் ஆட்டங்களைக் குறித்ததாகக் கொள்ளலாம்.

4. கடலலை பாயும் மணலிலும், ஆற்று மணலிலும், சேற்று நிலத்திலும், முற்றத்தில் பரப்பபட்ட மணலிலும் ஓரை விளையாடப்பட்டதைச் சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன.

A) 1, 4 சரி

B) 2, 3 சரி

C) 1, 2, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. ஓரை என்றால் 'ஒலி எழுப்புதல்' என்று பொருள்.**

**2. ஓரை என்பது சங்ககால இளம் மகளிர் விளையாடிய விளையாட்டுகளில் ஒன்றாகும்.**

**3. இது ஆரவாரம் எழுமாறு ஆடப்படும் ஆட்டங்களைக் குறித்ததாகக் கொள்ளலாம்.**

**4. கடலலை பாயும் மணலிலும், ஆற்று மணலிலும், சேற்று நிலத்திலும், முற்றத்தில் பரப்பபட்ட மணலிலும் ஓரை விளையாடப்பட்டதைச் சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன.**

30) தவறான கூற்றை தெரிவு செய்க

**A) அறமும், நீதியும் சங்க காலத்தில் போற்றப்பட்டன.**

B) கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடிய நூல் களவழி நாற்பது ஆகும்.



winmeen.com

C) சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட 18 நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன.

D) முதுமொழிக்காஞ்சி என்ற நூலை எழுதியவர் கூடலூர் கிழார்

**விளக்கம்: அறமும், நீதியும் சங்கம் மருவிய காலத்தில் போற்றப்பட்டன.**

**கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடிய நூல் களவழி நாற்பது ஆகும்.**

**சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட 18 நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன.**

**முதுமொழிக்காஞ்சி என்ற நூலை எழுதியவர் கூடலூர் கிழார்**

31) செய்யுளியலில் ஒரு பாவின் உறுப்புகள் எத்தனை என தொல்காப்பியம் வரையறை செய்துள்ளது?

A) 18

B) 24

**C) 34**

D) 48

**விளக்கம்: செய்யுளியலில் ஒரு பாவின் உறுப்புகள் 34 என வரையறை செய்துள்ள தொல்காப்பியம் அடிகளின் அளவு, அடிவரையறை, உண்டாக்கப்படும் ஒலியளவு போன்றவற்றையும் விரிவாகப் பேசுகின்றது. அவற்றைப் பாக்களின் புறவடிவம் எனக் கொள்ளலாம்.**

32) 100 வெண்பாக்களைக் கொண்ட மருந்து பெயர் கொண்ட அறநூலை எழுதியவர் யார்?

**A) நல்லாதனார்**

B) காரியாசான்

C) கணிமேதாவியார்

D) சமண முனிவர்கள்

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று.அதில் முதலாவதாக அமைந்த நூல் திரிகடுகம் ஆகும். இது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயைத் தீர்ப்பதால் இந்நூல் திரிகடும் எனப் பெயர் பெற்றது. 100 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்.**

33) படைப்பாளன் தன் கருத்துக்களை முன்னிலைப்படுத்தி எழுதும் வடிவம் எது?

A) கவிதை

B) கதை

**C) கட்டுரை**

D) நாடகம்

**விளக்கம்: கவிதை, கதை, நாடகம், கட்டுரை என்ற நான்கும் இலக்கிய வடிவங்களாக உள்ளன. இவ்வடிவங்களுக்குள் பல வகைகள் உள்ளன.**

**கவிதை – படைப்பாளன் தன் கருத்துக்களை உணர்ச்சிகளோடு வெளிப்படுத்தும் வடிவம்.**

**நாடகம் – பேசுபவர், எதிர் வினையாற்றுபவர் ஆகிய இருவருக்குமான உரையாடல் வடிவம்**

**கதை – படைப்பாளரே அனைத்துப் பாத்திரங்களையும் இயங்கச் செய்யும் வடிவம்**

winmeen.com

**கட்டுரை – படைப்பாளன் தன் கருத்துக்களை முன்னிலைப்படுத்தி எழுதும் வடிவம்**

34) திரிகடுகத்திற்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

**A) ஏலம்**

B) சுக்கு

C) மிளகு

D) திப்பிலி

**விளக்கம்: மருந்து பொருட்களாலான நூல்கள்:**

**சிறுபஞ்சமூலம் – நெருஞ்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி**

**ஏலாதி – ஏலம், இலவங்கம், நாகசேசுரம், திப்பிலி, சுக்கு, மிளகு.**

**திரிகடுகம் – சுக்கு, மிளகு, திப்பிலி.**

35) செவ்வியல் என்ற சொல்லை பிரித்து எழுதுக.

**A) செம்மை+இயல்**

B) செழுமை+இயல்

C) செவ்வை+இயல்

D) செ+இயல்

**விளக்கம்: உலகளவில் 'செவ்வியல்' என்ற பொருளில் 'கிளாசிசம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலச்சொல்லாக 'கிளாசிகஸ்' என்ற இலத்தீன் சொல் உள்ளது. தமிழில் செவ்வியல் என்பதன் மூலச்சொல் 'செம்மை' என்பதாகும். செம்மை, இயல் என்ற இரு சொற்கள் இணைந்து செவ்வியல் என்ற சொல் உருவானது.**

36) முதுமொழிக்காஞ்சி என்ற நூலை எழுதியவர் யார்?

A) கணிமேதாவியார்

**B) கூடலூர் கிழார்**

C) முன்றுறையரையனார்

D) பெருவாயின் முள்ளியார்

**விளக்கம்: ஆசாரக்கோவை – பெருவாயின்முள்ளியார்**

**பழமொழி நானூறு – முன்றுறையரையனார்**

**ஏலாதி – கணிமேதாவியார்**

**முதுமொழிக்காஞ்சி – கூடலூர்கிழார்.**

37) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) திருமுருகாற்றுப்படை

B) பொருநராற்றுப்படை

C) சிறுபாணாற்றுப்படை

**D) நெடுநல்வாடை**

**விளக்கம்: அகம்: குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை.**

**புறம்: திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தாற்றுப்படை), மதுரைக்காஞ்சி.**

38) பின்வருவனவற்றில் வேதநாயகர் பாடாத நூல் எது?

**A) நீதி சிந்தாமணி**

B) பெண்மதிமாலை

C) நீதிநூல்

D) நீதி பேதம்

**விளக்கம்: நீதி சிந்தாமணி – வேதகிரியார்**

**பெண்மதிமாலை, நீதிநூல், நீதிபேதம் – வேதநாயகர்.**

39) ஒரு பாவில் அல்லது கவிதையில் மூன்று கூறுகள் இடம்பெறுதல் சிறப்பு. அவற்றில் முக்கியமானது எது?

A) முதற்பொருள்

B) கருப்பொருள்

**C) உரிப்பொருள்**

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: ஒரு பாவில் அல்லது கவிதையில் மூன்று கூறுகள் இடம்பெறுதல் சிறப்பு. அவை**

**1. முதற்பொருள்**

**2. கருப்பொருள்**

**3. உரிப்பொருள்.**

**இம்மூன்றில் உரிப்பொருள் முக்கியமானது ஆகும்**

40) தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகள் 34 ஆகும். இதில் பொருந்தாதது எது?

A) புலன்

**B) திணை**

C) கேட்போர்

D) களன்

**விளக்கம்: தொல்காப்பியர் செய்யுளின் உறுப்புகள் 34 என்று குறிப்பிடுகிறார்.**

**அவை, மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தொடை, யாப்பு, தூக்கு, மரபு, பா, நோக்கு, கூற்று, அளவு, திணை, கைகோள், கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு. வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.**

41) விவேக சிந்தாமணி என்ற நூலை எழுதியவர் யார்?

A) உலகநாதர்

B) சிவப்பிரகாசர்

C) முனைப்பாடியார்

**D) பெயர் அறிய முடியவில்லை**

**விளக்கம்: விவேக சிந்தாமணியை எழுதியவர் பெயரை அறியமுடியவில்லை.**

**உலகநாதர் – உலகநீதி**

**சிவப்பிரகாசர் – நன்னெறி**

**முனைப்பாடியார் – அறநெறிச்சாரம்**

42) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) குயில்பாட்டு

B) கண்ணன்பாட்டு

C) பாஞ்சாலி சபதம்

**D) பாண்டியன் பரிசு**

**விளக்கம்: பழங்காப்பிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும், புதுக்கவிதை போன்ற புதிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும் இருபதாம் நூற்றாண்டில் படைக்கப்பட்டன.**

**கண்ணன்பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் – பாரதியார்**

**பாண்டியன் பரிசு – பாரதிதாசன்**

43) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) சமஸ்கிருதம்

B) இலத்தீன்

C) ஹீப்ரு

**D) குஜராத்தி**

**விளக்கம்: தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் போன்ற செவ்வியல் மொழிகள் அனைத்தும் எழுத்து வடிவத்தைப் பெற்ற பின்னரே செவ்வியல் இலக்கியங்களை உருவாக்கின.**

44) தமிழில் செவ்வியல் என்ற சொல்லின் மூலச்சொல் ____________ என்பதாகும்?

A) செழுமை

**B) செம்மை**

C) வளமை

D) வளம்

**விளக்கம்: உலகளவில் 'செவ்வியல்' என்ற பொருளில் 'கிளாசிசம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலச்சொல்லாக 'கிளாசிகஸ்' என்ற இலத்தீன் சொல் உள்ளது. தமிழில் செவ்வியல் என்பதன் மூலச்சொல் 'செம்மை' என்பதாகும்.**

45) கிரேக்க மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் எது?

A) கி.மு1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை

**B) கி.மு5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 4ஆம் நூற்றாண்டு வரை**

C) கி.மு8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை

D) கி.மு4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை

**விளக்கம்: கி.மு 1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை – இலத்தீன்**

**கி.மு 5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 4ஆம் நூற்றாண்டு வரை – கிரேக்கம்**

**கி.மு 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை – சீன மொழி**

**கி.மு 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை – சமஸ்கிருதம்**

46) பெருமாள் திருமொழி என்ற நூலை எழுதியவர் யார்?

**A) குலசேகராழ்வார்**

B) தொண்டரடிப்பொடியாழ்வார்

C) பெரியாழ்வார்

D) திருபாணாழ்வார்

விளக்கம்: குலசேகராழ்வார் – பெருமாள் திருமொழி

தொண்டரடிப்பொடியாழ்வார் – திருமலை, திருப்பள்ளியெழுச்சி

பெரியாழ்வார் – திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி

திருபாணாழ்வார் – திருப்பதிகம்

47) மணிமேகலைப் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

A) கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மணிமேகலை

**B) தனக்கு நேர்ந்த கதி தன் மகளுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவளையும் தன்னைப்போலவே சமண துறவியாக்கி இருந்தாள் மாதவி.**

C) வஞ்சிமாநகர் வந்து கண்ணகி கோட்டத்தில் கண்ணியை வணங்குகிறாள்

D) கதைக்களம், பாத்திரங்கள், கருத்துக்கள் இரண்டிலும் தொடர்வதால் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இரட்டைக்காப்பியம் என்பர்.

**விளக்கம்: கோவலுனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மணிமேகலை**

**தனக்கு நேர்ந்த கதி தன் மகளுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவளையும் தன்னைப்போலவே பௌத்தத் துறவியாக்கி இருந்தாள் மாதவி.**

**வஞ்சிமாநகர் வந்து கண்ணகி கோட்டத்தில் கண்ணியை வணங்குகிறாள்**

**கதைக்களம், பாத்திரங்கள், கருத்துக்கள் இரண்டிலும் தொடர்வதால் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இரட்டைக்காப்பியம் என்பர்.**

48) கூற்று: பரணி என்ற சிற்றிலக்கிய வகை தோற்றம் பெறுவதற்கு காரணமான நூல் களவழி நாற்பது ஆகும்.

காரணம்: யானைப் போர் பற்றி களவழி நாற்பது நூல் குறிப்பிடுகிறது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: யானைப் போர் பற்றி களவழி நாற்பது நூலில் குறிப்பிடப்படுவதால் பரணி என்ற சிற்றிலக்கிய வகை தோற்றம் பெறுவதற்கு இந்நூலே காரணம் என்பர். இதிலுள்ள ஒவ்வொரு பாடலின் இறுதி சொல்லும் 'அட்டக்களத்து' என்று முடிவது இதன் சிறப்பு.**

49) கூற்றுகளை ஆராய்க.

1. பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் புதுக்கவிதை வடிவில் கவிராஜன் கதை என்னும் பெயரில் காப்பியமாகப் படைத்துள்ளார் வைரமுத்து.

2. கவிஞர் வாலி இராமயணத்தை அவதார புருஷன் என்ற பெயரிலும், மகாபாரதத்தை பாண்டவர் பூமி என்ற பெயரிலும் புதுக்கவிதை வடிவில் காப்பியமாக்கியுள்ளார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும்சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் புதுக்கவிதை வடிவில் கவிராஜன் கதை என்னும் பெயரில் காப்பியமாகப் படைத்துள்ளார் வைரமுத்து.**

**2. கவிஞர் வாலி இராமயணத்தை அவதார புருஷன் என்ற பெயரிலும், மகாபாரதத்தை பாண்டவர் பூமி என்ற பெயரிலும் புதுக்கவிதை வடிவில் காப்பியமாக்கியுள்ளார்.**

50) பெரியபுராணம் பற்றிய தவறான கூற்றை தெரிவு செய்க.

A) பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் பெருங்காப்பிய இலக்கணங்கள் பொருந்தியும் சில நெகிழ்ச்சிகளை உள்வாங்கியும் இயற்றப்பெற்ற சைவக் காப்பியமாகும்.

**B) நம்பியாண்டார் நம்பி எழுதிய 'திருத்தொண்டர்தொகை' சுந்தரர் எழுதிய 'திருத்தொண்டர் திருவந்தாதி' ஆகிய நூல்களை முதல் நூலாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டது.**

C) இது 63 அடியார் பெருமக்களை மையமாகக் கொண்டு திகழ்கின்றது.

D) இந்நூல் பெரும்பிரிவாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் உடையது.

**விளக்கம்: சுந்தரர் எழுதிய 'திருத்தொண்டர்தொகை' நம்பியாண்டார்நம்பி எழுதிய 'திருத்தொண்டர் திருவந்தாதி' ஆகிய நூல்களை முதல் நூலாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டது.**

51) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) ஏலாதி

B) சிறுபஞ்சமூலம்

C) திரிகடுகம்

**D) நான்மணிக்கடிகை**

**விளக்கம்: மருந்து பொருட்களாலான நூல்கள்:**

**சிறுபஞ்சமூலம் – நெருஞ்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி**

**ஏலாதி – ஏலம், இலவங்கம், நாககேசுரம், திப்பிலி, சுக்கு, மிளகு.**

**திரிகடுகம் – சுக்கு, மிளகு, திப்பிலி.**

52) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) குறிஞ்சிப்பாட்டு

B) முல்லைப்பாட்டு

C) பட்டினப்பாலை

**D) கூத்தாராற்றுப்படை**

**விளக்கம்: அகம்: குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை, நெடுநல்வாடை.**

**திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தாற்றுப்படை), மதுரைக்காஞ்சி.**

53) எங்கு நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடியதே களவழி நாற்பது?

A) வெண்ணி

B) தலையங்கானம்

**C) கழுமலம்**

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடியதே களவழி நாற்பது ஆகும்.**

54) உலக மொழியியல் அறிஞர்கள் சங்ககால இலக்கியங்களைச் செவ்வியல் இலக்கியங்களாக ஏற்றுக்கொண்டுள்ளனர். சங்க இலக்கியங்களின் காலம் எது?

**A) கி.மு6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரையான காலம்**

B) கி.மு3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரையான காலம்

C) கி.மு2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரையான காலம்

D) கி.மு2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 6ஆம் நூற்றாண்டு வரையான காலம்

**விளக்கம்: உலக மொழியியல் அறிஞர்கள் சங்ககால இலக்கியங்களைச் செவ்வியல் இலக்கியங்களாக ஏற்றுக்கொண்டுள்ளனர். சங்க இலக்கியங்களின் காலம் கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரையான காலம் என்பர்.**

55) பொருத்துக.

அ. முதல் மூன்று திருமுறைகள்– 1. திருஞான சம்பந்தர்

ஆ. 4, 5, 6–ஆம் திருமுறைகள்– 2. திருநாவுக்கரசர்

இ. ஏழாம் திருமுறை– 3. சுந்தரர்

ஈ. எட்டாம் திருமுறை– 4. மாணிக்கவாசகர்

A) 4, 3, 2, 1

**B) 1, 2, 3, 4**

C) 2, 3, 1, 4

D) 2, 3, 4, 1

**விளக்கம்: முதல் மூன்று திருமுறைகள் – திருஞான சம்பந்தர்**

**4, 5, 6–ஆம் திருமுறைகள்– திருநாவுக்கரசர்**

**ஏழாம் திருமுறை– சுந்தரர்**

**எட்டாம் திருமுறை– மாணிக்கவாசகர்**

56) தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகள் 34 ஆகும். இதில் பொருந்தாதது எது?

**A) இளைபு**

B) மெய்ப்பாடு

C) எச்சம்

D) முன்னம்

**விளக்கம்: தொல்காப்பியர் செய்யுளின் உறுப்புகள் 34 என்று குறிப்பிடுகிறார்.**

**அவை, மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, தொடை, யாப்பு, தூக்கு, மரபு, பா, நோக்கு, கூற்று, அளவு, திணை, கைகோள், கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு. வண்ணம், அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.**

57) உலகளவில் 'செவ்வியல்' என்ற பொருளில் 'கிளாசிசம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலச்சொல்லாக 'கிளாசிகஸ்' உள்ளது. இது எம்மொழிச்சொல்?

A) கிரேக்கம்

**B) இலத்தீன்**

C) அரபு

D) ஆங்கிலம்

**விளக்கம்: உலகளவில் 'செவ்வியல்' என்ற பொருளில் 'கிளாசிசம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலச்சொல்லாக 'கிளாசிகஸ்' என்ற இலத்தீன் சொல் உள்ளது. தமிழில் செவ்வியல் என்பதன் மூலச்சொல் 'செம்மை' என்பதாகும்.**

58) சங்க புலவர்களின் எண்ணிக்கை எத்தனை?

A) 479

**B) 473**

C) 483

D) 489

**விளக்கம்: தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் என அறியப்படுகின்றன. பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவற்றைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பர். இவை தமிழ்மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் கூறுகளை அறிய உதவுகின்றன.**

**சங்கப்பாடல்களின் எண்ணிக்கை 2381. இவற்றுள் அகத்திணைப்பாடல்கள் 1862. புறத்திணைப்பாடல்கள் 519. சங்கப்புலவர் எண்ணிக்கை 473. பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 49.**

59) சமஸ்கிருத மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் எது?

A) கி.மு1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை

B) கி.மு5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 4ஆம் நூற்றாண்டு வரை

C) கி.மு8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை

**D) கி.மு4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை**

**விளக்கம்: கி.மு 1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2ஆம் நூற்றாண்டு வரை – இலத்தீன்**

**கி.மு 5ஆம் நூற்றாண்டு முதல் கி.மு 4ஆம் நூற்றாண்டு வரை – கிரேக்கம்**

**கி.மு 8ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை – சீன மொழி**

**கி.மு 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 8ஆம் நூற்றாண்டு வரை – சமஸ்கிருதம்**

60) செவ்வியல் இலக்கியங்களை படைக்க இன்றியமையாதது எது?

A) இலக்கணம்

**B) எழுத்து வடிவம்**

C) மிகுந்த சொல் வளம்

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: எழுத்து உருவான பின்னரே ஒரு மொழி முழுமை அடைகிறது. அதன் பின்னரே அது வளர்ந்து செழுமையுற்றுச் செவ்வியல் இலக்கியங்களைப் படைக்கும் திறன் பெறுகிறது. செவ்வியல் இலக்கியங்களை படைக்க இன்றியமையாதது, எழுத்து வடிவமே ஆகும்.**

61) ஆசாரக்கோவை என்ற அற நூலை எழுதியவர் யார்?

A) கணிமேதாவியார்

B) கூடலூர் கிழார்

C) முன்றுறையரையனார்

**D) பெருவாயின் முள்ளியார்**

**விளக்கம்: ஆசாரக்கோவை– பெருவாயின்முள்ளியார்**

**பழமொழி நானூறு– முன்றுறையரையனார்**

**ஏலாதி– கணிமேதாவியார்**

**முதுமொழிக்காஞ்சி– கூடலூர்கிழார்.**

62) நன்னெறி என்ற நூலை எழுதியவர் யார்?

A) உலகநாதர்

**B) சிவப்பிரகாசர்**

C) முனைப்பாடியார்

D) அதிவீரராமபாண்டியர்

**விளக்கம்: உலகநாதர்– உலகநீதி**

**சிவப்பிரகாசர்– நன்னெறி**

**முனைப்பாடியார்– அறநெறிச்சாரம்**

**அதிவீரராமபாண்டியர்– நறுந்தொகை**

63) வீரத்தாய் என்ற காப்பியத்தை எழுதியவர் யார்?

A) பாரதியார்

**B) பாரதிதாசன்**

C) புலவர் குழந்தை

D) சாலை இளந்திரையன்

**விளக்கம்: பழங்காப்பிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும், புதுக்கவிதை போன்ற புதிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும் இருபதாம் நூற்றாண்டில் படைக்கப்பட்டன. பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, புரட்சிக்கவி, வீரத்தாய் போன்ற காப்பியங்கள் பழங்காப்பிய மரபைப் பின்பற்றி படைக்கப்பட்டவை.**

64) பெரியபுராணம் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு இந்நூல் அமைகின்றது.

2. சுந்தரரின் சிறப்பு, சைவ அடியார்களின் சிறப்பு, சிவபெருமானின் அருள்திறம், அடியார்களின் வரலாறு, இறைவன் அவர்களை ஆட்கொண்ட விதம், அடியார்கள் இறைவனை வழிபட்டு முக்தி பெற்ற தன்மை ஆகியன இந்நூல் முழுவதும் எடுத்துக் கூறப்படுவதால் சேக்கிழார் இந்நூலிற்கு திருத்தொண்டர் மாக்கதை எனப் பெயரிட்டார்.

3. செயற்கரிய செயல் புரிந்த அடியார்களின் சிறப்பினை உரைப்பதால் சான்றோர் பெரிய புராணத்தை பெரியர் புராணம் என அழைத்தனர்.

4. பெரியர் புராணம் காலப்போக்கில் பெரியபுராணம் என்று வழங்கப்பட்டது.

A) 1, 2 சரி

B) 1, 3, 4 சரி

C) 1, 2, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு இந்நூல் அமைகின்றது.**

**2. சுந்தரரின் சிறப்பு, சைவ அடியார்களின் சிறப்பு, சிவபெருமானின் அருள்திறம், அடியார்களின் வரலாறு, இறைவன் அவர்களை ஆட்கொண்ட விதம், அடியார்கள் இறைவனை வழிபட்டு முக்தி பெற்ற தன்மை ஆகியன இந்நூல் முழுவதும் எடுத்துக் கூறப்படுவதால் சேக்கிழார் இந்நூலிற்கு திருத்தொண்டர் மாக்கதை எனப் பெயரிட்டார்.**

**3. செயற்கரிய செயல் புரிந்த அடியார்களின் சிறப்பினை உரைப்பதால் சான்றோர் பெரிய புராணத்தை பெரியர் புராணம் என அழைத்தனர்.**

**4. பெரியர் புராணம் காலப்போக்கில் பெரியபுராணம் என்று வழங்கப்பட்டது.**

65) சங்கப்புலவர்களில் அதிக பாடல்களை பாடியவர் யார்?

A) கணியன் பூங்குன்றனார்

**B) கபிலர்**

C) நல்லூர் நத்தத்தனார்

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: 235 பாடல்களைப் பாடி முதலிடத்தைப் பெறுபவர் கபிலர் ஆவார்.**

66) கூற்றுகளை ஆராய்க.

1. சங்ககாலப் புவலர்களைச் 'சான்றோர்' எனச்சுட்டுவது தமிழ் மரபு.

2. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் எனப்பட்டன.

A)1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சங்ககாலப் புவலர்களைச் 'சான்றோர்' எனச்சுட்டுவது தமிழ் மரபு.**

**2. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் எனப்பட்டன.**

67) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) நற்றிணை

B) குறுந்தொகை

C) ஐங்குறுநூறு

**D) பரிபாடல்**

**விளக்கம்: மேற்காணும் அனைத்தும் எட்டுத்தொகை நூல் ஆகும்.**

**அகம் – நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு**

**புறம் – பதிற்றுப்பத்து, புறநானூறு.**

**அகப்புறம் – பரிபாடல்**

68) பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் ஆகியன சிற்றியலக்கியம் 96 எனக் குறிப்பிடுகின்றன. இதில் சதுரகராதி, தொன்னூல் ஆகிய நூல்களை எழுதியவர் யார்?

**A) வீரமாமுனிவர்**

B) ஜி.யூ.போப்

C) கால்டுவெல்

D) ஈராஸ் பாதிரியார்

**விளக்கம்: சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தையும் எண்ணிக்கையும் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. ஒவ்வொரு பாட்டியல் நூலும் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையைக் கூறுமிடத்து வேறுபடுகின்றன. இருப்பினும் பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் ஆகியன 96 எனக் குறிப்பிடுகின்றன. இதில் சதுரகராதி, தொன்னூல் ஆகிய நூல்களை எழுதியவர் வீரமாமுனிவர்.**

69) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) சிறுபஞ்சமூலம்– காரியாசான்

B) நாலடியார்– சமணமுனிவர்கள்

C) நான்மணிக்கடிகை– விளம்பிநாகனார்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: சிறுபஞ்சமூலம் – காரியாசான்**

**நாலடியார்– சமணமுனிவர்கள்**

**நான்மணிக்கடிகை– விளம்பிநாகனார்.**

70) செம்மை என்பதற்கு பலவாறாக பொருள்கொள்ளலாம். இதில் பொருந்தாதது எது?

A) நற்சீரடைதல்

B) ஒழுங்குபடுத்துதல்

C) பண்படுத்துதல்

**D) மேற்காணும் எதுவுமில்லை.**

**விளக்கம்: செவ்வியல் என்பதன் மூலச்சொல் 'செம்மை' என்பதாகும். செம்மை, இயல் என்ற இரு சொற்கள் இணைந்து செவ்வியல் என்ற சொல் உருவானது. செம்மை என்பதற்குச் செப்பம், செவ்வை, செவ்வி, நற்சீரடைதல், ஒழுங்குபடுத்துதல், பண்படுத்துதல் என்றெல்லாம் பொருள்கொள்ளலாம்.**

71) எப்போது ஒரு மொழி முழுமை அடைகிறது?

**A) எழுத்து உருவான பின்**

B) இலக்கியம் உருவான பின்

C) இலக்கணம் உருவான பின்

D) சொல் உருவான பின்

**விளக்கம்: எழுத்து உருவான பின்னரே ஒரு மொழி முழுமை அடைகிறது. அதன் பின்னரே அது வளர்ந்து செழுமையுற்றுச் செவ்வியல் இலக்கியங்களைப் படைக்கும் திறன் பெறுகிறது.**

72) சங்கப்பாடல்களில் புறத்திணைப்பாடல்கள் எத்தனை?

A) 1862

**B) 519**

C) 2381

D) 473

**விளக்கம்: தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் என அறியப்படுகின்றன. பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவற்றைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பர். இவை தமிழ்மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் கூறுகளை அறிய உதவுகின்றன.**

**சங்கப்பாடல்களின் எண்ணிக்கை 2381. இவற்றுள் அகத்திணைப்பாடல்கள் 1862. புறத்திணைப்பாடல்கள் 519. சங்கப்புலவர் எண்ணிக்கை 473. பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 49.**

73) கூற்றுகளை ஆராய்க.

1. சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தையும் எண்ணிக்கையையும் பாட்டில் நூல்கள் கூறுகின்றன.

2. ஒவ்வொரு பாட்டில் நூலும் சிற்றியலங்கியங்களின் எண்ணிக்கையைக் கூறுமிடத்து வேறுபடுகின்றன.

3. பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் ஆகியன சிற்றிலக்கியங்கள் 96 எனக் குறிப்பிடுகின்றன.

4. அம்மானை என்பது மகளிர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்றாகும்

A) 1, 2 மட்டும் சரி

B) 2, 3 மட்டும் சரி

C) 2, 4 மட்டும் சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தையும் எண்ணிக்கையையும் பாட்டில் நூல்கள் கூறுகின்றன.**

**2. ஒவ்வொரு பாட்டில் நூலும் சிற்றியலங்கியங்களின் எண்ணிக்கையைக் கூறுமிடத்து வேறுபடுகின்றன.**

**3. பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் ஆகியன சிற்றிலக்கியங்கள் 96 எனக் குறிப்பிடுகின்றன.**

**4. அம்மானை என்பது மகளிர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்றாகும்**

74) கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடிய நூல் எது?

**A) களவழி நாற்பது**

B) திணைமாலை நூற்றைம்பது

C) ஐந்திணை ஐம்பது

D) திணைமொழி ஐம்பது

**விளக்கம்: பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் களவழி நாற்பது. களத்தை ஏர்க்களம், போர்க்களம் என்று இரு வகைப்படுத்துவர்.**

**ஏர்க்களம் – நெல் முதலானவற்றை அடித்து தூற்றும் களத்தைப் பாடுவது.**

**போர்க்களம் – போர்களத்தைப் பாடுவது.**

**களவழி நாற்பது – போர்க்களத்தைப் பாடும் நூல் ஆகும்.**

**கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடியதே களவழி நாற்பது ஆகும்.**

75) தவறான கூற்றை ஆராய்க.

A) சதம் என்பது நூறு எனப் பொருள்படும். நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் சதகம் எனப்பட்டது.

**B) சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் அம்மானை ஆகும்.**

C) செங்கீரை, பிள்ளைத்தமிழில் இரண்டாவது பருவமாகும். பொருள் புரிந்து கொள்ளமுடியாத வகையில் குழந்தை ங்க ங்க என்று ஓசை எழுப்பக் கேட்டுத் தாய் மகிழும் பருவமாகும்.

D) தொட்டில் பிள்ளை தலையை உயர்த்திக் கையை ஊன்றி உடம்பை அசைத்து ஆடுதலைச் செங்கீரைப்பருவம் என்பர்.

**விளக்கம்: சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் பள்ளு ஆகும்.**

76) திருமலை, திருப்பள்ளியெழுச்சி என்ற நூலை எழுதியவர் யார்?

A) குலசேகராழ்வார்

**B) தொண்டரடிப்பொடியாழ்வார்**

C) பெரியாழ்வார்

D) திருபாணாழ்வார்

**விளக்கம்: குலசேகராழ்வார் – பெருமாள் திருமொழி**

**தொண்டரடிப்பொடியாழ்வார் – திருமலை, திருப்பள்ளியெழுச்சி**

**பெரியாழ்வார் – திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி**

**திருபாணாழ்வார் – திருப்பதிகம்**

77) கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகக் கருதி அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பாடும் சிற்றிலக்கியம் எது?

A) கோவை

B) அந்தாதி

C) பள்ளு

**D) பிள்ளைத்தமிழ்**

**விளக்கம்: கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகக் கருதி அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப்பருவங்களாகப் பகுத்துப் பருவத்திற்குப் பத்து ஆசிரிய விருத்தங்களாகப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும்.**

78) பொருத்துக.

அ. 1, 2, 3 திருமுறைகள்– 1.மாணிக்கவாசகர்

ஆ. 4, 5, 6 திருமுறைகள் – 2. சுந்தரர்

இ. 7–ஆம் திருமுறை– 3. திருநாவுக்கரசர்

ஈ. 8–ஆம் திருமுறை– 4. திருஞானசம்பந்தர்

A) 4, 3, 1, 2

**B) 4, 3, 2, 1**

C) 1, 2, 3, 4

D) 1, 2, 4, 3

**விளக்கம்: 1, 2, 3 திருமுறைகள் – திருஞானசம்பந்தர்**

**4, 5, 6 திருமுறைகள்– திருநாவுக்கரசர்**

**7–ஆம் திருமுறை– சுந்தரர்**

**8–ஆம் திருமுறை– மாணிக்கவாசகர்**

79) திருவிருத்தம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) திருமழிசையாழ்வார்

**B) நம்மாழ்வார்**

C) பேயாழ்வார்

D) பூதத்தாழ்வார்

**விளக்கம்: திருமழிசையாழ்வார் – நான்காம் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**பேயாழ்வார் – மூன்றாம் திருவந்தாதி**

**பூதத்தாழ்வார் – இரண்டாம் திருவந்தாதி**

80) பெரிய திருமடல், சிறிய திருமடல் என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

B) நம்மாழ்வார்

**C) திருமங்கையாழ்வார்**

D) மதுரகவியாழ்வார்

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்**

81) கூற்றுகளை ஆராய்க.

1. மணிமேகலை இளங்கோவடிகள் முன்பாகவும், சிலப்பதிகாரம் சீத்தலைச் சாத்தனார் முன்பாகவும் அரங்கேற்றப்பட்டதாகக் கூறுவர்.

2. கி.பி.2–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இளங்கோவடிகளைச் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பர்.

3. மணிமேகலை ஒரு பௌத்தசமயக் காப்பியமாகும்.

4. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே – மணிமேகலை

A) 1, 2 சரி

B) 2, 3 சரி

C) 1, 3, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. மணிமேகலை இளங்கோவடிகள் முன்பாகவும், சிலப்பதிகாரம் சீத்தலைச் சாத்தனார் முன்பாகவும் அரங்கேற்றப்பட்டதாகக் கூறுவர்.**

**2. கி.பி.2–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இளங்கோவடிகளைச் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பர்.**

**3. மணிமேகலை ஒரு பௌத்தசமயக் காப்பியமாகும்.**

**4. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே – மணிமேகலை.**

82) நீதிநெறிவிளக்கம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) அதிவீரராமபாண்டியர்

B) முனைப்பாடியார்

**C) குமரகுருபரர்**

D) சிவப்பிரகாசர்

**விளக்கம்: அறநெறிச்சாரம்– முனைப்பாடியார்**

**நறுந்தொகை– அதிவீரராமபாண்டியர்**

**நீதிநெறிவிளக்கம்– குமரகுருபரர்**

**நன்னெறி– சிவப்பிரகாசர்.**

83) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

A) கலித்தொகை

B) அகநானூறு

C) குறுந்தொகை

**D) பதிற்றுப்பத்து**

**விளக்கம்: மேற்காணும் அனைத்தும் எட்டுத்தொகை நூல் ஆகும்.**

**அகம்– நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு**

**புறம்– பதிற்றுப்பத்து, புறநானூறு.**

**அகப்புறம்– பரிபாடல்.**

84) கவியோகி என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) புலவர் குழந்தை

B) பாரதிதாசன்

**C) சுந்தானந்த பாரதியார்**

D) சாலை இளந்திரையன்

**விளக்கம்: பழங்காப்பிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும், புதுக்கவிதை போன்ற புதிய மரபைப் பின்பற்றிய காப்பியங்களும் இருபதாம் நூற்றாண்டில் படைக்கப்பட்டன. கவியோகி சுத்தானந்த பாரதியின் பராசக்தி மகாகாவியம் என்ற காப்பியம் பழங்காப்பிய மரபைப் பின்பற்றி படைக்கப்பட்டது.**

85) இராமாயணத்தை அவதார புருஷன் என்ற பெயரில் புதுகவிதை வடிவில் காப்பியமாக்கியவர் யார்?

A) வைரமுத்து

**B) கவிஞர் வாலி**

C) கண்ணதாசன்

D) புலவர் குழந்தை

**விளக்கம்: யாப்பு வடிவத்தை உடைத்து வளர்த்தெடுக்கப்பட்ட புதுக்கவிதைகளிலும் காப்பியங்கள் தற்காலத்தில் படைக்கப்படுகின்றன. கவிஞர் வாலி இராமயணத்தை அவதார புருஷன் என்ற பெயரிலும், மகாபாரதத்தை பாண்டவர் பூமி என்ற பெயரிலும் புதுக்கவிதை வடிவில் காப்பியமாக்கியுள்ளார்.**

86) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) நெருஞ்சி

B) கண்டங்கத்திரி

C) சிறுவழுதுணை

**D) நாககேசுரம்**

**விளக்கம்: மருந்து பொருட்களாலான நூல்கள்:**

**சிறுபஞ்சமூலம் – நெருஞ்சி, கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி**

**ஏலாதி– ஏலம், இலவங்கம், நாககேசுரம், திப்பிலி, சுக்கு, மிளகு.**

**திரிகடுகம்– சுக்கு, மிளகு, திப்பிலி.**

87) ஒன்பதாம் திருமுறையை எழுதியவர் எத்தனை பேர்?

A) 40

**B) 9**

C) 12

D) 7

**விளக்கம்: ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு எனப்படும். இந்நூலை திருமாளிகைத்தேவர் உள்ளிட்ட ஒன்பது பேர் எழுதியுள்ளனர்.**

88) ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்கு பொருந்தாத பருவம் எது?

A) தால்

B) சிற்றில்

C) சப்பாணி

**D) அம்மானை**

**விளக்கம்: கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகக் கருதி அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப்பருவங்களாகப் பகுத்துப் பருவத்திற்குப் பத்து ஆசிரிய விருத்தங்களாகப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.**

**ஆண்பாற்பிள்ளைத்தமிழ் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை.**

**பெண்பாற்பிள்ளைத்தமிழ் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.**

89) சங்கப்பாடல்களின் எண்ணிக்கை எத்தனை?

A) 2389

B) 3281

**C) 2381**

D) 3289

**விளக்கம்: தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் என அறியப்படுகின்றன. பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவற்றைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பர். இவை தமிழ்மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் கூறுகளை அறிய உதவுகின்றன.**

**சங்கப்பாடல்களின் எண்ணிக்கை 2381. இவற்றுள் அகத்திணைப்பாடல்கள் 1862. புறத்திணைப்பாடல்கள் 519. சங்கப்புலவர் எண்ணிக்கை 473. பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 49.**

90) திருப்பல்லாண்டு என்ற நூலை எழுதியவர் யார்?

A) குலசேகராழ்வார்

B) தொண்டரடிப்பொடியாழ்வார்

**C) பெரியாழ்வார்**

D) திருபாணாழ்வார்

**விளக்கம்: குலசேகராழ்வார் – பெருமாள் திருமொழி**

**தொண்டரடிப்பொடியாழ்வார் – திருமலை, திருப்பள்ளியெழுச்சி**

**பெரியாழ்வார் – திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி**

**திருபாணாழ்வார் – திருப்பதிகம்**

91) பொருத்துக.

அ. 9–ஆம் திருமுறை– 1. திருத்தொண்டர் புராணம்

ஆ. 10–ஆம் திருமுறை– 2. 40 நூல்களின் தொகுப்பு

இ. 11–ஆம் திருமுறை– 3. திருமந்திரம்

ஈ. 12–ஆம் திருமுறை– 4. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

A) 1, 2, 3, 4

**B) 4, 3, 2, 1**

C) 4, 3, 1, 2

D) 4, 2, 1, 3

**விளக்கம்: 9–ஆம் திருமுறை – திருவிசைப்பா, திருப்பல்லாண்டு;**

**10–ஆம் திருமுறை – திருமந்திரம்**

**11–ஆம் திருமுறை – 40 நூல்களின் தொகுப்பு**

**12–ஆம் திருமுறை – திருத்தொண்டர் புராணம்**

92) பெரிய திருவந்தாதி என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

**B) நம்மாழ்வார்**

C) திருமங்கையாழ்வார்

D) மதுரகவியாழ்வார்

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்.**

93) கவிராஜன் கதை என்னும் தற்கால காப்பியம் யாரை பற்றி எழுதப்பட்டது?

A) வைரமுத்து

**B) பாரதி**

C) கவிஞர் வாலி

D) கவிமணி

**விளக்கம்: யாப்பு வடிவத்தை உடைத்து வளர்த்தெடுக்கப்பட்ட புதுக்கவிதைகளிலும் காப்பியங்கள் தற்காலத்தில் படைக்கப்படுகின்றன. பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் புதுக்கவிதை வடிவில் கவிராஜன் கதை என்னும் பெயரில் காப்பியமாகப் படைத்துள்ளார் வைரமுத்து.**

94) சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தையும் எண்ணிக்கையையும் கூறும் நூல் எது?

**A) பாட்டியல் நூல்கள்**

B) தண்டியலங்காரம்

C) தொல்காப்பியம்

D) நன்னூல்

**விளக்கம்: சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தையும் எண்ணிக்கையும் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. ஒவ்வொரு பாட்டியல் நூலும் சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கையைக் கூறுமிடத்து வேறுபடுகின்றன. இருப்பினும் பிரபந்த மரபியல், பிரபந்தத் தீபிகை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம் ஆகியன 96 எனக் குறிப்பிடுகின்றன.**

95) கலம்பகம் என்ற சொல்லில் பகம் என்பதன் பொருள் என்ன?

A) 12

**B) 6**

C) 18

D) 3

**விளக்கம்: அம்மானை, கார், ஊசல், கைக்கிளை, புயவகுப்பு முதலான 18 உறுப்புகள் அமையப் பாடப்படுவது கலம்பகம்.**

**கலம் – 12. பகம் – 6.**

96) பரணி என்பது கீழ்க்காணும் யாருடைய பெயரால் பாடப்படும்?

A) போரில் வெற்றி பெற்ற அரசனின் பெயரால்

B) போரின் வெற்றிக்கு காரணமான அரசனின் பெயரால்

C) போரில் வெற்றி பெற்ற நாட்டில் பெயரால்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிபெறும் வீரனின்மேல் பாடப்படுவது பரணி. போரில்தோற்ற அரசனது நாட்டின் பெயரால் இந்நூல் வழங்கப்பெறும்.**

97) பதினோராம் திருமுறை என்பது எத்தனை நூல்களின் தொகுப்பு?

A) 35

**B) 40**

C) 30

D) 45

**விளக்கம்: பதினோராம் திருமுறை என்பது நாற்பது நூல்களின் தொகுப்பு ஆகும். இதனை காரைக்கால் அம்மையார் உள்ளிட்ட 12 பேர் எழுதியுள்ளனர்.**

98) கூற்றுகளை ஆராய்க.

1. காப்பியத்தின் பெரும்பிரிவு– காண்டம், இலம்பகம், பருவம்

2. காப்பியத்தின் உட்பிரிவு– சருக்கம், காதை, படலம்

3. தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் கம்பராமாயணம்

4. சிலப்பதிகாரத்திலுள்ளது போல காண்டம் என்னும் பெரும்பிரிவுகள் மணிமேகலையில் இல்லை

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

**C) 3 மட்டும் தவறு**

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: 1. காப்பியத்தின் பெரும்பிரிவு – காண்டம், இலம்பகம், பருவம்**

**2. காப்பியத்தின் உட்பிரிவு– சருக்கம், காதை, படலம்**

**3. தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம்**

**4. சிலப்பதிகாரத்திலுள்ளது போல காண்டம் என்னும் பெரும்பிரிவுகள் மணிமேகலையில் இல்லை**

99) ____________________என்னும் பொருளில் 'பக்தி' என்னும் சொல் இன்று பயன்படுத்தப்படுகிறது?

A) கடவுளை வணங்குதல்

B) கடவுளிடம் தன்னை அர்ப்பணித்தல்

**C)A மற்றும் B**

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: கடவுளை வணங்குதல், கடவுளிடம் தன்னை அர்ப்பணித்தல் என்னும் பொருளில் இன்று 'பக்தி' என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. கடவுளின் மீது மனிதன் கொண்ட நம்பிக்கையைப் பக்தி என்பர். பக்தியால் அன்பு பெருகி உயிர் தூய நிலையை அடைகிறது. கடவுளின் மீது மனிதன் கொண்டுள்ள எல்லைகடந்த அன்பே 'பக்தி' என்ற பொருளில் தமிழிலக்கியங்களில் மிகுதியும் கையாளப்படுகின்றது.**

100) யாருடைய ஆட்சிக்காலம் பக்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்காலம் என்று அழைக்கப்படுகிறது?

A) பாண்டியர்கள் காலம்

B) களப்பிரர்கள் காலம்

**C) பல்லவர்கள் காலம்**

D) சோழர்கள் காலம்

**விளக்கம்: பக்திக்கு முக்கியத்துவம் அளித்தவர்கள் பல்லவர்கள். இந்த எழுச்சிக்கு ஆதரவளித்த பல்லவர் ஆட்சிக்காலம் பக்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்காலம் எனப்படுகிறது. பக்தி இயக்கத்தால் தமிழகத்தில் தமிழுக்கு மீண்டும் புதுப்பொலிவு ஏற்பட்டது.**

101) "உயிர், உடல், பொருள், இளமை ஆகியன நிலையாக நில்லாமல் மறைந்துவிடக் கூடியன. இவற்றை உணர்ந்து அறத்தைச் செய்பவனாக மனித மாற வேண்டும்" என்று வலியுறுத்தும் சமயம் எது?

A) சைவம், வைணவம்

**B) சமணம், பௌத்தம்**

C) கிறித்துவம்

D) இசுலாம்

**விளக்கம்: சமண பௌத்த சமயங்கள், "உயிர், உடம்பு, பொருள், இளமை ஆகியன நிலையாக நில்லாமல் மறைந்துவிடக் கூடியன. இவற்றை உணர்ந்து அறத்தைச் செய்பவனாக மனித மாறவேண்டும்" என்று வலியுறுத்துகின்றன.**

102) திருப்பாவை என்ற நூலை எழுதியவர் யார்?

**A) ஆண்டாள்**

B) நம்மாழ்வார்

C) திருமங்கையாழ்வார்

D) மதுரகவியாழ்வார்

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்**

103) பொருத்துக.

அ. ஒன்பதாம் திருமுறை– 1. சேக்கிழார்

ஆ. பத்தாம் திருமுறை– 2. திருமூலர்

இ. பதினோராம் திருமுறை– 3. காரைக்கால் அம்மையார்

ஈ. பன்னிரண்டாம் திருமுறை– 4. திருமாளிகைத்தேவர்

**A) 4, 2, 3, 1**

B) 4, 3, 2, 1

C) 1, 3, 2, 4

D) 1, 2, 3, 4

**₹விளக்கம்: ஒன்பதாம் திருமுறை – திருமாளிகைத்தேவர் உள்ளிட்ட ஒன்பது பேர்**

**பத்தாம் திருமுறை– திருமூலர்**

**பதினோராம் திருமுறை– காரைக்கால் அம்மையார்**

**பன்னிரண்டாம் திருமுறை– சேக்கிழார்**

104) கீழ்க்காணும் கலம்பக உறுப்புகளில் மகளிர் விளையாடும் விளையாட்டு எது?

**A) அம்மானை**

B) கார்

C) ஊசல்

D) கைக்கிளை

**விளக்கம்: அம்மானை, கார், ஊசல், கைக்கிளை, புயவகுப்பு முதலான 18 உறுப்புகள் அமையப் பாடப்படுவது கலம்பகம்.**

**கலம் – 12. பகம் – 6.**

**அவற்றுள், 'அம்மானை' என்பது மகளிர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று. பாட்டுடைத் தலைவனின் புகழை ஒரு பெண் புகழ்ந்து பாட, மற்றொரு பெண் அது தொடர்பாக ஒரு வினா கேட்டு மூன்றாம் பெண் ஒரு கருத்தைக் கூறி அதை முடிப்பது அம்மானை என்னும் விளையாட்டு.**

105) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் புற நூல்கள் எத்தனை?

A) 6

**B) 1**

C) 11

D) 18

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்கள் 11 ஆகும்.**

**புற நூல்கள் – 1.**

**அக நூல்கள்– 6.**

106) கூற்றுகளை ஆராய்க.

1. குணாட்டியர் என்பவர் பிருகத்கதா எனும் நூலைப் பைசாச மொழியில் இயற்றினர். இக்காப்பியமே பெருங்கதையின் மூல நூலாகக் கருதப்படுகிறது.

2. பெருங்கதை சமண சமயக்காப்பியமாகும். இந்நூல் ஆறு காண்டங்களை உடையது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. குணாட்டியர் என்பவர் பிருகத்கதா எனும் நூலைப் பைசாச மொழியில் இயற்றினர். இக்காப்பியமே பெருங்கதையின் மூல நூலாகக் கருதப்படுகிறது.**

**2. பெருங்கதை சமண சமயக்காப்பியமாகும். இந்நூல் ஆறு காண்டங்களை உடையது.**

107) பத்தாம் திருமுறை ____________________________என்று அழைக்கப்படுகிறது?

A) திருவாசகம்

B) திருவிசைப்பா

**C) திருமந்திரம்**

D) திருப்பல்லாண்டு

**விளக்கம்: திருவாசகம் – எட்டாம் திருமுறை**

**திருவிசைப்பா– ஒன்பதாம் திருமுறை**

**திருமந்திரம்– பத்தாம் திருமுறை**

**திருப்பல்லாண்டு– ஒன்பதாம் திருமுறை.**

108) திருப்பதிகம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) குலசேகராழ்வார்

B) தொண்டரடிப்பொடியாழ்வார்

C) பெரியாழ்வார்

**D) திருபாணாழ்வார்**

**விளக்கம்: குலசேகராழ்வார் – பெருமாள் திருமொழி**

**தொண்டரடிப்பொடியாழ்வார் – திருமலை, திருப்பள்ளியெழுச்சி**

**பெரியாழ்வார்– திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி**

**திருபாணாழ்வார்– திருப்பதிகம்**

109) "உலக இன்பங்களைத் துய்த்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம், இறைவன் அன்பின் வடிவானவன், அன்பு ஒன்றே அவனை அடையும்வழி" என இல்லறத்திற்கும் முதன்மை கொடுத்தவர்கள் யார்?

A) நாயன்மார்கள்

B) ஆழ்வார்கள்

C) சித்தர்கள்

**D) A மற்றும் B**

**விளக்கம்: நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி, "உலக இன்பங்களைத் துய்த்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம், இறைவன் அன்பின் வடிவானவன், அன்பு ஒன்றே அவரை அடையும் வழி" என இல்லறத்திற்கும் முதன்மை கொடுத்தனர்.**

110) திருஞானசம்பந்தர் என்பவர் கீழ்க்காணும் எந்த நெறியை பின்பற்றினார்?

A) அடிமை நெறி

**B) பிள்ளமை நெறி**

C) நாயகன் நெறி

D) நாயகி நெறி

**விளக்கம்: திருநாவுக்கரசர், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் போன்றோர் அடிமை நெறியையும், திருஞானசம்பந்தர் பிள்ளமை நெறியையும் பின்பற்றினர்.**

111) தவறான ஒன்றை தெரிவு செய்க

A) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் – களவழி நாற்பது ஆகும்.

B) களத்தை ஏர்க்களம், போர்க்களம் என்று இருவகையாகப் பிரிப்பர்

C) நெல் முதலானவற்றை அடித்து தூற்றும் களத்தைப் பாடுவது – ஏர்க்களம்

**D) களவழி நாற்பது – ஏர்க்களத்தைப் பாடும் நூல் ஆகும்.**

**விளக்கம்: பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் களவழி நாற்பது. களத்தை ஏர்க்களம், போர்க்களம் என்று இரு வகைப்படுத்துவர்.**

**ஏர்க்களம் – நெல் முதலானவற்றை அடித்து தூற்றும் களத்தைப் பாடுவது.**

**போர்க்களம் – போர்களத்தைப் பாடுவது.**

**களவழி நாற்பது – போர்க்களத்தைப் பாடும் நூல் ஆகும்.**

112) தோழமை நெறியை பின்பற்றியவர் யார்?

**A) சுந்தரர்**

B) திருநாவுக்கரசர்

C) குலசேகராழ்வார்

D) மாணிக்கவாசகர்

**விளக்கம்: சுந்தரர், திருமழிசையாழ்வார் போன்றோர் தோழமை நெறியையும், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்றோர் நாயகன் நாயகி நெறியையும் பின்பற்றினர்**

113) 'திருத்தொண்டத்தொகை' என்னும் நூலை எழுதியவர் யார்?

A) நம்பியாண்டார் நம்பி

**B) சுந்தரர்**

C) சேக்கிழார்

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்) – சேக்கிழார்.**

**திருத்தொண்டத்தொகை– சுந்தரர்**

**திருத்தொண்டர் திருவந்தாதி– நம்பியாண்டார் நம்பி**

114) திருப்பதிகம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

B) நம்மாழ்வார்

C) திருமங்கையாழ்வார்

**D) மதுரகவியாழ்வார்**

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்**

115) கூற்று: பெரியபுராணம் தேசிய இலக்கியம் எனப்படும்.

காரணம்: இந்திய நாட்டு மக்கள் அனைவரும் பின்பற்றக்கூடிய கருத்துகளைக் கொண்டுள்ளது

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: ஆண், பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும், தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் தேசிய இலக்கியம் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.**

116) திருச்சந்த விருத்தம் என்ற நூலை எழுதியவர் யார்?

**A) திருமழிசையாழ்வார்**

B) நம்மாழ்வார்

C) பேயாழ்வார்

D) பூதத்தாழ்வார்

**விளக்கம்: திருமழிசையாழ்வார் – நான்காம் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**பேயாழ்வார் – மூன்றாம் திருவந்தாதி**

**பூதத்தாழ்வார் – இரண்டாம் திருவந்தாதி**

117) சங்கப்பாடல்களுள் அகத்திணைப் பாடல்கள் எத்தனை?

**A) 1862**

B) 1381

C) 519

D) 473

**விளக்கம்: தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் என அறியப்படுகின்றன. பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவற்றைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பர். இவை தமிழ்மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் கூறுகளை அறிய உதவுகின்றன.**

**சங்கப்பாடல்களின் எண்ணிக்கை 2381. இவற்றுள் அகத்திணைப்பாடல்கள் 1862. புறத்திணைப்பாடல்கள் 519. சங்கப்புலவர் எண்ணிக்கை 473. பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 49.**

118) கூற்று: சீவக சிந்தாமணி மணநூல் என்று அழைக்கப்படுகிறது.

காரணம்: காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் **பெண்**களை சீவகன் மணப்பது பற்றி கூறுகிறது.

A)கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பெண்களை சீவகன் மணப்பதனால், இந்நூல் மணநூல் என்றும் அழைக்கப்படுகிறது. இறுதியில் சீவகன் துறவறம் பூண்டு முக்தி அடைகிறான்.**

119) அனைத்துவிதமான சிறந்த குணங்களைச் செல்வமெனக் கொண்டு, மூவுலகும் போற்ற அழிவற்ற இன்பம் நல்கும் தேவாதி தேவனின் திருவடியைப் போற்றுவோம் என்று கூறும் சமயம் எது?

**A) சமணம்**

B) பௌத்தம்

C) கிறித்துவம்

D) ஜைனம்

**விளக்கம்: அனைத்துவிதமான சிறந்த குணங்களைச் செல்வமெனக் கொண்டு, மூவுலகும் போற்ற அழிவற்ற இன்பம் நல்கும் தேவாதி தேவனின் திருவடியைப் போற்றுவோம் என்று சமண சமயக் காப்பியமான சீவகசிந்தாமணியில் திருத்தக்கத்தேவர் குறிப்பிடுகிறார்.**

120) கூற்றுகளை ஆராய்க.

1. சைவத்திருமுறையில் பத்தாம் திருமுறை பெரியபுராணம் ஆகும்.

2. திருத்தொண்டர் புராணத்தை எழுதிய ஆசிரியரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர்.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தை எழுதியவர் சேக்கிழார். இவரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர். பெரியபுராணம் 12–ஆம் திருமுறையாக இடம்பெற்றுள்ளது.**

121) பொருத்துக.

அ. பொய்கையாழ்வார்– 1. இரண்டாம் திருவந்தாதி

ஆ. பூதத்தாழ்வார்– 2. முதல் திருவந்தாதி

இ. பேயாழ்வார்– 3. நான்காம் திருவந்தாதி

ஈ. திருமழிசையாழ்வார்– 4. மூன்றாம் திருவந்தாதி

A) 2, 1, 3, 4

**B) 2, 1, 4, 3**

C) 3, 4, 1, 2

D) 4, 3, 1, 2

**விளக்கம்: பொய்கையாழ்வார் – முதல் திருவந்தாதி**

**பூதத்தாழ்வார்– இரண்டாம் திருவந்தாதி**

**பேயாழ்வார்– மூன்றாம் திருவந்தாதி**

**திருமழிசையாழ்வார்– நான்காம் திருவந்தாதி**

122) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) முதல் மூன்று திருமுறைகள்

B) 4, 5, 6–ஆம் திருமுறைகள்

C) ஏழாம் திருமுறை

**D) எட்டாம் திருமுறை**

**விளக்கம்: 1, 2, 3 திருமுறைகள் – தேவாரம்**

**4, 5, 6 திருமுறைகள்– தேவாரம்.**

**7–ஆம் திருமுறை– தேவாரம்**

**எட்டாம் திருமுறை– திருவாசகம், திருக்கோவையார்.**

123) அறம் என்ற சொல்லை பிரித்து எழுதுக?

**A) அறு+அம்**

B) அற+அம்

C) அற+ம்

D) அறு+ம்

**விளக்கம்: 'அறம்' என்ற சொல்லை அறு+அம் எனப்பிரித்துத் தீமைமை அறுப்பது, நீக்குவது என்றும் அறுதி செய்வது, கடமைகளை வரையறுப்பது என்றும் பொருள் கொள்வர். பொதுவாகச் சான்றோர் விலக்கியன ஒழித்தலும், விதித்தன செய்தலும் அறம் எனப்பெறும் .**

124) நாலடி நான்மணி நானாற்ப தைத்திணைமுப்

பால்கடுகம் கோவை பழ்மொழிஎன்ற வரியில் நானாற்பது என்பது கீழ்க்காணும் எதைக் குறிக்கவில்லை?

A) இன்னா நாற்பது

B) இனியவை நாற்பது

**C) காற் நாற்பது**

D) களவழிநாற்பது

**விளக்கம்: நாலடி நான்மணி நானாற்ப தைத்திணைமுப்**

**பால்கடுகம் கோவை பழ்மொழி – மாமூலம்**

**இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே**

**கைந்நிலைய வாம் கீழ்க்கணக்கு.**

**நானாற்பது என்பது இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது என்பதைக் குறிக்கும்.**

125) கூற்றுகளை ஆராய்க.

1. கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடிய நூல் களவழி நாற்பது.

2. யானைப் போர் பற்றி குறிப்பிடப்படுவதால் பரணி என்ற சிற்றிலக்கிய வகை தோற்றம் பெறுவதற்கு இந்நூலே காரணம் என்பவர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

விளக்கம்: 1. கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடிய நூல் களவழி நாற்பது.

2. யானைப் போர் பற்றி குறிப்பிடப்படுவதால் பரணி என்ற சிற்றிலக்கிய வகை தோற்றம் பெறுவதற்கு இந்நூலே காரணம் என்பவர்.

126) தோழமை நெறியை பின்பற்றியவர் யார்?

**A) திருமழிசையாழ்வார்**

B) திருநாவுக்கரசர்

C) குலசேகராழ்வார்

D) மாணிக்கவாசகர்

**விளக்கம்: சுந்தரர், திருமழிசையாழ்வார் போன்றோர் தோழமை நெறியையும், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்றோர் நாயகன் நாயகி நெறியையும் பின்பற்றினர்**

127) இறைவனை ஆண்டான், தந்தை, சக, ஞான என பல பரிணாமங்களில் கண்டு போற்றியவர்கள்?

A) ஆழ்வார்கள்

B) நாயன்மார்கள்

C) சித்தர்கள்

**D) A மற்றும் B**

**விளக்கம்: ஆழ்வார்களும், நாயன்மார்களும் இறைவனை, ஆண்டான், தந்தை, தோழன், நாயகன் என பல பரிமாணங்களில கண்டு போற்றினர். இவற்றையே தாச, சற்புத்திர, சக, ஞான மார்க்கங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.**

128) சேக்கிழார் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர் என்ன?

A) திருத்தொண்டர் புராணம்

B) திருத்தொண்டர் திருவந்தாதி

**C) திருத்தொண்டர் மாக்கதை**

D) திருத்தொண்டத்தொகை

**விளக்கம்: சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு பெரியபுராணம் அமைகின்றது. சுந்தரரின் சிறப்பு, சைவ அடியார்களின் சிறப்பு, சிவபெருமானின் அருள்திறம், அடியார்களின் வரலாறு, அவர்கள் கடைப்பிடித்த தொண்டு நெறி, இறைவன் அவர்களை ஆட்கொண்ட விதம், அடியார்கள் இறைவனை வழிபட்டு முக்தி பெற்ற தன்மை ஆகியன இந்நூல் முழுதும் எடுத்துக் கூறப்படுவதால் சேக்கிழார் இந்நூலிற்கு திருத்தொண்டர் மாக்கதை எனப் பெயரிட்டார்.**

129) கூற்று: வால்மீகி எழுதிய நூல் இராமாயணம்.

காரணம்: இராமனின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் இராமாயணம் எனப்பட்டது

A) கூற்று சரி காரணம் தவறு

B) கூற்று தவறு காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: இராமனின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் இராமாயணம் எனப்பட்டது. இதன் காலம் கி.பி.12–ஆம் நூற்றாண்டு ஆகும்.**

130) கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது?

A) 2

B) 7

**C) 6**

D) 5

**விளக்கம்: கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது. அவை,**

**1. பால காண்டம்**

**2. அயோத்திய காண்டம்**

**3. ஆரண்யா காண்டம்**

**4. கிட்கிந்தா காண்டம்**

**5. சுந்தர காண்டம்**

**6. யுத்த காண்டம்**

131) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) காதலும் வீரமும் சங்க காலத்தில் போற்றப்பட்டன.

B) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் களவழி நாற்பது ஆகும்.

C) ஏலாதியின் ஆசிரியர் கணிமேதாவியார்

**D) பழமொழி நானூறு என்ற நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவார்**

**விளக்கம்: காதலும் வீரமும் சங்க காலத்தில் போற்றப்பட்டன.**

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் களவழி நாற்பது ஆகும்.**

**ஏலாதியின் ஆசிரியர் கணிமேதாவியார்**

**பழமொழி நானூறு என்ற நூலின் ஆசிரியர் மூன்றுறையரையனார் ஆவார்.**

**பெருவாயின் முள்ளியார் இயற்றியது – ஆசாரக்கோவை ஆகும்.**

132) பெரியபுராணம் கீழ்க்காணும் எதனை முதல் நூலாகக் கொண்டு இயற்றப்பட்டது?

**A) திருத்தொண்டத்தொகை**

B) திருத்தொண்டர் புராணம்

C) A மற்றும் B

D) திருத்தொண்டர் வரலாறு

**விளக்கம்: சுந்தரர் எழுதிய 'திருத்தொண்டத்தொகை', நம்பியாண்டார் நம்பி எழுதிய 'திருத்தொண்டர் திருவந்தாதி' ஆகிய நூல்களை முதல் நூலாகக் கொண்டு பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் எழுதப்பட்டது.**

133) பாட்டுடைத் தலைவனின் புகழை ஒரு பெண் புகழ்ந்து பாட, மற்றொரு பெண் அது தொடர்பாக ஒரு வினா கேட்டு மூன்றாம் பெண் ஒரு கருத்தைக் கூறி அதை முடிக்கும் விளையாட்டு எது?

**A) அம்மானை**

B) கார்

C) ஊசல்

D) கைக்கிளை

**விளக்கம்: அம்மானை, கார், ஊசல், கைக்கிளை, புயவகுப்பு முதலான 18 உறுப்புகள் அமையப் பாடப்படுவது கலம்பகம்.**

**கலம் – 12. பகம் – 6.**

**அவற்றுள், 'அம்மானை' என்பது மகளிர் விளையாடும் விளையாட்டுகளில் ஒன்று. பாட்டுடைத் தலைவனின் புகழை ஒரு பெண் புகழ்ந்து பாட, மற்றொரு பெண் அது தொடர்பாக ஒரு வினா கேட்டு மூன்றாம் பெண் ஒரு கருத்தைக் கூறி அதை முடிப்பது அம்மானை என்னும் விளையாட்டு.**

134) போரில் ஆயிரம் யானைக் கொன்று வெற்றிபெறும் வீரனின்மேல் பாடப்படும் சிற்றிலக்கியம் எது?

A) பள்ளு

**B) பரணி**

C) கோவை

D) தூது

**விளக்கம்: போரில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிபெறும் வீரனின்மேல் பாடப்படுவது பரணி. போரில்தோற்ற அரசனது நாட்டின் பெயரால் இந்நூல் வழங்கப்பெறும்.**

135) தவறான கூற்றை ஆராய்க.

A) கலம்பம் – கலம்+பகம். கலம் – 12. பகம் – 6.

B) பாட்டுடைத் தலைவனின் புகழை ஒரு பெண் புகழ்ந்து பாட, மற்றொரு பெண் அது தொடர்பான ஒரு வினா கேட்டு, மூன்றாம் பெண் ஒரு கருத்தைக் கூறி அதை முடிப்பது அம்மானை ஆகும்.

C) தஞ்சாவூரைச் சேர்ந்த சந்திரவாணன், பாண்டிவள நாட்டைச்சார்ந்த குலசேகர பாண்டியனின் அமைச்சராக விளங்கினான்.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: கலம்பம் – கலம்+பகம். கலம் – 12. பகம் – 6.**

**பாட்டுடைத் தலைவனின் புகழை ஒரு பெண் புகழ்ந்து பாட, மற்றொரு பெண் அது தொடர்பான ஒரு வினா கேட்டு, மூன்றாம் பெண் ஒரு கருத்தைக் கூறி அதை முடிப்பது அம்மானை ஆகும்.**

**தஞ்சாவூரைச் சேர்ந்த சந்திரவாணன், பாண்டிவள நாட்டைச்சார்ந்த குலசேகர பாண்டியனின் அமைச்சராக விளங்கினான்.**

136) அயோத்தி நகரத்து அரசனான தசரதனுக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கன் ஆகிய நான்கு பிள்ளைகள் பிறப்பதும், இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணம் முடிப்பதும் இடம்பெற்றுள்ள காண்டம் எது?

**A) பால காண்டம்**

B) அயோத்தியா காண்டம்

C) ஆரண்யா காண்டம்

D) கிட்கிந்தா காண்டம்

**விளக்கம்: அயோத்தி நகரத்து அரசனான தசரதனுக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கன் ஆகிய நான்கு பிள்ளைகள் பிறப்பதும், இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணம் முடிப்பதும் இடம்பெற்றுள்ள காண்டம் பால காண்டமாகும்.**

137) நாயகன் நாயகி நெறியை பின்பற்றியவர் யார்?

A) சுந்தரர்

B) திருநாவுக்கரசர்

C) குலசேகராழ்வார்

**D) மாணிக்கவாசகர்**

**விளக்கம்: சுந்தரர், திருமழிசையாழ்வார் போன்றோர் தோழமை நெறியையும், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்றோர் நாயகன் நாயகி நெறியையும் பின்பற்றினர்**

138) சரியான வரிசையை தேர்வு செய்க.

**A) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி**

B) காப்பு, செங்கீரை, சப்பாணி, தால், முத்தம், வருகை, அம்புலி

C) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், அம்புலி, வருகை

D) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி,

**விளக்கம்: கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகக் கருதி அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப்பருவங்களாகப் பகுத்துப் பருவத்திற்குப் பத்து ஆசிரிய விருத்தங்களாகப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.**

**ஆண்பாற்பிள்ளைத்தமிழ் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை.**

**பெண்பாற்பிள்ளைத்தமிழ் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.**

139) அனைத்துவிதமான சிறந்த குணங்களைச் செல்வமெனக் கொண்டு, மூவுலகும் போற்ற அழிவற்ற இன்பம் நல்கும் தேவாதி தேவனின் திருவடியைப் போற்றுவோம் என்று குறிப்பிடும் காப்பியம் எது?

A) வளையாபதி

B) குண்டலகேசி

C) மணிமேகலை

**D) சீவகசிந்தாமணி**

**விளக்கம்: அனைத்துவிதமான சிறந்த குணங்களைச் செல்வமெனக் கொண்டு, மூவுலகும் போற்ற அழிவற்ற இன்பம் நல்கும் தேவாதி தேவனின் திருவடியைப் போற்றுவோம் என்று சமண சமயக் காப்பியமான சீவகசிந்தாமணியில் திருத்தக்கத்தேவர் குறிப்பிடுகிறார்.**

140) கம்பராமாயணம் ஆறு காண்டங்களை கொண்டது. இதில் அனுமனை பற்றி கூறும் காண்டம் எத்தனையாவதாக இடம்பெற்றுள்ளது?

**A) 5**

B) 6

C) 4

D) 2

**விளக்கம்: கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது. அவை,**

**1. பால காண்டம்**

**2.அயோத்திய காண்டம்**

**3. ஆரண்யா காண்டம்**

**4. கிட்கிந்தா காண்டம்**

**5. சுந்தர காண்டம்**

**6. யுத்த காண்டம்**

**ஐந்தாவது காண்டமாக உள்ள சுந்தர காண்டம் அனுமனைப் பற்றி கூறும் காண்டமாகும்**

141) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

A) ஆண்டான் –தாச

B) தந்தை– சற்புத்திர

C) தோழன்–சக

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: ஆழ்வார்களும், நாயன்மார்களும் இறைவனை, ஆண்டான், தந்தை, தோழன், நாயகன் என பல பரிமாணங்களில் கண்டு போற்றினர். இவற்றையே தாச, சற்புத்திர, சக, ஞான மார்க்கங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.**

142) பொருந்தாதவரை தேர்வு செய்க.

A) திருநாவுக்கரசர்

B) குலசேகராழ்வார்

C) தொண்டரடிப்பொடியாழ்வார்

**D) திருஞானசம்பந்தர்**

**விளக்கம்: திருநாவுக்கரசர், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் போன்றோர் அடிமை நெறியையும், திருஞானசம்பந்தர் பிள்ளமை நெறியையும் பின்பற்றினர்.**

143) கூற்றுகளை ஆராய்க

1. பண்டமாற்றும் காசுகளைப் பயன்படுத்துதல் வணிகத்தின் அடிப்படையாக விளங்கின.

2. பழந்தமிழர்கள் நெறிபிறழாது, துலாக்கோல்போல் நடுவுநிலை நின்று வணிகம் செய்து வந்தனர் என்பதை பட்டினப்பாலை வழியே கடியலூர் உருத்திரங்கண்ணனார் உணர்த்துகிறார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பண்டமாற்றும் காசுகளைப் பயன்படுத்துதல் வணிகத்தின் அடிப்படையாக விளங்கின.**

**2. பழந்தமிழர்கள் நெறிபிறழாது, துலாக்கோல்போல் நடுவுநிலை நின்று வணிகம் செய்து வந்தனர் என்பதை பட்டினப்பாலை வழியே கடியலூர் உருத்திரங்கண்ணனார் உணர்த்துகிறார்.**

144) கையேயி கேட்ட இரண்டு வரங்களால் இராமன் காடடைவது எந்த காண்டத்தில் இடம்பெற்றுள்ளது?

A) ஆரண்யா காண்டம்

**B) அயோத்தியா காண்டம்**

C) கிட்கிந்தா காண்டம்

D) யுத்த காண்டம்

**விளக்கம்: கைகேயி கேட்ட இரண்டு வரங்களால் இராமன் காடடைவது அயோத்தியா காண்டத்தில் இடம்பெற்றுள்ளது.**

145) இராமனைப் பிரிந்த சீதையின் நிலை, அனுமனின் ஆற்றல் ஆகியன பற்றி கூறும் காண்டம் எது?

A) யுத்த காண்டம்

B) கிட்கிந்தா காண்டம்

**C) சுந்தர காண்டம்**

D) அயோத்தியா காண்டம்

**விளக்கம்: இராமனைப் பிரிந்த சீதையின் நிலை, அனுமனின் ஆற்றல் ஆகியன பற்றி கூறும் காண்டம் சுந்தர காண்டமாகும்.**

146) கம்பராமாயணத்தையும், திருக்குறளையும் 'தமிழுக்குக் கதி' என்று என்று கூறியவர் யார்?

A) ஒட்டக்கூத்தர்

B) கம்பர்

**C) திருமணம் செல்வ கேசவராயர்**

D) ஔவையார்

**விளக்கம்: கம்பராமாயணத்தின் சிறப்பு கருதியும், திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் 'தமிழுக்குக் கதி' என்று திருமணம் செல்வ கேசவராயர் கூறியுள்ளார்.**

147) கம்பராமாயணம் ஒரு_______________நூலாகும்?

A) முதல் நூல்

B) மொழிபெயர்ப்பு நூல்

**C) வழி நூல்**

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: தமிழில் தொடர்ச்சியாகச் செல்வாக்குப் பெற்று விளங்கும் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது கம்பராமாயணமாகும். இது கம்பரால் இயற்றப்பட்டது. வடமொழியில் வான்மீகி இயற்றிய இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டது இந்நூல். வழி நூலாயினும் கம்பர் தமக்கே உரிய கருப்பொருள் சிதையாமல் இயற்றியுள்ளார். கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர் இராமவதாரம்.**

148) இராவணன் சீதையைக் கவர்ந்து செல்வது பற்றி கூறும் கம்பராமாயணத்தின் காண்டம் எது?

A) அயோத்தியா காண்டம்

B) யுத்த காண்டம்

**C) ஆரண்யா காண்டம்**

D) பால காண்டம்

**விளக்கம்: கம்பராமாயணம் ஆறு காண்டங்களை கொண்டது. இராவணன் சீதையைக் கவர்ந்து செல்வது பற்றி கூறும் காண்டம் ஆரணிய காண்டமாகும்.**

149) சீதையைத் தேடிச்செல்லும் இராமன் வாலியைக் கொன்று சுக்ரீவன், அனுமன் நட்பைப் பெறுவது பற்றி கூறும் காண்டம் எது?

**A) கிட்கிந்தா காண்டம்**

B) சுந்தர காண்டம்

C) யுத்த காண்டம்

D) அயோத்தியா காண்டம்

**விளக்கம்: சீதையைத் தேடிச் செல்லும் இராமன் வாலியைக் கொன்று சுக்ரீவன், அனுமன் நட்பைப் பெறுவது கிட்கிந்தா காண்டத்தில் கூறப்பட்டுள்து. கம்பராமாயணம் ஆறு காண்டங்களையும் 118 படலங்களையும் கொண்டுள்ளது.**

150) எத்தனை கட்டளைக் கலித்துறையால் பாடப்பட்டது கோவை என்னும் சிற்றிலக்கிய வகை?

A) 100

B) 200

C) 300

**D) 400**

**விளக்கம்: அகப்பொருளுக்குரிய துறைகள் பலவற்றை 400 கட்டளைக் கலித்துறையால் சங்கிலித்தொடர் போலப் பாடப்பட்டது கோவையாகும். கடவுளரையோ அரசரையோ படைத்தலைவரையோ வள்ளல்களையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படுவது.**

151) மணிமேகலையின் தாய் கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையவர்?

**A) பௌத்தம்**

B) சமணம்

C) சீக்கியம்

D) ஜெராஸ்டிரியம்

**விளக்கம்: கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மணிமேகலை. தனக்கு நேர்ந்த கதி தன் மகளுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவளையும் தன்னைப் போலவே பௌத்தத் துறவியாக்கி இருந்தாள் மாதவி.**

152) உழவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் சிற்றிலக்கியம் எது?

A) தூது

B) உலா

C) சதகம்

**D) பள்ளு**

**விளக்கம்: சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் பள்ளு இலக்கியம் ஆகும். உழவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியம் எனப்படும்.**

153) திருவாசிரியம், திருவாய்மொழி என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

**B) நம்மாழ்வார்**

C) திருமங்கையாழ்வார்

D) மதுரகவியாழ்வார்

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்**

154) சரியான வரிசையை தேர்வு செய்க.

**A) சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.**

B) சப்பாணி, வருகை, முத்தம், அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.

C) சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, நீராடல், அம்மானை, ஊசல்.

D) சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, ஊசல், அம்மானை.

**விளக்கம்: கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகக் கருதி அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப்பருவங்களாகப் பகுத்துப் பருவத்திற்குப் பத்து ஆசிரிய விருத்தங்களாகப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.**

**ஆண்பாற்பிள்ளைத்தமிழ் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை.**

**பெண்பாற்பிள்ளைத்தமிழ் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.**

155) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) ஏமாங்கத நாட்டின் தலைநகர் இராசமாபுரம் ஆகும். இந்நாட்டை ஆண்ட மன்னன் சச்சந்தன் ஆவார்

B) சச்சந்தன் மனைவி விசயை. இவரின் மகன் சீவகன்

**C) ஏமாங்கத நாட்டின் அமைச்சர் அச்சணந்தி**

D) சீவகன் பிறந்தபோது அவன்தாய் சிந்தாமணியே என அழைத்தாள்.

**விளக்கம்: ஏமாங்கத நாட்டின் அமைச்சர் கட்டியங்காரன். இவர் ஏற்ற நேரத்தில் அரசனைக் கொன்று ஆட்சியைப் பிடித்துக் கொண்டார்.**

156) சூளாமணி பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. திவிட்டன், விசயன் ஆகிய இருமன்னர்களைப் பற்றிய வரலாற்றைக் கூறும் ஒரு சமணநூல்

2. திவிட்டனின் தந்தை பயாபதி மன்னன் "உயர்ந்து உலகின் முடிக்கோர் சூளாமணியானான்" என்பதனால் இந்நூலுக்கு சூளாமணி எனப் பெயர் வழங்கிற்று என்பர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. திவிட்டன், விசயன் ஆகிய இருமன்னர்களைப் பற்றிய வரலாற்றைக் கூறும் ஒரு சமணநூல் 2. திவிட்டனின் தந்தை பயாபதி மன்னன் "உயர்ந்து உலகின் முடிக்கோர் சூளாமணியானான்" என்பதனால் இந்நூலுக்கு சூளாமணி எனப் பெயர் வழங்கிற்று என்பர்.**

157) தோழமை நெறியை பின்பற்றியவர் யார்?

**A) சுந்தரர்**

B) திருநாவுக்கரசர்

C) குலசேகராழ்வார்

D) திருமங்கையாழ்வார்

**விளக்கம்: சுந்தரர், திருமழிசையாழ்வார் போன்றோர் தோழமை நெறியையும், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார் போன்றோர் நாயகன் நாயகி நெறியையும் பின்பற்றினர்.**

158) வட இந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம் எது?

A) கம்பராமாயணம்

B) மகாபாரதம்

C) வளையாபதி

**D) பெருங்கதை**

**விளக்கம்: வடஇந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம் பெருங்கதை. இக்காப்பியத்தை இயற்றியவர் கொங்குவேளிர் ஆவார்.**

159) மணிமேகலைக்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) இயற்கை காட்சிகளும் வருணைனைகளும் அமைந்துள்ளன.

B) கதைத்தலைவியால் பெயர் பெற்றது இந்நூல்

C) பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு, சிறையொழிப்பு என்னும் கருத்துக்களைக் கூறும் சமுதாய சீர்திருத்தக்காப்பியமாக இந்நூல் விளங்குகிறது.

**D) அரங்க அமைப்பு முறைகள் பற்றிய செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.**

**விளக்கம்: அரங்க அமைப்பு முறைகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ள நூல் – சிலப்பதிகாரம் ஆகும்.**

160) பெரியபுராணம் எத்தனை அடியார் பெருமக்களை மையமாக் கொண்டு திகழ்கின்றது?

A) 72

B) 64

**C) 63**

D) 9

**விளக்கம்: பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் பெருங்காப்பிய இலக்கணங்கள் பொருந்தியும் சில நெகிழ்ச்சிகளை உள்வாங்கியும் இயற்றப்பட்ட சைவக் காப்பியமாகும். இது 63 அடியார் பெருமக்களை மையமாகக் கொண்டு திகழ்கின்றது.**

161) மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கம் என்று கூறியவர் யார்?

**A) குன்றக்குடி அடிகளார்**

B) மு.வ

C) தமிழன்பன்

D) இளங்குமரனார்

**விளக்கம்: நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழச்செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்குத் தகுதியாக்குவது உழவு. சுவையுடையனவாக, ஆனால், ஒன்றோடொன்று மாறுபட்ட சுவையுடையனவாகிய பொருள்களைச் சுவைத்தற்குரிய சுவையுடையனவாக ஆக்குவது சமைத்தல். மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவப்படுத்தும் தத்துவத்திற்கு, வாழ்க்கை முறைக்குச் சமயம் என்பது பெயர். மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கம் – குன்றக்குடி அடிகளார்.**

162) கூற்றுகளை ஆராய்க.

1. வாழ்க்கையில் வெறுப்புற்ற பத்தரை ஒரு சமணப் பள்ளியை அடைந்து துறவறம் ஏற்கிறாள்.

2. பத்தரை சாரிபுத்தரிடம் வாதத்தில் தோற்றுப் புத்தசமயத்தை தழுவுகிறாள்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. வாழ்க்கையில் வெறுப்புற்ற பத்தரை ஒரு சமணப் பள்ளியை அடைந்து துறவறம் ஏற்கிறாள்.**

**2. பத்தரை சாரிபுத்தரிடம் வாதத்தில் தோற்றுப் புத்தசமயத்தை தழுவுகிறாள்.**

163) சிற்றியலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் எது?

A) கலம்பகம்

B) சதகம்

C) தாண்டகம்

**D) பள்ளு**

**விளக்கம்: சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் வாய்ந்த ஓர் இலக்கியம் பள்ளு இலக்கியம் ஆகும். உழவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியம் எனப்படும்.**

164) தவறான கூற்றை தேர்வு செய்க.

A) யசோதர காவியம் ஐந்து சருக்கங்களையும் 320 பாடல்களையும் கொண்டது.

B) அபயருசி என்பான் ஔதய நாட்டு மன்னன் மாரிதத்தனுக்குத் தம் பழம்பிறப்பு வரலாறு உணர்த்திச் சமண நெறிப்படுத்தியதே யசோதரக் காப்பியம் ஆகும்.

C) பெருங்காப்பியத்திற்கு இணையாக போற்றப்படுகின்ற சூளாமணியை இயற்றியவர் தோலாமொழித்தேவர் ஆவார்.

**D) சூளாமணி ஐந்து காண்டங்களையும் 2131 விருத்தப்பாக்களையும் கொண்டது.**

**விளக்கம்: சூளாமணி 12 காண்டங்களையும் 2131 விருத்தப்பாக்களையும் கொண்டது.**

165) தவறாக பொருந்தியுள்ளதை தேர்க.

winmeen.com

A) குலசேகராழ்வார்– அடிமை நெறி

B) சுந்தரர்– தோழமை நெறி

C) மாணிக்க வாசகர்– நாயகன் நாயகி நெறி

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: அடிமை நெறி – திருநாவுக்கரசர், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார்**

**பிள்ளைமை நெறி – திருஞானசம்பந்தர்**

**தோழமை நெறி – சுந்தரர், திருமழிசையாழ்வார்**

**நாயகன், நாயகி நெறி – மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார்**

166) பெரியபுராணத்தின் காப்பியத் தலைவர் யார்?

A) திருஞானசம்பந்தர்

B) திருநாவுக்கரசர்

**C) சுந்தரர்**

D) மாணிக்கவாசகர்

**விளக்கம்: சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு பெரியபுராணம் அமைகின்றது. சுந்தரரின் சிறப்பு, சைவ அடியார்களின் சிறப்பு, சிவபெருமானின் அருள்திறம், அடியார்களின் வரலாறு, அவர்கள் கடைப்பிடித்த தொண்டு நெறி, இறைவன் அவர்களை ஆட்கொண்ட விதம், அடியார்கள் இறைவனை வழிபட்டு முக்தி பெற்ற தன்மை ஆகியன இந்நூல் முழுவதும் எடுத்துக் கூறப்படுவதால் சேக்கிழார் இந்நூலிற்கு திருத்தொண்டர் மாக்கதை எனப் பெயரிட்டார்.**

167) கூற்று: திருக்குறள், கம்பராமாயணம் ஆகிய நூல்கள் தமிழுக்கு கதி என்று திருமணம் செல்வ கேசவராயர் கூறியுள்ளார்.

காரணம்: திருக்குறளின் பெருமை, கம்பராமாயணத்தின் சிறப்பு

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: கம்பராமாயணத்தின் சிறப்பு கருதியும், திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் 'தமிழுக்குக் கதி' என்று திருமணம் செல்வ கேசவராயர் கூறியுள்ளார்.**

168) நானாற்பது என்று குறிப்பிடப்படும் நூல்களில் அக நூல் எது?

**A) கார் நற்பது**

B) களவழி நாற்பது

C) இன்னா நாற்பது

D) இனியவை நாற்பது

**விளக்கம்: நானாற்பது என்று அழைக்கப்படும் நான்கு நூல்களாவன:**

**1. இன்னா நாற்பது**

**2. இனியவை நாற்பது**

**3. கார் நாற்பது**

**4. களவழி நாற்பது.**

**இவற்றுள் இன்னா நாற்பது மற்றும் இனியவை நாற்பது அறநூல்கள்**

**கார் நாற்பது அக நூல்.**

**களவழி நாற்பது புற நூல்.**

169) சிலப்பதிகாரம் பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க்காப்பியம், நாடகக் காப்பியம், தேசிய காப்பியம் முதலான சிறப்புப்பெயர்களால் அழைக்கப்படுகிறது.

B) பூம்புகார், மதுரை, வஞ்சிமாநகர் பற்றி வரலாற்றுச் செய்திகளையும், அக்காலச் சமுதாய அமைப்பு, ஆடல் வகைகள், இசைக் கருவிகள், கல்வி, வணிகம் பற்றிய குறிப்புகளையும் கூறுகிறது.

C) மூவேந்தர் ஆட்சிமுறை பற்றிய செய்திகளை கூறுகிறது.

**D) காப்பிய நாயகனே இக்காப்பியத்தில் முதன்மைப்படுத்தப்படுகிறார்.**

**விளக்கம்: சிலப்பதிகாரத்தில் காப்பிய நாயகியே முதன்மைப்படுத்தப்படுகிறாள்.**

170) அற்புதத்திருவந்தாதி என்னும் நூலை எழுதியவர் யார்?

A) திருஞானசம்பந்தர்

**B) காரைக்கால் அம்மையார்**

C) காக்கைபாடினியார்

D) திருநாவுக்கரசர்

**விளக்கம்: தன்னைச் சரணடைந்த அடியவர்களைக் காத்தருளும் தயாளனாக இறைவன் விளங்குவதை அற்புதத்திருவந்தாதியில் காரைக்காலம்மையார் எடுத்துக்கூறுகிறார்.**

171) இராமபிரான் வில்லை வளைத்துச் சீதையை மணம் முடிப்பது பற்றி கூறும் காண்டம் எது?

**A) பால காண்டம்**

B) அயோத்தியா காண்டம்

C) சுந்தர காண்டம்

D) கிட்கிந்தா காண்டம்

**விளக்கம்: அயோத்தி நகரத்து அரசனான தசரதனுக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கன் ஆகிய நான்கு பிள்ளைகள் பிறப்பதும், இராமபிரான் வில்லை வளைத்துச் சீதையை மணம் முடிப்பதும் இடம்பெற்றுள்ள காண்டம் பால காண்டமாகும்.**

172) மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவப்படுத்தும் தத்துவத்திற்கு, வாழ்க்கை முறைக்குச் சமயம் என்பது பெயர் என்று கூறியவர் யார்?

**A) குன்றக்குடி அடிகளார்**

B) மு.வ

C) தமிழன்பன்

D) இளங்குமரனார்

**விளக்கம்: நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழச்செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்குத் தகுதியாக்குவது உழவு. சுவையுடையனவாக, ஆனால், ஒன்றோடொன்று மாறுபட்ட சுவையுடையனவாகிய பொருள்களைச் சுவைத்தற்குரிய சுவையுடையனவாக ஆக்குவது சமைத்தல். மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவப்படுத்தும் தத்துவத்திற்கு,**

**வாழ்க்கை முறைக்குச் சமயம் என்பது பெயர். மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கம் – குன்றக்குடி அடிகளார்.**

173) இறைவனையே குழந்தையாகக் கருதி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியவர் யார்?

A) குலசேகராழ்வார்

B) ஆண்டாள்

**C) பெரியாழ்வார்**

D) நம்மாழ்வார்

**விளக்கம்: பெரியாழ்வார் இறைவனைக் குழந்தையாகக் கருதி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான ஆண்டாள் இறைவனையே தன் தலைவனாகப் பாவித்து வாழ்ந்தார்.**

174) திருவெழுக்கூற்றிருக்கை என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

B) நம்மாழ்வார்

**C) திருமங்கையாழ்வார்**

D) மதுரகவியாழ்வார்

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்.**

175) கம்பராமாயணத்தின் ஏழாவது காண்டத்தை எழுதியவர் யார்?

A) ஔவையார்

B) கபிலர்

C) கம்பர்

**D) ஒட்டக்கூத்தர்**

**விளக்கம்: கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது. அவை,**

**1. பால காண்டம்**

**2. அயோத்திய காண்டம்**

**3. ஆரண்யா காண்டம்**

**4. கிட்கிந்தா காண்டம்**

**5. சுந்தர காண்டம்**

**6. யுத்த காண்டம்**

**இந்நூலின் ஏழாவது காண்டத்தை எழுதியவர் ஒட்டக்கூத்தர் ஆவார்.**

176) திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலை எழுதியவர் யார்?

**A) நம்பியாண்டார் நம்பி**

B) சுந்தரர்

C) சேக்கிழார்

winmeen.com

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: பெரியபுராணம்(திருத்தொண்டர் புராணம்) – சேக்கிழார்.**

**திருத்தொண்டத்தொகை – சுந்தரர்**

**திருத்தொண்டர் திருவந்தாதி – நம்பியாண்டார் நம்பி.**

177) கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர் என்ன?

A) கம்பராமாயணம்

**B) இராமவதாரம்**

C) ராமாயணம்

D) இராமநாடகம்

**விளக்கம்: தமிழில் தொடர்ச்சியாகச் செல்வாக்குப் பெற்று விளங்கும் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது கம்பராமாயணமாகும். இது கம்பரால் இயற்றப்பட்டது. வடமொழியில் வான்மீகி இயற்றிய இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டது இந்நூல். வழி நூலாயினும் கம்பர் தமக்கே உரிய கருப்பொருள் சிதையாமல் இயற்றியுள்ளார். கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர் இராமவதாரம்.**

178) கூற்று: 15–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழகத்தில் கிறித்துவ இலக்கியங்கள் தமிழில் பல்கிப்பெருகின.

காரணம்: கிறித்துவ மதப்போதகர்கள் பன்மொழிப் புலமையும் பல்துறை அறிவும் மிக்க தமிழ்மக்களிடம் இரண்டறக்கலந்து தமிழைக் கற்றனர்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: 15–ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேலைநாட்டவர் பெருமளவில் தமிழகத்திற்கு வருகை புரிந்தனர். அவர்களுள் கிறித்துவ மதபோதகர்களும் அடங்குவர். அவர்கள் பன்மொழிப் புலமையும் பல்துறை அறிவும் மிக்க தமிழ்மக்களிடம் இரண்டறக்கலந்து தமிழைக் கற்றனர். தமிழின்வழி தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பினர். இதன் விளைவாக கிறித்துவ இலக்கியங்களும் தமிழில் பல்கிப்பெருகின.**

179) மணிமேகலை பற்றிய கூற்றுகளில் சரியான கூற்றை தேர்வு செய்க.

A) வான்வழியே பறத்தல், பசியாதிருத்தல், தன் உருவை மாற்றிக்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான மந்திரங்களையும், அள்ள அள்ளக் குறையாது அமுதுசுரக்கும் அமுத சுரபியையும் பெறுகிறார் மணிமேகலை.

B) பூம்புகாருக்குத் திரும்பிய மணிமேகலை அறத்தொண்டு ஆற்றுகிறாள்.

C) மணிமேகலையால் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிறது.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: வான்வழியே பறத்தல், பசியாதிருத்தல், தன் உருவை மாற்றிக்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான மந்திரங்களையும், அள்ள அள்ளக் குறையாது அமுதுசுரக்கும் அமுத சுரபியையும் பெறுகிறார் மணிமேகலை.**

**பூம்புகாருக்குத் திரும்பிய மணிமேகலை அறத்தொண்டு ஆற்றுகிறாள்.**

**மணிமேகலையால் சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிறது.**

180) யார் சிவபெருமானிடம், இப்பிறப்பு மட்டுமல்லாமல் எப்பிறப்பிலும் உனக்கு நான் அடிமை, நின் திருநாமமே எனது படைக்கலம் எனக் குறிப்பிட்டார்?

**A) திருநாவுக்கரசர்**

B) திருஞானசம்பந்தர்

C) சுந்தரர்

D) மாணிக்கவாசகர்

**விளக்கம்: திருநாவுக்கரசர் சிவபெருமானிடம், இப்பிறப்பு மட்டுமல்லாமல் எப்பிறப்பிலும் உனக்கு நான் அடிமை, நின் திருநாமமே எனது படைக்கலம் எனக் குறிப்பிட்டுள்ளார்.**

181) கூற்று: சேக்கிழாரின் நூலுக்கு சான்றோர் பெரியர் புராணம் என்று பெயரிட்டனர்.

காரணம்: செயற்கரிய செயல் புரிந்த அடியார்களின் சிறப்பினை உரைக்கும் நூல்

A) கூற்று சரி, காரணம் தவறு

**B) கூற்று தவறு, காரணம் சரி**

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

D) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: சேக்கிழார் தாம் இயற்றிய நூலுக்கு திருத்தொண்டர் மாக்கதை எனப் பெயரிட்டார். செயற்கரிய செயல் புரிந்த அடியார்களின் சிறப்பினை உரைப்பதால் இதனைச் சான்றோர்கள் பெரியர் புராணம் என்று கூற, காலப் போக்கில் இந்நூல் பெரியபுராணம் என்று வழங்கப்பட்டது.**

182) கம்பராயமாயணம் எத்தனை படலங்களை கொண்டது?

A) 100

**B) 118**

C) 105

D) 97

**விளக்கம்: கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது. அவை,**

**1. பால காண்டம்**

**2. அயோத்திய காண்டம்**

**3. ஆரண்யா காண்டம்**

**4. கிட்கிந்தா காண்டம்**

**5. சுந்தர காண்டம்**

**6. யுத்த காண்டம்**

**இந்நூல் 118 படலங்களையும் உள்ளடக்கியது.**

183) உஞ்சையினி நாட்டின் வளத்தையும் பெருமையையும் கூறும் நூல் எது?

**A) உதயண குமார காவியம்**

B) நாக குமார காவியம்

C) யசோதர காவியம்

D) நீலகேசி

**விளக்கம்: உதயணகுமார காவியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகும். இந்நூலில் ஆறு காண்டங்கள் உள்ளன. இக்காப்பியத்தின் முதற்பகுதி உதயணன் வரலாற்றையும், பிற்பகுதி அவனது மகனாகிய நரவாகனனது வரலாற்றையும் கூறுகிறது. இக்காப்பியத்தில் 367 பாடல்கள் உள்ளன. இந்நூல்**

**பெருங்கதை என்னும் காப்பியத்திலிருந்து வேறுபட்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. உஞ்சையினி நாட்டின் வளத்தையும் பெருமையையும் இந்நூல் எடுத்தியம்புகிறது.**

184) அபயருசி கூறும் அறிவுரையின்படி வாழ்பவர் அதன் பயனாக வீடுபேற்றை அடைவர் என்று கூறும் நூல் எது?

A) உதயண குமார காவியம்

B) நாக குமார காவியம்

**C) யசோதர காவியம்**

D) நீலகேசி

**விளக்கம்: அபயருசி கூறும் அறிவுரையின்படி வாழ்பவர் அதன் பயனாக வீடுபேற்றை அடைவர் என்று ஐஞ்சிறுங்காப்பியங்களில் ஒன்றான யசோதர காவியம் கூறுகிறது.**

185) அறம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக

**A) அறு+அம்**

B) அ+றம்

C) அற+அம்

D) அற+ம்

**விளக்கம்: 'அறம்' என்ற சொல்லை அறு+அம் எனப்பிரித்துத் தீமை அறுப்பது, நீக்குவது என்றும் அறுதி செய்வது, கடமைகளை வரையறுப்பது என்றும் பொருள் கொள்வர். பொதுவாகச் சான்றோர் விலக்கியன ஒழித்தலும், விதித்தன செய்தலும் அறம் எனப்பெறும்.**

186) காதலும் வீரமும் சங்க காலத்தில் போற்றப்பட்டன. அதைப்போல அறமும் நீதியும் கீழ்க்காணும் எக்காலத்தில் பெரிதும் போற்றப்பட்டன?

A) பல்லவர்கள் காலம்

B) களப்பிரர்கள் காலம்

**C) சங்கம் மருவிய காலம்**

D) பாண்டியர்கள் காலம்

**விளக்கம்: அறநூல்களைச் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்துப் பாராட்டுவது தமிழின் மரபு. கி.பி.3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6–ஆம் நூற்றாண்டு வரை அறம் வலியுறுத்தும் நீதிநூல்கள் தமிழில் பலவிதமான வடிவங்களிலும் வெளிப்பாட்டு முறைகளிலும் எழுதப்பெற்றுள்ளன. காதலும் வீரமும் சங்க காலத்தில் போற்றப்பட்டதைப் போலவே அறமும் நீதியும் சங்கம் மருவிய காலத்தில் பெரிதும் போற்றப்பட்டன.**

187) இறைவனையே தன் தலைவனாகக் கருதி வாழ்ந்தவர் யார்?

A) பெரியாழ்வார்

**B) ஆண்டாள்**

C) நம்மாழ்வார்

D) குலசேகராழ்வார்

**விளக்கம்: இறைவனைக் குழந்தையாகக் கருதி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார் பெரியாழ்வார். அவர்தம் வளர்ப்பு மகளான ஆண்டாள் இறைவனையே தன் தலைவனாகப் பாவித்து வாழ்ந்தாள்.**

188) சிவபெருமானை தலைவராகக் கொண்டு பன்னிரு திருமுறைகள் பாடப்பட்டன. பன்னிரு திருமுறையை எத்தனை பேர்கள் பாடியுள்ளனர்?

**A) 27**

B) 12

C) 24

D) 9

**விளக்கம்: சிவபெருமானைத் தலைவராகக் கொண்ட 27 அடியார்கள் பாடிய பதிகங்கள் பன்னிரு திருமுறைகள் என்றும், திருமாலைத் தலைவராகக் கொண்ட 12 ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் என்றும் அழைக்கப்பட்டன.**

189) சுவையுடையனவாக, ஆனால், ஒன்றோடொன்று மாறுபட்ட சுவையுடையனவாகிய பொருள்களைச் சுவைத்தற்குரிய சுவையுடையனவாக ஆக்குவது சமைத்தல் என்று கூறியவர் யார்?

**A) குன்றக்குடி அடிகளார்**

B) மு.வ

C) தமிழன்பன்

D) இளங்குமரனார்

**விளக்கம்: நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழச்செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்குத் தகுதியாக்குவது உழவு. சுவையுடையனவாக, ஆனால், ஒன்றோடொன்று மாறுபட்ட சுவையுடையனவாகிய பொருள்களைச் சுவைத்தற்குரிய சுவையுடையனவாக ஆக்குவது சமைத்தல். மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவப்படுத்தும் தத்துவத்திற்கு, வாழ்க்கை முறைக்குச் சமயம் என்பது பெயர். மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கம் – குன்றக்குடி அடிகளார்.**

190) ஆரண்ய காண்டம் என்பது கம்பராமாயணத்தின் எத்தனையாவது காண்டமாகும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது. அவை,**

**1. பால காண்டம்**

**2. அயோத்திய காண்டம்**

**3. ஆரண்யா காண்டம்**

**4. கிட்கிந்தா காண்டம்**

**5. சுந்தர காண்டம்**

**6. யுத்த காண்டம்**

191) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மூன்றாவதாக அமைந்த மருந்து நூலில் எத்தனை வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன?

A) 100

B) 102

**C) 80**

D) 150

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் மூன்றாவதாக அமைந்தது ஏலாதி. ஏலம், இலவங்கப்பட்டை, நாகசேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்த மருந்து உடலுக்குறுதி சேர்ப்பதுபோல, செய்யுள்தோறும் உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு கருத்துகளைக் கொண்டதால் இந்நூல் ஏலாதி எனப்பெயர் பெற்றது. 80 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார் ஆவார்.**

192) யசோதர காவியம் ______________சருக்கங்களையும்_____________பாடல்களையும் கொண்டது?

**A) 5, 320**

B) 4, 320

C) 5, 310

D) 4, 310

**விளக்கம்: யசோதர காவியம் யசோதரன் என்ற மன்னனின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது ஐந்து சருக்கங்களையும் 320 பாடல்களையும் கொண்டது. அபயருசி என்பான் ஔதய நாட்டு மன்னன் மாரிதத்தனுக்குத் தம் பழம்பிறப்பு வரலாறு உணர்த்திச் சமய நெறிப்படுத்தியதே இக்காப்பியக் கதை.**

193) பதினெண் கீழ்க்கணக்கு பற்றி கூறும் பழம்பாடலில் திருக்குறள் கீழ்க்காணும் எந்த பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது?

A) வாயுறை வாழ்த்து

B) பொய்யாமொழி

**C) முப்பால்**

D) தமிழ்வேதம்

**விளக்கம்: நாலடி நான்மணி நானாற்ப தைத்திணைமுப்**

**பால்கடுகம் கோவை பழ்மொழி – மாமூலம்**

**இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே**

**கைந்நிலைய வாம் கீழ்க்கணக்கு.**

**மேற்காணும் பாடல் பதினெண் கீழ்க்கணக்கு பாடலை குறிக்கும் பழம்பாடலாகும். இதில் திருக்குறள் முப்பால் என்னும் பெயரில் குறிக்கப்பட்டுள்ளது.**

194) பெருங்கதை எந்த வகையான "பா"–வில் பாடப்பட்டுள்ளது?

A) வெண்பா

**B) ஆசிரியப்பா**

C) கலிப்பா

D) வஞ்சிப்பா

**விளக்கம்: ஆசிரியப்பாவின் நேர்த்தியான வடிவமைப்பில் பல கருத்துக்களைச் செம்மையாக பெருங்கதை என்னும் நூலில் கொங்குவேளிர் குறிப்பிட்டுள்ளார்.**

195) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்கள் எத்தனை?

A) 6

B) 1

**C) 11**

D) 18

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்கள் 11 ஆகும்.**

**புற நூல்கள் – 1.**

**அக நூல்கள்– 6.**

196) கீழ்க்காணும் எதன் காரணமாக தமிழகத்தில் இசுலாம் பரவியது?

A) பாமினி சுல்தான்களின் ஆட்சி

B) டெல்லி சுல்தான்களின் படையெடுப்பு

**C) முகலாயப் படையெடுப்பு**

D) முகமது கஜினி, முகமது கோரியின் படையெடுப்பு

**விளக்கம்: முகலாயப் படையெடுப்பின் காரணமாகத் தமிழகத்தில் இசுலாம் பரவியது. இசுலாமியக் கவிஞர்கள் தமிழ்மரபினைப் பின்பற்றி இறைவனையும், இறைவனின் திருத்தூதரான நபிகள் நாயகத்தையும் போற்றிப் பரவினர்.**

197) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

A) உதயணன் கதை

B) கொங்குவேள் மாக்கதை

C) பெருங்கதை

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: இந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம் பெருங்கதை. இக்காப்பியத்தை இயற்றியவர் கொங்குவேளிர் ஆவார். உதயணன் என்னும் காவியத் தலைவனின் வாழ்க்கை விவரித்துக் கூறுகிறது இந்நூல். இதற்குக் கொங்குவேள் மாக்கதை, உதயணன் கதை என்ற வேறு பெயர்களும் உள்ளன.**

198) சமயத்தின் அடிப்படையில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) சூளாமணி

**B) குண்டலகேசி**

C) உதயணகுமார காவியம்

D) நாககுமார காவியம்

**விளக்கம்: அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப்பொருள்களுள் ஒன்றோ, சிலவோ குறைந்து, பெருங்காப்பிய இலக்கணத்திற்கு மாறுபட்டு வருவது சிறுகாப்பியமாகும். உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி என்பவை ஐஞ்சிறு காப்பியங்களாகும். இவ்வைந்தும் சமண சமயக் காப்பியங்களாகும்.**

199) நாககுமார காவியம் என்ற காவியத்தின் மற்றொரு பெயர் என்ன?

A) நாகபஞ்சமி பாடல்

**B) நாகபஞ்சமி கதை**

C) நாகபஞ்சமி இசை

D) நாகபஞ்சமி காவியம்

**விளக்கம்: நாககுமார காவியம் அல்லது நாகபஞ்சமி கதை எனப்படும் இந்நூல், தமிழில் தோன்றிய சிறு காப்பியங்களில் ஒன்றாகும். இதை எழுதியவர் யாரெனத் தெரியவில்லை. 170 விருத்தப்பாக்களால் ஆன இந்நூல் ஐந்து சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது சமணசமயக் கொள்கைகளை விளக்க முற்படுகிறது. இளமைக் காலத்தில் இன்பம் துய்ப்பதிலேயே தனது காலத்தைக் கழித்த நாககுமரன் தனது இறுதிக் காலத்தில் வாழ்வின் நிலையாமையை உணர்ந்து துறவு மேற்கொள்வதே இக்கதை.**

200) அறம் என்ற சொல்லின் பொருள்களில் பொருந்தாதது எது?

A) தீமையை அறுப்பது

B) தீமையை நீக்குவது

C) கடமைகளை வரையறுப்பது

**D) இறுதி செய்வது**

**விளக்கம்: 'அறம்' என்ற சொல்லை அறு+அம் எனப்பிரித்துத் தீமை அறுப்பது, நீக்குவது என்றும் அறுதி செய்வது, கடமைகளை வரையறுப்பது என்றும் பொருள் கொள்வர். பொதுவாகச் சான்றோர் விலக்கியன ஒழித்தலும், விதித்தன செய்தலும் அறம் எனப்பெறும்.**

201) மணிமேகலை கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையது?

A) சமணம்

**B) பௌத்தம்**

C) இந்து

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: பௌத்தசமயக் காப்பியமாகத் திகழும் மணிமேகலை கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகிறது. இதன் ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.**

202) திருவாசிரியம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

**B) நம்மாழ்வார்**

C) திருமங்கையாழ்வார்

D) மதுரகவியாழ்வார்

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்**

203) நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழச்செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்குத் தகுதியாக்குவது உழவு என்று கூறியவர் யார்?

A) **குன்றக்குடி அடிகளார்**

B) மு.வ

C) தமிழன்பன்

D) இளங்குமரனார்

**விளக்கம்: நிலத்தின் கடினத்தன்மையை இளக்கி நெகிழச்செய்து பயன்படு பொருள்களின் விளைவுக்குத் தகுதியாக்குவது உழவு. சுவையுடையனவாக, ஆனால், ஒன்றோடொன்று மாறுபட்ட சுவையுடையனவாகிய பொருள்களைச் சுவைத்தற்குரிய சுவையுடையனவாக ஆக்குவது சமைத்தல். மனித உள்ளங்களை இன்ப அன்பின் விளைநிலமாகத் தகுதிப்படுத்திப் பக்குவப்படுத்தும் தத்துவத்திற்கு, வாழ்க்கை முறைக்குச் சமயம் என்பது பெயர். மனித வாழ்க்கையைச் சமைத்துப் பக்குவப்படுத்துவதே சமயத்தின் நோக்கம் – குன்றக்குடி அடிகளார்.**

204) சரியான வரிசையை தேர்வு செய்க

A) பால காண்டம், அயோத்தியா காண்டம், கிட்கிந்தா காண்டம், ஆரண்யா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்

B) பால காண்டம், ஆரண்யா காண்டம், அயோத்தியா காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்

**C) பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்யா காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்**

D) பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்யா காண்டம், சுந்தர காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம்

**விளக்கம்: கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது. அவை,**

**1. பால காண்டம்**

**2. அயோத்திய காண்டம்**

**3. ஆரண்யா காண்டம்**

**4. கிட்கிந்தா காண்டம்**

**5. சுந்தர காண்டம்**

**6. யுத்த காண்டம்**

205) அபயருசி என்பான் ஔதய நாட்டு மன்னன் மாரிதத்தனுக்குத் தம் பழம்பிறப்பு வரலாறு உணர்த்திச் சமய நெறிப்படுத்திய காப்பிய கதை எது?

A) உதயண குமார காவியம்

B) நாக குமார காவியம்

**C) யசோதர காவியம்**

D) நீலகேசி

**விளக்கம்: யசோதர காவியம் யசோதரன் என்ற மன்னனின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது ஐந்து சருக்கங்களையும் 320 பாடல்களையும் கொண்டது. அபயருசி என்பான் ஔதய நாட்டு மன்னன் மாரிதத்தனுக்குத் தம் பழம்பிறப்பு வரலாறு உணர்த்திச் சமய நெறிப்படுத்தியதே இக்காப்பியக் கதை.**

206) உதயணகுமார காவியம் எத்தனை காண்டங்களை கொண்டது?

A) 2

B) 3

C) 5

**D) 6**

**விளக்கம்: உதயணகுமார காவியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகும். இந்நூலில் ஆறு காண்டங்கள் உள்ளன. இக்காப்பியத்தின் முதற்பகுதி உதயணன் வரலாற்றையும், பிற்பகுதி அவனது மகனாகிய நரவாகனனது வரலாற்றையும் கூறுகிறது. இக்காப்பியத்தில் 367 பாடல்கள் உள்ளன. இந்நூல் பெருங்கதை என்னும் காப்பியத்திலிருந்து வேறுபட்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.**

207) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் எது?

A) கார் நாற்பது

B) **களவழி நாற்பது**

C) இன்னா நாற்பது

D) இனியவை நாற்பது

**விளக்கம்: பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் களவழி நாற்பது. களத்தை ஏர்க்களம், போர்க்களம் என்று இரு வகைப்படுத்துவர்.**

**ஏர்க்களம் – நெல் முதலானவற்றை அடித்து தூற்றும் களத்தைப் பாடுவது.**

**போர்க்களம் – போர்களத்தைப் பாடுவது.**

**களவழி நாற்பது – போர்க்களத்தைப் பாடும் நூல் ஆகும்.**

208) கூற்றுகளை ஆராய்க.

1. இன்னது துன்பம் தரும் என்று கூறும் 40 வெண்பாக்களால் ஆன நூல் இன்னா நாற்பது – கபிலர்

2. இன்னது இன்னது இன்பம் பயக்கும் என 40 வெண்பாக்களைக் கொண்ட நூல் இனியவை நாற்பது – பூதஞ்சேந்தனார்

3. 15–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கபிலர் என்னும் புலவரால் இயற்றப்பட்ட நூல் கபிலர் அகவல் ஆகும்.

4. அதிவீரராமபாண்டியர் இயற்றிய நறுந்தொகை, அறக்கருத்துக்களை எடுத்துரைக்கும் ஓரடிப்பாக்களால் ஆன நூல் ஆகும்.

A) 1, 2 சரி

B) 3, 4 சரி

C) 1, 2, 4 சரி

D) **அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. இன்னது துன்பம் தரும் என்று கூறும் 40 வெண்பாக்களால் ஆன நூல் இன்னா நாற்பது – கபிலர்**

**2. இன்னது இன்னது இன்பம் பயக்கும் என 40 வெண்பாக்களைக் கொண்ட நூல் இனியவை நாற்பது – பூதஞ்சேந்தனார்**

**3. 15–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கபிலர் என்னும் புலவரால் இயற்றப்பட்ட நூல் கபிலர் அகவல் ஆகும்.**

**4. அதிவீரராமபாண்டியர் இயற்றிய நறுந்தொகை, அறக்கருத்துக்களை எடுத்துரைக்கும் ஓரடிப்பாக்களால் ஆன நூல் ஆகும்.**

209) பதினெண் கீழ்க்கணக்கு பற்றி கூறும் பழம்பாடலில் மாமூலம் என்பது கீழ்க்காணும் எதைக் குறிக்கிறது?

**A) சிறுபஞ்சமூலம்**

B) ஆசாரக்கோவை

C) திரிகடுகம்

D) பெரிய மூலம்

**விளக்கம்: நாலடி நான்மணி நானாற்ப தைத்திணைமுப்**

**பால்கடுகம் கோவை பழ்மொழி – மாமூலம்**

**இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே**

**கைந்நிலைய வாம் கீழ்க்கணக்கு.**

**இதில் மாமூலம் என்பது சிறுபஞ்ச மூலத்தைக் குறிக்கிறது.**

210) பொதுவாக சான்றோர் அறம் என்ற சொல்லைக் கீழ்க்கண்டவாறு எவ்வாறு பொருள் கொள்வர்?

A) விலக்கியன ஒழித்தல்

B) விதித்தன செய்தல்

**C) A மற்றும் B**

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: 'அறம்' என்ற சொல்லை அறு+அம் எனப்பிரித்துத் தீமை அறுப்பது, நீக்குவது என்றும் அறுதி செய்வது, கடமைகளை வரையறுப்பது என்றும் பொருள் கொள்வர். பொதுவாகச் சான்றோர் விலக்கியன ஒழித்தலும், விதித்தன செய்தலும் அறம் எனப்பெறும் என்று பொருள் கொள்வர்.**

211) சிறுபஞ்சமூலத்தின் ஒவ்வொரு பாடலிலும் எத்தனை கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன?

A) 4

B) 3

**C) 5**

D) 2

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் இரண்டாவதாக அமைந்த நூல் சிறுபஞ்சமூலம் ஆகும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் கலந்த மருந்து உடலை வலுப்படுத்துவதுபோல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஐந்து கருத்துக்கள் வாழ்வுக்கு வலிமை சேர்ப்பதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.**

212) காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களையும் நீக்கும் தூய அறிவுமிக்க நூலை அருளிய புத்தரைப் போற்றும் நூல் எது?

**A) மணிமேகலை**

B) வளையாபதி

C) குண்டலகேசி

D) சீவகசிந்தாமணி

**விளக்கம்: மணிமேகலை, பௌத்த சமயக் கருத்துக்களைப் பரப்பும் சிறந்ததோர் நூலாக விளங்குகிறது. இது காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களையும் நீக்கும் தூய அறிவுமிக்க நூலை அருளிய புத்தரைப் போற்றுகிறது.**

213) நாலடி நானூறு என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) பிசிராந்தையார்

B) மாயூரம் வேதநாயகம் பிள்ளை

C) **சமண முனிவர்கள்**

D) ஆசிரியர் பெயர் அறிய இயலவில்லை

**விளக்கம்: திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கது நாலடியார் ஆகும். நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்று வெவ்வேறு பெயர்களாலும் இந்நூல் சுட்டப்படுகின்றது. சமண முனிவர்களால் பாடப்பட்ட 400 வெண்பாக்களின் தொகுப்பே இந்நூல்.**

214) கூற்றுகளை ஆராய்க.

1. பதினெண் கீழ்க்கண்கு நூல்களில் அமைந்த அறநூல்கள், பிற்காலத்தில் தோன்றிய அறநூல்கள் எனத் தமிழின்கண் அமைந்த அறநூல்களை இருபிரிவாகப் பிரிக்கலாம்.

2. இனியவை நாற்பது – கபிலர்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பதினெண் கீழ்க்கண்கு நூல்களில் அமைந்த அறநூல்கள், பிற்காலத்தில் தோன்றிய அறநூல்கள் எனத் தமிழின்கண் அமைந்த அறநூல்களை இருபிரிவாகப் பிரிக்கலாம்.**

**2. இனியவை நாற்பது – கபிலர்**

215) கூற்று: பெருங்கதை, உதயணன் கதை என்றும் அழைக்கப்படுகிறது.

காரணம்: உதயணன் என்னும் காவியத்தலைவனின் வரலாற்றை கூறுகிறது

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: இந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம் பெருங்கதை. இக்காப்பியத்தை இயற்றியவர் கொங்குவேளிர் ஆவார். உதயணன் என்னும் காவியத் தலைவனின் வாழ்க்கையை விவரித்துக் கூறுகிறது இந்நூல். இதற்குக் கொங்குவேள் மாக்கதை, உதயணன் கதை என்ற வேறு பெயர்களும் உள்ளன.**

216) தவறான கூற்றை தெரிவு செய்க

A) தமிழில் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் சீவக சிந்தாமணி ஆகும்.

**B) வடமொழியில் எழுந்த கத்திய சிந்தாமணியின் மொழிபெயர்ப்பே இந்நூல் என்பர்.**

C) சமண சமயக் காப்பியமாகத் திகழும் இந்நூல் கி.பி.7ஆம் நூற்றாண்டில் திருத்தக்க தேவரால் இயற்றப்பட்டது.

D) திருத்தக்கத் தேவரை 'தமிழ்க் கவிஞர்களுள் அரசன்' என வீரமாமுனிவர் போற்றுகிறார்.

**விளக்கம்: சீவக சிந்தாமணி என்பதுவடமொழியில் எழுந்த கத்திய சிந்தாமணியின் தழுவலே இந்நூல் என்பர்.**

217) சங்கம் மருவிய காலத்தில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் எழுதப்பட்டன. இதில் பதினெண் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) 11

B) 14

C) 10

**D) 18**

**விளக்கம்: சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெட்டு நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன.**

218) வளையாபதி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) ஐம்பெருங்காப்பியங்களுள் இறுதியாக வைத்து எண்ணப்படுவது வளையாபதி ஆகும்.

B) வளையாபதி நூல் முழுவதும் கிடைக்கப்பெறவில்லை

**C) பௌத்த சமயத்தைச் சார்ந்த இந்நூலின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை.**

D) புறத்திரட்டுத்தொகை நூலில் வளையாபதியின் பாடல்களாக 66 செய்யுள்கள் காணப்படுகின்றன.

**விளக்கம்: சமண சமயத்தைச் சார்ந்த இந்நூலின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை.**

219) உதயண குமாரனின் மகன் பெயர் என்ன?

**A) நரவாகனன்**

B) குணாட்டியார்

C) திவிட்டன்

D) விசயன்

**விளக்கம்: உதயணகுமார காவியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகும். இந்நூலில் ஆறு காண்டங்கள் உள்ளன. இக்காப்பியத்தின் முதற்பகுதி உதயணன் வரலாற்றையும், பிற்பகுதி அவனது மகனாகிய நரவாகனனது வரலாற்றையும் கூறுகிறது. இக்காப்பியத்தில் 367 பாடல்கள் உள்ளன. இந்நூல் பெருங்கதை என்னும் காப்பியத்திலிருந்து வேறுபட்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.**

220) யசோதர காவியத்தின் ஆசிரியர் யார்?

A) யசோதரன்

B)அபயருசி

C) மாரிதத்தன்

**D) ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**விளக்கம்: யசோதர காவியம் யசோதரன் என்ற மன்னனின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இது ஐந்து சருக்கங்களையும் 320 பாடல்களையும் கொண்டது. அபயருசி என்பான் ஔதய நாட்டு மன்னன் மாரிதத்தனுக்குத் தம் பழம்பிறப்பு வரலாறு உணர்த்திச் சமய நெறிப்படுத்தியதே இக்காப்பியக் கதை.**

221) அறமும் நீதியும் சங்கம் மருவிய காலத்தில் பெரிதும் போற்றப்பட்டன. அதைப்போல காதலும் வீரமும் கீழ்க்காணும் எக்காலத்தில் போற்றப்பட்டன?

**A) சங்க காலம்**

B) பல்லவர்கள் காலம்

C) சோழர்கள் காலம்

D) பாண்டியர்கள் காலம்

**விளக்கம்: அறநூல்களைச் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்துப் பாராட்டுவது தமிழின் மரபு. கி.பி.3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6–ஆம் நூற்றாண்டு வரை அறம் வலியுறுத்தும் நீதிநூல்கள் தமிழில்**

**பலவிதமான வடிவங்களிலும் வெளிப்பாட்டு முறைகளிலும் எழுதப்பெற்றுள்ளன. காதலும் வீரமும் சங்க காலத்தில் போற்றப்பட்டதைப் போலவே அறமும் நீதியும் சங்கம் மருவிய காலத்தில் பெரிதும் போற்றப்பட்டன.**

222) சிலப்பதிகாரம் பற்றிய கூற்றுகளில் தவறான கூற்றை தெரிவு செய்க.

1. மாசாத்துவான் மகனாகிய கோவலனுக்கும் மாநாய்கன் மகளாகிய கண்ணகிக்கும் திருமணம் – பூம்புகார்

2. கற்புக்கடம்பூண்ட தெய்வமாகிய மனைவி கண்ணகியை அடைந்த கோவலன், அவள் காற்சிலம்புகளை மூலதனமாகக் கொண்டு இழந்த செல்வத்தை மீண்டும் திரட்ட செல்வது – மதுரைமாநகர்

3. கண்ணகி தெய்வமாக்கப்படுவது – சேரநாடு

**4. இந்நூல் செந்தமிழ்க் காப்பியங்களுள் சிறந்தது மட்டுமன்று, உலக மகாகாவியங்களில் ஒன்றாகும் என்று ஜி.யூ.போப் பாராட்டுகிறார்.**

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

C) 3 மட்டும் தவறு

**D) 4 மட்டும் தவறு**

**விளக்கம்: செந்தமிழ்க் காப்பியங்களுள் சிறந்தது மட்டுமன்று, உலக மகாகாவியங்களில் ஒன்றாகும் என்று ஜி.யூ.போப் பாராட்டுவது சீவக சிந்தாமணி ஆகும்.**

223) 80 வெண்பாக்களைக் கொண்ட மருந்து நூலை இயற்றியவர் யார்?

**A) கணிமேதாவியார்**

B) பெருவாயின் முள்ளியார்

C) நல்லாதனார்

D) காரியாசான்

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் மூன்றாவதாக அமைந்தது ஏலாதி. ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்த மருந்து உடலுக்குறுதி சேர்ப்பதுபோல, செய்யுள்தோறும் உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு கருத்துகளைக் கொண்டதால் இந்நூல் ஏலாதி எனப்பெயர் பெற்றது. 80 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார் ஆவார்.**

224) நறுந்தொகை என்னும் நூலை இயற்றியவர் யார்?

**A) அதிவீரராமபாண்டியர்**

B) ஔவையார்

C) வ.சுப.மாணிக்கம்

D) பாரதியார்

**விளக்கம்: அதிவீரராமபாண்டியர் இயற்றிய நறுந்தொகை, அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் ஒரு அடிப் பாக்களால் ஆன நூல் ஆகும்.**

225) எழுத்தறி வித்தவ னிறைவ னாகும் என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) நல்வழி

B) திருக்குறள்

C) பழமொழி நானூறு

**D) நறுந்தொகை**

**விளக்கம்: "எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்**

**கல்விக் கழகு கசடற மொழிதல்**

**நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை**

**கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை" – நறுந்தொகை**

226) நீதி நூல்–ஐ இயற்றியவர் யார்?

A) ஔவையார்

**B) மாயூரம் வேதநாயகர்**

C) கபிலர்

D) அதிவீரராமபாண்டியர்

**விளக்கம்: இளம் வயதே கற்பதற்கு ஏற்ற வயது என்று கூறியவர் மாயூரம் வேதநாயகர் ஆவார். இவர் இயற்றிய நூல் நீதி நூல் ஆகும்.**

227) நானாற்பது என்று குறிப்பிடப்படும் நூல்களில் அற நூல்கள் எத்தனை?

A) 1

**B) 2**

C) 4

D) 3

**விளக்கம்: நானாற்பது என்று அழைக்கப்படும் நான்கு நூல்களாவன:**

**1. இன்னா நாற்பது**

**2. இனியவை நாற்பது**

**3.கார் நாற்பது**

**4. களவழி நாற்பது.**

**இவற்றுள் இன்னா நாற்பது மற்றும் இனியவை நாற்பது அறநூல்கள்**

**கார் நாற்பது அக நூல்.**

**களவழி நாற்பது புற நூல்.**

228) பழமொழி நானூறு என்ற நூலை இயற்றியவர் யார்?

A) நல்லாதனார்

**B) மூன்றுறையரையனார்**

C) கணிமேதாவியார்

D) நப்பசலையார்

**விளக்கம்: நாலடியார் போன்றே 400 வெண்பாக்களால் ஆனது பழமொழி நானூறு. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி அமையப் பாடப்பட்டிருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் முன்றுறையரையனார் ஆவார்.**

229) கபிலர் அகவல் என்னும் நூல் இயற்றிய கபிலர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்?

**A) 15**

B) 14

C) 17

D) 12

**விளக்கம்: 15–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கபிலர் என்னும் புலவரால் இயற்றப்பட்ட நூல் கபிலர் அகவல். இந்நூல் கூறும் நீதி எக்காலத்திற்கும் பொருத்தமுடையதாக உள்ளது.**

230) ஏலாதியின் ஒவ்வொரு பாடலிலும் எத்தனை கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன?

A) 4

B) 5

**C) 6**

D) 3

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் மூன்றாவதாக அமைந்தது ஏலாதி. ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்த மருந்து உடலுக்குறுதி சேர்ப்பதுபோல, செய்யுள்தோறும் உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு கருத்துகளைக் கொண்டதால் இந்நூல் ஏலாதி எனப்பெயர் பெற்றது. 80 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார் ஆவார்.**

231) பொருள், இன்பம், இடுக்கண் வந்த காலத்து அஞ்சாமை, பிறிதோர் உயிரின் துன்பங்கண்டு இரங்குதல், நிலையான அறம் ஆகிய ஐந்தும் உடையவன் நல்ல அரசனாகச் செயலாற்றுவதற்குரிய தகுதியுடையவனாகிறான் என்று கூறும் நூல் எது?

A) ஏலாதி

B) திரிகடுகம்

C) நல்வழி

**D) சிறுபஞ்சமூலம்**

**விளக்கம்: பொருள், இன்பம், இடுக்கண் வந்த காலத்து அஞ்சாமை, பிறிதோர் உயிரின் துன்பங்கண்டு இரங்குதல், நிலையான அறம் ஆகிய ஐந்தும் உடையவன் நல்ல அரசனாகச் செயலாற்றுவதற்குரிய தகுதியுடையவனாகிறான் என்று கூறும் நூல் சிறுபஞ்சமூலம் ஆகும்.**

232) திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க நூல் எது?

A) நாண்மணிக்கடிகை

B) திரிகடுகம்

C) ஆசாரக்கோவை

**D) நாலடியார்**

**விளக்கம்: திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கது நாலடியார் ஆகும். நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்று வெவ்வேறு பெயர்களாலும் இந்நூல் சுட்டப்படுகின்றது. சமண முனிவர்களால் பாடப்பட்ட 400 வெண்பாக்களின் தொகுப்பே இந்நூல்.**

233) நிலையில்லாப் பொருளைத் தேடியலையும் மனித வாழ்வைப் பொருளற்றது என்று கூறும் நூல் எது?

**A) நாண்மணிக்கடிகை**

B) திரிகடுகம்

C) ஆசாரக்கோவை

D) நாலடியார்

**விளக்கம்: நிலையாமை என்னும் கருத்தை அறவிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. நிலையில்லாப் பொருளைத் தேடியலையும் மனித வாழ்வைப் பொருளற்றது என்கிறது நான்மணிக்கடிகை. நான்மணிக்கடிகை 104 வெண்பாக்களைக் கொண்டு விளம்பிநாகனாரால் இயற்றப்பெற்றது.**

234) கூற்றுகளை ஆராய்க

1. சங்க பாடல்களின் எண்ணிக்கை 2381.

2. சங்க பாடல்களில் அகத்திணைப் பாடல்கள் 519

3. சங்க பாடல்களில் புறத்திணைப் பாடல்கள் 1862.

4. சங்கபாடல்கள் என்பது பதினெண்மேற்கணக்கு நூல்கள் ஆகும்.

**A) 1, 4 மட்டும் சரி**

B) 1, 3 சரி

C) 2, 4 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: தமிழின் செவ்வியல் தன்மைக்குச் சான்றாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. பாட்டும் தொகையுமான பதினெட்டு நூல்களும் சங்க இலக்கியங்கள் என அறியப்படுகின்றன. பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகையையும் குறிக்கும். இவற்றைப் பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பர். இவை தமிழ்மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் கூறுகளை அறிய உதவுகின்றன.**

**சங்கப்பாடல்களின் எண்ணிக்கை 2381. இவற்றுள் அகத்திணைப்பாடல்கள் 1862. புறத்திணைப்பாடல்கள் 519. சங்கப்புலவர் எண்ணிக்கை 473. பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 49.**

235) நாககுமார காவியம் பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) இதன் வேறு பெயர் நாகபஞ்சமி கதை ஆகும்.

**B) இந்நூல் 4 சருக்கங்கள் மற்றும் 170 விருத்தப்பாக்களால் ஆனது.**

C) இது சமண சமயக் கொள்கைகளை விளக்க முற்படுகிறது

D) இளமைக் காலத்தில் இன்பம் துய்ப்பதிலேயே தனது காலத்தைக் கழித்த நாககுமாரன் தனது இறுதிக் காலத்தில் வாழ்வின் நிலையாமை உணர்ந்து துறவு மேற்கொள்வதே இக்கதை ஆகும்

**விளக்கம்: இந்நூல் 5 சருக்கங்கள் மற்றும் 170 விருத்தப்பாக்களால் ஆனது.**

236) தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது எதனை போன்றது என பழமொழி நானூறு குறிப்பிடுகிறது?

**A) தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதல்**

B) சிங்கத்தின் குகையில் தனியே சிக்கிகொள்ளுதல்

C) ஊன்று கோல் இன்றி ஆற்றில் இறங்குதல்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது, ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலைப் போன்றதாகும்.**

237) அரங்க அமைப்பு பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ள காப்பியம் எது?

**A) சிலப்பதிகாரம்**

B) மணிமேகலை

C) வளையாபதி

D) குண்டலகேசி

**விளக்கம்: சிலப்பதிகாரத்தில் காப்பிய நாயகியான கண்ணகியே முதன்மைப்படுத்தப்படுகிறாள். சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், தேசிய காப்பியம் முதலான சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது. அரங்க அமைப்பு பற்றிய செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.**

238) உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் எது?

A) திருக்குறள்

**B) விவிலியம்**

C) கிழவனும் கடலும்

D) போரும் அமைதியும்

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இடம்பெற்றுள்ள அறநூல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையென. மணிமுடியாக விளங்கும் திருக்குறள் உலகம் போற்றும் பொதுமறை. இது அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருண்மைகளை உடையது. விவிலியத்திற்கு அடுத்தபடியாக உலகின் பெரும்பான்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையுடையது.**

239) கூற்று: மூன்றுறையரையனாரால் பாடப்பெற்ற நூல் பழமொழி நானூறு ஆகும்.

காரணம்: ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி அமையப் பாடப்பெற்றிருப்பதனால் இது பழமொழி நானூறு என்று அழைக்கப்படுகிறது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

D) **கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: நாலடியார் போன்றே 400 வெண்பாக்களால் ஆனது பழமொழி நானூறு. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி அமையப் பாடப்பட்டிருப்பதால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இந்நூலை இயற்றியவர் முன்றுறையரையனார் ஆவார்**

240) நாலடியார் என்ற நூலை தொகுத்தவர் யார்?

A) சமண முனிவர்கள்

**B) பதுமனார்**

C) மூன்றுறையரையனார்

D) நப்பசலையார்

**விளக்கம்: திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கது நாலடியார் ஆகும். நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்று வெவ்வேறு பெயர்களாலும் இந்நூல் சுட்டப்படுகின்றது. சமண முனிவர்களால் பாடப்பட்ட 400 வெண்பாக்களின் தொகுப்பே இந்நூல். இதனைத் தொகுத்தவர் பதுமனார் ஆவார்.**

241) தமிழின்கண் அமைந்த அறநூல்களை எத்தனைப் பிரிவாகப் பிரிக்கலாம்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: பதினெண்கீழ்க்கணக்கு, நூல்களில் அமைந்த அறநூல்கள், பிற்காலத்தில் தோன்றிய அறநூல்கள் எனத் தமிழின்கண் அமைந்த அறநூல்களை இருபிரிவாகப் பிரிக்கலாம்.**

242) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அக நூல்கள் எத்தனை?

**A) 6**

B) 1

C) 11

D) 18

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அற நூல்கள் 11 ஆகும்.**

**புற நூல்கள் – 1.**

**அக நூல்கள்– 6.**

243) வாழ்க்கையின் எல்லா இன்னல்களுக்கும் காரணமான அறியாமையாகிய மயக்கத்தைத் தீர்ப்பது______________________என நாலடியார் குறிப்பிடுகிறது.

A) அறிவு

B) அறம்

**C) கல்வி**

D) செல்வம்

**விளக்கம்: வாழ்க்கையின் எல்லா இன்னல்களுக்கும் காரணமாக அறியாமையாகிய மயக்கத்தைத் தீர்ப்பது கல்வி என்று நாலடியார் குறிப்பிடுகிறது. நாலடியாரை எழுதியவர்கள் சமண முனிவர்கள். தொகுத்தவர் பதுமனார்.**

244) தனக்கு உதவி செய்தவர்களுக்குத் தீங்கு செய்வது தனக்கே தீங்கு செய்துகொள்வதற்கு ஒப்பாகும் என்ற கருத்தை கூறும் நூல் எது?

A) நாலடியார்

B) திருக்குறள்

**C) பழமொழி நானூறு**

D) நல்வழி

**விளக்கம்: தனக்கு உதவி செய்தவர்களுக்குத் தீங்கு செய்வது தனக்கே தீங்கு செய்துகொள்வதற்கு ஒப்பாகும் என்ற கருத்தை பழமொழி நானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது.**

245) கூற்றுகளை ஆராய்க.

1. காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பெண்களை மணப்பதால், சீவகசிந்தாமணி மணநூல் என அழைக்கப்படுகிறது.

2. சீவகன் இறுதியில் துறவறம் பூண்டு முக்தி அடைகிறான்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய எட்டுப் பெண்களை மணப்பதால், சீவகசிந்தாமணி மணநூல் என அழைக்கப்படுகிறது.**

**2. சீவகன் இறுதியில் துறவறம் பூண்டு முக்தி அடைகிறான்.**

246) சீவக சிந்தாமணி செந்தமிழ்க் காப்பியங்களுள் சிறந்தது மட்டுமன்று, உலக மகாகாவியங்களில் ஒன்றாகும் என்று கூறியவர் யார்?

A) வீரமாமுனிவர்

B) கால்டுவெல்

**C) ஜி.யூ.போப்**

D) ஈராஸ் பாதிரியார்

**விளக்கம்: சமணசமயக் காப்பியமாகத் திகழும் இந்நூல் கி.பி.7–ஆம் நூற்றாண்டில் திருத்தக்கத்தேவரால் இயற்றப்பட்டது. திருத்தக்கத்தேவரை 'தமிழ்க் கவிஞர்களுள் அரசன்' என்று வீரமாமுனிவர் போற்றுகிறார். சீவக சிந்தாமணி செந்தமிழ்க் காப்பியங்களுள் சிறந்தது மட்டுமன்று, உலக மகாகாவியங்களில் ஒன்றாகும் என்று ஜி.யூ.போப் பாராட்டுகின்றார்.**

247) பெருங்கதை பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

**A) வடஇந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற இரண்டாவது தமிழ்க் காப்பியம் பெருங்கதை ஆகும்.**

B) பெருங்கதையின் ஆசிரியர் கொங்குவேளிர் ஆவார்.

C) உதயணன் என்னும் காவியத் தலைவனின் வாழ்க்கையை விவரித்துச் சொல்கிறது.

D) இதற்குக் கொங்குவேள் மாக்கதை, உதயணன் கதை என்ற வேறு பெயர்களும் உள்ளன.

**விளக்கம்: வடஇந்தியப் பகுதிகளைக் களமாக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம் பெருங்கதை ஆகும்.**

248) பெருவாயின் முள்ளியார் கீழ்க்காணும் எந்த நூலை எழுதியுள்ளார்?

A) ஏலாதி

B) சிறுபஞ்சமூலம்

C) திரிகடுகம்

**D) ஆசாரக்கோவை**

**விளக்கம்: ஆசாரமாகிய ஒழுக்க விதிகளைக் கோவையாகக் கொண்டு 100 வெண்பாக்களால் ஆன நூல் ஆசாரக்கோவை. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவார்.**

249) உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட இரண்டாம் நூல் எது?

A) விவிலியம்

B) போரும் அமைதியும்

**C) திருக்குறள்**

D) கம்பராமாயணம்

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் இடம்பெற்றுள்ள அறநூல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மையென. மணிமுடியாக விளங்கும் திருக்குறள் உலகம் போற்றும் பொதுமறை. இது அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருண்மைகளை உடையது. விவிலியத்திற்கு அடுத்தபடியாக உலகின் பெரும்பான்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையுடையது.**

250) இருநானூறு என்று அழைக்கப்படும் நூல் எது?

A) நானாநாற்பது

B) இனியவை நாற்பது

C) இன்னா நாற்பது

**D) நாலடியார்**

**விளக்கம்: திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கது நாலடியார் ஆகும். நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்று வெவ்வேறு பெயர்களாலும் இந்நூல் சுட்டப்படுகின்றது. சமண முனிவர்களால் பாடப்பட்ட 400 வெண்பாக்களின் தொகுப்பே இந்நூல்.**

251) உதயணகுமார காவியத்தில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன?

**A) 367**

B) 368

C) 369

D) 366

**விளக்கம் உதயணகுமார காவியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகும். இந்நூலில் ஆறு காண்டங்கள் உள்ளன. இக்காப்பியத்தின் முதற்பகுதி உதயணன் வரலாற்றையும், பிற்பகுதி அவனது மகனாகிய நரவாகனனது வரலாற்றையும் கூறுகிறது. இக்காப்பியத்தில் 367 பாடல்கள் உள்ளன. இந்நூல் பெருங்கதை என்னும் காப்பியத்திலிருந்து வேறுபட்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.**

252) உதயண குமார காவியத்தை எழுதியவர் யார்?

A) உதயணன்

B) கொங்குவேளிர்

C) தோலாமொழித்தேவர்

**D) பெயர் தெரியவில்லை**

**விளக்கம்: உதயணகுமார காவியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகும். இந்நூலில் ஆறு காண்டங்கள் உள்ளன. இக்காப்பியத்தின் முதற்பகுதி உதயணன் வரலாற்றையும், பிற்பகுதி அவனது மகனாகிய நரவாகனனது வரலாற்றையும் கூறுகிறது. இக்காப்பியத்தில் 367 பாடல்கள் உள்ளன. இந்நூல் பெருங்கதை என்னும் காப்பியத்திலிருந்து வேறுபட்டது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.**

253) பதினெண் கீழ்க்கணுக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் எத்தனை?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அவை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகும்.**

254) தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது, ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலைப் போன்றது என்று குறிப்பிடும் நூல் எது?

A) திருக்குறள்

B) நாலடியார்

C) நான்மணிக்கடிகை

**D) பழமொழி நானூறு**

**விளக்கம்: தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது, ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலைப் போன்றதாகும் என்று பழமொழி நானூறு நூல் கூறுகிறது.**

255) தொல்காப்பியர் போன்றே உலக அளவில் இலக்கிய வாசிப்பிற்கு வழிகாட்டும் நூலை எழுதியவர் யார்?

**A) அரிஸ்டாட்டில்**

B) டால்டாய்ஸ்

C) ஷேக்ஸ்பியர்

D) வில்லியம் ஸ்மித்

**விளக்கம்: தொல்காப்பியர் போன்றே உலக அளவில் இலக்கிய வாசிப்பிற்கு வழிகாட்டும் நூலான கவிதையியலை எழுதியவர் அரிஸ்டாட்டில். நாடகத்தை எவ்வாறு வாசிக்கலாம்? நாடக உருவாக்கம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை இந்நூலில் விளக்கியுள்ளார்.**

256) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

A) கண்ணதாசன்– ஆட்டனத்தி ஆதிமந்தி, இயேசு காவியம், மாங்கனி

B) முடியரசன்– பூங்கொடி, வீரகாவியம்

C) கவியோகி சுத்தானந்த பாரதி – பராசக்தி மகாகாவியம்

**D) வைரமுத்து– பாண்டவர் பூமி**

**விளக்கம்: பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் புதுக்கவிதை வடிவில் கவிராஜன் கதை என்னும் பெயரில் காப்பியமாகப் படைத்துள்ளார் வைரமுத்து.**

**மகாபாரதத்தை பாண்டவர் பூமி என்னும் பெயரில் புதுக்கவிதை வடிவில் படைத்துள்ளார் கவிஞர் வாலி.**

257) உதயண குமார காவியம் பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) இந்நூலில் ஆறு காண்டங்கள் உள்ளன

B) இக்காப்பியத்தின் முற்பகுதி உதயணன் வரலாற்றையும், பிற்பகுதி அவனது மகனாகிய நரவாகனனது வரலாற்றையும் கூறுகிறது.

**C) இக்காப்பியத்தில் மொத்தம் 376 பாடல்கள் உள்ளன.**

D) இந்நூல் பெருங்கதை என்னும் காப்பியத்திலிருந்து வேறுபட்டது.

**விளக்கம்: உதயணகுமார காவியத்தில் மொத்தம் 367 பாடல்கள் உள்ளன.**

258) காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்த நூல் எது?

A) தொல்காப்பியம்

B) சிலப்பதிகாரம்

C) நன்னூல்

**D) தண்டியலங்காரம்**

**விளக்கம்: கி.பி.12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தண்டியலங்காரம்' காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. 'பெருங்காப்பிய நிலை பேசுங்காலை' எனத் தொடங்கும் நூற்பா காப்பிய இலக்கணத்தைக் கூறுகிறது.**

259) ஆசாரக்கோவையில் எத்தனை பாடல்கள் உள்ளன?

**A) 100**

B) 102

C) 104

D) 80

**விளக்கம்: ஆசாரமாகிய ஒழுக்க விதிகளைக் கோவையாகக் கொண்டு 100 வெண்பாக்களால் ஆன நூல் ஆசாரக்கோவை. இதன் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் ஆவார்.**

260) முதுமொழிக் காஞ்சியில் எத்தனை வெண்பாக்கள் உள்ளன?

**A) 100**

B) 104

C) 80

D) 102

**விளக்கம்: பல மணிகளைக் கோவையாகக் கொண்டு அமைவது மகளிர் அணியும் காஞ்சி என்னும் அணிகலன். அதுபோல பல முதுமொழிகளைக் கோவையாகக் கொண்ட 100 வெண்பாக்களை உடைய நூல் முதுமொழிக்காஞ்சி. இதன் ஆசிரியர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் ஆவார்.**

261) எந்த நூற்றாண்டு முதல் எந்த நூற்றாண்டு வரை அறம் வலியுறுத்தும் நூல்கள் தமிழில் பலவிதமான வடிவங்களிலும் வெளிப்பாட்டு முறைகளிலும் எழுதப்பெற்றுள்ளன?

A) கி.மு.3 முதல் கி.பி.6

**B) கி.பி.3 முதல் கி.பி.6**

C) கி.மு.6 முதல் கி.மு.3

D) கி.மு.6 முதல் கி.பி.3

**விளக்கம்: அறநூல்களைச் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்துப் பாராட்டுவது தமிழின் மரபு. கி.பி.3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6–ஆம் நூற்றாண்டு வரை அறம் வலியுறுத்தும் நீதிநூல்கள் தமிழில் பலவிதமான வடிவங்களிலும் வெளிப்பாட்டு முறைகளிலும் எழுதப்பெற்றுள்ளன. காதலும் வீரமும் சங்க காலத்தில் போற்றப்பட்டதைப் போலவே அறமும் நீதியும் சங்கம் மருவிய காலத்தில் பெரிதும் போற்றப்பட்டன.**

262) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று அதில் இரண்டாவதாக அமைந்த நூல் எது?

A) திரிகடுகம்

**B) சிறுபஞ்சமூலம்**

C) ஏலாதி

D) ஆசாரக்கோவை

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. இதில் இரண்டாவதாக அமைந்த நூல் சிறுபஞ்சமூலம் ஆகும்.**

263) மணிமொழிக்கோவை என்று குறிப்பிடப்படும் நூல்கள் எத்தனை?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகிய மூன்றையும் மணிமொழிக்கோவை என்பர்.**

264) நான்மணிக்கடிகை என்ற நூலின் பெயர்க்காரணத்திற்கு பொருத்தமான ஒன்றை தெரிவு செய்க.

**A) நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற கடிகை என்னும் அணிகலன் போல ஒவ்வொரு செய்யுளிலிலும் நான்கு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளது.**

B) நான்கு மருந்துப் பொருள் போல ஒவ்வொரு செய்யுளிலிலும் நான்கு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளது.

C) நான்கு திசை போல ஒவ்வொரு செய்யுளிலிலும் நான்கு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளது.

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகிய மூன்றையும் மணிமொழிக்கோவை என்பர். நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற கடிகை என்னும் அணிகலன் போல ஒவ்வொரு செய்யுளிலிலும் நான்கு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளதால் இந்நூல் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. இந்நூல் 104 வெண்பாக்களைக் கொண்டு விளம்பிநாகனாரால் இயற்றப்பெற்றது.**

265) எந்த நூற்றாண்டில் தோன்றிய 'தண்டியலங்காரம்' காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது?

A) கி.பி. 10

**B) கி.பி.12**

C) கி.பி. 14

D) கி.பி. 17

**விளக்கம்: கி.பி.12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தண்டியலங்காரம்' காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. 'பெருங்காப்பிய நிலை பேசுங்காலை' எனத் தொடங்கும் நூற்பா காப்பிய இலக்கணத்தைக் கூறுகிறது.**

266) சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள் எந்த சமயத்தை சார்ந்தவர்?

A) பௌத்தம்

**B) சமணம்**

C) சீக்கியம்

D) இந்து

**விளக்கம்: சிலப்பதிகாரத்தை எழுதியவர் இளங்கோவடிகள். இவர் சமண சமயத்தை சார்ந்தவர். கி.பி.2–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இளங்கோவடிகளைச் சேரன் செங்குட்டுவனின் தம்பி என்பர்.**

267) சிலப்பதிகாரம் எத்தனை காதைகளை கொண்டுள்ளது?

A) 3

**B) 30**

C) 13

D) 10

**விளக்கம்: சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களையும், "மங்கல வாழ்த்துப் பாடல்" தொடங்கி "வரந்தரு காதை" ஈறாக முப்பது காதைகளையும் உடையது.**

268) மணிமேகலைக்கு மணிமேகலா தெய்வம் மூன்று மத்திரங்களை கற்றுக்கொடுத்தது. இதில் பொருந்தாதது எது?

**A) பழம்பிறப்பை உணர்த்தல்**

B) வான்வழியே பறத்தல்

C) பசியாதிருத்தல்

D) தன் உருவை மாற்றிக்கொள்ளுதல்

**விளக்கம்: இந்திரவிழா காணவந்த மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிக்கொண்டு சென்று, மணிபல்லவத்தீவில் சேர்க்கிறது. அங்கு தோன்றிய புத்த பீடிகையைத் தொழுது, தன் பழம்பிறப்பு பற்றி அறிகிறாள். மணிமேகலை, வான்வழியே பறத்தல், பசியாதிருத்தல், தன் உருவை மாற்றிக்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான மந்திரங்களையும், அள்ள அள்ளக் குறையாது அமுதுசுரக்கும் அமுத சுரபியையும் பெறுகிறாள். பூம்புகாருக்குத் திரும்பிய மணிமேகலை அறத்தொண்டு ஆற்றுகிறாள்.**

269) திரிகடுகம் என்ற நூலில் திரி என்ற சொல்லின் பொருள் என்ன?

A) நன்மை

B) மருந்துப்பொருள்

C) நற்கருத்துக்கள்

**D) மூன்று**

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று.அதில் முதலாவதாக அமைந்த நூல் திரிகடுகம் ஆகும். இது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயைத் தீர்ப்பதால் இந்நூல் திரிகடும் எனப் பெயர் பெற்றது. 100 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்.**

270) சிறுபஞ்சமூலத்திற்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

A) கண்டங்கத்திரி

B) சிறுவழுதுணை

**C) பெருவழுதுணை**

D) நெருஞ்சி

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் இரண்டாவதாக அமைந்த நூல் சிறுபஞ்சமூலம் ஆகும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் கலந்த மருந்து உடலை வலுப்படுத்துவதுபோல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஐந்து கருத்துக்கள் வாழ்வுக்கு வலிமை சேர்ப்பதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.**

271) நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்?

A) நல்லாதனார்

B) பெருவாயின் முள்ளியார்

**C) விளம்பிநாகனார்**

D) புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகிய மூன்றையும் மணிமொழிக்கோவை என்பர். நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற கடிகை என்னும் அணிகலன் போல ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளதால் இந்நூல் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. இந்நூல் 104 வெண்பாக்களைக் கொண்டு விளம்பிநாகனாரால் இயற்றப்பெற்றது.**

272) கி.பி.12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தண்டியலங்காரம்' காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. இந்நூல் மூன்றினுள் ஒன்று முதலில் வரவேண்டும் என்று குறிப்பிடுகிறது. இதில் பொருந்தாதது எது?

A) இயற்கையை வாழ்த்துதல்

B) தெய்வத்தினை வணங்குதல்

C) உரைக்கும் பொருள் உணர்தல்

**D) காப்பிய தலைவன், தலைவியை அறிமுகம் செய்தல்**

**விளக்கம்: கி.பி.12 ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தண்டியலங்காரம்' காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. இதன்படி பெருங்காப்பியத்தில் இயற்கையை வாழ்த்துதல், தெய்வத்தினை வணங்குதல், உரைக்கும் பொருள் உணர்த்தல் என்னும் மூன்றினுள் ஒன்று முதலில் வரவேண்டும்.**

273) கீழ்க்கண்டவற்றில் எது கால வெள்ளத்தில் அழிந்துபோன காப்பியங்கள் ஆகும்?

**A) வளையாபதி**

B) மணிமேகலை

C) சிலப்பதிகாரம்

D) சீவகசிந்தாமணி

**விளக்கம்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள். இவற்றில் சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள். பின்னர் வரும் சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி சோழர் காலத்தைச் சார்ந்தவை.அவற்றுள் குண்டலகேசியும் வளையாபதியும் காலவெள்ளத்தில் அழிந்து போன காப்பியங்கள் ஆகும்.**

274) முதுமொழிக்காஞ்சி என்னும் நூலை இயற்றியவர் யார்?

A) நல்லாதனார்

B) பெருவாயின் முள்ளியார்

C) விளம்பிநாகனார்

**D) புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்**

**விளக்கம்: பல மணிகளைக் கோவையாகக் கொண்டு அமைவது மகளிர் அணியும் காஞ்சி என்னும் அணிகலன். அதுபோல பல முதுமொழிகளைக் கோவையாகக் கொண்ட 100 வெண்பாக்களை உடைய நூல் முதுமொழிக்காஞ்சி. இதன் ஆசிரியர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் ஆவார்.**

275) தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் எது?

A) மணிமேகலை

**B) சிலப்பதிகாரம்**

C) அகத்தியம்

D) கம்பராமாயணம்

**விளக்கம்: தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இக்காப்பியம் நெஞ்சை அள்ளும் சுவையுடையது. சிலம்பால் உருவான நிகழ்வுகளையும் வரலாற்றையும் கூறுவதால் சிலப்பதிகாரம் எனப்பெயர் பெற்றது.**

276) அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களைப் பெருங்காப்பியம் வலியுறுத்திப் பாட வேண்டும். இந்நான்கினுள் ஒன்றோ, பலவோ குறைந்து வருவதை சிறுகாப்பியம் என்று கூறியவர் யார்?

**A) தண்டியாசிரியர்**

B) அகத்தியர்

C) தொல்காப்பியர்

D) பவணந்தி முனிவர்

**விளக்கம்: அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களைப் பெருங்காப்பியம் வலியுறுத்திப் பாட வேண்டும். இந்நான்கினுள் ஒன்றோ, பலவோ குறைந்து வருவதைத் தண்டியாசிரியர் சிறுகாப்பியமென்று கூறுகிறார்.**

277) பெருங்காப்பியம் எத்தனை வகையான மெய்ப்பாடுகளை கூறும் வகையில் இதன் உள்ளடக்கம் அமைதல் வேண்டும்?

A) 4

B) 5

C) 6

**D) 8**

**விளக்கம்: எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறும் வகையில் பெருங்காப்பிய உள்ளடக்கம் அமைதல் வேண்டும். பெருங்காப்பியங்கள், எதையும், குறைவின்றிச் செய்துமுடிக்கும் வலிமை வாய்ந்த தன்னிகர் இல்லாத் தலைவனைப் பெற்று அமைதல் வேண்டும்.**

278) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

A) காண்டம்

B) இலம்பகம்

C) பருவம்

**D) காதை**

**விளக்கம்: காப்பியத்தின் பெரும்பிரிவிற்குக் காண்டம், இலம்பகம், பருவம் எனவும் உட்பிரிவிற்குச் சருக்கம், காதை, படலம் எனவும் பெயரிடுவர்.**

279) கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடைபெற்ற இடம் எது?

A) மதுரை

**B) பூம்புகார்**

C) கொற்கை

D) தொண்டி

**விளக்கம்: பூம்புகாரில் மாசாத்துவான் மகனாகிய கோவலனுக்கும் மாநாய்கன் மகளாகிய கண்ணகிக்கும் திருமணம் நடைபெறுகிறது. சில ஆண்டுகள் இனிமையாக இல்லறத்தை நடத்துகின்றனர். இந்நிலையில் ஆடல், பாடல், அழகு என்ற மூன்றிலும் குறைவுபடாத மாதவி என்ற பெண் கோவலன் வாழ்வில்**

**குறுக்கிடுகிறாள். அவளுடன் சில காலம் வாழ்ந்த கோவலன் ஊழ்வினையால் அவளைப் பிரிந்து விடுகிறான்.**

280) சிறுபஞ்சமூலம் என்ற சொல்லில் மூலம் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) முதல்

**B) வேர்**

C) ஐந்து

D) ஆரம்பம்

**விளக்கம்: மூலம் என்ற சொல்லின் பொருள் வேர் என்பதாகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் இரண்டாவதாக அமைந்த நூல் சிறுபஞ்சமூலம் ஆகும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் கலந்த மருந்து உடலை வலுப்படுத்துவதுபோல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஐந்து கருத்துக்கள் வாழ்வுக்கு வலிமை சேர்ப்பதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது.**

281) நான்மணிக்கடிகை எத்தனை வெண்பாக்களைக் கொண்டு விளம்பிநாகனாரால் இயற்றப்பெற்றது?

A) 100

B) 80

C) 102

**D) 104**

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகிய மூன்றையும் மணிமொழிக்கோவை என்பர். நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற கடிகை என்னும் அணிகலன் போல ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளதால் இந்நூல் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது. இந்நூல் 104 வெண்பாக்களைக் கொண்டு விளம்பிநாகனாரால் இயற்றப்பெற்றது.**

282) திரி என்றால் மூன்று என்று பொருள். திரிகடும் எத்தனை வெண்பாக்களை கொண்ட அற நூல்?

A) 300

**B) 100**

C) 130

D) 400

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று.அதில் முதலாவதாக அமைந்த நூல் திரிகடுகம் ஆகும். இது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயைத் தீர்ப்பதால் இந்நூல் திரிகடும் எனப் பெயர் பெற்றது. 100 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்.**

283) சிறுபஞ்சமூலம் எத்தனை பாடல்களால் ஆனது?

A) 100

B) 80

**C) 102**

D) 150

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் இரண்டாவதாக அமைந்த நூல் சிறுபஞ்சமூலம் ஆகும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் கலந்த மருந்து உடலை வலுப்படுத்துவதுபோல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஐந்து கருத்துக்கள் வாழ்வுக்கு வலிமை சேர்ப்பதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது. 102 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் காரியாசான் ஆவார்.**

284) கூற்று: தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் மணிமேகலை

காரணம்: சிலம்பால் உருவான நிகழ்வுகளையும் வரலாற்றையும் கூறுவதாலேயே சிலப்பதிகாரம் எனப்பெயர் பெற்றது.

A) கூற்று சரி, காரணம் தவறு

**B) கூற்று தவறு, காரணம் சரி**

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இக்காப்பியம் நெஞ்சை அள்ளும் சுவையுடையது. சிலம்பால் உருவான நிகழ்வுகளையும் வரலாற்றையும் கூறுவதால் சிலப்பதிகாரம் எனப்பெயர் பெற்றது.**

285) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

**A) சிலப்பதிகாரம்**

B) சீவகசிந்தாமணி

C) வளையாபதி

D) குண்டலகேசி

**விளக்கம்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐந்தும் ஐம்பெருங்காப்பியங்கள். இவற்றில் சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள். பின்னர் வரும் சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி சோழர் காலத்தைச் சார்ந்தவை.**

286) கூற்று 1: காப்பிய இலக்கணத்தோடு பெரும்பாலும் பொருந்தியும் சிறுபான்மை மாறுபட்டும் அமைந்திருப்பவை தொடர்நிலைச்செய்யுள் என அழைக்கப்படுகின்றன.

கூற்று 2: எண்வகை மெய்ப்பாடுகளை கூறும் வகையில் பெருங்காப்பியத்தின் உள்ளடக்கம் அமைதல் வேண்டும்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: காப்பிய இலக்கணத்தோடு பெரும்பாலும் பொருந்தியும் சிறுபான்மை மாறுபட்டும் அமைந்திருப்பவை தொடர்நிலைச்செய்யுள் என அழைக்கப்படுகின்றன.**

**எண்வகை மெய்ப்பாடுகளை கூறும் வகையில் பெருங்காப்பியத்தின் உள்ளடக்கம் அமைதல் வேண்டும்.**

287) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

A) சருக்கம்

B) காதை

C) படலம்

**D) இலம்பகம்**

**விளக்கம்: காப்பியத்தின் பெரும்பிரிவிற்குக் காண்டம், இலம்பகம், பருவம் எனவும் உட்பிரிவிற்குச் சருக்கம், காதை, படலம் எனவும் பெயரிடுவர்.**

288) உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று அழைக்கப்படும் நூல் எது?

A) மணிமேகலை

**B) சிலப்பதிகாரம்**

C) குண்டலகேசி

D) நீலகேசி

**விளக்கம்: தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இக்காப்பியம் நெஞ்சை அள்ளும் சுவையுடையது. சிலம்பால் உருவான நிகழ்வுகளையும் வரலாற்றையும் கூறுவதால் சிலப்பதிகாரம் எனப்பெயர் பெற்றது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று இந்நூல் அறியப்படுகிறது.**

289) எந்த நாட்டை நோக்கிச் சென்ற கண்ணகி, தெய்வமாக்கப்படுகிறாள்?

**A) சேர நாடு**

B) சோழ நாடு

C) பாண்டிய நாடு

D) பல்லவ நாடு

**விளக்கம்: கற்புக்கடம்பூண்ட தெய்வமாகிய கண்ணகி சேரநாடு நோக்கிச் சென்றாள். அங்கு அவள் தெய்வமாக்கப்படுகிறாள்.**

290) தமிழில் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் சீவக சிந்தாமணி ஆகும். இது எம்மொழியில் எழுந்த கத்திய சிந்தாமணியின் தழுவல்?

A) **வடமொழி**

B) தெலுங்கு

C) இந்தி

D) கன்னடம்

**விளக்கம்: தமிழில் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் சீவக சிந்தாமணி ஆகும். வடமொழியில் எழுந்த கத்திய சிந்தாமணியின் தழுவலே இந்நூல் ஆகும்.**

291) சிறுபஞ்சமூலம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

**A) காரியாசான்**

B) கணிமேதாவியார்

C) நல்லாதனார்

D) நப்பசலையார்

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் இரண்டாவதாக அமைந்த நூல் சிறுபஞ்சமூலம் ஆகும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் கலந்த மருந்து உடலை வலுப்படுத்துவதுபோல, இந்நூலின்**

**ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஐந்து கருத்துக்கள் வாழ்வுக்கு வலிமை சேர்ப்பதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் எனப் பெயர் பெற்றது. 102 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் காரியாசான் ஆவார்.**

292) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மூன்றாவதாக அமைந்த மருந்து நூல் எது?

A) சிறுபஞ்சமூலம்

B) திரிகடுகம்

**C) ஏலாதி**

D) நல்வழி

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் மூன்றாவதாக அமைந்தது ஏலாதி. ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்த மருந்து உடலுக்குறுதி சேர்ப்பதுபோல, செய்யுள்தோறும் உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு கருத்துகளைக் கொண்டதால் இந்நூல் ஏலாதி எனப்பெயர் பெற்றது. 80 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார் ஆவார்.**

293) சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களை கொண்டுள்ளது?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும் கொண்டுள்ளது.**

**மூன்று காண்டங்கள்:**

**1. புகார்க்காண்டம்**

**2. மதுரைக்காண்டம்**

**3. வஞ்சிக்காண்டம்**

294) சிலப்பதிகாரத்தில் முதன்மைப்படுத்தப்படுபவர் யார்?

A) கோவலன்

B)**கண்ணகி**

C) மாதரி

D) மாதவி

**விளக்கம்: சிலப்பதிகாரத்தில் காப்பிய நாயகியான கண்ணகியே முதன்மைப்படுத்தப்படுகிறாள். சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், தேசிய காப்பியம் முதலான சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது.**

295) சீவக சிந்தாமணி எந்த நூற்றாண்டில் இயற்றப்பட்டது?

A) கி.பி.6–ஆம் நூற்றாண்டு

**B) கி.பி.7–ஆம் நூற்றாண்டு**

C) கி.பி.8–ஆம் நூற்றாண்டு

D) கி.பி.9–ஆம் நூற்றாண்டு

**விளக்கம்: சமணசமயக் காப்பியமாகத் திகழும் சீவக சிந்தாமணி கி.பி.7–ஆம் நூற்றாண்டில் திருத்தக்கத்தேவரால் இயற்றப்பட்டது.**

296) திருத்தக்கத்தேவரை 'தமிழ்க் கவிஞர்களுள் அரசன்' என்று போற்றியவர் யார்?

A) ஜி.யூ.போப்

**B) வீரமாமுனிவர்**

C) கால்டுவெல்

D) திருத்தணி சரவண பெருமாள்

**விளக்கம்: சமணசமயக் காப்பியமாகத் திகழும்** சீவக சிந்தாமணி **கி.பி.7–ஆம் நூற்றாண்டில் திருத்தக்கத்தேவரால் இயற்றப்பட்டது. திருத்தக்கத்தேவரை 'தமிழ்க் கவிஞர்களுள் அரசன்' என்று வீரமாமுனிவர் போற்றுகிறார்.**

297) சீவக சிந்தாமணியில் எத்தனை பாடல்கள் உள்ளன?

**A) 3145**

B) 3415

C) 3514

D) 3451

**விளக்கம்: சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை 13 இலம்பகங்களையும், 3145 பாடல்களையும் கொண்டது. காப்பிய இலக்கணம் முழுமையும் பொருந்தும் இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் பேசுகிறது.**

298) கூற்று: சிலப்பதிகாரம், மணிமேகலை–ஐ இரட்டைக் காப்பியங்கள் என்று கூறுவர்

காரணம்: இரண்டு நூல்களின் ஆசிரியர்களும் சமகாலத்தவர்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: கதைக்களம், பாத்திரங்கள், கருத்துக்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டிலும் தொடர்வதால் இவ்விரண்டையும் இரட்டைக்காப்பியம் என்பர்.**

299) சிலப்பதிகாரம் உணர்த்தும் உண்மைகள் எத்தனை?

A) 2

B) 4

**C) 3**

D) 5

**விளக்கம்: "அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்**

**உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்**

**ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்" என்னும் முப்பெரும் உண்மைகளை இந்நூல் கூறுகிறது.**

300) சரியான கூற்றை தெரிவு செய்க

**A)** மணிமேகலை இளங்கோவடிகள் முன்பாகவும், சிலப்பதிகாரம் சீத்தலைச் சாத்தனார் முன்பாகவும் அரங்கேற்றப்பட்டது.

B) சிலப்பதிகாரம் இளங்கோவடிகள் முன்பாகவும், மணிமேகலை சீத்தலைச்சாத்தனார் முன்பாகவும் அரங்கேற்றப்பட்டது.

**C) மணிமேகலை திருத்தக்கத்தேவர் முன்பாகவும், சிலப்பதிகாரம் சீத்தலைச்சாத்தனார் முன்பாகவும் அரங்கேற்றப்பட்டது**

D) சிலப்பதிகாரம் திருத்தக்கத்தேவர் முன்பாகவும், மணிமேகலை இளங்கோவடிகள் முன்பாகவும் அரங்கேற்றம் செய்யப்பட்டது

**விளக்கம்: மணிமேகலை இளங்கோவடிகள் முன்பாகவும், சிலப்பதிகாரம் சீத்தலைச்சாத்தனார் முன்பாகவும் அரங்கேற்றப்பட்டதாகக் கூறுவர்.**

301) மணிமேகலையில் எத்தனை காண்டடங்கள் உள்ளது?

A) 3

B) 6

C) 7

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: சிலப்பதிகாரத்தில் உள்ளது போல் மணிமேகலையில் காண்டம் என்னும் பெரும்பிரிவுகள் எதுவும் இல்லை.**

302) மணிமேகலை காப்பியத்தின் வேறுபெயர் என்ன?

A) மணிமேகலை வாழ்வு

**B) மணிமேகலை துறவு**

C) அறநெறி காப்பியம்

D) துறவு காப்பியம்

**விளக்கம்: மணிமேகலையின் துறவு வாழ்க்கைப் பற்றி கூறுவதால் மணிமேகலை காப்பியம், மணிமேகலை துறவு என்றும் அழைக்கப்படுகிறது.**

303) சிலப்பதிகாரத்திற்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க?

A) குடிமக்கள் காப்பியம்

B) முத்தமிழ்க் காப்பியம்

C) நாடகக் காப்பியம்

**D) தமிழகக் காப்பியம்**

**விளக்கம்: சிலப்பதிகாரத்தில் காப்பிய நாயகியான கண்ணகியே முதன்மைப்படுத்தப்படுகிறாள். சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், தேசிய காப்பியம் முதலான சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது.**

304) கூற்று: சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் என்று குறிப்பிடப்படுகிறது.

காரணம்: இக்காப்பியம் மூவேந்தர் ஆட்சிமுறை பற்றிய செய்திகளை கூறுகிறது

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு. காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: சிலப்பதிகாரத்தில் காப்பிய நாயகியான கண்ணகியே முதன்மைப்படுத்தப்படுகிறாள். சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம், தேசிய காப்பியம் முதலான சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறது. மூவேந்தர் ஆட்சிமுறை பற்றிய செய்திகளையும் கூறுகிறது.**

305) சீவக சிந்தாமணி ஆசிரியரின் காலம் என்ன?

**A) கி.பி.7–ஆம் நூற்றாண்டு**

B) கி.பி.6–ஆம் நூற்றாண்டு

C) கி.பி.8–ஆம் நூற்றாண்டு

D) கி.பி.5–ஆம் நூற்றாண்டு

**விளக்கம்: சமணசமயக் காப்பியமாகத் திகழும் இந்நூல் கி.பி.7–ஆம் நூற்றாண்டில் திருத்தக்கத்தேவரால் இயற்றப்பட்டது. திருத்தக்கத்தேவரை 'தமிழ்க் கவிஞர்களுள் அரசன்' என்று வீரமாமுனிவர் போற்றுகிறார்.**

306) மணிமேகலை 30 காதைகளை கொண்டுள்ளது. இதில் முதல் காதை எது?

**A) விழாவறை காதை**

B) நாமகள் காதை

C) முக்தி காதை

D) பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை

**விளக்கம்: மணிமேகலை பௌத்த சமயக் காப்பியம் ஆகும். இதில் விழாவறை காதை முதல் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகள் உள்ளன.**

307) கூற்று: மணிமேகலையை பௌத்த துறவியாக்கியவர் மாதவி

காரணம்: தனக்கு நேர்ந்த கதி தன் மகளுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த பெண் மணிமேகலை. தனக்கு நேர்ந்த கதி தன் மகளுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவளையும் தன்னைப் போலவே பௌத்தத் துறவியாக்கி இருந்தாள் மாதவி.**

308) தமிழில் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் எது?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

**C) சீவக சிந்தாமணி**

D) வளையாபதி

**விளக்கம்: தமிழில் விருத்தப்பாவால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் சீவக சிந்தாமணி ஆகும். வடமொழியில் எழுந்த கத்திய சிந்தாமணியின் தழுவலே இந்நூல் ஆகும்.**

309) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) செம்மை, இயல் என்ற இரு சொற்கள் இணைந்து செவ்வியல் என்ற சொல் உருவானது.

**B) இலத்தீன் மொழியில் செவ்வியல் காலகட்டம் என்பது கி.பி1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2–ஆம் நூற்றாண்டு வரை ஆகும்.**

C) செம்மை, என்பதற்குச் செப்பம், செவ்வை, செவ்வி, நற்சீரடைதல், ஒழுங்குபடுத்துதல், பண்படுத்துதல் என்றெல்லாம் பொருள்கொள்ளலாம்.

D) செவ்வியல் இலக்கியங்களைப் படைக்க இன்றியமையாதது, எழுத்து வடிவமே ஆகும்.

**விளக்கம்: செம்மை, இயல் என்ற இரு சொற்கள் இணைந்து செவ்வியல் என்ற சொல் உருவானது.**

**இலத்தீன் மொழியில் செவ்வியல் காலகட்டம் என்பது கி.மு 1ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 2–ஆம் நூற்றாண்டு வரை ஆகும்**

**செம்மை, என்பதற்குச் செப்பம், செவ்வை, செவ்வி, நற்சீரடைதல், ஒழுங்குபடுத்துதல், பண்படுத்துதல் என்றெல்லாம் பொருள்கொள்ளலாம்.**

**செவ்வியல் இலக்கியங்களைப் படைக்க இன்றியமையாதது, எழுத்து வடிவமே ஆகும்.**

310) கூற்று: மணிமேகலை சமுதாய சீர்த்திருத்தக்காப்பியமாக விளங்குகிறது.

காரணம்: , பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு, சிறையொழிப்பு என்னும் கருத்துக்களைக் கூறுகிறது

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: மணிமேகலையில் இயற்கைக் காட்சிகளும், வருணனைகளும் அமைந்துள்ளன. கதைத்தலைவியால் பெயர் பெற்றது இந்நூல். பரத்தையொழிப்பு, மதுவொழிப்பு, சிறையொழிப்பு என்னும் கருத்துக்களைக் கூறும் சமுதாய சீர்திருத்தக்காப்பியமாக இந்நூல் விளங்குகிறது.**

311) கூற்றுகளை ஆராய்க

கூற்று 1: தமிழில் செவ்வியல் என்பதன் மூலச்சொல் 'செம்மை' என்பதாகும்.

கூற்று 2: கிரேக்க மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் என்பது கி.மு.5ஆம் நூற்றாண்டு முதல் 4ஆம் நூற்றாண்டு வரையாகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: கூற்று 1: தமிழில் செவ்வியல் என்பதன் மூலச்சொல் 'செம்மை' என்பதாகும்.**

**கூற்று 2: கிரேக்க மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் என்பது கி.மு.5ஆம் நூற்றாண்டு முதல் 4ஆம் நூற்றாண்டு வரையாகும்.**

312) 'தமிழ்கவிஞர்களுள் அரசன்' என்று போற்றப்படுபவர் யார்?

A) சீத்தலைச் சாத்தனார்

B) இளங்கோவடிகள்

**C) திருத்தக்கதேவர்**

D) தோலாமொழித்தேவர்

**விளக்கம்: சமணசமயக் காப்பியமாகத் திகழும் சீவக சிந்தாமணி கி.பி.7–ஆம் நூற்றாண்டில் திருத்தக்கத்தேவரால் இயற்றப்பட்டது. திருத்தக்கத்தேவரை 'தமிழ்க் கவிஞர்களுள் அரசன்' என்று வீரமாமுனிவர் போற்றுகிறார்.**

313) "நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை" என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) மூதுரை

B) நல்வழி

C) பழமொழி நானூறு

**D) நறுந்தொகை**

**விளக்கம்: "எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்**

**கல்விக் கழகு கசடற மொழிதல்**

**நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை**

**கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை" – நறுந்தொகை.**

314) செல்வம் வரும்போது மகிழ்வதுமில்லை. வறுமையுற்றபோது வருந்துவதுமில்லை என்னும் நெறியை உணர்த்தும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) வளையாபதி

**B) குண்டலகேசி**

C) மணிமேகலை

D) சிலப்பதிகாரம்

**விளக்கம்: செல்வம் வரும்போது மகிழ்வதுமில்லை. வறுமையுற்றபோது வருந்துவதுமில்லை என்னும் நெறியை உணர்த்தும் பாடல் இடம்பெற்றுள்ள காப்பியம் குண்டலகேசியாகும்.**

315) நீலகேசி உரையில் குண்டலகேசியின் செய்யுள் எத்தனை கிடைக்கப்பெற்றுள்ளது?

A) 19

B) 18

**C) 180**

D) 190

**விளக்கம்: அழிந்துபோன தமிழ்க் காப்பியங்களுள் ஒன்று குண்டலகேசி. இது பௌத்த சமய நூல். நாதகுத்தனார் என்ற புலவரால் இயற்றப்பட்டது. புறத்திரட்டில் குண்டலகேசியின் பாடல்களாகப் 19 செய்யுள்களும், நீலகேசி உரையில் 180 பாக்களும் இன்று கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டும், வேறு சில குறிப்புகள் மூலமும் குண்டலகேசியின் கதையமைப்பை அறியமுடிகிறது.**

316) எங்கு மணிமேகலை அறத்தொண்டு ஆற்றினாள்?

A) தொண்டி

**B) பூம்புகார்**

C) மணிப்பல்லவத்தீவு

D) கொற்கை

**விளக்கம்: இந்திரவிழா காணவந்த மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிக்கொண்டு சென்று, மணிபல்லவத்தீவில் சேர்க்கிறது. அங்கு தோன்றிய புத்த பீடிகையைத் தொழுது, தன் பழம்பிறப்பு பற்றி அறிகிறாள் மணிமேகலை, வான்வழியே பறத்தல், பசியாதிருத்தல், தன் உருவை மாற்றிக்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான மந்திரங்களையும், அள்ள அள்ளக் குறையாது அமுதுசுரக்கும் அமுத சுரபியையும் பெறுகிறாள். பூம்புகாருக்குத் திரும்பிய மணிமேகலை அறத்தொண்டு ஆற்றுகிறாள்.**

317) பெரியபுராணத்தில் எத்தனை காண்டங்கள் உள்ளது?

winmeen.com

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: 63 அடியார் பெருமக்களை மையமாகக்கொண்டு இயற்றப்பட்ட பெரியபுராணம் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் கொண்டுள்ளது.**

318) சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை எத்தனை இலம்பகங்களால் ஆனது?

A) 10

**B) 13**

C) 17

D) 18

**விளக்கம்: சீவக சிந்தாமணி நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை 13 இலம்பங்களையும், 3145 பாடல்களையும் கொண்டது. காப்பிய இலக்கணம் முழுமையும் பொருந்தும் இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களை பற்றி பேசுகிறது.**

319) இனியவை நாற்பது நூலின் ஆசிரியர் யார்?

**A) பூதஞ்சேந்தனார்**

B) கபிலர்

C) கூடலூர் கிழார்

D) விளம்பிநாகனார்

**விளக்கம்: இன்னது இன்னது இன்பம் பயக்கும் என 40 வெண்பாக்களைக் கொண்டு பூதஞ்சேந்தனரால் பாடப்பட்ட நூல் இனியவை நாற்பது ஆகும்.**

320) குணாட்டியர் என்பவர் பிருகத்கதா எனும் நூலைப் பைசாச மொழியில் இயற்றினார். இக்காப்பியத்தை மூல நூலாகக் கொண்டு தமிழில் இயற்றப்பட்ட காப்பியம் எது?

A) தண்டியலங்காரம்

B) வளையாபதி

**C) பெருங்கதை**

D) நீலகேசி

**விளக்கம்: குணாட்டியர் என்பவர் பிருகத்கதா எனும் நூலைப் பைசாச மொழியில் இயற்றினார். இக்காப்பியமே பெருங்கதையின் மூல நூலாகக் கருதப்படுகிறது. பெருங்கதை சமண சமயக்காப்பியமாகும். இந்நூல் ஆறு காண்டங்களை உடையது.**

321) "கல்விக் கழகு கசடற மொழிதல்" என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) மூதுரை

B) நல்வழி

**C) நறுந்தொகை**

D) பழமொழி நானூறு

**விளக்கம்: "எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்**

**கல்விக் கழகு கசடற மொழிதல்**

**நாளுங் கிழமையும் நலிந்தோர்க் கில்லை**

**கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை" – நறுந்தொகை.**

322) கூற்று: தமிழ் இலக்கியங்கள் முழுவதுமே அற இலக்கியங்கள் எனலாம்.

காரணம்: சங்க இலக்கியம், காப்பியங்கள், அறநூல்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள் என்றெல்லாம் பல பிரிவுகள் இருப்பினும். அவற்றின் பாடுபொருளின் மையம் ஏதோ ஓர் அறமாகவே இருக்கிறது..

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: தமிழ் இலக்கியங்கள் முழுவதுமே அற இலக்கியங்கள் எனலாம். சங்க இலக்கியம், காப்பியங்கள், அறநூல்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள் என்றெல்லாம் பல பிரிவுகள் இருப்பினும். அவற்றின் பாடுபொருளின் மையம் ஏதோ ஓர் அறமாகவே இருக்கிறது.**

323) கூற்றுகளை ஆராய்க.

1. சமஸ்கிருத மொழியின் செவ்வியல் இலக்கிய காலகட்டம் என்பது கி.மு.8–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3 ஆம் நூற்றாண்டு வரையான காலகட்டமாகும்.

2. சீன மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் என்பது கி.பி.4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.8ஆம் நூற்றாண்டு வரையான காலமாகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சீன மொழியின் செவ்வியல் இலக்கிய காலகட்டம் என்பது கி.மு.8–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3 ஆம் நூற்றாண்டு வரையான காலகட்டமாகும்.**

**2. சமஸ்கிருத மொழியின் செவ்வியல் இலக்கியக் காலகட்டம் என்பது கி.பி.4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.8ஆம் நூற்றாண்டு வரையான காலமாகும்.**

324) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயை தீர்க்கும் – திரிகடுகம்

B) கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் கலந்த மருந்து உடலை வலுப்படுத்துவதுபோல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஐந்து கருத்துகள் வாழ்வுக்கு வலிமை சேர்க்கும் – சிறுபஞ்சமூலம்

C) ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்த மருந்து உடலுக்குறுதி சேர்ப்பதுபோல, செய்யுள்தோறும் உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு கருத்துக்கள் – ஏலாதி

**D) மேற்காணும் எதுவுமில்லை**

விளக்கம்: சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து **உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயை தீர்க்கும் – திரிகடுகம்**

**கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தின் வேர்கள் கலந்து மருந்து உடலை வலுப்படுத்துவதுபோல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் அமைந்த ஐந்து கருத்துகள் வாழ்வுக்கு வலிமை சேர்க்கும் – சிறுபஞ்சமூலம்**

**ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்த மருந்து உடலுக்குறுதி சேர்ப்பதுபோல, செய்யுள்தோறும் அமைந்து ஆறு கருத்துக்கள் உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு கருத்துக்கள் – ஏலாதி**

325) கூற்றுகளை ஆராய்க.

1. உலகளவில் 'செவ்வியல்' என்ற பொருளில் 'கிளாசிசம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலச்சொல்லாக 'கிளாசிகஸ்' என்ற இலத்தீன் சொல் உள்ளது.

2. தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் போன்ற செவ்வியல் மொழிகள் அனைத்தும் எழுத்து வடிவத்தைப் பெற்ற பின்னரே செவ்வியல் இலக்கியங்களை உருவாக்கின.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. உலகளவில் 'செவ்வியல்' என்ற பொருளில் 'கிளாசிசம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலச்சொல்லாக 'கிளாசிகஸ்' என்ற இலத்தீன் சொல் உள்ளது.**

**2. தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் போன்ற செவ்வியல் மொழிகள் அனைத்தும் எழுத்து வடிவத்தைப் பெற்ற பின்னரே செவ்வியல் இலக்கியங்களை உருவாக்கின.**

326) தவறான கூற்றை தெரிவு செய்க

A) திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கது நாலடியார்

B) இதன் வேறுபெயர்கள் நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் ஆகும்.

C) இது சமண முனிவர்களால் பாடப்பட்ட 400 பாடல்களால் ஆன நூல் ஆகும்.

**D) தனக்கு உதவி செய்தவர்களுக்குத் தீங்கு செய்வது தனக்கே தீங்கு செய்துகொள்வதற்கு ஒப்பாகும் என்ற கருத்தை கூறும் நூல் நாலடியார் ஆகும்**

**விளக்கம்: தனக்கு உதவி செய்தவர்களுக்குத் தீங்கு செய்வது தனக்கே தீங்கு செய்துகொள்வதற்கு ஒப்பாகும் என்ற கருத்தை கூறும் நூல் பழமொழி நானூறு.**

**தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது, ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயர்விடுதலைப் போன்றதாகும். – பழமொழி நானூறு.**

327) கரிகால் பெருவளத்தானின் கொடைச்சிறப்பை முடத்தாமக்கண்ணியார் கீழ்க்காணும் எந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்?

A) சிறுபாணாற்றுப்படை

**B) பொருநராற்றுப்படை**

C) மலைபடுகடாம்

D) பட்டினப்பாலை

**விளக்கம்: பொருநராற்றுப்படையில் கரிகால் பெருவளத்தானின் கொடைச்சிறப்பை முடத்தாமக்கண்ணியார் கூறியுள்ளார்.**

328) பொய்ப்பொருளைப் பற்றாது, சான்றோர் மொழிந்த துறவொழுக்கத்தைப் பின்பற்றுவதே சிறப்புடையது என்பதை உணர்த்தும் காப்பியம் எது?

A) குண்டலகேசி

**B) வளையாபதி**

C) சிலப்பதிகாரம்

D) மணிமேகலை

**விளக்கம்: எந்நிலையிலும் மாந்தர்கள் கீழ்மையைத் தருகின்ற பொய்ப்பொருளைப் பற்றாது, சான்றோர் மொழிந்த துறவொழுக்கதைப் பின்பற்றுவதே சிறப்புடையது என்பதை உணர்த்தும் பாடல் இடம்பெற்றுள்ள காப்பியம் வளையாபதி ஆகும்.**

329) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) நாலடியாரை தொகுத்தவர் பதுமனார்

B) நாலடியார் போன்றே 400 வெண்பாக்களால் ஆனது பழமொழி நானூறு ஆகும்.

C) ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி அமையப் பாடப்பட்டிருப்பதால் இந்நூல் பழமொழி நானூறு என பெயர் பெற்றது.

**D) பழமொழி நானூறு நூலை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார்**

**விளக்கம்: பழமொழி நானூறு – முன்றுறையரையனார்.**

**ஆசாரக்கோவை – பெருவாயின் முள்ளியார்.**

330) கூற்றுகளை ஆராய்க.

1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று

2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறநூல்கள் – 11, அகநூல்கள் – 6, புற நூல் – 1

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று**

**2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறநூல்கள் – 11, அகநூல்கள் – 6, புற நூல் – 1**

331) பெருங்கதை எச்சமய காப்பியம்?

**A) சமணம்**

B) பௌத்தம்

C) சைவம்

D) சீக்கியம்

**விளக்கம்: குணாட்டியர் என்பவர் பிருகத்கதா எனும் நூலைப் பைசாச மொழியில் இயற்றினார். இக்காப்பியமே பெருங்கதையின் மூல நூலாகக் கருதப்படுகிறது. பெருங்கதை சமண சமயக்காப்பியமாகும். இந்நூல் ஆறு காண்டங்களை உடையது.**

332) கூற்றுகளை ஆராய்க.

1. களவழி நாற்பது நூலில் உள்ள ஒவ்வொரு பாடலின் இறுதி சொல்லும் 'பொருதகளத்து' என்று முடிவது இதன் சிறப்பு.

2. டால்டாய்ஸ்–ன் போரும் அமைதியும் என்ற நூலிற்கு அடுத்தபடியாக உலகின் பெரும்பான்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையுடைய நூல் – திருக்குறள்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. களவழி நாற்பது நூலில் உள்ள ஒவ்வொரு பாடலின் இறுதி சொல்லும் 'பொருதகளத்து' என்று முடிவது இதன் சிறப்பு.**

**2. விவிலியத்திற்கு அடுத்தபடியாக உலகின் பெரும்பான்மையான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட பெருமையுடைய நூல் – திருக்குறள்**

333) பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்களில் பொருந்தாது எது?

A) வருகை

B) அம்புலி

**C) சிற்றில்**

D) வருகை

**விளக்கம்: கடவுளரையோ அரசரையோ பிறரையோ குழந்தையாகக் கருதி அவர்தம் குழந்தைப் பருவத்தைப் பத்துப்பருவங்களாகப் பகுத்துப் பருவத்திற்குப் பத்து ஆசிரிய விருத்தங்களாகப் பாடுவது பிள்ளைத்தமிழ் இலக்கியமாகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.**

**ஆண்பாற்பிள்ளைத்தமிழ் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுதேர், சிறுபறை.**

**பெண்பாற்பிள்ளைத்தமிழ் – காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.**

334) புறத்திரட்டு வாயிலாக வளையாபதியின் பாடல்கள் எத்தனை காணப்படுகின்றன?

A) 19

B) 180

**C) 66**

D) 72

**விளக்கம்: ஐம்பெரும் காப்பியங்களில் இறுதியாக வைத்து எண்ணப்படுவது வளையாபதி. இந்நூல் முழுமையும் இன்று கிடைக்கவில்லை. சமணசமயத்தைச் சார்ந்த இந்நூலின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை. புறத்திரட்டுத்தொகை நூலில் வளையாபதியின் பாடல்களாக 66 செய்யுள்கள் காணப்படுகின்றன. விருத்தப் பாக்களாக அமைந்த வளையாபதிப் பாடல்கள் கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, இளமை நிலையாமை ஆகியன குறித்துப் பேசுகின்றன.**

335) கூற்றுகளை ஆராய்க.

1.பழந்தமிழர், திருமணத்திற்கு முந்தைய காதல் வாழ்வை, "களவொழுக்கம்" என்றும், திருமணத்திற்குப் பிறகு அவர்களின் இல்லற வாழ்வை, "கற்பொழுக்கம்" என்றும் போற்றியுள்ளனர்.

2. தொல்காப்பியர் கூறும் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகைக் களங்களுள் ஒன்றை விளையாட்டு.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1.பழந்தமிழர், திருமணத்திற்கு முந்தைய காதல் வாழ்வை, "களவொழுக்கம்" என்றும், திருமணத்திற்குப் பிறகு அவர்களின் இல்லற வாழ்வை, "கற்பொழுக்கம்" என்றும் போற்றியுள்ளனர்.**

**2. தொல்காப்பியர் கூறும் உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகைக் களங்களுள் ஒன்றை விளையாட்டு.**

336) செம்மை என்ற சொல்லை பலவாறாக பொருள் கொள்ளலாம். இதில் பொருந்தாதது எது?

A) செவ்வி

B) செப்பம்

C) செவ்வை

**D) பயன்படுத்துதல்**

**விளக்கம்: செவ்வியல் என்பதன் மூலச்சொல் 'செம்மை' என்பதாகும். செம்மை, இயல் என்ற இரு சொற்கள் இணைந்து செவ்வியல் என்ற சொல் உருவானது. செம்மை என்பதற்குச் செப்பம், செவ்வை, செவ்வி, நற்சீரடைதல், ஒழுங்குபடுத்துதல், பண்படுத்துதல் என்றெல்லாம் பொருள்கொள்ளலாம்.**

337) காப்பியங்களில் நாட்டுவளம், நகர்வளம் பாடுவதில் புதியமரபை ஏற்படுத்திக் கொடுத்த காப்பியம் எது?

**A) சீவக சிந்தாமணி**

B) வளையாபதி

C) குண்டலகேசி

D) மணிமேகலை

**விளக்கம்: காப்பியங்களில் நாட்டுவளம், நகர்வளம் பாடுவதில் புதியமரபை ஏற்படுத்திக் கொடுத்த காப்பியம் சீவக சிந்தாமணி ஆகும். இயற்கை காட்சிகள், அவை பற்றிய வருணனை, போர்முறைகள், தமிழர்தம் பழக்க வழக்கங்கள், உவமை நயங்கள், அரசியல் சூழ்ச்சிகள், சமணக்கொள்ளை விளக்கங்கள் பற்றி பேசுகிறது சிந்தாமணிக் காப்பியம்.**

338) புறத்திரட்டில் குண்டலகேசியின் செய்யுள் எத்தனை கிடைக்கப்பெற்றுள்ளது?

**A) 19**

B) 18

C) 180

D) 190

**விளக்கம்: அழிந்துபோன தமிழ்க் காப்பியங்களுள் ஒன்று குண்டலகேசி. இது பௌத்த சமய நூல். நாதகுத்தனார் என்ற புலவரால் இயற்றப்பட்டது. புறத்திரட்டில் குண்டலகேசியின் பாடல்களாகப் 19**

**செய்யுள்களும், நீலகேசி உரையில் 180 பாக்களும் இன்று கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டும், வேறு சில குறிப்புகள் மூலமும் குண்டலகேசியின் கதையமைப்பை அறியமுடிகிறது.**

339) ஐம்பெருங்காப்பியங்களில் இறுதியாக வைத்து எண்ணப்படுவது எது?

**A) வளையாபதி**

B) குண்டலகேசி

C) சீவக சிந்தாமணி

D) சிலப்பதிகாரம்

**விளக்கம்: ஐம்பெரும் காப்பியங்களில் இறுதியாக வைத்து எண்ணப்படுவது வளையாபதி. இந்நூல் முழுமையும் இன்று கிடைக்கவில்லை. சமணசமயத்தைச் சார்ந்த இந்நூலின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை.**

340) கூற்றுகளை ஆராய்க.

1. கூடவொழுக்கம் என்ற அதிகாரம் பொதுவாகப் பிறரை ஏமாற்றி வாழும் அனைவரையும் பற்றியது என்றாலும் போலித்துறவியரை மனத்தில் கொண்டே வரையப்பட்டவை.

2. தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது, ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலைப் போன்றதாகும் என்று கூறும் நூல் நாலடியார் ஆகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. கூடவொழுக்கம் என்ற அதிகாரம் பொதுவாகப் பிறரை ஏமாற்றி வாழும் அனைவரையும் பற்றியது என்றாலும் போலித்துறவியரை மனத்தில் கொண்டே வரையப்பட்டவை.**

**2. தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது, ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலைப் போன்றதாகும் என்று கூறும் நூல் பழமொழி நானூறு ஆகும்.**

341) தவறான கூற்றை ஆராய்க.

A) களத்தை ஏர்க்களம், போர்க்களம் என்று இருவகைப்படுத்துவர்

B) ஏர்களம் – நெல் முதலானவற்றை அடித்து தூற்றும் களத்தைப் பாடுவது

C) போர்க்களம் – பகைவரை அழிக்கும் போர்களத்தைப்பாடுவது

D) **களவழி நாற்பது என்பது ஏர்க்களத்தைப் பாடும் நூல் ஆகும்**

**விளக்கம்: களவழி நாற்பது என்பது போர்க்களத்தைப் பாடும் நூல் ஆகும். கழுமலத்தில் நடைபெற்ற போரில் சோழன் கோச்செங்கணான், சோழன் கணைக்கால் இரும்பொறையை வென்று சிறையிலிட்டதால், அவனை மீட்க பொய்கையார் பாடியதே இந்நூல்.**

342) யாருடைய காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்கள் தனித்தனித் பாடல்களாகவும் பிரபந்தங்களாகவும் வெளிப்பட்டன?

**A) பல்லவர்கள் காலம்**

B) பாண்டியர்கள் காலம்

C) சோழர்கள் காலம்

D) களப்பிரர்கள் காலம்

**விளக்கம்: பக்திக்கு முக்கியத்துவம் அளித்தவர்கள் பல்லவர்கள். இந்த எழுச்சிக்கு ஆதரவளித்த பல்லவர் ஆட்சிக்காலம் பக்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்காலம் எனப்படுகிறது. பக்தி இயக்கத்தால் தமிழகத்தில் தமிழுக்கு மீண்டும் புதுப்பொலிவு ஏற்பட்டது. இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்கள் தனித்தனிப் பாடல்களாகவும் பிரபந்தங்களாகவும் வெளிப்பட்டன.**

343) குண்டலகேசி பற்றிய கூற்றில் தவறானது எது?

A) அழிந்துபோன தமிழ்க்காப்பியங்களில் ஒன்று

B) இது பௌத்த சமய நூல்

C) நாதகுத்தனார் என்ற புலவரால் இயற்றப்பட்டது

**D) புறத்திரட்டில் 180 பாக்களும், நீலகேசி உரையில் 19 செய்யுள்களும் இன்று கிடைக்கின்றன.**

**விளக்கம்: குண்டலகேசி:**

**அழிந்துபோன தமிழ்க்காப்பியங்களுள் ஒன்று. இது பௌத்த சமய நூல். நாதகுத்தனார் என்ற புலவரால் இயற்றப்பட்டது. புறத்திரட்டில் குண்டலகேசியின் பாடல்களாகப் 19 செய்யுள்களும், நீலகேசி உரையில் 180 பாக்களும் இன்று கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டும், வேறு சில குறிப்புகள் மூலமும் குண்டலகேசியின் கதையமைப்பை அறியமுடிகிறது.**

344) கூற்றுகளை ஆராய்க.

1. மலைபடுகடாம் நூலில் கரிகால் பெருவளத்தானின் கொடைச்சிறப்பைக் கூறியவர் முடத்தாமக்கண்ணியார் ஆவார்.

2. தன் மன்னன் இறந்ததற்கு குடிமக்களும் சான்றோரும் வீரர்களும் வருந்திப் பாடுவது கையறுநிலை என்னும் துறையாகும்.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பொருநராற்றுப்படை என்ற நூலில் கரிகால் பெருவளத்தானின் கொடைச்சிறப்பைக் கூறியவர் முடத்தாமக்கண்ணியார் ஆவார்.**

**2. தன் மன்னன் இறந்ததற்கு குடிமக்களும் சான்றோரும் வீரர்களும் வருந்திப் பாடுவது கையறுநிலை என்னும் துறையாகும்.**

345) காப்பியங்களில் நாட்டுவளம், நகர்வளம் பாடுவதில் புதியமரபை ஏற்படுத்திக் கொடுத்த காப்பியம் எது?

A) வளையாபதி

**B) சீவக சிந்தாமணி**

C) குண்டலகேசி

D) மணிமேகலை

**விளக்கம்: காப்பியங்களில் நாட்டுவளம், நகர்வளம் பாடுவதில் புதியமரபை ஏற்படுத்திக் கொடுத்த காப்பியம் சீவக சிந்தாமணி ஆகும்.**

346) வளையாபதி காப்பியத்தின் ஆசிரியர் யார்?

A) நாதகுத்தனார்

B) தோலாமொழித்தேவர்

C) திருத்தக்கதேவர்

**D) ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

**விளக்கம்: ஐம்பெரும் காப்பியங்களில் இறுதியாக வைத்து எண்ணப்படுவது வளையாபதி. இந்நூல் முழுமையும் இன்று கிடைக்கவில்லை. சமணசமயத்தைச் சார்ந்த இந்நூலின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை.**

347) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) பழந்தமிழர் வணிகத்தை உள்நாட்டு வணிகம், அயல்நாட்டு வணிகம் என வகைப்படுத்தினர்.

B) அயல்நாட்டு வணிகம் – இயற்கைப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் மற்றும் பருத்தி, பட்டாலான ஆடைகளை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றது.

C) உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் நிலம் சார்ந்த பொருள்களையும் தொழில்களையும் அடிப்படையாக கொண்டிருந்தது.

**D) அறம் என்ற சொல்லை அற+அம் எனப்பிரித்துத் தீமையை அறுப்பது, நீக்குவது என்றும் அறுதி செய்வது என்றும் பொருள் கொள்வர். பொதுவாகச் சான்றோர் விலக்கியன ஒழித்தலும், விதித்தன செய்தலும் அறம் எனப்பெறும்**

**விளக்கம்: அறம் என்ற சொல்லை அறு+அம் எனப்பிரித்துத் தீமையை அறுப்பது, நீக்குவது என்றும் அறுதி செய்வது என்றும் பொருள் கொள்வர். பொதுவாகச் சான்றோர் விலக்கியன ஒழித்தலும், விதித்தன செய்தலும் அறம் எனப்பெறும்.**

348) சீவகனை எடுத்து வளர்த்தவர் யார்?

A) சச்சந்தன்

**B) கந்துகடன்**

C) கட்டியங்காரன்

D) அச்சணந்தி

**விளக்கம்: கந்துகடன் என்று வணிகன் சீவகனை எடுத்து வளர்க்கிறான். அச்சணந்தி என்ற ஆசிரியர் சீவகனுக்குப் பல்வேறு கலைகளையும் கற்பிக்கிறார்.**

349) திருவாய்மொழி என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

**B) நம்மாழ்வார்**

C) திருமங்கையாழ்வார்

D) மதுரகவியாழ்வார்

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்**

350) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) போரில் புறப்புண் பெற்றவர்கள், வடக்கிருந்து உயிர்நீத்தலைப் புகழெனக் கருதினர்

**B) வடக்கிருந்து உயிர் நீத்தலைச் சிறந்த வீரமாக ஒக்கூர் மாசத்தியார் பாடினார்**

C) வெண்ணிப்பறந்தலைப் போரில் கரிகாலனிடம் புறப்புண்பட்டு அதற்காக நாணி அப்போர்க் களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்தவர் பெருஞ்சேரலாதன் ஆவார்

D) கி.பி.3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6ஆம் நூற்றாண்டு வரை அறம் வலியுறுத்தும் நீதிநூல்கள் தமிழில் பலவிதமான வடிவங்களிலும் வெளிப்பாட்டு முறைகளிலும் எழுதப்பெற்றுள்ளன.

**விளக்கம்: போரில் புறப்புண் பெற்றவர்கள், வடக்கிருந்து உயிர்நீத்தலைப் புகழெனக் கருதினர்**

**வடக்கிருந்து உயிர் நீத்தலைச் சிறந்த வீரமாக வெண்ணிக்குயத்தியார். பாடினார்**

**வெண்ணிப்பறந்தலைப் போரில் கரிகாலனிடம் புறப்புண்பட்டு அதற்காக நாணி அப்போர்க் களத்திலேயே வடக்கிருந்து உயர் துறந்தவர் பெருஞ்சேரலாதன் ஆவார்**

**கி.பி..3–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.6ஆம் நூற்றாண்டு வரை அறம் வலியுறுத்தும் நீதிநூல்கள் தமிழில் பலவிதமான வடிவங்களிலும் வெளிப்பாட்டு முறைகளிலும் எழுதப்பெற்றுள்ளன.**

351) எம்மொழியில் இயற்றப்பட்ட இராமாயணத்தை தழுவி இராமவதாரம் இயற்றப்பட்டது?

A) ஹிந்தி

**B) வடமொழி**

C) தெலுங்கு

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: தமிழில் தொடர்ச்சியாகச் செல்வாக்குப் பெற்று விளங்கும் காப்பியங்களுள் ஒன்றாகத் திகழ்வது கம்பராமாயணமாகும். இது கம்பரால் இயற்றப்பட்டது. வடமொழியில் வான்மீகி இயற்றிய இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டது இந்நூல். வழி நூலாயினும் கம்பர் தமக்கே உரிய கருப்பொருள் சிதையாமல் இயற்றியுள்ளார். கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு இட்ட பெயர் இராமவதாரம்.**

352) கூற்று 1: சீவகன் பிறந்தபோது அவன் தாய் விசயை சிந்தாமணியே என அழைத்தாள்.

கூற்று 2: அக்குழந்தை தும்மியபோது 'சீவ' என்ற வாழ்த்தொலி கேட்டது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: சீவகன் பிறந்த போது, அவன் தாய் விசயை சிந்தாமணியே என அழைத்தாள். அக்குழந்தை தும்மியபோது 'சீவ' என்ற வாழ்த்தொலி கேட்டது. அதனால் அவன் சீவகன் என்று அழைக்கப்பட்டான். சீவகனின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் 'சீவக சிந்தாமணி' எனப்பெயர் பெற்றது.**

353) வளையாபதி கீழ்க்காணும் எது குறித்து பேசவில்லை?

A) கள்ளாமை

B) கொல்லாமை

C) பொய்யாமை

D)**திருடாமை**

**விளக்கம்: ஐம்பெரும் காப்பியங்களில் இறுதியாக வைத்து எண்ணப்படுவது வளையாபதி. இந்நூல் முழுமையும் இன்று கிடைக்கவில்லை. சமணசமயத்தைச் சார்ந்த இந்நூலின் ஆசிரியர் பெயரும்**

**தெரியவில்லை. புறத்திரட்டுத்தொகை நூலில் வளையாபதியின் பாடல்களாக 66 செய்யுள்கள் காணப்படுகின்றன. விருத்தப் பாக்களாக அமைந்த வளையாபதிப் பாடல்கள் கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, இளமை நிலையாமை ஆகியன குறித்துப் பேசுகின்றன.**

354) தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியம் எத்தனை அதிகாரங்களில் ஐவகை இலக்கணங்களை கூறுகிறது?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: தமிழின் தொல்லிலக்கணமான தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களில் ஐவகை இலக்கணங்களைக் கூறுகிறது.**

**எழுத்து அதிகாரம்: எழுத்துக்களின் ஒலி மற்றும் வரிவடிவங்களின் தோற்றம், வகை, அளவு, எழுத்துகள் சொல்லாக மாறுதல், சொற்கள் புணர்தல் போன்றவை விளக்கப்படுகின்றன.**

**சொல் அதிகாரம் – சொற்களின் வகை, உருபுகள், சொற்கள் இணைந்து தொடராக மாறுதல் போன்றவை விளக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் நேர்ப்பொருளைத் தரக்கூடிய பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் உரியன.**

**பொருள் அதிகாரம்: நேர்ப்பொருள் தரும் சொற்றொடர் பற்றிப் பேசாமல் புனைவாக உருவாக்கப்படும் சொற்றொடர்களின் மொழியையும் அதன் பொருளையும் பேசுகின்றது. தொல்காப்பியர் காலத்தில் புனைவாக உருவாக்கப்படும் மொழி, பா–ஆகவும், பாடல்–ஆகவும், பாட்டு–ஆகவும் அறியப்பட்டன. பா, பாடல், பாட்டு ஆகியவை எவ்வாறு உருவாக்கப்பட வேண்டும்? அதற்குள் இடம்பெற வேண்டிய கூறுகள் எவை, அக்கூறுகளின் வழியாகக் கிடைக்கும் நுட்பங்கள் என்ன? என்பதையெல்லாம் பொருளதிகாரம் விரிவாக விளக்குகிறது. இவையே பினனர் பாவியல் எனவும் கவிதையியல் எனவும் வரையறுக்கப்பட்டன.**

355) ஏமாங்கத நாட்டின் தலைநகர் எது?

**A) இராசமாபுரம்**

B) அவந்தி

C) பூம்புகார்

D) கோசலம்

**விளக்கம்: ஏமாங்கத நாட்டின் தலைநகர் இராசமாபுரம். இந்நாட்டை ஆண்ட மன்னன் சச்சந்தன் ஆவார். தன் மனைவி விசயையோடு அரண்மனை அந்தப்புரத்திலே தங்கியிருக்க, நாட்டைக் கவனித்து வந்த அமைச்சன் கட்டியங்காரன் ஏற்ற நேரத்தில் அரசனைக் கொன்று ஆட்சியைப் பிடித்துக் கொண்டான்.**

356) தவறாக கூற்றை தெரிவு செய்க.

A) திரிகடுகம்– 100 வெண்பாக்கள்

B) சிறுபஞ்சமூலம்– 102 வெண்பாக்கள்

C) ஏலாதி– 120 வெண்பாக்கள்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: திரிகடுகம்– 100 வெண்பாக்கள்**

**சிறுபஞ்சமூலம்– 102 வெண்பாக்கள்**

**ஏலாதி– 80 வெண்பாக்கள்.**

357) யாரிடம் தோற்று பத்திரை புத்தசமயத்தை தழுவுகிறாள்?

A) சச்சந்தன்

**B) சாரிபுத்திரர்**

C) கட்டியங்காரன்

D) அச்சணந்தி

**விளக்கம்: பத்திரை ஒரு சமணப்பள்ளியை அடைந்து துறவறம் ஏற்கிறாள். பின்னர் சாரிபுத்திரிடம் வாதத்தில் தோற்றுப் புத்தசமயத்தைத் தழுவுகிறாள்.**

358) ஒரு பாவில் அல்லது கவிதைகளில் எத்தனை கூறுகள் இடம்பெறுதல் சிறப்பு?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: ஒரு பாவில் அல்லது கவிதையில் மூன்று கூறுகள் இடம்பெறுதல் சிறப்பு. அவை**

**1. முதற்பொருள்**

**2. கருப்பொருள்**

**3. உரிப்பொருள்.**

**இம்மூன்றில் உரிப்பொருள் முக்கியமானது ஆகும்.**

359) கூற்றுகளை ஆராய்க.

A) நானாற்பது என்று அழைக்கப்படும் நூல்கள் – இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது.

B) இன்னா நாற்பது, இனியவை நாற்பது – அறநூல்கள்.

C) கார் நாற்பது – அகநூல்

**D) நான்மணிக்கடிகை 102 வெண்பாக்களைக் கொண்ட நூல் ஆகும்.**

**விளக்கம்: நானாற்பது என்று அழைக்கபடும் நான்கு நூல்களாவன இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது. இவற்றுள்,**

**இன்னா நாற்பது, இனியவை நாற்பது – அற நூல்கள்.**

**கார் நாற்பது – அக நூல்.**

**களவழி நாற்பது – புறநூல்.**

**நான்மணிக்கடிகை என்பது 104 வெண்பாக்களைக்கொண்டு விளம்பிநாகனாரால் இயற்றப்பட்ட நூல் ஆகும்.**

360) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க

**A) மருமக்கள்வழி மான்மியம்**

B) ஆட்டனத்தி ஆதிமந்தி

C) இயேசு காவியம்

D) மாங்கனி

**விளக்கம்: ஆட்டனத்தி ஆதிமந்தி, இயேசு காவியம், மாங்கனி – கண்ணதாசன்.**

**மருமக்கள்வழி மான்மியம் – கவிமணி தேசிய விநாயகம்.**

361) பதினெண் கீழ்க்கணுக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்களில் முதலாவதாக அமைந்த நூல் எது?

**A) திரிகடுகம்**

B) ஆசாரக்கோவை

C) ஏலாதி

D) சிறுபஞ்சமூலம்

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று.அதில் முதலாவதாக அமைந்த நூல் திரிகடுகம் ஆகும். இது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த மருந்து உடல்நோயைத் தீர்ப்பது போல, இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் உள்ள மூன்று கருத்துக்கள் உள்ளத்து நோயைத் தீர்ப்பதால் இந்நூல் திரிகடும் எனப் பெயர் பெற்றது. 100 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்.**

362) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

A) திரிகடுகம்– நல்லாதனார்

B) இனியவை நாற்பது– பூதஞ்சேந்தனார்

C) இன்னா நாற்பது– கபிலர்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: இன்னா நாற்பது– கபிலர்**

**இனியவை நாற்பது– பூதஞ்சேந்தனார்**

**திரிகடுகம்– நல்லாதனார்.**

363) பழமொழி நானூறு என்ற நூலை எழுதியவர் யார்?

A) கணிமேதாவியார்

B) கூடலூர் கிழார்

**C) முன்றுறையரையனார்**

D) பெருவாயின் முள்ளியார்

**விளக்கம்: ஆசாரக்கோவை – பெருவாயின்முள்ளியார்**

**பழமொழி நானூறு–முன்றுறையரையனார்**

**ஏலாதி– கணிமேதாவியார்**

**முதுமொழிக்காஞ்சி– கூடலூர்கிழார்.**

364) மணிமேகலைப் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

A) இந்நூலின் வேறுபெயர் மணிமேகலைத் துறவு ஆகும்.

B) இந்திரவிழா காணவந்த மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிக்கொண்டு சென்று, மணிபல்லவத்தீவில் சேர்க்கிறது.

C) மணிபல்லவத்தீவில் தோன்றிய புத்த பீடிகையைத் தொழுது, தன் பழம்பிறப்பு பற்றி அறிகிறாள் மணிமேகலை.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: மணிமேகலை நூலின் வேறுபெயர் மணிமேகலைத் துறவு ஆகும்.**

**இந்திரவிழா காணவந்த மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிக்கொண்டு சென்று, மணிபல்லவத்தீவில் சேர்க்கிறது.**

**மணிபல்லவத்தீவில் தோன்றிய புத்த பீடிகையைத் தொழுது, தன் பழம்பிறப்பு பற்றி அறிகிறாள் மணிமேகலை.**

365) இசுலாமியப் பாடல்கள் எத்தனை வகையாகப் பாடப்பட்டன?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: முகலாயப் படையெடுப்பின் காரணமாகத் தமிழகத்தில் இசுலாம் பரவியது. இசுலாமியக் கவிஞர்கள் தமிழ்மரபினைப் பின்பற்றி இறைவனையும், இறைவனின் திருத்தூதரான நபிகள் நாயகத்தையும் போற்றிப் பரவினர். இசுலாமியப் பாடல்கள் மொழிபெயர்ப்புப் பாடல்களாகவும், நேரடிப் பாடல்களாகவும் இருவகைகளில் பாடப்பெற்றன.**

366) கூற்றுகளை ஆராய்க.

1. மணிமேகலை மீது விருப்பம் கொண்ட உதயண்குமாரன், காயசண்டிகையின் உருவத்திலிருந்த மணிமேகலையைப் பின்தொடர்வதாகக் கருதிய காயசண்டிகையின் கணவன் உதயண்குமாரனைக் கொன்றுவிடுகிறான்.

2. இதனால் சிறைக்கோட்டத்தில் வைக்கப்பட்ட மணிமேகலை தன் அறச்செயல்களால் விடுதலை அடைகிறாள்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1.** மணிமேகலை மீது விருப்பம் கொண்ட உதய**ண்**குமாரன், காயசண்டிகையின் உருவத்திலிருந்த மணிமேகலையைப் பின்தொடர்வதாகக் கருதிய காயசண்டிகையின் கணவன் உதய**ண்**குமாரனைக் கொன்றுவிடுகிறான்.

**2. இதனால் சிறைக்கோட்டத்தில் வைக்கப்பட்ட மணிமேகலை தன் அறச்செயல்களால் விடுதலை அடைகிறாள்.**

367) பெருங்காப்பிய இலக்கணங்கள் பொருந்தியும் சில நெகிழ்ச்சிகளை உள்வாங்கியும் இயற்றப்பெற்ற சைவக் காப்பியம் எது?

**A) பெரியபுராணம்**

B) கம்பராமாயணம்

C) சிலப்பதிகாரம்

D) மகாபாரதம்

**விளக்கம்: பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம் பெருங்காப்பிய இலக்கணங்கள் பொருந்தியும் சில நெகிழ்ச்சிகளை உள்வாங்கியும் இயற்றப்பெற்ற சைவக் காப்பியமாகும்.**

368) வடஇந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழக காப்பியத்தை இயற்றியவர் யார்?

A) கம்பர்

B) வியாசர்

C) பாரதியார்

**D) கொங்குவேளிர்**

**விளக்கம்: வடஇந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம் பெருங்கதை. இக்காப்பியத்தை இயற்றியவர் கொங்குவேளிர் ஆவார். உதயணன் என்னும் காவியத் தலைவனின் வாழ்க்கையை விவரித்துக் கூறுகிறது இந்நூல். இதற்குக் கொங்குவேள் மாக்கதை, உதயணன் கதை என்ற வேறு பெயர்களும் உள்ளன.**

369) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) குண்டலகேசி அழிந்துப்போன தமிழ்க் காப்பியங்களில் ஒன்று ஆகும்.

B) இது பௌத்த சமய நூல் ஆகும்.

C) நாதகுத்தனார் என்ற புலவரால் இயற்றப்பட்டது

**D) புறத்திரட்டில் குண்டலகேசியில் பாடல்களாகப் 180 பாடல்களும், நீலகேசி உரையில் 19 பாக்களும் இன்று கிடைக்கின்றன.**

**விளக்கம்: புறத்திரட்டில் குண்டலகேசியில் பாடல்களாகப் 19 பாடல்களும், நீலகேசி உரையில் 180 பாக்களும் இன்று கிடைக்கின்றன.**

370) திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) ஆண்டாள்

B) நம்மாழ்வார்

**C) திருமங்கையாழ்வார்**

D) மதுரகவியாழ்வார்

**விளக்கம்: ஆண்டாள் – நாச்சியார் திருமொழி, திருப்பாவை**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல்.**

**மதுரகவியாழ்வார் – திருப்பதிகம்.**

371) நாககுமார காவியம் என்னும் நூல் ______________விருத்தப்பாக்களையும், _______________சருக்கங்களையும் கொண்டுள்ளது?

**A) 170, 5**

B) 170, 6

C) 320, 5

D) 320, 6

**விளக்கம்: நாககுமார காவியம் அல்லது நாகபஞ்சமி கதை எனப்படும் இந்நூல், தமிழில் தோன்றிய சிறு காப்பியங்களில் ஒன்றாகும். இதை எழுதியவர் யாரெனத் தெரியவில்லை. 170 விருத்தப்பாக்களால் ஆன இந்நூல் ஐந்து சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது சமணசமயக் கொள்கைகளை விளக்க**

**முற்படுகிறது. இளமைக் காலத்தில் இன்பம் துய்ப்பதிலேயே தனது காலத்தைக் கழித்த நாககுமாரன் தனது இறுதிக் காலத்தில் வாழ்வின் நிலையாமையை உணர்ந்து துறவு மேற்கொள்வதே இக்கதை.**

372) கூற்றுகளை ஆராய்க.

1. விருத்தப் பாக்களாக அமைந்த வளையாபதிப் பாடல்கள் கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, இளமை நிலையாமை ஆகியன குறித்துப் பேசுகின்றன.

2. ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சமண சமயக் காப்பியம் ஆகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. விருத்தப் பாக்களாக அமைந்த வளையாபதிப் பாடல்கள் கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, இளமை நிலையாமை ஆகியன குறித்துப் பேசுகின்றன.**

**2. ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சமண சமயக் காப்பியம் ஆகும்.**

373) இன்னா நாற்பது நூலை இயற்றியவர் யார்?

A) பூதஞ்சேந்தனார்

**B) கபிலர்**

C) கூடலூர் கிழார்

D) விளம்பிநாகனார்

**விளக்கம்: இன்னது துன்பம் தரும் என்று கூறும் 40 வெண்பாக்களால் ஆன நூல் இன்னா நாற்பது ஆகும். இந்நூலின் ஆசிரியர் கபிலர் ஆவார்.**

374) இரட்சணிய யாத்திரிகப் பாடலை எழுதியவர் யார்?

A) உமறுப்புலவர்

B) அபுல்காசிம் மரைக்காயர்

C) ஜி.யூ.போப்

**D) எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை**

**விளக்கம்: இயேசு பெருமான் மனிதகுலத்தின் உயர்வுக்காக உயிர் நீத்த திருச்சிலுவை, கிறித்துவ நம்பிக்கைக்கு, அடிப்படையாக விளங்குகிறது. சிலுவையில் அறையப்பட்ட போதும் பகைவர்க்கு அருளிய இயேசுவே உலக இரட்சகர். இதற்கு வேறு சான்றுகள் வேண்டுமா? என அன்பு மேலிடும் இரட்சணிய யாத்திரிகப் பாடல் வழியே எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை வினவுகிறார்.**

375) பாண்டிவள நாட்டைச்சார்ந்த குலசேகர பாண்டியனின் அமைச்சராக விளங்கியவர் சந்திரவாணன். இவர் எந்த ஊரைச் சார்ந்தவர்?

**A) தஞ்சாவூர்**

B) புதுக்கோட்டை

C) இராமநாதபுரம்

D) சிவகங்கை

**விளக்கம்: தஞ்சாவூரில் பிறந்த சந்திரவாணன், பாண்டிவள நாட்டைச்சார்ந்த குலசேகர பாண்டியனின் அமைச்சராக விளங்கினார். இவர் புலவர்களைப் புரக்கும் வள்ளலாக விளங்கினமையால் பொய்யாமொழிப்புலவர் இவர் பெயரில் தஞ்சைவாணன் கோவையை எழுதினார்.**

376) நீலகேசி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) சமணநூலான நீலகேசி குண்டலகேசிக்கு மறுப்புநூலாக இயற்றப்பட்டது.

B) தமிழில் தோன்றிய முதல் தருக்க நூல் இதுவெனக் கூறலாம்.

**C) நீலகேசி திரட்டு என அழைக்கப்படும் இது 12 சருக்கங்களையும், 895 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது.**

D) தெய்வங்களுக்கு உயிர்ப்பலி இடுதல் தீமையே என்பதை நீலகேசி எடுத்துரைக்கிறது.

**விளக்கம்: நீலகேசி திரட்டு என அழைக்கப்படும் இது 10 சருக்கங்களையும், 895 விருத்தப்பாக்களையும் கொண்டுள்ளது.**

377) மணிமொழிக் கோவை என்று குறிப்பிடப்படும் நூல்களுக்கு பொருந்தாதது எது?

A) நான்மணிக்கடிகை

B) முதுமொழிக்காஞ்சி

C) ஆசாரக்கோவை

**D) பழமொழிநானூறு**

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக்கோவை ஆகிய மூன்றையும் மணிமொழிக்கோவை என்பர்.**

378) சீறாப்புராணத்தை எழுதியவர் யார்?

A) அபுல்காசிம் மரைக்காயர்

B) அப்துல்காதர்

**C) உமறுப்புலவர்**

D) எச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை

**விளக்கம்: சீறாப்புராணத்தை எழுதிய உமறுப்புலவர் முகம்மது நபிகளின் அருளில் ஆட்பட்டு பக்திமை தோன்ற வியந்து போற்றுகின்றார்.**

379) அகப்பொருளுக்குரிய துறைகள் பலவற்றை 400 கட்டளைக் கலித்துறையால் சங்கிலித்தொடர் போலப் பாடப்படும் சிற்றிலக்கிய நூல் எது?

A) தூது

B) அந்தாதி

C) பள்ளு

**D) கோவை**

**விளக்கம்: அகப்பொருளுக்குரிய துறைகள் பலவற்றை 400 கட்டளைக் கலித்துறையால் சங்கிலித்தொடர் போலப் பாடப்பட்டது கோவையாகும். கடவுளரையோ அரசரையோ படைத்தலைவரையோ வள்ளல்களையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படுவது.**

380) ஐம்பெருங்காப்பியம் பற்றிய கூற்றுகளில் தவறான கூற்றை தெரிவு செய்க

A) சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகியவை சோழர் காலத்தைச் சார்ந்தவை ஆகும்.

B) குண்டலகேசி, வளையாபதி – காலவெள்ளத்தில் அழிந்து போன காப்பியங்கள்

**C) 'பெருங்காப்பிய நிலை பேசுங்காலை' எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பா காப்பிய இலக்கணத்தைக் கூறுகிறது.**

D) காப்பிய இலக்கணத்தோடு பெரும்பாலும் பொருந்தியும் சிறுபான்மை மாறுபட்டும் அமைந்தவை தொடர்நிலைச் செய்யுள் எனப்படும்

**விளக்கம்: சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகியவை சோழர் காலத்தைச் சார்ந்தவை ஆகும். குண்டலகேசி, வளையாபதி – காலவெள்ளத்தில் அழிந்து போன காப்பியங்கள்**

**'பெருங்காப்பிய நிலை பேசுங்காலை' எனத் தொடங்கும் தண்டியலங்கார நூற்பா காப்பிய இலக்கணத்தைக் கூறுகிறது.**

**காப்பிய இலக்கணத்தோடு பெரும்பாலும் பொருந்தியும் சிறுபான்மை மாறுபட்டும் அமைந்தவை தொடர்நிலைச் செய்யுள் எனப்படும்.**

381) கம்பராமாயணம் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. இந்நூல் ஆறு காண்டங்களை உடையது.

2. 118 படலங்களை உடையது.

3. இக்காப்பியத்தின் ஏழாவது காண்டமாக விளங்கும் உத்தர காண்டத்தை எழுதியவர் கம்பருக்கு பின் வாழ்ந்தவரான ஒட்டக்கூத்தர் ஆவார்.

4. இந்நூலின் சிறப்பு கருதியும் திருக்குறளின் பெருமை கருதியும் இவ்விரு நூல்களையும் "தமிழுக்குக் கதி" என்று திருமணம் செல்வ கேசவராயர் கூறியுள்ளார்.

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

**C) 3 மட்டும் தவறு**

D) 4 மட்டும் தவறு

**விளக்கம்: இக்காப்பியத்தின் ஏழாவது காண்டமாக விளங்கும் உத்தர காண்டத்தை எழுதியவர் கம்பரின் சமகாலத்தவரான ஒட்டக்கூத்தர் ஆவார்.**

382) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

1. பால காண்டம் – அயோத்தி நகரத்து அரசனான தசரதனுக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கன் ஆகிய நான்கு பிள்ளைகள் பிறப்பதும், இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணம் முடிப்பது ஆகியவை இடம்பெற்றுள்ளது.

2. அயோத்தியா காண்டம் – கைகேயி கேட்ட இரண்டு வரங்களால் இராமன் காடடைவது

3. ஆரணியா காண்டம் – இராவணன் சீதையைக் கவர்ந்து செல்வது

4. கிட்கிந்தா காண்டம் – சீதையைத் தேடிச் செல்லும் இராமன், வாலியைக் கொன்று சுக்ரீவன், அனுமன் நட்பைப் பெறுவது.

A) 1, 2 சரி

B) 1, 2, 3 சரி

C) 1, 3, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. பால காண்டம் – அயோத்தி நகரத்து அரசனான தசரதனுக்கு இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கன் ஆகிய நான்கு பிள்ளைகள் பிறப்பதும், இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணம் முடிப்பது ஆகியவை இடம்பெற்றுள்ளது.**

**2. அயோத்தியா காண்டம் – கைகேயி கேட்ட இரண்டு வரங்களால் இராமன் காடடைவது**

**3. ஆரணியா காண்டம் – இராவணன் சீதையைக் கவர்ந்து செல்வது**

**4. கிட்கிந்தா காண்டம் – சீதையைத் தேடிச் செல்லும் இராமன், வாலியைக் கொன்று சுக்ரீவன், அனுமன் நட்பைப் பெறுவது.**

383) கூற்றுகளை ஆராய்க.

1. இராமனைப் பிரிந்த சீதையின் நிலை, அனுமனின் ஆற்றல் ஆகியன – சுந்தர காண்டம்

2. சீதையை மீட்பது – யுத்த காண்டம்

A)1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இராமனைப் பிரிந்த சீதையின் நிலை, அனுமனின் ஆற்றல் ஆகியன – சுந்தர காண்டம்.**

**2. சீதையை மீட்பது –யுத்த காண்டம்.**

384) திருவாசிரியம் என்ற நூலை எழுதியவர் யார்?

A) திருமழிசையாழ்வார்

**B) நம்மாழ்வார்**

C) பேயாழ்வார்

D) பூதத்தாழ்வார்

**விளக்கம்: திருமழிசையாழ்வார் – நான்காம் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்.**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி.**

**பேயாழ்வார் – மூன்றாம் திருவந்தாதி.**

**பூதத்தாழ்வார் – இரண்டாம் திருவந்தாதி.**

385) பெரியபுராணம் பற்றிய தவறான கூற்றை தெரிவு செய்க.

**A) இது சைவத்திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது**

B) இந்நூலின் ஆசிரியர் சேக்கிழார் ஆவர்.

C) சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர் ஆகும்.

D) ஆண், பெண் வேறுபாடின்றிப் பல இனங்களையும், தொழில் பிரிவுகளையும் சார்ந்த சிவனடியார்களைப் பற்றிய நூலாக அமைந்துள்ளதால் இந்நூலைத் தேசிய இலக்கியம் என்று சான்றோர்கள் பாராட்டுவர்.

**விளக்கம்: சைவத்திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக உள்ளது திருமந்திரம். இந்நூலின் வேறுபெயர் தமிழ் மூவாயிரம் ஆகும்.**

**பெரியபுராணம் என்பது சைவத்திருமுறைகளில் 12–வது திருமுறையாக இடம்பெற்றுள்ளது.**

386) மகாபாரதத்தை "பாண்டவர் பூமி" என்ற பெயரில் புதுக்கவிதை வடிவில் காப்பியமாக்கியவர் யார்?

A) வைரமுத்து

**B) கவிஞர் வாலி**

C) கண்ணதாசன்

D) முடியரசன்

**விளக்கம்: யாப்பு வடிவத்தை உடைத்து வளர்த்தெடுக்கப்பட்ட புதுக்கவிதைகளிலும் காப்பியங்கள் தற்காலத்தில் படைக்கப்படுகின்றன. பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் புதுக்கவிதை வடிவில் கவிராஜன் கதை என்னும் பெயரில் காப்பியமாகப் படைத்துள்ளார் வைரமுத்து. கவிஞர் வாலி இராமாயணத்தை அவதார புருஷன் என்ற பெயரிலும், மகாபாரத்தை பாண்டவர் பூமி என்ற பெயரிலும் புதுக்கவிதை வடிவில் காப்பியமாக்கியுள்ளார்.**

387) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) பாரதியார்– பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு

B) பாரதிதாசன்– பாண்டியன் பரிசு, புரட்சிக்கவி, வீரத்தாய்

C) கவிமணி தேசிய விநாயகம்– மருமக்கள் வழி மான்மியம்

**D) புலவர் குழந்தை– சிலம்பின் சிறுகதை**

**விளக்கம்: புலவர் குழந்தை– இராவண காவியம்**

**சாலை இளந்திரையன்– சிலம்பின் சிறுகதை**

388) நானாற்பது நூல்களில் புற நூல் எது?

A) இன்னா நாற்பது

B) இனியவை நாற்பது

C) கார் நாற்பது

**D) களவழி நாற்பது**

**விளக்கம்: நானாற்பது என்று அழைக்கப்படும் நான்கு நூல்களாவன:**

**1. இன்னா நாற்பது**

**2. இனியவை நாற்பது**

**3.கார் நாற்பது**

**4. களவழி நாற்பது.**

**இவற்றுள் இன்னா நாற்பது மற்றும் இனியவை நாற்பது அறநூல்கள்**

**கார் நாற்பது அக நூல்.**

**களவழி நாற்பது புற நூல்.**

389) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) பல்லவர்கள் காலம் பக்தி இலக்கியத்தின் மறுமலர்ச்சிக்காலம் எனப்படுகிறது.

**B) சோழர்கள் காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்கள் தனித்தனிப் பாடல்களாகவும் பிரபந்தங்களாகவும் வெளியிடப்பட்டன.**

C) "உயிர், உடம்பு, பொருள், இளமை ஆகியன நிலையாக நில்லாமல் மறைந்துவிடக் கூடியன. இவற்றை உணர்ந்து அறத்தைச் செய்பவனாக மனிதன் மாறவேண்டும்" – சமண பௌத்த சமயங்கள்

D) இறைவனை ஆண்டான், தந்தை, தோழன், நாயகன் முறையே தாச, சற்புத்திர, சக, ஞான மார்க்கங்கள் என்று குறிப்பிடுகின்றனர்.

**விளக்கம்: பல்லவர்கள் காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்கள் தனிதனிப் பாடல்களாகவும் பிரபந்தங்களாகவும் வெளியிடப்பட்டன.**

390) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

A) அடிமை நெறி – திருநாவுக்கரசர், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார்

B) பிள்ளைமை நெறி – திருஞானசம்பந்தர்

C) தோழமை நெறி – சுந்தரர், திருமழிசையாழ்வார்

**D) நாயகன் நாயகி நெறி – பெரியாழ்வார்**

**விளக்கம்: நாயகன் நாயகி நெறி – திருமங்கையாழ்வார்**

**பெரியாழ்வார் இறைவனைக் குழந்தையாகக் கருதி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார்.**

391) கூற்றுகளை ஆராய்க.

1. பெரியாழ்வார் இறைவனைக் குழந்தையாகக் கருதி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

2. அவர்தம் வளர்ப்பு மகளான ஆண்டாள் இறைவனையே தன் தலைவனாகப் பாவித்து வாழ்ந்தாள்.

3. சிவனைத் தலைவனாக் கொண்ட 63 அடியார்கள் பாடிய பதிகங்கள் பன்னிரு திருமுறைகள் என்று அழைக்கப்பட்டன.

4. திருமாலைத் தலைவராகக் கொண்ட 12 ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்விப்பிரபந்தம் என்று அழைக்கப்பட்டன

A) 1, 2 சரி

**B) 1, 2, 4 சரி**

C) 2, 3, 4 சரி

D) அனைத்தும் சரி

**விளக்கம்: 1. பெரியாழ்வார் இறைவனைக் குழந்தையாகக் கருதி தாலாட்டுப் பாடல்கள் பல பாடியுள்ளார்.**

**2. அவர்தம் வளர்ப்பு மகளான ஆண்டாள் இறைவனையே தன் தலைவனாகப் பாவித்து வாழ்ந்தாள்.**

**3. சிவனைத் தலைவனாக் கொண்ட 27 அடியார்கள் பாடிய பதிகங்கள் பன்னிரு திருமுறைகள் என்று அழைக்கப்பட்டன.**

**4. திருமாலைத் தலைவனாகக் கொண்ட 12 ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்விப்பிரபந்தம் என்றுஅழைக்கப்பட்டன**

392) பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நூலை எழுதியவர் யார்?

A) திருமழிசையாழ்வார்

**B) நம்மாழ்வார்**

C) பேயாழ்வார்

D) பூதத்தாழ்வார்

**விளக்கம்: திருமழிசையாழ்வார் – நான்காம் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம்**

**நம்மாழ்வார் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி**

**பேயாழ்வார் – மூன்றாம் திருவந்தாதி**

**பூதத்தாழ்வார் – இரண்டாம் திருவந்தாதி**

393) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) தமிழ்

B) சீனம்

C) கிரேக்கம்

**D) அரபு**

**விளக்கம்: தமிழ், சீனம், சமஸ்கிருதம், இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் போன்ற செவ்வியல் மொழிகள் அனைத்தும் எழுத்து வடிவத்தைப் பெற்ற பின்னரே செவ்வியல் இலக்கியங்களை உருவாக்கின.**

394) தமிழ் இலக்கியங்கள் எத்தனை வகைப்படும்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: தமிழ் இலக்கியங்கள் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என இரு வகைப்படும். பாட்டுடைத் தலைவனின் வாழ்வில், சிறுகூறினை மட்டும் எடுத்துக்கொண்டு அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் நான்கு உறுதிப்பொருள்களுள் ஒன்று அமையப்பாடுவது சிற்றிலக்கியம். இது 96 வகைப்படும். அவற்றுள், அந்தாதி, கலம்பகம், பரணி, கோவை, சதகம், பிள்ளைத்தமிழ், பள்ளு, குறவஞ்சி, உலா, தூது ஆகியன பெரும்பாலும் வழக்கில் உள்ளன.**

395) பொருத்துக.

அ. 9–ஆம் திருமுறை– 1. திருமாளிகைத்தேவர் உள்ளிட்ட ஒன்பது வேர்

ஆ. 10–ஆம் திருமுறை– 2. காரைக்காலம்மையார் உள்ளிட்ட பன்னிரண்டு பேர்

இ. 11–ஆம் திருமுறை– 3. திருமூலர்

ஈ. 12–ஆம் திருமுறை– 4. சேக்கிழார்

A) 1, 2, 3, 4

B) 1, 3, 4, 2

C) 4, 2, 3, 1

**D) 1, 3, 2, 4**

**விளக்கம்: 9–ஆம் திருமுறை – திருமாளிகைத்தேவர் உள்ளிட்ட ஒன்பது வேர்**

**10–ஆம் திருமுறை – திருமூலர்**

**11–ஆம் திருமுறை – காரைக்காலம்மையார் உள்ளிட்ட பன்னிரண்டு பேர்**

**12–ஆம் திருமுறை – சேக்கிழார்.**

396) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) திருநாவுக்கரசர் சிவபெருமானிடம், இப்பிறப்பு மட்டுமல்லாமல் எப்பிறப்பிலும் உனக்கு நான் அடிமை என்று பாடியுள்ளார்.

**B) தன்னைச்சரணடைந்த அடியவர்களைக் காத்தருளும் தயாளனாக இறைவன் விளங்குவதை அற்புதத்திருவந்தாதியில் ஔவையார் எடுத்துக்கூறுகிறார்.**

C) வில்லிபுத்தூரார் நகர் நம்பி விஷ்ணு சித்தர் ஆவார்

D) பெரியாழ்வாரின் மற்றொரு பெயர் விஷ்ணுசித்தர்.

**விளக்கம்: தன்னைச்சரணடைந்த அடியவர்களைக் காத்தருளும் தயாளனாக இறைவர் விளங்குவதை அற்புதத்திருவந்தாதியில் காரைக்காலம்மையார் எடுத்துக்கூறுகிறார்.**

397) அருங்கலச் செப்பு என்ற நூலை எழுதியவர் யார்?

A) முனைப்பாடியார்

B) அதிவீரராமபாண்டியர்

C) சிவப்பிரகாசர்

**D) பெயரை அறிய இயலவில்லை**

**விளக்கம்: அருங்கலச் செப்பு– பெயர் அறிய இயலவில்லை**

**முனைப்பாடியார்– அறநெறிச்சாரம்**

**அதிவீரராமபாண்டியர் – நறுந்தொகை**

**சிவப்பிரகாசர்– நன்னெறி.**

398) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) ஒரு பாடலின் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த பாடலின் அல்லது அடுத்த அடியின் தொடக்கமாகக் கொண்டு பாடப்படுவது அந்தாதி ஆகும்.

B) அம்மானை, கார், ஊசல், கைக்கிளை, புயவகுப்பு முதலான 18 உறுப்புகள் அமையப் பாடப்படுவது கலம்பகம் ஆகும்.

**C) போரில் ஆயிரம் யானைக் கொன்று வெற்றிபெறும் வீரனின்மேல் பாடப்படுவது பரணி. இந்நூல் போரில் வென்ற அரசனது நாட்டின் பெயரால் வழங்கப்பெறும்**

D) அகப்பொருளுக்குரிய துறைகள் பலவற்றை 400 கட்டளைக் கலித்துறையால் சங்கிலித்தொடர் போலப் பாடப்பட்டது கோவையாகும்.

**விளக்கம்: போரில் ஆயிரம் யானைக் கொன்று வெற்றிபெறும் வீரனின்மேல் பாடப்படுவது பரணி. இந்நூல் போரில் தோற்ற அரசனது நாட்டின் பெயரால் வழங்கப்பெறும்.**

399) பெரியபுராணத்தில் எத்தனை உட்பிரிவுகள் உள்ளன?

A) 10

B) 2

**C) 13**

D) 5

**விளக்கம்: 63 அடியார் பெருமக்களை மையமாகக்கொண்டு இயற்றப்பட்ட பெரியபுராணத்தில் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் கொண்டுள்ளது.**

400) கூற்றுகளை ஆராய்க.

1. தமிழ் இலக்கியத்தில் சொல்லப்படும் அகப்பொருள் அல்லது புறப்பொருள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அடிப்படையாக் கொண்டு நூறு பாடல்களால் பாடப்படுவதே சதகம் ஆகும்.

2. குலசேகரப் பாண்டியன் புலவர்களைப் புரக்கும் வள்ளலாக விளங்கினமையால் பொய்யாமொழிப்புலவர் இவர் பெயரில் தஞ்சைவாணன் கோவையை எழுதினார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தமிழ் இலக்கியத்தில் சொல்லப்படும் அகப்பொருள் அல்லது புறப்பொருள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அடிப்படையாக் கொண்டு நூறு பாடல்களால் பாடப்படுவதே சதகம் ஆகும்.**

**2. குலசேகரப் பாண்டியன் புலவர்களைப் புரக்கும் வள்ளலாக விளங்கினமையால் பொய்யாமொழிப்புலவர் இவர் பெயரில் தஞ்சைவாணன் கோவையை எழுதினார்.**

401) வேளாண் வேதம் என்று அழைக்கப்படும் நூல் எது?

A) திரிகடுகம்

B) திருக்குறள்

**C) நாலடியார்**

D) நல்வழி

**விளக்கம்: திருக்குறளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்தக்கது நாலடியார் ஆகும். நாலடி, நாலடி நானூறு, வேளாண்வேதம் என்று வெவ்வேறு பெயர்களாலும் இந்நூல் சுட்டப்படுகின்றது. சமண முனிவர்களால் பாடப்பட்ட 400 வெண்பாக்களின் தொகுப்பே இந்நூல்.**

402) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதலில் வைத்துப் போற்றப்படும் நூல் எது?

A) திருக்குறள்

**B) நாலடியார்**

C) திரிகடுகம்

D) இனியவை நாற்பது

**விளக்கம்: நாலடி நான்மணி நானாற்ப தைத்திணைமுப்**

**பால்கடுகம் கோவை பழ்மொழி – மாமூலம்**

**இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே**

**கைந்நிலைய வாம் கீழ்க்கணக்கு.**

**இதில் முதலில் வைத்துப் போற்றப்படுவது நாலடியார் ஆகும்.**

403) சீவக சிந்தாமணி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

**A) சீவக சிந்தாமணி செந்தமிழ்க் காப்பியங்களில் சிறந்தது மட்டுமன்று, உலக மகாகாவியங்களில் ஒன்றாகும் என்று வீரமாமுனிவர் பாராட்டுகிறார்.**

B) சீவகசிந்தமணியில் நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை 13 இலம்பகங்கள் உள்ளன.

C) சீவக சிந்தாமணி 3145 பாடல்களை கொண்டது

D) காப்பியம் இலக்கணம் முழுமையும் பொருந்தும் இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருள்களையும் பேசுகிறது.

**விளக்கம்: சீவக சிந்தாமணி செந்தமிழ்க் காப்பியங்களில் சிறந்தது மட்டுமன்று, உலக மகாகாவியங்களில் ஒன்றாகும் என்று ஜி.யூ.போப் பாராட்டுகிறார்.**

404) நூறு பாடல்களை கொண்ட சிற்றிலக்கியம் எது?

A) கோவை

B) அந்தாதி

C) பள்ளு

**D) சதகம்**

**விளக்கம்: தமிழ் இலக்கியத்தில் சொல்லப்படும் அகப்பொருள் அல்லது புறப்பொருள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை அடிப்படையாகக் கொண்டு நூறு பாடல்களால் பாடப்படுவதே சதகம். சதகம் என்பது பாட்டியல் நூல்களில் சொல்லப்படும் இலக்கணம். சதம் என்பது நூறு எனப் பொருள்படும். நூறு பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கியம் சதகம் எனப்பட்டது.**

405) சீவக சிந்தாமணி பற்றிய கூற்றுகளில் தவறான கூற்றை தெரிவு செய்க.

A) சீவகன் தும்மியபோது 'சீவ' என்ற வாழ்த்தொலி கேட்டது. அதனால் அவன் சீவகன் என்று அழைக்கப்பட்டான்.

B) சீவகனின் வரலாற்றைக் கூறும் நூலாதலின் இது சீவக சிந்தாமணி எனப்பட்டது.

C) கந்துக்கடன் என்ற வணிகன் சீவகனை எடுத்து வளர்க்கிறார்.

**D) கட்டியங்காரன் என்ற ஆசிரியர் சீவகனுக்குப் பல்வேறு கலைகளையும் கற்பிக்கிறார்.**

**விளக்கம்: அச்சணந்தி என்ற ஆசிரியர் சீவகனுக்குப் பல்வேறு கலைகளையும் கற்பிக்கிறார்.**

**கட்டியங்காரன் என்பவர் சச்சந்தனின் அமைச்சர். ஏற்ற நேரம் பார்த்து சச்சந்தனை கொன்று ஆட்சியைப்பிடித்தவர். தன்னிகரில்லாத் தலைவனாக விளங்கும் சீவகன் தன் ஆற்றலால் பல்வேறு வீரச் செயல்களைப் புரிந்து, கட்டியங்காரனைப் போரில் வீழ்த்தி மீண்டும் தன் நாட்டைப் பெறுகிறான்.**

406) ஏலாதிக்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) ஏலம்

B) மிளகு

C) இலவங்கப்பட்டை

**D) சிறுநாவற்பூ**

**விளக்கம்: பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்து பெயர்கள் கொண்ட அறநூல்கள் மூன்று. அதில் மூன்றாவதாக அமைந்தது ஏலாதி. ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறும் கலந்த மருந்து உடலுக்குறுதி சேர்ப்பதுபோல, செய்யுள்தோறும் உள்ளத்திற்கு உறுதி சேர்க்கும் ஆறு கருத்துகளைக் கொண்டதால் இந்நூல் ஏலாதி எனப்பெயர் பெற்றது. 80 வெண்பாக்களைக் கொண்ட இந்நூலை இயற்றியவர் கணிமேதாவியார் ஆவார்.**

407) சிலப்பதிகாரம் பற்றிய கூற்றுகளை ஆராய்க.

1. சிலம்பால் உருவான நிகழ்வுகளையும், வரலாற்றையும் கூறுவதால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது.

2. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று இந்நூல் அறியப்படுகிறது.

3. இந்நூல் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற மூன்று காண்டங்களை உடையது.

4. "மங்கல வாழ்த்துப்பாடல்" தொடங்கி "வரந்தரு காதை" ஈறாக முப்பது காதைகளை உடையது.

A) 1, 4 சரி

B) 2, 3 சரி

C) 1, 3, 4 சரி

**D) அனைத்தும் சரி**

**விளக்கம்: 1. சிலம்பால் உருவான நிகழ்வுகளையும், வரலாற்றையும் கூறுவதால் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது.**

**2. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்று இந்நூல் அறியப்படுகிறது.**

**3. இந்நூல் புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்ற மூன்று காண்டங்களை உடையது.**

**4. "மங்கல வாழ்த்துப்பாடல்" தொடங்கி "வரந்தரு காதை" ஈறாக முப்பது காதைகளை உடையது.**

408) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை பற்றி கூறும் பழம் பாடலில் கடைசியாக வைத்துப் போற்றப்படும் நூல் எது?

A) ஏலாதி

**B) கைந்நிலை**

C) இந்நிலை

D) சிறுபஞ்சமூலம்

**விளக்கம்: நாலடி நான்மணி நானாற்ப தைத்திணைமுப்**

**பால்கடுகம் கோவை பழ்மொழி – மாமூலம்**

**இன்னிலைய காஞ்சியோ டேலாதி என்பவே**

**கைந்நிலைய வாம் கீழ்க்கணக்கு.**

**என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல் பற்றி கூறும் பழம்பாடலாகும். இதில் கடைசியாக வைத்து போற்றப்படும் நூல் கைந்நிலையாகும்.**

409) நான்மணிக்கடிகை பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க

A) இந்நூல் மணிமொழிக்கோவை என அழைக்கப்படும் மூன்று நூல்களுள் ஒன்றாகும்

B) நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற கடிகை என்னும் அணிகலன் போல ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளதால் இந்நூல் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது.

**C) இந்நூல் 102 வெண்பாக்களைக் கொண்டது**

D) இந்நூல் விளம்பிநாகனாரால் இயற்றப்பெற்றது

**விளக்கம்: இந்நூல் மணிமொழிக்கோவை என அழைக்கப்படும் மூன்று நூல்களுள் ஒன்றாகும்**

**நான்கு மணிகள் பதிக்கப்பெற்ற கடிகை என்னும் அணிகலன் போல ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளதால் இந்நூல் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது.**

**இந்நூல் 104 வெண்பாக்களைக் கொண்டது.**

**இந்நூல் விளம்பிநாகனாரால் இயற்றப்பெற்றது.**

410) முதுமொழிக்காஞ்சி பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

A) பல மணிகளைக் கோவையாகக் கொண்டு அமைவது மகளிர் அணியும் காஞ்சி என்னும் அணிகலன் ஆகும்.

B) பல முதுமொழிகளைக் கோவையாகக் கொண்ட 100 வெண்பாக்களை உடைய நூல் முதுமொழிக்காஞ்சி ஆகும்

C) இதன் ஆசிரியர் கூடலூர் கிழார்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: பல மணிகளைக் கோவையாகக் கொண்டு அமைவது மகளிர் அணியும் காஞ்சி என்னும் அணிகலன் ஆகும்.**

**பல முதுமொழிகளைக் கோவையாகக் கொண்ட 100 வெண்பாக்களை உடைய நூல் முதுமொழிக்காஞ்சி ஆகும்.**

**இதன் ஆசிரியர் கூடலூர் கிழார்.**

411) கூற்றுகளை ஆராய்க.

1. ஆசாரமாகிய ஒழுக்க விதிகளைக் கோவையாகக் கொண்டு 100 வெண்பாக்களால் ஆன நூல் ஆசாரக்கோவை ஆகும்.

2. இந்நூலை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார் ஆவார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஆசாரமாகிய ஒழுக்க விதிகளைக் கோவையாகக் கொண்டு 100 வெண்பாக்களால் ஆன நூல் ஆசாரக்கோவை ஆகும்.**

**2. இந்நூலை இயற்றியவர் பெருவாயின் முள்ளியார் ஆவார்.**

412) கூற்றுகளை ஆராய்க.

1. கி.பி.12ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தண்டியலங்காரம்' காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது.

2. சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. கி.பி.12ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தண்டியலங்காரம்' காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது.**

**2. சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள்.**

## 12th Advanced Tamil Unit 2 Questions

## 2] அரங்கவியல்

1) தவறான கூற்றை தெரிவு செய்க.

**A) 18–ஆம் நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது.**

B) இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட விக்டோரியா நாடக மரபினைப் பின்பற்றிப் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன.

C) விடிய, விடிய நடைபெற்ற நாடகங்களை மூன்று அல்லது நான்கு மணிநேர நிகழ்வாகச் சுருக்கியது பார்சி நாடகங்கள்.

D) அரங்க நிகழ்வுகள், பார்வையாளர், பேசுபொருள் அடிப்படையில் மூவகை அரங்கை முன் வைத்தவர் வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார்.

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது.**

2) கூற்று: கான்ஸ் உலகத் திரைப்பட விழா 1939இல் தொடங்கப்பட்டாலும், 1949–ஆம் ஆண்டிலிருந்து இதற்கு முக்கியத்துவம் உருவானது.

காரணம்: இரண்டாம் உலகப்போரில் தடுமாற்றம் கொண்டதால், அதன் தொடர்ச்சியான ஆண்டுகளில் திரைப்படவிழா நடைபெறவில்லை

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: கான்ஸ் உலகத் திரைப்பட விழா பிரான்சில் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரில் தடுமாற்றம் கொண்டதால், அதன் தொடர்ச்சியான ஆண்டுகளில் திரைப்படவிழா நடைபெறவில்லை. மீண்டும் 1949–ஆம் ஆண்டிலிருந்து இத்திரைப்பட விழாவிற்கு மிகுந்த முக்கியத்துவம் உருவானது. 1955–ஆம் ஆண்டிலிருந்து தங்கப்பனை விருது வழங்கப்படுகிறது**

3) இந்தியத் திரைப்பட இயக்குநர்களில் குறிப்பிடத்தக்கவரான சத்தியஜித் ரே எந்த மொழிக்கு பெருமை சேர்த்தவர் ஆவார்?

A) இந்தி

**B) வங்காளி**

C) தெலுங்கு

D) மலையாளம்

**விளக்கம்: இந்தியத் திரைப்பட இயக்குநர்களுள் குறிப்பிடத்தக்கவர், சத்தியஜித் ரே. இந்தியமொழிக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர், இரவீந்திர நாத தாகூர். இருவரும் வங்கமொழிக்குப் பெருமை சேர்த்தவர்களாவர். தாகூரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த சத்தியஜித் ரே, அவரது பண்பட்ட சிந்தனைத் தளங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.**

4) வீடு என்ற என்ற திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

**A) பாலு மகேந்திரா**

B) ருத்ரய்யா

C) மகேந்திரன்

D) ஞான.ராஜசேகரன்

**விளக்கம்: பாலு மகேந்திரா– சந்தியா ராகம், வீடு**

**ருத்ரய்யா– அவள் அப்படித்தான்**

**மகேந்திரன்– முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம்.**

**ஞான.ராஜசேகரன்– மோகமுள்**

5) பலூன் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) அறந்தை நாராயணன்

B) **ஞாநி**

C) அ.ராமசாமி

D) அ.மங்கை

**விளக்கம்: அறந்தை நாராயணன் – மூர் மார்க்கெட்**

**ஞாநி– பலூன், நாங்கள்**

**அ.ராமசாமி– பல்லக்குத்தூக்கிகள்**

**அ.மங்கை– மௌனக்குரல் குழுவை நடத்தியவர்.**

6) நாற்காலிக்காரர் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

7) இந்தியாவில் எப்போது முதல் சர்வதேச திரைப்பட விழா நடைபெற்றது?

**A) 1952**

B) 1956

C) 1950

D) 1965

**விளக்கம்: திரைப்பட ஆர்வலர்களுக்குத் திருவிழா என்பது ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாக்கள்தாம். இந்தியாவின் முதல் பிரதம மந்திரி ஆதரவுடன், 1952–ஆம் ஆண்டு மும்பையில் முதலில் இது நடைபெற்றது.**

8) கூற்று: எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் நவீன நாடக ஆளுமைகள் அடையாளம் காணப்பட்டனர்.

காரணம்: தமிழ் நாடகங்களைவிடவும் மொழியாக்கம் செய்யப்பட்ட நாடகங்களே பெரும்பாலும் மேடையேறின.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரஜித், விஜய் டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெக்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. தமிழ் நாடகங்களை விடவும் மொழியாக்கவும் செய்யப்பட்ட நாடகங்களே பெரும்பாலும் மேடையேறின. இதன்பின் நேரடி தமிழ் நவீன நாடகத்திற்கான**

**முயற்சிகள் நாடக ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டன. இதனால் தமிழில் நவீன நாடகங்கள் மிகுதியாகத் தோன்றலாயின. தங்களின் படைப்புகளின் மூலம் நவீன நாடக ஆளுமைகள் இக்காலகட்டத்தில் அடையாளம் காணப்பட்டனர்**

9) சத்தியஜித் ரே–ன் முதல் மூன்று காவியப் படங்களில் பொருந்தாதது எது?

A) பதேர் பாஞ்சாலி

B) அபராஜிதோ

**C) குற்றமும் தண்டனையும்**

D) அபுன்சன்சார்

**விளக்கம்: இந்தியத் திரைப்பட மேதை சத்யஜித் ரேயின் முதல் காவியப் படங்களான பதேர் பாஞ்சாலி, அபராஜிதோ, அபுர்சன்சார் ஆகியவை பிபூபதி பூஷன் என்ற எழுத்தாளரது புதினம்.**

10) தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் 'கீசகவதம்' என்னும் மௌனப்படம் ஆகும். இது எந்த நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது?

A) கெயிட்டி

B) எடிசன் சினிமாட்டோ கிராப்

C) ஜெனரல் பிக்சர் கார்ப்பரேஷன்

**D) இந்தியா பிலிம் கம்பெனி**

**விளக்கம்: மும்பையில் தயாரான 'ராஜா ஹறிச்சந்திரா' போன்ற புராணப் படங்கள் சென்னையில் திரையிடப்பட்டன. புராணப் படங்களின் வரவேற்பைக் கண்ட நடராஜர் என்பவர் கீழ்ப்பாக்கத்தில், 'இந்தியா பிலிம் கம்பெனி' என்ற நிறுவனத்தை நிறுவினார், இதன்மூலம் 1916இல் 'கீசகவதம்' என்ற மௌனப் படம் தயாரிக்கப்பட்டது. தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் இதுதான்.**

11) மௌனப் படக் காலத்திலேயே வை.மு.கோதைநாயகி அம்மாளின் புதினம் எந்த பெயரில் படமாக்கப்பட்டது?

A) தயாநிதி

B) சித்தி

**C) அனாதைப்பெண்**

D) செக்குமாடுகள்

**விளக்கம்: மௌனப்படக் காலத்திலேயே வை.மு.கோதைநாயகி அம்மாளின் அனாதைப் பெண் புதினம் அதே பெயரில் படமாக்கப்பட்டது. இதே புதினம் பேசும் படமாகவும் எடுக்கப்பட்டது. இவரின் தயாநிதி புதினம் சித்தி என்னும் திரைப்படமானது.**

12) கூற்று: மகேந்திரனைவிட பாலு மகேந்திராவிற்கு திரைப்பட மொழி தெரிந்திருக்கும்.

காரணம்: பாலுமகேந்திரா ஒளிப்பதிவாளராக இருந்து இயக்குநரானவர்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும். ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை**

**விளக்கம்: பாலு மகேந்திரா, ஒளிப்பதிவாளராக இருந்து இயக்குநரானவர் என்பதால் திரைப்பட மொழி அவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால், மகேந்திரன் ஒளிப்பதிவாளராக இருந்ததில்லை. அப்படியிருந்தும் மகேந்திரன், திரைப்பட மொழியைச் சரியாக கையாண்டு இருக்கிறார்.**

13) சந்தியா ராகம் என்ற திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

**A) பாலு மகேந்திரா**

B) ருத்ரய்யா

C) மகேந்திரன்

D) ஞான.ராஜசேகரன்

**விளக்கம்: பாலு மகேந்திரா– சந்தியா ராகம், வீடு**

**ருத்ரய்யா– அவள் அப்படித்தான்**

**மகேந்திரன்– முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம்.**

**ஞான.ராஜசேகரன்– மோகமுள்**

14) அப்பாவும் பிள்ளையும் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

15) ஆஸ்கார் விருது பெற்ற முதல் இந்தியர் பானு அத்தையா ஆவார். இவர் கீழ்க்காணும் எதற்காக இவ்விருதினைப் பெற்றார்?

A) வாழ்நாள் சாதனைக்காக

B) இசைக்காக

**C) திரைப்படத்திற்காக**

D) இயக்குனருக்கான விருது

**விளக்கம்: ஆஸ்கர் விருது எனப் பரவலாக அறியப்படும் அகாதெமி விருதுகள் அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். ஆஸ்கார் விழாவை 1927–இல் நிறுவப்பட்ட**

**அகாதெமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் மற்றும் சயின்ஸ் என்ற அமைப்பு ஒருங்கிணைக்கிறது. இவ்விருது 1929 முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆஸ்கார் விருது பெற்ற முதல் இந்தியர் பானு அத்தையா ஆவார். இவர் காந்தி படத்திற்காக இவ்விருதினைப் பெற்றார்.**

16) நடிகை நாடகம் பார்க்கிறாள் என்ற புதினம் திரைப்படமானது. இப்புதினத்தை எழுதியவர் யார்?

**A) ஜெயகாந்தன்**

B) அகிலன்

C) இராமலிங்கனார்

D) ஜே.ஆர்.ரங்கராஜு

**விளக்கம்: ஜெயகாந்தனின் ஊருக்கு நூறு பேர், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் போன்ற புதினங்கள் திரைப்படங்களாகி இருக்கின்றன.**

17) எந்த ஆண்டு பாதல் சர்க்கார் அவர்களைக் கொண்டு சென்னையில் 10 நாள் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது?

A) 1977

B) 1978

C) 1979

**D) 1980**

**விளக்கம்: பாதல் சர்க்கார் அவர்களைக் கொண்டு 1980–இல் சென்னையில் 10 நாள் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.**

18) 1964–ஆம் ஆண்டு தமிழில் முதன்முதலாக அமைதி என்னும் தலைப்பில் உரையாடல் இல்லாத மௌன நாடகத்தை எழுதியவர் யார்?

A) பாரதியார்

**B) பாரதிதாசன்**

C) வாணிதாசன்

D) கண்ணதாசன்

**விளக்கம்: 1964–ஆம் ஆண்டு தமிழில் முதன்முதலாக அமைதி என்னும் தலைப்பில் உரையாடல் இல்லாத மௌன நாடகத்தை பாரதிதாசன் எழுதினார். அந்நாடகம் அமைதி என்னும் தலைப்பில் எழுதப்பட்டது.**

19) கான்ஸ் உலகத் திரைப்பட விழா எங்கு தொடங்கப்பட்டது?

A) அமெரிக்கா

**B) பிரான்ஸ்**

C) பிரேசில்

D) இந்தியா

**விளக்கம்: கான்ஸ் உலகத் திரைப்பட விழா பிரான்சில் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரில் தடுமாற்றம் கொண்டதால், அதன் தொடர்ச்சியான ஆண்டுகளில் திரைப்படவிழா நடைபெறவில்லை. மீண்டும் 1949–ஆம் ஆண்டிலிருந்து இத்திரைப்பட விழாவிற்கு மிகுந்த முக்கியத்துவம் உருவானது. 1955–ஆம் ஆண்டிலிருந்து தங்கப்பனை விருது வழங்கப்படுகிறது**

20) தாகூரின் எழுத்துப் படைப்புகளை நேரில் கண்டு, கேட்டறியும் உயிர் செறிந்த கலையனுபவங்களாக, உலகமெல்லாம் இரசித்து மகிழும் வகையில் உருவாக்கிய பெருமை யாரைச் சாரும்?

A) பானு அத்தையா

**B) சத்தியஜித் ரே**

C) தாதா சாகிப் பால்கே

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: இந்தியத் திரைப்பட இயக்குநர்களுள் குறிப்பிடத்தக்கவர், சத்தியஜித் ரே. இந்தியமொழிக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர், இரவீந்திர நாத தாகூர். இருவரும் வங்கமொழிக்குப் பெருமை சேர்த்தவர்களாவர். தாகூரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த சத்தியஜித் ரே, அவரது பண்பட்ட சிந்தனைத் தளங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தாகூரின் எழுத்துப் படைப்புகளை நேரில் கண்டு, கேட்டறியும் உயிர் செறிந்த கலையனுபவங்களாக, உலகமெல்லாம் இரசித்து மகிழும் வகையில் உருவாக்கிய பெருமை, சத்தியஜித் ரேவையே சாரும்.**

21) சத்தியஜித் ரே என்பவர் கீழ்க்காணும் எதற்காக ஆஸ்கார் விருது பெற்றார்?

A) திரைப்படம்

B) இசை

C) இயக்குநர்

**D) வாழ்நாள் சாதனையாளர்**

**விளக்கம்: ஆஸ்கர் விருது எனப் பரவலாக அறியப்படும் அகாதெமி விருதுகள் அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். ஆஸ்கார் விழாவை 1927–இல் நிறுவப்பட்ட அகாதெமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் மற்றும் சயின்ஸ் என்ற அமைப்பு ஒருங்கிணைக்கிறது. இவ்விருது 1929 முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆஸ்கார் விருது பெற்ற முதல் இந்தியர் பானு அத்தையா ஆவார். இவர் காந்தி படத்திற்காக இவ்விருதினைப் பெற்றார். வாழ்நாள் சாதனைக்காக ஆஸ்கார் விருது பெற்ற இந்தியர் சத்தியஜித் ரே.**

22) இந்தியாவின் முதல் சர்வதேச திரைப்பட விழா எங்கு நடைபெற்றது?

**A) மும்பை**

B) சென்னை

C) பெங்களூரு

D) கொல்கத்தா

**விளக்கம்: திரைப்பட ஆர்வலர்களுக்குத் திருவிழா என்பது ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாக்கள்தாம். இந்தியாவின் முதல் பிரதம மந்திரி ஆதரவுடன், 1952–ஆம் ஆண்டு மும்பையில் முதலில் இது நடைபெற்றது.**

23) இங்கிலாந்து என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

24) இந்தியாவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் எந்த பிரிவில் ஒவ்வோர் ஆண்டும் வெளியான முக்கியமான இந்தியத் திரைப்படங்கள் திரையிடப்படும்?

**A) இந்தியன் பனோரமா**

B) இந்திய ஹோலிவுட்

C) இந்தியன் மூவி

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: இந்தியாவில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் இந்தியன் பனோரமா பிரிவில் ஒவ்வோர் ஆண்டும் வெளியான முக்கியமான திரைப்படங்கள் திரையிடப்படும்.**

25) அசையாத படங்களை வைத்து அசைவது போன்ற பிரமையை ஏற்படுத்துவது சலனப்படும் ஆகும். இதனை ஆங்கிலத்தில் எவ்வாறு அழைப்பர்?

**A) மூவி**

B) சீரியல்

C) ரன்னிங் மூவி

D) திரைப்படம்

**விளக்கம்: அசையாத படங்களை வைத்து அசைவது போன்ற பிரமையை ஏற்படுத்துவது சலனப்படும் ஆகும். ஆங்கிலத்தில் இதனை மூவி என்பர்.**

26) நாங்கள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) அறந்தை நாராயணன்

**B) ஞாநி**

C) அ.ராமசாமி

D) அ.மங்கை

**விளக்கம்: அறந்தை நாராயணன் – மூர் மார்க்கெட்**

**ஞாநி– பலூன், நாங்கள்**

**அ.ராமசாமி– பல்லக்குத்தூக்கிகள்**

**அ.மங்கை– மௌனக்குரல் குழுவை நடத்தியவர்.**

27) எந்த ஆண்டு இசைக்கலைஞர் ஏ.ஆர்.ரகுமான் ஆஸ்கார் விருது வென்றார்?

A) 2007

B) 2008

**C) 2009**

D) 2010

**விளக்கம்: இசைக்கலைஞர் ஏ.ஆர்.ரகுமான் ஸ்லம்டாக் மில்லியனார் என்ற திரைப்படத்திற்காக 2009–ஆம் ஆண்டு ஆஸ்கார் விருது வென்றார்.**

28) இந்தியத் திரைப்பட மேதை என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) பானு அத்தையா

**B) சத்தியஜித் ரே**

C) தாதா சாகிப் பால்கே

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: இந்தியத் திரைப்பட வரலாற்றில் சிறுகதை அல்லது புதினத்தின் கதையைத் திரைமொழிக்கேற்ப வடிவ மாற்றம் செய்து திரைப்படங்களாக்கினர். இந்தியத் திரைப்பட மேதை சத்யஜித் ரேயின் உலகப் புகழ்பெற்ற திரைப்படங்கள் பெரும்பாலும் புதினங்களையும், சிறுகதைகளையும் அடிப்படையாகக்கொண்டவை.**

29) 1964–ஆம் ஆண்டு தமிழில் முதன்முதலாக அமைதி என்னும் தலைப்பில் உரையாடல் இல்லாத மௌன நாடகத்தை பாரதிதாசன் எழுதினார். இது எத்தனை காட்சிகளை உடையது?

A) 15

B) 10

C) 17

**D) 16**

**விளக்கம்: 1964–ஆம் ஆண்டு தமிழில் முதன்முதலாக அமைதி என்னும் தலைப்பில் உரையாடல் இல்லாத மௌன நாடகத்தை பாரதிதாசன் எழுதினார். அந்நாடகம் அமைதி என்னும் தலைப்பில் எழுதப்பட்டது. இந்நாடகம் 16 காட்சிகளை கொண்டது.**

30) தேசிய நாடகப்பள்ளியின் மூலம் எந்த ஆண்டு காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் ஒருவார நாடகப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது?

**A) 1977**

B) 1978

C) 1979

D) 1980

**விளக்கம்: தேசிய நாடகப்பள்ளியின் மூலம் 1977–ஆம் ஆண்டு காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் ஒருவார நாடகப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.**

31) எங்கிருந்த பழைமைவாதிகளாலும் மதப்பற்றுள்ளவர்களாலும் பல இன்னல்களுக்கு ஆளான திரைப்படக் கலைஞர் அனைவரும், லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இருந்த அடர்ந்த காட்டிற்குள் ஓடி ஒளிந்தனர்?

A) பிரேசில்

B) பிரான்ஸ்

**C) அமெரிக்கா**

D) இங்கிலாந்து

**விளக்கம்: அமெரிக்காவில் இருந்த பழைமைவாதிகளாலும் மதப்பற்றுள்ளவர்களாலும் பல இன்னல்களுக்கு ஆளான திரைப்படக் கலைஞர் அனைவரும், லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இருந்த அடர்ந்த காட்டிற்குள் ஒடி ஒளிந்தனர். அந்தக் காடே அவர்களுக்குப் புகலிடம் தந்தது. அங்கிருந்தபடியே திரைப்படத் தொழிலில் ஈடுபட்டனர். தங்களுக்கு வாழ்க்கை அளித்த அந்தக் காட்டினை ஹோலி வுட்(ஹோலி வுட் – புனிதமான காடு) என்று பெயரிட்டுப் புகழ்ந்து, அதனையே தங்கள் வாழ்விடமாகக் கருதினர். அதுவே இன்று திரைப்படத் துறையில் உலகப் புகழ்பெற்று விளங்கும் ஹாலிவுட் நகரமானது.**

32) சாருலதா, வீடும் உலகமும் என்னும் இருநாவல்களோடு தொடர்புடையவர் யார்?

A) பானு அத்தையா

**B) தாகூர்**

C) தாதா சாகிப் பால்கே

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்:** சாருலதா, வீடும் உலகமும் **(கரே பைரே)** என்னும் **இருநாவல்கள் சத்யஜித் ரேவால் உருவாக்கப்பட்ட அரிய திரைப்படக்கலை வடிவங்கள் ஆகும்.**

33) இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாடங்களில் பொருந்தாதது எது?

A) ஔரங்சீப்

B) நந்தன் கதை

C) பசி

**D) புறஞ்சேரி**

**விளக்கம்: இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாடகங்கள்:**

**1. இராமானுஜர்**

**2. இறுதி ஆட்டம்**

**3. கொங்கைத்தீ**

**4. ஔரங்கசீப்**

**5. நந்தன் கதை**

**6. பசி**

**7. மழை**

**8. காலயந்திரங்கள்**

**9. புனரபி ஜனனம் புனரபி மரணம்**

**10. தர்மம்**

**11. போர்வை போர்த்திய உடல்கள்**

**புறஞ்சேரி என்பது சே.இராமானுஜம் எழுதிய நாடகமாகும்.**

34) பல்கலையரங்கம் கீழ்க்காணும் எதற்காக தொடங்கப்பட்டது?

**A) பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்குதல்.**

B) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

C) பெண்களின் பல்வேறு பிரச்சனைகள்

D) எழுத்தறிவு மற்றும் அறிவியல் பிரச்சார நாடகங்கள்

**விளக்கம்: பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்குதல் – பல்கலையரங்கம்.**

35) காலம் காலமாக என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

36) கான்ஸ் உலகத் திரைப்பட விழா எப்போது தொடங்கப்பட்டது?

A) 1929

**B) 1939**

C) 1949

D) 1919

**விளக்கம்: கான்ஸ் உலகத் திரைப்பட விழா பிரான்சில் 1939–இல் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரில் தடுமாற்றம் கொண்டதால், அதன் தொடர்ச்சியான ஆண்டுகளில் திரைப்படவிழா நடைபெறவில்லை. மீண்டும் 1949ஆம் ஆண்டிலிருந்து இத்திரைப்பட விழாவிற்கு மிகுந்த முக்கியத்துவம் உருவானது. 1955ஆம் ஆண்டிலிருந்து தங்கப்பனை விருது வழங்கப்படுகிறது.**

37) எந்த ஆண்டு தாகூரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது?

A) 1959

**B) 1961**

C) 1971

D) 1981

**விளக்கம்: 1961–ஆம் ஆண்டில் தாகூரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் இரவீந்திர நாத தாகூர் தொடர்பான ஆவணப்படும் ஒன்றை சத்திய ஜித் ரே உருவாக்கினார்.**

38) தாதாசாகேப் பால்கே விருது கீழ்க்காணும் எதற்காக வழங்கப்படுகிறது?

A) சிறந்த நடிகர்

B) சிறந்த நடிகை

C) சிறந்த இயக்குநர்

**D) வாழ்நாள் சாதனையாளர்**

**விளக்கம்: இந்தியத் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படும். இந்தியத் திரைப்படத் துறையின் தந்தை எனக் கருதப்படும் தாதாசாகேப் பால்கே அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டான 1969–ஆம் ஆண்டு இவ்விருது வழங்கும் அமைப்பு நிறுவப்பட்டது.**

39) எந்த ஆண்டு கூடிய அரங்காற்றுக் கலைஞர்களின் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27–ஆம் தேதியை உலக நாடக நாளாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது?

A) 1939

B) 1958

**C) 1961**

D) 1977

**விளக்கம்: சர்வதேச அரங்கேற்று நிறுவனம் பின்லாந்தில் செயல்பட்டு வருகின்றது. அந்நிறுவனத்தின் தலைவராக இருந்த ஆர்வி கிவிமா அரங்காற்று நிகழ்வுகளுக்காக ஒரு நாளைக் கொண்டாட வேண்டும் என முன் மொழிந்தார். 1961–இல் கூடிய அரங்காற்றுக் கலைஞர்களின் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27–ஆம் தேதியை உலக நாடக நாளாகக் கொண்டாட முடிவு செய்தனர். உலகெங்கிலுமுள்ள நாடகக்கலைஞர்கள் அந்த நாளைக் கொண்டாடத் தவறுவதில்லை.**

40) போர்வை போர்த்திய உடல்கள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) நா.முத்துசாமி

**B) இந்திரா பார்த்தசாரதி**

C) அம்பை

D) பிரபஞ்சன்

**விளக்கம்: நா.முத்துசாமி– நாற்காலிக்காரர்**

**இந்திரா பார்த்தசாரதி– போர்வை போரத்திய உடல்கள்**

**அம்பை– பயங்கள்**

**பிரபஞ்சன்–முட்டை**

41) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) வயிறு

B) மரபு

C) பாடலிபுத்திரம்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: வயிறு, மரபு, பாடலிபுத்திரம் ஆகிய நாடகங்கள் ஞான ராஜசேகரன் எழுதிய நாடகங்களாகும்.**

42) சுவரொட்டிகள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

43) மகேந்திரனின் முதல் படம் முள்ளும் மலரும் ஆகும். இந்த புதினத்தை எழுதியவர் யார்?

**A) உமாச்சந்திரன்**

B) கோமல் சுவாமிநாதன்

C) பம்மல் சம்பந்தனார்

D) வடுவூர் துரைசாமி

**விளக்கம்: மகேந்திரன் இலக்கிய வாசகராகவும் திரைநுட்பங்களை அறிந்தவராகவும் இருக்கின்றார். அவர் இயக்கிய படங்கள் பெரும்பாலும் இலக்கியத்திலிருந்து எடுக்கப்பட்டவையே. அவரது முதல் படம் உமாச்சந்திரனின் முள்ளும் மலரும் புதினத்தை அடிப்படையாகக் கொண்டதுதான்.**

44) அமெரிக்காவில் இருந்த பழைமைவாதிகளாலும் மதப்பற்றுள்ளவர்களாலும் பல இன்னல்களுக்கு ஆளான திரைப்படக் கலைஞர் அனைவரும், எந்த பகுதியில் இருந்த அடர்ந்த காட்டிற்குள் ஓடி ஒளிந்தனர்?

A) அமேசான்

B) லண்டன்

C) வாசிங்டன்

**D) லாஸ் ஏஞ்சல்ஸ்**

**விளக்கம்: அமெரிக்காவில் இருந்த பழைமைவாதிகளாலும் மதப்பற்றுள்ளவர்களாலும் பல இன்னல்களுக்கு ஆளான திரைப்படக் கலைஞர் அனைவரும், லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இருந்த அடர்ந்த காட்டிற்குள் ஓடி ஒளிந்தனர். அந்தக் காடே அவர்களுக்குப் புகலிடம் தந்தது. அங்கிருந்தபடியே திரைப்படத் தொழிலில் ஈடுபட்டனர். தங்களுக்கு வாழ்க்கை அளித்த அந்தக் காட்டினை ஹோலி வுட்(ஹோலி வுட் – புனிதமான காடு) என்று பெயரிட்டுப் புகழ்ந்து, அதனையே தங்கள் வாழ்விடமாகக் கருதினர். அதுவே இன்று திரைப்படத் துறையில் உலகப் புகழ்பெற்று விளங்கும் ஹாலிவுட் நகரமானது.**

45) கிடை என்ற கதை ஒருத்தி என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்துள்ளது. இக்கதையை எழுதியவர் யார்?

**A) கி.ராஜநாராயணன்**

B) ஜெயமோகன்

C) பாஸ்கர் சக்தி

D) பி.எச்.டேனியல்

**விளக்கம்: கி.ராஜநாராயணன் – கிடை என்ற கதை ஒருத்தி என்ற திரைப்படமானது**

**ஜெயமோகன் – ஏழாம் உலகம் என்ற கதை நான் கடவுள் என்ற திரைப்படமானது**

**பாஸ்கர் சக்தி – அழகர்சாமியின் குதிரை என்ற கதை அழகர்சாமியின் குதிரை என்ற திரைப்படமானது**

**பி.எச்.டேனியல் – எரியும் பனிக்காடு என்ற கதை பரதேசி என்ற திரைப்படமானது**

46) ஒரு நாவலைத் திரைபடமாக்கும் முறையை எத்தனை வகையாகப் பிரிக்கலாம்?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: ஒரு நாவலைத் திரைப்படமாக்கும் முறையை இருவகையாக பிரிக்கலாம்.**

**முதலாவது, வாக்கியத்திற்கு வாக்கியம் மூலப்படைப்பைச் சார்ந்தே திரைப்படக்காட்சிகளை அமைப்பது.**

**இரண்டாவது முறை திரைப்படத்தின் சாத்தியக்கூறுகளை, பலத்தை உணர்ந்து சினிமா மொழியில் ஒரு புதிய படைப்பை உருவாக்குவது. நாவலாசிரியரின் மையக்கருத்தை உள்வாங்கி அதற்கேற்றபடி திரைக்கதையை அமைத்து அக்கருத்தைத் திரைப்படக் காட்சிகள் மூலம் வெளிக்கொணர்வது.**

47) பொருத்துக.

அ. சிவப்பு– 1. காதல்

ஆ. கருநீலம்– 2. அபாயம்

இ. பச்சை– 3. தாராளம்

ஈ. இளஞ்சிவப்பு– 4. களங்கமின்மை

A) 3, 1, 2, 4

B) 4, 2, 1, 3

C) 1, 3, 4, 2

**D) 2, 4, 3, 1**

**விளக்கம்: சிவப்பு– சினம், அபாயம், நெருப்பு**

**கருநீலம்– குளிர்ச்சி, களங்கமின்மை, பயபக்தி, அடிமை, வானம், கடல்**

**பச்சை– செல்வம், தாராளம், அமைதி, மகிழ்ச்சி, ஓய்வு**

**இளஞ்சிவப்பு– காதல், பாலுணர்வு**

48) இந்தியத் திரைப்படத்துறையின் தந்தை என்று கருதப்படுபவர் யார்?

A) சத்திய ஜித் ரே

**B) தாதா சாகிப் பால்கே**

C) பானு அத்யா

D) அமிதாப் பச்சன்

**விளக்கம்: இந்தியத் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் தாதா சாகிப் பால்கே விருது வழங்கப்படும். இந்தியத் திரைப்படத் துறையின் தந்தை எனக்**

**கருதப்படும் தாதாசாகேப் பால்கே அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டான 1969–ஆம் ஆண்டு இவ்விருது வழங்கும் அமைப்பு நிறுவப்பட்டது.**

49) கான்ஸ் உலகத் திரைப்பட விழா பிரான்சில் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரில் தடுமாற்றம் கொண்டதால், அதன் தொடர்ச்சியான ஆண்டுகளில் திரைப்படவிழா நடைபெறவில்லை. மீண்டும் எந்த ஆண்டிலிருந்து இத்திரைப்பட விழாவிற்கு மிகுந்த முக்கியத்துவம் உருவானது?

A) 1929

B) 1939

**C) 1949**

D) 1955

**விளக்கம்: கான்ஸ் உலகத் திரைப்பட விழா பிரான்சில் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரில் தடுமாற்றம் கொண்டதால், அதன் தொடர்ச்சியான ஆண்டுகளில் திரைப்படவிழா நடைபெறவில்லை. மீண்டும் 1949–ஆம் ஆண்டிலிருந்து இத்திரைப்பட விழாவிற்கு மிகுந்த முக்கியத்துவம் உருவானது. 1955–ஆம் ஆண்டிலிருந்து தங்கப்பனை விருது வழங்கப்படுகிறது**

50) உந்திச்சுழி என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

51) கூற்று: சர்வதேச நாடக நாள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 29–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.
காரணம்: ஆர்வி கிவிமா அரங்காற்று நிகழ்வுகளுக்காக ஒரு நாளைக் கொண்டாட வேண்டும் என முன் மொழிந்தார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

**B) கூற்று தவறு, காரணம் சரி**

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: சர்வதேச அரங்கேற்று நிறுவனம் பின்லாந்தில் செயல்பட்டு வருகின்றது. அந்நிறுவனத்தின் தலைவராக இருந்த ஆர்வி கிவிமா அரங்காற்று நிகழ்வுகளுக்காக ஒரு நாளைக் கொண்டாட வேண்டும் என முன் மொழிந்தார். 1961–இல் கூடிய அரங்காற்றுக் கலைஞர்களின் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27–ஆம் தேதியை உலக நாடக நாளாகக் கொண்டாட முடிவு செய்தனர். உலகெங்கிலுமுள்ள நாடகக்கலைஞர்கள் அந்த நாளைக் கொண்டாடத் தவறுவதில்லை.**

52) இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாடகங்களில் பொருந்தாத ஒன்றை தெரிவு செய்.

A) இராமாநுஜர்

B) இறுதி ஆட்டம்

C) கொங்கைத்தீ

**D) முகப்போலிகள்**

**விளக்கம்: இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாடகங்கள்:**

**1. இராமாநுஜர்**

**2. இறுதி ஆட்டம்**

**3. கொங்கைத்தீ**

**4. ஔரங்கசீப்**

**5. நந்தன் கதை**

**6. பசி**

**7. மழை**

**8. காலயந்திரங்கள்**

**9. புனரபி ஜனனம் புனரபி மரணம்**

**10. தர்மம்**

**11. போர்வை போர்த்திய உடல்கள்**

**முகப்போலிகள் என்பது சே.இராமானுஜம் எழுதிய நாடகமாகும்**

53) ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்ட தமிழ்த்திரைப்படங்கள் மேடை நாடகங்களையும் நாடக நடிகர்களையுமே அடிப்படையாகக் கொண்டவை.

காரணம்: எழுதப்பட்ட கதைகள் நாடகமாக நடிக்கப்பட்டபோது அந்நாடகங்களைக் கொண்ட திரைப்படத் தயாரிப்பாளர்கள் அதனை திரைப்படமாக்கினர்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: ஆரம்ப காலத்தில் எடுக்கப்பட்ட தமிழ்த்திரைப்படங்கள் மேடை நாடகங்களையும் நாடக நடிகர்களையுமே அடிப்படையாகக் கொண்டவை. எழுதப்பட்ட கதைகள் நாடகமாக நடிக்கப்பட்டபோது அந்நாடகங்களைக் கொண்ட திரைப்படத் தயாரிப்பாளர்கள் அதனை திரைப்படமாக்கினர்.**

54) தழுவல் நாடகங்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தது 'கருப்புத் தெய்வத்தைத் தேடி' ஆகும். இதனுடன் தொடர்புடையவர் யார்?

A) மு.ராமசாமி

B) அ.ராமசாமி

C) கே.ஏ.குணசேகரன்

**D) சே.இராமானுஜம்**

**விளக்கம்: மு.ராமசாமி மேடையேற்றிய 'துர்க்கிர அவலம்', சே.இராமானுஜத்தின் 'கறுப்புத் தெய்வத்தைத் தேடி' போன்றவை தழுவல் நாடகங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. தமிழ் நாடகங்களைவிடவும் மொழியாக்கம் செய்யப்பட்ட நாடகங்களே பெரும்பாலும் மேடையேறின.**

55) முதல் தேசிய திரைப்பட விருதினை பெற்ற திரைப்படம் எது?

**A) மலைக்கள்ளன்**

B) எதிர்நீச்சல்

C) சர்வர் சுந்தரம்

D) செக்குமாடுகள்

**விளக்கம்: இந்தியாவின் தொன்மையானதும் முதன்மையானதுமான விருது தேசிய திரைப்பட விருது. இவ்விருது வழங்கும் அமைப்பு 1954–ஆம் ஆண்டு இந்திய அரசால் நிறுவப்பட்டது. இந்திய திரைப்பட விழாக்களின் இயக்குநரகம் 1973 முதல் இவ்விருதுகளை வழங்கி வருகிறது. முதல் தேசிய விருதினை பெற்ற தமிழ்ப்படம் மலைக்கள்ளன் ஆகும்.**

56) கூற்று: திரைப்படத் துறையில் உலகப் புகழ்பெற்று விளங்கும் நகரம் ஹாலிவுட் ஆகும்.

காரணம்: திரைப்படக்கலைஞர்களுக்கு புகலிடம் தந்தது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: அமெரிக்காவில் இருந்த பழைமைவாதிகளாலும் மதப்பற்றுள்ளவர்களாலும் பல இன்னல்களுக்கு ஆளான திரைப்படக் கலைஞர் அனைவரும், லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இருந்த அடர்ந்த காட்டிற்குள் ஓடி ஒளிந்தனர். அந்தக் காடே அவர்களுக்குப் புகலிடம் தந்தது. அங்கிருந்தபடியே திரைப்படத் தொழிலில் ஈடுபட்டனர். தங்களுக்கு வாழ்க்கை அளித்த அந்தக் காட்டினை ஹோலி வுட்(ஹோலி வுட் – புனிதமான காடு) என்று பெயரிட்டுப் புகழ்ந்து, அதனையே தங்கள் வாழ்விடமாகக் கருதினர். அதுவே இன்று திரைப்படத் துறையில் உலகப் புகழ்பெற்று விளங்கும் ஹாலிவுட் நகரமானது.**

57) கூற்றுகளை ஆராய்க.

1. உரைநடை, வசனம், மேடையமைப்பு, ஒளி அமைப்பு போன்ற அரங்கக்கூறுகள் இணைக்கப்பட்டதால் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் பெரும் வரவேற்பை பெற்றன.

2. இவ்வகை அமைப்புகளோடு கூடிய அரங்கினைப் படச்சட்டக அரங்கம் என்பர். இதனையே பாதல் சர்க்கார் இரண்டாம் அரங்கு எனச் சுட்டிக்காட்டினார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. உரைநடை, வசனம், மேடையமைப்பு, ஒளி அமைப்பு போன்ற அரங்கக்கூறுகள் இணைக்கப்பட்டதால் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் பெரும் வரவேற்பை பெற்றன.**

**2. இவ்வகை அமைப்புகளோடு கூடிய அரங்கினைப் படச்சட்டக அரங்கம் என்பர். இதனையே பாதல் சர்க்கார் இரண்டாம் அரங்கு எனச் சுட்டிக்காட்டினார்.**

58) முட்டை, அகல்யா போன்ற நாடகங்களை எழுதியவர் யார்?

A) ந.முத்துசாமி

B) ஜெயந்தன்

**C) பிரபஞ்சன்**

D) ஞான ராஜசேகரன்

**விளக்கம்: பிரபஞ்சன் எழுதிய நாடகங்கள்:**

**1. முட்டை**

**2. அகல்யா**

59) இந்தியத் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் தாதாசாகிப் பால்கே வழங்கப்படும். இவ்விருது வழங்கும் அமைப்பு எப்போது நிறுவப்பட்டது?

A) 1978

B) 1973

C) 1954

**D) 1969**

**விளக்கம்: இந்தியத் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் தாதா சாகிப் பால்கே விருது வழங்கப்படும். இந்தியத் திரைப்படத் துறையின் தந்தை எனக் கருதப்படும் தாதாசாகேப் பால்கே அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டான 1969–ஆம் ஆண்டு இவ்விருது வழங்கும் அமைப்பு நிறுவப்பட்டது.**

60) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) சர்வர் சுந்தரம்

B) நீர்க்குமிழி

C) எதிர்நீச்சல்

**D) செக்குமாடுகள்**

**விளக்கம்: சர்வர் சுந்தரம், நீர்க்குமிழி, எதிர்நீச்சல் – கே.பாலசந்தர்.**

**கோமல் சுவாமிநாதன் – தண்ணீர் தண்ணீர், செக்குமாடுகள்**

61) கான்ஸ் உலகத் திரைப்பட விழா பிரான்சில் தொடங்கப்பட்டது. இவ்விழாவில் எந்த ஆண்டிலிருந்து தங்கப்பனை விருது வழங்கப்படுகிறது?

A) 1939

B) 1927

C) 1949

**D) 1955**

**விளக்கம்: கான்ஸ் உலகத் திரைப்பட விழா பிரான்சில் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப்போரில் தடுமாற்றம் கொண்டதால், அதன் தொடர்ச்சியான ஆண்டுகளில் திரைப்படவிழா நடைபெறவில்லை.**

**மீண்டும் 1949–ஆம் ஆண்டிலிருந்து இத்திரைப்பட விழாவிற்கு மிகுந்த முக்கியத்துவம் உருவானது. 1955–ஆம் ஆண்டிலிருந்து தங்கப்பனை விருது வழங்கப்படுகிறது.**

62) எந்த நூல் கருப்பொருள்களின் பட்டியலில் ஐந்திணைக்கும் உரிய இசைக்கருவிகளைக் குறிப்பிடுகிறது?

A) அகத்தியம்

B) நன்னூல்

**C) தொல்காப்பியம்**

D) தண்டியலங்காரம்

**விளக்கம்: தொல்காப்பியம் கருப்பொருள்களின் பட்டியலில் ஐந்திணைக்கும் உரிய இசைக்கருவிகளைக் குறிப்பிடுகிறது. பறை, யாழ் போன்ற இசைக்கருவிகளை அத்திணை சார்ந்த மக்கள் வழிபாட்டின் போது இசைத்தும் ஆடியும் வந்துள்ளனர். நாடகத்திற்குரிய இசைக்கருவிகளான யாழ், முழவு, ஆகுளி, பாண்டில், கோடு, நெடுவங்கியம், குருந்தூம்பு, தட்டைப் பறை, சல்லி, பதலை ஆகியவை பயன்படுத்தப்பட்டு வந்ததாக மலைபடுகடாம் தெரிவிக்கிறது.**

63) கூற்றுகளை ஆராய்க.

1. தொடக்கக்காலத் தமிழ்ப்படங்கள் புராணகத்கதைகளை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டன.

2. அதிலும், கம்பெனி நாடகங்கள் மூலம் வரவேற்பு பெற்ற இராமாயண, மகாபாரத கதைகளே படமாக்கப்பட்டன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தொடக்கக்காலத் தமிழ்ப்படங்கள் புராணகத்கதைகளை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டன.**

**2. அதிலும், கம்பெனி நாடகங்கள் மூலம் வரவேற்பு பெற்ற இராமாயண, மகாபாரத கதைகளே படமாக்கப்பட்டன.**

64) தங்கர் பச்சான் கல்வெட்டு என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு இயக்கிய படம் எது?

**A) அழகி**

B) சொல்லமறந்த கதை

C) அம்மாவின் கைப்பேசி

D) ஒன்பது ரூபாய் நோட்டு

**விளக்கம்: சிறுகதை, நாவல்களைப் படமாக்குவதில் தங்கர்பச்சான் காட்டிய அக்கறை அதிகம். ஒளிப்பதிவாளர், எழுத்தாளர், இயக்குநர், நடிகர் எனப் பன்முகத் தன்மைகொண்டவர் இவர். தமது கல்வெட்டு என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு அழகி படத்தை இயக்கினார்.**

65) பல்லக்குத்தூக்கிகள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) அறந்தை நாராயணன்

B) ஞாநி

**C) அ.ராமசாமி**

D) அ.மங்கை

**விளக்கம்: அறந்தை நாராயணன் – மூர் மார்க்கெட்**

**ஞாநி– பலூன், நாங்கள்**

**அ.ராமசாமி – பல்லக்குத்தூக்கிகள்**

**அ.மங்கை– மௌனக்குரல் குழுவை நடத்தியவர்.**

66) கூற்று: நவீன நாடகக்குழுக்கள் மரபார்ந்த கலைகளைக் கையிலெடுக்கத் தொடங்கின.

காரணம்: மத்திய சங்கீத நாடக அகாதெமி இளம் நாடக இயக்குநர்களையும், நாடக குழுக்களையும் ஊக்குவிக்க நிதி வழங்கியது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: மத்திய சங்கீத நாடக அகாதெமி இளம் நாடக இயக்குநர்களையும், நாடக குழுக்களையும் ஊக்குவிக்க நிதி வழங்கியது. ஒவ்வோர் ஆண்டும் நவீன நாடகத்திற்கான திட்டங்களைச் செயல்படுத்தி வந்ததோடு, மரபார்ந்த அரங்க வடிவங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தியது. பிறமொழி நாடகங்களோடு ஒப்பிட்டுப் பேசவும் போட்டிபோடவும் வாய்ப்புகளை உருவாக்கித் தந்தது. இதன் காரணமாக நவீன நாடகக்குழுக்கள் மரபார்ந்த கலைகளைக் கையிலெடுக்கத் தொடங்கின.**

67) பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின. இதில் தவறாக பொருந்தியுள்ளதை தெரிவு செய்க?

**A) தஞ்சை– பல்கலை அரங்கம்**

B) காந்தி கிராமத்தில்– தளிர்.

C) திருச்சி– நாடகச் சங்கம்

D) திருவண்ணாமலை– தீட்சண்யா

**விளக்கம்: சென்னை – ஆடுகளம், யவனிகா, பல்கலை அரங்கம், அரூபம்**

**மதுரை– சுதேசி.**

**பாண்டிச்சேரி– கூட்டுக்குரல், தலைக்கோல்,**

**தஞ்சை– அரங்கம்**

**காந்தி கிராமத்தில்– தளிர்.**

**திருச்சி– நாடகச் சங்கம்**

**திருவண்ணாமலை– தீட்சண்யா.**

68) அகில இந்திய அளவில் ___________________________ என்னும் நாடக அமைப்பு உருவாக்கப்பட்டு, யுனெஸ்கோவின் சர்வதேச நாடகக்கலை மையத்தோடு இணைக்கப்பட்டது?

A) உலக நாடகக் கழகம்

B) தேசிய நாடகப் பள்ளி

**C) பாரதீய நாட்டியகஸ்**

D) சங்கீத நாடக அகாதெமி

**விளக்கம்: அகில இந்திய அளவில் பாரதீய நாட்டியகஸ் என்னும் நாடக அமைப்பு உருவாக்கப்பட்டு, யுனெஸ்கோவின் சர்வதேச நாடகக்கலை மையத்தோடு இணைக்கப்பட்டது. இந்திய அரசின் முயற்சியால் நிகழ்கலைகளின் வளர்ச்சிக்காக மத்திய சங்கீத நாடக அகாதெமியும் நாடகத்துறைக்கென்றே பயிற்சியளிக்க தேசிய நாடகப்பள்ளியும் உருவாக்கப்பட்டன. இதனையடுத்து உலக நாடகக் கழகமும் உருவாக்கப்பட்டது. இவ்வமைப்புகள் நவீன நாடகங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டன.**

69) ஜே.ஆர்.ரங்கராஜு என்பவர் கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையவர்?

A) மேனகா

B) டம்பாச்சாரி

**C) ராஜாம்பாள்**

D) இழந்த காதல்

**விளக்கம்: வடுவூர் துரைசாமி – மேனகா**

**காசி விஸ்வநாதர்– டம்பாச்சாரி**

**ஜே.ஆர்.ரங்கராஜு– ராஜாம்பாள்**

**பம்மல் சம்பந்தனார்– இழந்த காதல்**

70) விறகுவெட்டிகள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

71) பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) துர்க்கிர அவலம்

B) சாபம் விமோசனம்?

**C) புரட்சிப்புயல்**

D) ஆபுத்திரன்

**விளக்கம்: மு.இராமசுமாமி எழுதிய நாடகங்கள்:**

**1. துர்க்கிர அவலம்**

**2. சாபம் விமோனம்?**

**3. புரட்சிக்கவி**

**4. ஆபுத்திரன்.**

72) தாதாசாகிப் பால்கே விருதை முதலில் பெற்றவர் யார்?

**A) தேவிகா ராணி**

B) சத்திய ஜித் ரே

C) பானு அத்யா

D) அமிதாப் பச்சன்

**விளக்கம்: இந்தியத் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படும். இந்தியத் திரைப்படத் துறையின் தந்தை எனக் கருதப்படும் தாதாசாகேப் பால்கே அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டான 1969–ஆம் ஆண்டு இவ்விருது வழங்கும் அமைப்பு நிறுவப்பட்டது. தேவிகா ராணி 1969–ஆம் ஆண்டு முதன்முதலில் இவ்விருதைப் பெற்றார். தமிழகத்தில் 1996–ஆம் ஆண்டு சிவாஜி கணேசனும், 2010–ஆம் ஆண்டு கே.பாலசந்தரும் இவ்விருதினைப் பெற்றுள்ளனர்.**

73) இந்தியாவின் தொன்மையானதும் முதன்மையானதுமான தேசிய திரைப்பட விருது எப்போது முதல் வழங்கப்பட்டு வருகிறது?

A) 1954

B) 1969

C) 1952

**D) 1973**

**விளக்கம்: இந்தியாவின் தொன்மையானதும் முதன்மையானதுமான விருது தேசிய திரைப்பட விருது. இவ்விருது வழங்கும் அமைப்பு 1954–ஆம் ஆண்டு இந்திய அரசால் நிறுவப்பட்டது. இந்திய திரைப்பட விழாக்களின் இயக்குநரகம் 1973 முதல் இவ்விருதுகளை வழங்கி வருகிறது.**

74) ஹோலி வுட் என்ற சொல்லின் பொருள் என்ன?

**A) புனிதமான காடு**

B) திரைப்பட இடம்

C) வட இந்திய திரைப்படம்

D) புதுவகை திரைப்படம்

**விளக்கம்: அமெரிக்காவில் இருந்த பழைமைவாதிகளாலும் மதப்பற்றுள்ளவர்களாலும் பல இன்னல்களுக்கு ஆளான திரைப்படக் கலைஞர் அனைவரும், லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இருந்த அடர்ந்த காட்டிற்குள் ஓடி ஒளிந்தனர். அந்தக் காடே அவர்களுக்குப் புகலிடம் தந்தது. அங்கிருந்தபடியே திரைப்படத் தொழிலில் ஈடுபட்டனர். தங்களுக்கு வாழ்க்கை அளித்த அந்தக் காட்டினை ஹோலி வுட்(ஹோலி வுட் – புனிதமான காடு) என்று பெயரிட்டுப் புகழ்ந்து, அதனையே தங்கள் வாழ்விடமாகக் கருதினர். அதுவே இன்று திரைப்படத் துறையில் உலகப் புகழ்பெற்று விளங்கும் ஹாலிவுட் நகரமானது.**

75) நினைக்கப்படும் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) ந.முத்துசாமி

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

**D) ஜெயந்தன்**

**விளக்கம்: ஜெயந்தன் எழுதிய நாடகங்கள்:**

**1. மனுசா மனுசா**

**2. நினைக்கப்படும்**

76) நாடகத்திற்குரிய இசைக்கருவிகளான யாழ், முழவு, ஆகுளி, பாண்டில், கோடு, நெடுவங்கியம், குருந்தூம்பு, தட்டைப் பறை, சல்லி, பதலை ஆகியவை பயன்படுத்தப்பட்டு வந்ததாக தெரிவிக்கும் நூல் எது?

A) பரிபாடல்

B) தொல்காப்பியம்

**C) மலைபடுகடாம்**

D) கலித்தொகை

**விளக்கம்: தொல்காப்பியம் கருப்பொருள்களின் பட்டியலில் ஐந்திணைக்கும் உரிய இசைக்கருவிகளைக் குறிப்பிடுகிறது. பறை, யாழ் போன்ற இசைக்கருவிகளை அத்திணை சார்ந்த மக்கள் வழிபாட்டின் போது இசைத்தும் ஆடியும் வந்துள்ளனர். நாடகத்திற்குரிய இசைக்கருவிகளான யாழ், முழவு, ஆகுளி, பாண்டில், கோடு, நெடுவங்கியம், குருந்தூம்பு, தட்டைப் பறை, சல்லி, பதலை ஆகியவை பயன்படுத்தப்பட்டு வந்ததாக மலைபடுகடாம் தெரிவிக்கிறது.**

77) கூட்டுக்குரல் என்ற குழு கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையது?

A) பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்குதல்

**B) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு**

C) பெண்களின் பல்வேறு பிரச்சனைகள்

D) எழுத்தறிவு மற்றும் அறிவியல் பிரச்சார நாடகங்கள்

**விளக்கம்: பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்குதல்– பல்கலையரங்கம்**

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு– கூட்டுக்குரல்**

**பெண்களின் பல்வேறு பிரச்சனைகள்– மௌனக்குரல்**

**எழுத்தறிவு மற்றும் அறிவியல் பிரச்சார நாடகங்கள் – சென்னைக் கலைக்குழு**

78) முள்ளும் மலரும்என்ற திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) பாலு மகேந்திரா

B) ருத்ரய்யா

**C) மகேந்திரன்**

D) ஞான.ராஜசேகரன்

**விளக்கம்: பாலு மகேந்திரா– சந்தியா ராகம், வீடு**

**ருத்ரய்யா– அவள் அப்படித்தான்**

**மகேந்திரன் – முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம்.**

**ஞான.ராஜசேகரன் – மோகமுள்**

79) வண்டிச்சோடை என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

80) பயங்கள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) நா.முத்துசாமி

B) இந்திரா பார்த்தசாரதி

**C) அம்பை**

D) பிரபஞ்சன்

**விளக்கம்: நா.முத்துசாமி– நாற்காலிக்காரர்**

**இந்திரா பார்த்தசாரதி– போர்வை போரத்திய உடல்கள்**

**அம்பை– பயங்கள்**

**பிரபஞ்சன்– முட்டை**

81) தமிழ்த் திரைப்படங்களில் வெளிப்புறப் படப்பிடிப்பை அதிகம் பயன்படுத்தியவர் யார்?

A) வடுவூர் துரைசாமி

B) காசி விஸ்வநாதர்

C) நடராஜர்

**D) எல்லிஸ் ஆர்.டங்கன்**

**விளக்கம்: எல்லிஸ் ஆர்.டங்கன் தமிழ்த்திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தார். வெளிப்புறப் படப்பிடிப்பை அதிகம் பயன்படுத்தினார். ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப்படங்களில் அறிமுகப்படுத்தியவரும் இவரே.**

82) மைனர் ராஜாமணி என்னும் புதினம் திரைப்படமானது. இப்புதினம் யாருடையது?

A) ஜே.ஆர்.ரங்கராஜு

**B) வடுவூர் துரைசாமி**

C) கல்கி

D) ராஜாஜி

**விளக்கம்: ஜே.ஆர்.ரங்கராஜு – சவுக்கடி சந்திரகாந்தா**

**வடுவூர் துரைசாமி– மைனர் ராஜாமணி**

**கல்கி– தியாகபூமி**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

83) இந்தியாவின் தொன்மையானதும் முதன்மையானதுமான விருது தேசிய திரைப்பட விருது ஆகும். இவ்விருது வழங்கும் அமைப்பு எப்போது நிறுவப்பட்டது?

**A) 1954**

B) 1969

C) 1996

D) 1952

**விளக்கம்: இந்தியாவின் தொன்மையானதும் முதன்மையானதுமான விருது தேசிய திரைப்பட விருது. இவ்விருது வழங்கும் அமைப்பு 1954–ஆம் ஆண்டு இந்திய அரசால் நிறுவப்பட்டது. இந்திய திரைப்பட விழாக்களின் இயக்குநரகம் 1973 முதல் இவ்விருதுகளை வழங்கி வருகிறது.**

84) மனுசா மனுசா என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) ந.முத்துசாமி

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

**D) ஜெயந்தன்**

**விளக்கம்: ஜெயந்தன் எழுதிய நாடகங்கள்:**

**1. மனுசா மனுசா**

**2. நினைக்கப்படும்**

85) ஹோலிவுட் என்ற காடு எந்த நாட்டிலுள்ளது?

A) இங்கிலாந்து

B) பிரான்சு

**C) அமெரிக்கா**

D) பிரேசில்

**விளக்கம்: அமெரிக்காவில் இருந்த பழைமைவாதிகளாலும் மதப்பற்றுள்ளவர்களாலும் பல இன்னல்களுக்கு ஆளான திரைப்படக் கலைஞர் அனைவரும், லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இருந்த அடர்ந்த காட்டிற்குள் ஓடி ஒளிந்தனர். அந்தக் காடே அவர்களுக்குப் புகலிடம் தந்தது. அங்கிருந்தபடியே திரைப்படத் தொழிலில் ஈடுபட்டனர். தங்களுக்கு வாழ்க்கை அளித்த அந்தக் காட்டினை ஹோலி வுட்(ஹோலி வுட் – புனிதமான காடு) என்று பெயரிட்டுப் புகழ்ந்து, அதனையே தங்கள் வாழ்விடமாகக் கருதினர். அதுவே இன்று திரைப்படத் துறையில் உலகப் புகழ்பெற்று விளங்கும் ஹாலிவுட் நகரமானது.**

86) ஆஸ்கர் விழாவை அகாதெமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் மற்றும் சயின்ஸ் என்ற அமைப்பு ஒருங்கிணைக்கிறது. இது எப்போது நிறுவப்பட்டது?

A) 1939

**B) 1927**

C) 1903

D) 1929

**விளக்கம்: ஆஸ்கர் விருது எனப் பரவலாக அறியப்படும் அகாதெமி விருதுகள் அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். ஆஸ்கார் விழாவை 1927–இல் நிறுவப்பட்ட அகாதெமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் மற்றும் சயின்ஸ் என்ற அமைப்பு ஒருங்கிணைக்கிறது.**

87) பறை, யாழ் போன்ற இசைக்கருவிகளை அந்த அந்த திணை சார்ந்த மக்கள் வழிபாட்டின் போது இசைத்தும் ஆடியும் வந்துள்ளனர் என்று குறிப்பிடும் நூல் எது?

A) பரிபாடல்

B) தொல்காப்பியம்

**C) மலைபடுகடாம்**

D) கலித்தொகை

**விளக்கம்: தொல்காப்பியம் கருப்பொருள்களின் பட்டியலில் ஐந்திணைக்கும் உரிய இசைக்கருவிகளைக் குறிப்பிடுகிறது. பறை, யாழ் போன்ற இசைக்கருவிகளை அத்திணை சார்ந்த மக்கள் வழிபாட்டின் போது இசைத்தும் ஆடியும் வந்துள்ளனர். நாடகத்திற்குரிய இசைக்கருவிகளான யாழ், முழவு, ஆகுளி, பாண்டில், கோடு, நெடுவங்கியம், குருந்தூம்பு, தட்டைப் பறை, சல்லி, பதலை ஆகியவை பயன்படுத்தப்பட்டு வந்ததாக மலைபடுகடாம் தெரிவிக்கிறது.**

88) உலக நாடக நாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

**A) மார்ச் 27**

B) மார்ச் 21

C) மார்ச் 29

D) மார்ச் 24

**விளக்கம்: சர்வதேச அரங்கேற்று நிறுவனம் பின்லாந்தில் செயல்பட்டு வருகின்றது. அந்நிறுவனத்தின் தலைவராக இருந்த ஆர்வி கிவிமா அரங்காற்று நிகழ்வுகளுக்காக ஒரு நாளைக் கொண்டாட வேண்டும் என முன் மொழிந்தார். 1961இல் கூடிய அரங்காற்றுக் கலைஞர்களின் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27–ஆம் தேதியை உலக நாடக நாளாகக் கொண்டாட முடிவு செய்தனர். உலகெங்கிலுமுள்ள நாடகக்கலைஞர்கள் அந்த நாளைக் கொண்டாடத் தவறுவதில்லை.**

89) ஏழாம் உலகம் என்ற கதை நான் கடவுள் என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்துள்ளது. இக்கதையை எழுதியவர் யார்?

A) கி.ராஜநாராயணன்

**B) ஜெயமோகன்**

C) பாஸ்கர் சக்தி

D) பி.எச்.டேனியல்

**விளக்கம்: கி.ராஜநாராயணன் – கிடை என்ற கதை ஒருத்தி என்ற திரைப்படமானது**

**ஜெயமோகன் – ஏழாம் உலகம் என்ற கதை நான் கடவுள் என்ற திரைப்படமானது**

**பாஸ்கர் சக்தி – அழகர்சாமியின் குதிரை என்ற கதை அழகர்சாமியின் குதிரை என்ற திரைப்படமானது**

**பி.எச்.டேனியல் – எரியும் பனிக்காடு என்ற கதை பரதேசி என்ற திரைப்படமானது**

90) ஒன்பது ரூபாய் நோட்டு என்ற நாவல் அதே பெயரில் படமாக்கப்பட்டது. இந்த நாவலை எழுதியவர் யார்?

**A) தங்கர் பச்சான்**

B) நாஞ்சில் நாடன்

C) மகேந்திரன்

D) ஜெயகாந்தன்

**விளக்கம்: சிறுகதை, நாவல்களைப் படமாக்குவதில் தங்கர்பச்சான் காட்டிய அக்கறை அதிகம். ஒளிப்பதிவாளர், எழுத்தாளர், இயக்குநர், நடிகர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர் இவர். இவர் தாம் எழுதிய ஒன்பது ரூபாய் நோட்டு மற்றும் அம்மாவின் கைப்பேசி நாவல்களை அதேபெயரில் படமாக்கினார்.**

91) இந்திய அரசின் முயற்சியால் நிகழ்கலைகளின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு எது?

A) உலக நாடகக் கழகம்

B) தேசிய நாடகப் பள்ளி

C) பாரதீய நாட்டியகஸ்

**D) மத்திய சங்கீத நாடக அகாதெமி**

**விளக்கம்: அகில இந்திய அளவில் பாரதீய நாட்டியகஸ் என்னும் நாடக அமைப்பு உருவாக்கப்பட்டு, யுனெஸ்கோவின் சர்வதேச நாடகக்கலை மையத்தோடு இணைக்கப்பட்டது. இந்திய அரசின் முயற்சியால் நிகழ்கலைகளின் வளர்ச்சிக்காக மத்திய சங்கீத நாடக அகாதெமியும் நாடகத்துறைக்கென்றே பயிற்சியளிக்க தேசிய நாடகப்பள்ளியும் உருவாக்கப்பட்டன. இதனையடுத்து உலக நாடகக் கழகமும் உருவாக்கப்பட்டது. இவ்வமைப்புகள் நவீன நாடகங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டன.**

92) நற்றுணையப்பன் அல்லது கடவுள் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

93)கூற்று: எழுபதுகளின் இறுதியில் நவீன நாடகங்கள் தோற்றம் பெறுவதற்கான சூழல் உருவாகத் தொடங்கியது.

காரணம்: கவிதை, சிறுகதை போன்றவற்றில் நவீன சிந்தனைகளையும் வடிவங்களையும் பகுத்து சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை போல நாடகத்திலும் இதே போன்ற மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: இலக்கியத்தின் பிற துறைகளான கவிதை, சிறுகதை போன்றவற்றில் நவீன சிந்தனைகளையும் வடிவங்களையும் பகுத்து சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை போல நாடகத்திலும் இதே போன்ற மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் எழுபதுகளின் இறுதியில் நவீன நாடகங்கள் தோற்றம் பெறுவதற்கான சூழல் உருவாகத் தொடங்கியது.**

94) டம்பாச்சாரி என்ற கதையை எழுதியவர் யார்?

A) வடுவூர் துரைசாமி

**B) காசி விஸ்வநாதர்**

C) ஜே.ஆர்.ரங்கராஜு

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: வடுவூர் துரைசாமி – மேனகா**

**காசி விஸ்வநாதர்– டம்பாச்சாரி**

**ஜே.ஆர்.ரங்கராஜு– ராஜாம்பாள்**

**பம்மல் சம்பந்தனார்– இழந்த காதல்**

95) இந்தியாவின் முதல் பேசும்படம் எது?

**A) ஆலம் ஆரா**

B) கீசகவதம்

C) காளிதாஸ்

D) ராஜா ஹரிசந்திரா

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது.**

96) உதிரிப் பூக்கள் என்ற என்ற திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) பாலு மகேந்திரா

B) ருத்ரய்யா

**C) மகேந்திரன்**

D) ஞான.ராஜசேகரன்

**விளக்கம்: பாலு மகேந்திரா – சந்தியா ராகம், வீடு**

**ருத்ரய்யா– அவள் அப்படித்தான்**

**மகேந்திரன் – முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம்.**

**ஞான.ராஜசேகரன் – மோகமுள்**

97) இந்தியாவின் தொன்மையானதும் முதன்மையானதுமான விருது எது?

A) தாதாசாகிப் பால்கே விருது

**B) தேசிய திரைப்பட விருது**

C) சிறந்த இயக்குநர் விருது

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: இந்தியாவின் தொன்மையானதும் முதன்மையானதுமான விருது தேசிய திரைப்பட விருது. இவ்விருது வழங்கும் அமைப்பு 1954–ஆம் ஆண்டு இந்திய அரசால் நிறுவப்பட்டது.**

98) எப்போது கே.பாலசந்தர் தாதாசாகிப் பால்கே விருதை பெற்றார்?

**A) 2010**

B) 2008

C) 2011

D) 2012

**விளக்கம்: இந்தியத் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படும். இந்தியத் திரைப்படத் துறையின் தந்தை எனக் கருதப்படும் தாதாசாகேப் பால்கே அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டான 1969–ஆம் ஆண்டு இவ்விருது வழங்கும் அமைப்பு நிறுவப்பட்டது. தேவிகா ராணி 1969–ஆம் ஆண்டு முதன்முதலில் இவ்விருதைப் பெற்றார். தமிழகத்தில் 1996–ஆம் ஆண்டு சிவாஜி கணேசனும், 2010ஆம் ஆண்டு கே.பாலசந்தரும் இவ்விருதினைப் பெற்றுள்ளனார்.**

99) ஆஸ்கார் விருது எப்போது முதல் வழங்கப்பட்டு வருகிறது?

A) 1927

B) 1939

**C) 1929**

D) 1917

**விளக்கம்: ஆஸ்கர் விருது எனப் பரவலாக அறியப்படும் அகாதெமி விருதுகள் அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். ஆஸ்கார் விழாவை 1927–இல் நிறுவப்பட்ட அகாதெமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் மற்றும் சயின்ஸ் என்ற அமைப்பு ஒருங்கிணைக்கிறது. இவ்விருது 1929 முதல் வழங்கப்பட்டு வருகிறது**

100) சர்வதேச அரங்கேற்று நிறுவனம் எங்கு செயல்பட்டு வருகின்றது?

A) அமெரிக்கா

**B) பின்லாந்து**

C) இங்கிலாந்து

D) பிரான்சு

**விளக்கம்: சர்வதேச அரங்கேற்று நிறுவனம் பின்லாந்தில் செயல்பட்டு வருகின்றது. அந்நிறுவனத்தின் தலைவராக இருந்த ஆர்வி கிவிமா அரங்காற்று நிகழ்வுகளுக்காக ஒரு நாளைக் கொண்டாட வேண்டும் என முன் மொழிந்தார். 1961–இல் கூடிய அரங்காற்றுக் கலைஞர்களின் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27–ஆம் தேதியை உலக நாடக நாளாகக் கொண்டாட முடிவு செய்தனர். உலகெங்கிலுமுள்ள நாடகக்கலைஞர்கள் அந்த நாளைக் கொண்டாடத் தவறுவதில்லை.**

101) கூற்று: இருபதாம் நூற்றாண்டின் இறுதி 26 ஆண்டுகள், தமிழ் நாடகக்கலையின் மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தன.

காரணம்: சிறுபத்திரிகைகளில் எழுதிய சிறுகதை ஆசிரியர்கள், தமிழ் இலக்கியத்துறையச் சார்ந்த பேராசிரியர்கள், பொதுவுடைமைக் கருத்துகளின்பால் ஈடுபாடுகொண்ட எழுத்தாளர்கள் முதலானோர் நவீன நாடகம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: சிறுபத்திரிகைகளில் எழுதிய சிறுகதை ஆசிரியர்கள், தமிழ் இலக்கியத்துறையைச் சார்ந்த பேராசிரியர்கள், பொதுவுடைமைக் கருத்துகளின்பால் ஈடுபாடுகொண்ட எழுத்தாளர்கள் முதலானோர் நவீன நாடகம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். இதன் விளைவாக இருபதாம் நூற்றாண்டின் இறுதி 26 ஆண்டுகள், தமிழ் நாடகக்கலையின் மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தன.**

102) ஏவம் இந்திரஜித் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) பாதல் சர்க்கார்**

B) விஜய் டெண்டுல்கர்

C) கிரிஷ் கர்னாட்

D) பெர்டோல்ட் பிரெகட்

**விளக்கம்: எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரஜித், விஜய் டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெகட்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.**

103) பல்வேறு கலைகளும் சங்கமிக்கும் இடம் திரைப்படம். இதன் நுட்பத்தை மக்களிடையே எடுத்துச் சென்றவர்கள் யார்?

**A) மகேந்திரன், பாலு மகேந்திரா**

B) ராஜசேகரன், ருத்ரய்யா

C) மகேந்திரன், ருத்ரய்யா

D) ராஜசேகரன், பாலுமகேந்திரா

**விளக்கம்: பல்வேறு கலைகளும் சங்கமிக்கும் இடம் திரைப்படம். இதன் நுட்பத்தை மக்களிடையே எடுத்துச் சென்றவர்கள் மகேந்திரன் மற்றும் பாலு மகேந்திரா ஆவார்.**

104) கல்யாணப் பரிசு படத்தின் மூலம் புகழ்பெற்று, நெஞ்சில் ஓர் ஆலயம், காதலிக்க நேரமில்லை போன்ற படங்களை இயக்கியவர் யார்?

**A) ஸ்ரீதர்**

B) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

C) பீம்சிங்

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: ஸ்ரீதர், கல்யாணப் பரிசு படத்தின் மூலம் புகழ்பெற்று, நெஞ்சில் ஓர் ஆலயம், காதலிக்க நேரமில்லை போன்ற படங்களை இயக்கியவர்.**

105) 1970களில் தமிழ்த் திரைப்படத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. இதற்கான களமாக திகழ்ந்தது எது?

A) புதினம்

B) சிறுகதை

C) கதை

**D) இலக்கியம்**

**விளக்கம்: 1970களில் தமிழ்த் திரைப்படத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. எப்போதும் வசனங்களால் நிரப்பப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்த் திரைப்படத்தைக் காட்சிப் பூர்வமாக அணுகியவர்கள் மகேந்திரனும் பாலு மகேந்திராவும். அதற்கான களத்தை இலக்கியத்தில் இருந்து தேர்ந்தெடுத்தனர்.**

106) திரைப்படத்தில் மஞ்சள் என்னும் வண்ணம் கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையது அல்ல?

A) இன்றியமையாமை

B) சூரியன்

C) பெருமகிழ்ச்சி

**D) வேடிக்கை**

**விளக்கம்: மஞ்சள் – உற்சாகம், நல்லெண்ணம், பெருமகிழ்ச்சி, சூரியன், இன்றியமையாமை.**

**ஆரஞ்சு – வேடிக்கை, விளையாட்டு, செழிப்பு, நகைச்சுவை.**

107) தர்மம், போர்வை போர்த்தி உடல்கள் போன்ற நாடகங்களை எழுதியவர் யார்?

A) பிரளயன்

B) எம்.டி.முத்து குமாரசாமி

C) இன்குலாப்

**D) இந்திரா பார்த்தசாரதி**

**விளக்கம்: இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாடகங்கள்:**

**1. இராமாநுஜர்**

**2. இறுதி ஆட்டம்**

**3. கொங்கைத்தீ**

**4. ஔரங்கசீப்**

**5. நந்தன் கதை**

**6. பசி**

**7. மழை**

**8. காலயந்திரங்கள்**

**9. புனரபி ஜனனம் புனரபி மரணம்**

**10. தர்மம்**

**11. போர்வை போர்த்திய உடல்கள்**

108) எப்போது மதுரையில் முதல் நாடக விழாவை நிஜநாடக இயக்கம் நடத்தியது?

**A) 1988**

B) 1978

C) 1987

D) 1977

**விளக்கம்: தென்மண்டல நாடக விழாவில் நிஜநாடக இயக்க நாடகமான சாபம் விமோனம்? அரங்கேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மதுரையில் முதல் நாடக விழாவை நிஜநாடக இயக்கம் 1988–ஆம் ஆண்டு நடத்தியது.**

109) ஆஸ்கார் விருது பெற்ற முதல் இந்தியர் யார்?

A) சத்தியஜித் ரே

**B) பானு அத்தையா**

C) ஏ.ஆர்.ரகுமான்

D) பாலையா

**விளக்கம்: ஆஸ்கர் விருது எனப் பரவலாக அறியப்படும் அகாதெமி விருதுகள் அமெரிக்காவில் திரைத்துறைக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதாகும். ஆஸ்கார் விழாவை 1927–இல் நிறுவப்பட்ட அகாதெமி ஆப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் மற்றும் சயின்ஸ் என்ற அமைப்பு ஒருங்கிணைக்கிறது. இவ்விருது 1929 முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆஸ்கார் விருது பெற்ற முதல் இந்தியர் பானு அத்தையா ஆவார்.**

110) டம்பாச்சாரி என்ற கதையை எழுதியவர் யார்?

A) வடுவூர் துரைசாமி

**B) காசி விஸ்வநாதர்**

C) ஜே.ஆர்.ரங்கராஜு

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: வடுவூர் துரைசாமி – மேனகா**

**காசி விஸ்வநாதர்– டம்பாச்சாரி**

**ஜே.ஆர்.ரங்கராஜு– ராஜாம்பாள்**

**பம்மல் சம்பந்தனார்– இழந்த காதல்**

111) மகேந்திரன் இலக்கியத்தைத் திரைப்படமாகப் பெரும் ஆளுமையோடு உருவாக்கியவர். குறிப்பாக அவரது எந்த படம் தமிழ்த்திரைப்படத்தின் தரத்தை உயர்த்தியது?

**A) உதிரிப்பூக்கள்**

B) பூட்டாத பூட்டுகள்

C) முள்ளும் மலரும்

D) சாசனம்

**விளக்கம்: முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், சாசனம் ஆகியவை மகேந்திரனின் திரைப்படமாகும். இதில் உதிரிப்பூக்கள் தமிழ்த் திரைப்படத்தின் தரத்தை உயர்த்தியது எனலாம்.**

112) திரைப்படம் ஒரு காட்சி மொழி என்பதை உணர்ந்தவர் யார்?

A) மகேந்திரன்

**B) பாலு மகேந்திரா**

C) ருத்ரய்யா

D) ராஜசேகரன்

**விளக்கம்: திரைப்படம் ஒரு காட்சி மொழி என்பதை உணர்ந்தவர் பாலு மகேந்திரா ஆவார். அவர் இயக்கிய சந்தியா ராகம், வீடு போன்ற படங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.**

113) மௌனக்குழுவை நடத்தியவர் அ.மங்கை. இது கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையது?

A) பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்குதல்

B) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

**C) பெண்களின் பல்வேறு பிரச்சனைகள்**

D) எழுத்தறிவு மற்றும் அறிவியல் பிரச்சார நாடகங்கள்

**விளக்கம்: பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்குதல் – பல்கலையரங்கம்**

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு – கூட்டுக்குரல்**

**பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் – மௌனக்குரல்**

114) பம்மல் சம்பந்தனார் என்பவர் கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையவர்?

A) மேனகா

B) டம்பாச்சாரி

C) ராஜாம்பாள்

**D) இழந்த காதல்**

**விளக்கம்: வடுவூர் துரைசாமி – மேனகா**

**காசி விஸ்வநாதர்– டம்பாச்சாரி**

**ஜே.ஆர்.ரங்கராஜு– ராஜாம்பாள்**

**பம்மல் சம்பந்தனார்– இழந்த காதல்**

115) கூற்று: எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் நேரடி தமிழ் நவீன நாடகத்திற்கான முயற்சிகள் நாடக ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டன.

காரணம்: தமிழ் நாடகங்களைவிடவும் மொழியாக்கம் செய்யப்பட்ட நாடகங்களே பெரும்பாலும் மேடையேறின.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரஜித், விஜய் டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெக்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. தமிழ் நாடகங்களை விடவும் மொழியாக்கவும் செய்யப்பட்ட நாடகங்களே பெரும்பாலும் மேடையேறின. இதன்பின் நேரடி தமிழ் நவீன நாடகத்திற்கான முயற்சிகள் நாடக ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டன.**

116) கூத்துப்பட்டறை தொன்மையான தெருக்கூத்துக் கலையை நவீனமாக்கி, மேம்படுத்தும் நோக்கத்தோடு சென்னையில் 1977–ஆம் ஆண்டு யாரால் உருவாக்கப்பட்டது?

A) மகேந்திரன்

B) பாலு மகேந்திரா

C) பம்மல் சம்பந்தனார்

**D) நா.முத்துசாமி**

**விளக்கம்: கூத்துப்பட்டறை தொன்மையான தெருக்கூத்துக் கலையை நவீனமாக்கி, மேம்படுத்தும் நோக்கத்தோடு சென்னையில் 1977–ஆம் ஆண்டு ந.முத்துசாமியால் உருவாக்கப்பட்டது. இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம், யுனெஸ்கோ ஃபோர்ட் அறக்கட்டளை, அலயன்ஸ் பிரான்சே, ஜெர்மனியின் மேக்ஸ்முல்லர் பவன் போன்ற அமைப்புகளின் ஆதரவில் இவ்வமைப்பு அரங்கச் செயல்பாடுகளை முன்னெடுத்தது.**

117) வை.மு.கோதைநாயகி அம்மாளின் தயாநிதி என்னும் புதினம் எந்த பெயரில் திரைப்படமாக்கப்பட்டது?

A) தயாநிதி

**B) சித்தி**

C) அனாதைப்பெண்

D) செக்குமாடுகள்

**விளக்கம்: மௌனப்படக் காலத்திலேயே வை.மு.கோதைநாயகி அம்மாளின் அனாதைப் பெண் புதினம் அதே பெயரில் படமாக்கப்பட்டது. இதே புதினம் பேசும் படமாகவும் எடுக்கப்பட்டது. இவரின் தயாநிதி புதினம் சித்தி என்னும் திரைப்படமானது.**

118) சவுக்கடி சந்திரகாந்தா என்னும் புதினம் திரைப்படமானது. இப்புதினம் யாருடையது?

**A) ஜே.ஆர்.ரங்கராஜு**

B) வடுவூர் துரைசாமி

C) கல்கி

D) ராஜாஜி

**விளக்கம்: ஜே.ஆர்.ரங்கராஜு – சவுக்கடி சந்திரகாந்தா**

**வடுவூர் துரைசாமி– மைனர் ராஜாமணி**

**கல்கி– தியாகபூமி**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

119) பூட்டாத பூட்டுகள் என்ற திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) பாலு மகேந்திரா

B) ருத்ரய்யா

**C) மகேந்திரன்**

D) ஞான.ராஜசேகரன்

**விளக்கம்: பாலு மகேந்திரா – சந்தியா ராகம், வீடு**

**ருத்ரய்யா– அவள் அப்படித்தான்**

**மகேந்திரன் – முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம்.**

**ஞான.ராஜசேகரன் – மோகமுள்**

120) எந்த படம் தங்கர்பச்சான் என்ற ஆளுமையைத் திரையுலகில் பரவலாக அறியசெய்தது?

**A) அழகி**

B) சொல்ல மறந்த கதை

C) ஒன்பது ரூபாய் நோட்டு

D) அம்மாவின் கைப்பேசி

**விளக்கம்: சிறுகதை, நாவல்களைப் படமாக்குவதில் தங்கர்பச்சான் காட்டிய அக்கறை அதிகம். ஒளிப்பதிவாளர், எழுத்தாளர், இயக்குநர், நடிகர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். இவரின் அழகி என்ற திரைப்படம் தங்கர்பச்சான் என்ற ஆளுமையைத் திரையுலகில் பரவலாக அறியசெய்தது.**

121) அழகர்சாமியின் குதிரை என்ற கதை அழகர்சாமியின் குதிரை என்ற பெயரிலேயே திரைப்படமாக வெளிவந்துள்ளது. இக்கதையை எழுதியவர் யார்?

A) கி.ராஜநாராயணன்

B) ஜெயமோகன்

**C) பாஸ்கர் சக்தி**

D) பி.எச்.டேனியல்

**விளக்கம்: கி.ராஜநாராயணன் – கிடை என்ற கதை ஒருத்தி என்ற திரைப்படமானது**

**ஜெயமோகன் – ஏழாம் உலகம் என்ற கதை நான் கடவுள் என்ற திரைப்படமானது**

**பாஸ்கர் சக்தி – அழகர்சாமியின் குதிரை என்ற கதை அழகர்சாமியின் குதிரை என்ற திரைப்படமானது**

**பி.எச்.டேனியல் – எரியும் பனிக்காடு என்ற கதை பரதேசி என்ற திரைப்படமானது.**

122) இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாடகங்களில் பொருந்தாத எது?

A) மழை

B) காலயந்திரங்கள்

**C) நூறு குறுநாடகங்கள்**

D) புனரபி ஜனனம் புனரபி மரணம்

**விளக்கம்: இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாடகங்கள்:**

**1. இராமாநுஜர்**

**2. இறுதி ஆட்டம்**

**3. கொங்கைத்தீ**

**4. ஔரங்கசீப்**

**5. நந்தன் கதை**

**6. பசி**

**7. மழை**

**8. காலயந்திரங்கள்**

**9. புனரபி ஜனனம் புனரபி மரணம்**

**10. தர்மம்**

**11. போர்வை போர்த்திய உடல்கள்**

**நூறு குறுநாடகங்கள் என்பது அ.ராமசாமி எழுதிய நாடகமாகும்.**

123) கூற்று: இலக்கியம் திரைப்படமாக உருவானது.

காரணம்: சமூக மாற்றத்திற்கான உந்துசக்தியாக எழுத்தாளர்களின் கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லும் ஊடகம் திரைப்படம்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: சமூக மாற்றத்திற்கான உந்து சக்தியாக எழுத்தாளர்களின் படைப்புகள் இருந்தாலும், அவை அனைத்து மக்களிடமும் சென்று சேருவதில்லை. அவ்விலக்கியம் சொல்லவரும் கருத்தை மக்களிடம் கொண்டு செல்லத் திரைப்பட ஊடகமே பெருந்துணையாக இருந்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக இலக்கியம் திரைப்படமாக உருவானது. மேற்கத்திய நாடுகளிலும்கூட, திரைப்படத்திற்கான கதையை இலக்கியத்தில் தேர்ந்தெடுக்கின்றனர்.**

124) மேனகா என்ற கதையை எழுதியவர் யார்?

**A) வடுவூர் துரைசாமி**

B) காசி விஸ்வநாதர்

C) ஜே.ஆர்.ரங்கராஜு

D) பம்மல் சம்பந்தனார்

**விளக்கம்: வடுவூர் துரைசாமி – மேனகா**

**காசி விஸ்வநாதர்– டம்பாச்சாரி**

**ஜே.ஆர்.ரங்கராஜு– ராஜாம்பாள்**

**பம்மல் சம்பந்தனார்– இழந்த காதல்**

125) ச.தமிழ்ச்செல்வன் எழுதிய வெயிலோடு போய் என்ற சிறுகதையை சசி என்பவர் எந்த பெயரில் படமாக்கினார்?

**A) பூ**

B) விசாரணை

C) தடயம்

D) அழகி

**விளக்கம்: சசி இயக்கிய பூ என்னும் திரைப்படம் எதார்த்த வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்ததுதானே. ச.தமிழ்ச்செல்வன் எழுதிய** வெயிலோடு **போய் என்ற சிறுகதையைச் சசி பூ என்ற பெயரில் திரைப்படமாக்கினார். இக்கதை எளிமையான பெண்ணின் பேரன்பைப் பேசுகிறது.**

126) நாட்டார் கலைகளை எத்தனை வகையாகப் பிரிப்பர்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: தமிழகம் முழுவதும் பரவலாக நிகழ்த்தப்படும் நாட்டார் கலைகளை அதன் தன்மைக்கேற்ப,**

**1. சடங்குசார் கலைகள்**

**2. பாடல்சார் கலைகள்**

**3. கருவிசார் கலைகள்**

**என வகைப்படுத்துவர்.**

127) துக்ளக் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) பாதல் சர்க்கார்

B) விஜய் டெண்டுல்கர்

**C) கிரிஷ் கர்னாட்**

D) பெர்டோல்ட் பிரெகட்

**விளக்கம்: எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரஜித், விஜய் டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெகட்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.**

128) 'கண்ணாடிக் கலைக்குழு' நாடக அமைப்பு கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையது?

A) தாழ்த்தப்பட்டோர்

B) பெண்கள்

**C) திருநங்கைகள்**

D) மேற்காணும் அனைவரும்

**விளக்கம்: 2000–க்குப் பிறகு விளிம்புநிலைக் கருத்துக்களோடு மேடை ஏறிய நாடகங்களான ஆஷா பாரதியின் நாடகங்கள் திருநங்கைகள் குறித்துப் பேசின. அதற்கெனவே 'கண்ணாடிக் கலைக்குழு' நாடக அமைப்பு செயல்பட்டது.**

129) பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின. இதில் தவறாக பொருந்தியுள்ளதை தெரிவு செய்க?

A) சென்னை– ஆடுகளம்

B) மதுரை– சுதேசி.

C) பாண்டிச்சேரி– கூட்டுக்குரல்,

**D) தஞ்சை– தலைக்கோல்**

**விளக்கம்: சென்னை – ஆடுகளம், யவனிகா, பல்கலை அரங்கம், அரூபம்**

**மதுரை– சுதேசி.**

**பாண்டிச்சேரி– கூட்டுக்குரல், தலைக்கோல்,**

**தஞ்சை– அரங்கம்**

**காந்தி கிராமத்தில்– தளிர்.**

**திருச்சி– நாடகச் சங்கம்**

**திருவண்ணாமலை– தீட்சண்யா**

130) யாருடைய நாடகங்கள் வேளாண்மைக் குடிகளையும் பழங்குடி மனிதர்களையும் காட்சிப்படுத்தின?

A) வேலு சரவணன்

B) ரவியண்ணா

**C) முருகபூபதி**

D) மேற்காணும் அனைவரும்

**விளக்கம்: குழந்தைகள் நாடகச் செயல்பாட்டாளர்களாக வேலு சரவணன், ரவியண்ணா போன்றோரைக் குறிப்பிடலாம். முருகபூபதியின் நாடகங்கள் காட்சிப் படிமங்களின் வழியாக நிலமற்ற வேளாண்மைக் குடிகளையும் பழங்குடி மனிதர்களையும் காட்சிப்படுத்தின. செம்மூதாய், வனத்தாதி, தேகவயல், பித்த நிலத்தின் பொம்மைகள் போன்றவை குறிப்பிடத்தகுந்த நாடகங்களாகும்.**

131) அரங்க நிகழ்வுகள், பார்வையாளர்கள், பேசுபொருள் அடிப்படையில் மூவகை அரங்கை முன் வைத்தவர் யார்?

**A) பாதல் சர்க்கார்**

B) விஜய் டெண்டுல்கர்

C) கிரிஷ் கர்னாட்

D) பெர்டோல்ட் பிரெகட்டின்

**விளக்கம்: அரங்க நிகழ்வுகள், பார்வையாளர்கள், பேசுபொருள் அடிப்படையில் மூவகை அரங்கை முன் வைத்தவர் வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் ஆவார்.**

132) நிஜநாடக இயக்கத்தை எந்த ஆண்டு மதுரையில் மு.இராசுவாமி தொடங்கினார்?

A) 1977

**B) 1978**

C) 1979

D) 1980

**விளக்கம்: நிஜ நாடக இயக்கத்தை 1978–ஆம் ஆண்டு மதுரையில் மு.இராமசுவாமி தொடங்கினார். தொடக்கத்தில் எளிமையான திறந்தவெளி நாடகங்களை மட்டுமே நிகழ்த்திக் கொண்டிருந்த இவ்வியக்கம் பின்னாளில் மேடைகளில் தங்கள் நாடகங்களை அரங்கேற்றியது.**

133) நீர்க்குமிழி என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) கே.பாலச்சந்தர்**

B) கோமல் சுவாமிநாதன்

C) பம்மல் சம்பந்தனார்

D) வடுவூர் துரைசாமி

**விளக்கம்: சர்வர் சுந்தரம், நீர்க்குமிழி, எதிர்நீச்சல் – கே.பாலசந்தர்.**

**கோமல் சுவாமிநாதன் – தண்ணீர் தண்ணீர், செக்குமாடுகள்**

134) கூற்று: 1990களின் தொடக்கத்தில் நாடகத்துறையில் ஒடுக்கப்பட்டோர் அரங்கு உருவாவதற்கான சூழல் தோன்றியது.

காரணம்: சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளால் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், திருநங்கைகள், சிறுவர் போன்றோர் பல்வேறு முறைகளில் ஒடுக்கப்பட்டனர்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: சமூக மாற்றத்திற்கேற்ப கலை–இலக்கிய வடிவங்களின் போக்குகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளால் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், திருநங்கைகள்,**

**சிறுவர் போன்றோர் பல்வேறு முறைகளில் ஒடுக்கப்படுவதால் அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை முன்னிறுத்தி விவாதிக்கும் போக்கு 1990களின் தொடக்கத்தில் உருவானது. அதனால் நாடகத்துறையில் ஒடுக்கப்பட்டோர் அரங்கு உருவாவதற்கான சூழல் தோன்றியது.**

135) நாற்காலிக்காரர் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) நா.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) அம்பை

D) பிரபஞ்சன்

**விளக்கம்: நா.முத்துசாமி– நாற்காலிக்காரர்**

**இந்திரா பார்த்தசாரதி– போர்வை போரத்திய உடல்கள்**

**அம்பை– பயங்கள்**

**பிரபஞ்சன்–முட்டை**

136) தியாகபூமி என்னும் புதினம் திரைப்படமானது. இப்புதினம் யாருடையது?

A) ஜே.ஆர்.ரங்கராஜு

B) வடுவூர் துரைசாமி

**C) கல்கி**

D) ராஜாஜி

**விளக்கம்: ஜே.ஆர்.ரங்கராஜு – சவுக்கடி சந்திரகாந்தா**

**வடுவூர் துரைசாமி – மைனர் ராஜாமணி**

**கல்கி– தியாகபூமி**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

137) சாசனம் என்ற என்ற திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) பாலு மகேந்திரா

B) ருத்ரய்யா

**C) மகேந்திரன்**

D) ஞான.ராஜசேகரன்

**விளக்கம்: பாலு மகேந்திரா – சந்தியா ராகம், வீடு**

**ருத்ரய்யா– அவள் அப்படித்தான்**

**மகேந்திரன் – முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம்.**

**ஞான.ராஜசேகரன் – மோகமுள்**

138) கூற்று: 'பரீக்ஷா' என்னும் நாடகக்குழு ஞாநியால் 1978–ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது.
காரணம்: நவீன நாடகங்களில் சோதனை முயற்சிகளை மேற்கொண்டதால் இக்குழு 'பரீக்ஷா' என்னும் பெயரைப் பெற்றது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: 'பரீக்ஷா' என்னும் நாடகக்குழு ஞாநியால் 1978–ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. நவீன நாடகங்களில் சோதனை முயற்சிகளை மேற்கொண்டதால் இக்குழு 'பரீக்ஷா' என்னும் பெயரைப் பெற்றது.**

139) யாருடைய படங்களில், ஒரு காட்சியை அழகுபடுத்த, அதன் கருத்தைப் பார்வையாளனுக்குச் சரியாகக் கொண்டு சேர்க்க இசை பயன்படுத்தப்பட்டிருக்கும்?

A) மகேந்திரன்

**B) பாலுமகேந்திரா**

C) ராஜசேகரன்

D) ருத்ரய்யா

**விளக்கம்: பாலு மகேந்திராவின் படங்களில் ஒரு காட்சியை அழகுபடுத்த, அதன் கருத்தைப் பார்வையாளனுக்குச் சரியாகக் கொண்டு சேர்க்க இசை பயன்படுத்தப்பட்டிருக்கும். அவர் தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு மிக்கவர். தன்னை ஒரு எழுத்தாளராக அடையாளம் காட்டுவதோடு பல படங்களுக்குத் திரைக்கதையையும் வசனத்தையும் இவரே எழுதியிருக்கிறார்.**

140) எந்த ஆண்டு தமிழில் முதன்முதலாக அமைதி என்னும் தலைப்பில் உரையாடல் இல்லாத மௌன நாடகத்தை பாரதிதாசன் எழுதினார்?

A) 1946

B) 1949

C) 1954

**D) 1964**

**விளக்கம்: 1964–ஆம் ஆண்டு ஆண்டு தமிழில் முதன்முதலாக அமைதி என்னும் தலைப்பில் உரையாடல் இல்லாத மௌன நாடகத்தை பாரதிதாசன் எழுதினார்.**

141) வழக்கமான திரைப்படங்களில் இடம்பெறும் நடனத்தையும் பாட்டையும் தவிர்த்து தான் எழுத்தில் படைத்த உலகை, திரைப்படத்தில் காட்ட முயன்ற இலக்கிய எழுத்தாளர் யார்?

A) அகிலன்

B) கொத்தமங்கலம் சுப்பு

C) பாலு மகேந்திரா

**D) ஜெயகாந்தன்**

**விளக்கம்: ஜெயகாந்தன் வழக்கமான திரைப்படங்களில் இடம்பெறும் நடனத்தையும் பாட்டையும் தவிர்த்து தான் எழுத்தில் படைத்த உலகை, திரைப்படத்தில் காட்ட முயன்ற இலக்கிய எழுத்தாளர் ஆவார்.**

142) வேலைக்காரி என்னும் புதினம் திரைப்படமாக வெளிவந்தது. இப்புதினத்தை எழுதியவர் யார்?

**A) அறிஞர் அண்ணா**

B) கே.ஆர்.ரங்கராஜு

C) வடுவூர் துரைசாமி

D) கல்கி

**விளக்கம்: அறிஞர் அண்ணா – வேலைக்காரி**

**கே.ஆர்.ரங்கராஜு– சவுக்கடி சந்திரகாந்தா**

**வடுவூர் துரைசாமி– மைனர் ராஜாமணி**

**கல்கி– தியாகபூமி**

143) தமிழகம் முழுவதும் பரவலாக நிகழ்த்தப்படும் நாட்டார் அரங்கக் கலைகள் எத்தனை வகைப்படும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: தமிழகம் முழுவதும் பரவலாக நிகழ்த்தப்படும் நாட்டார் அரங்கக் கலைகள் அதன் தன்மைக்கேற்ப,**

**1. சடங்குசார் கலைகள்**

**2. பாடல்சார் கலைகள்**

**3. கருவிசார் கலைகள்**

**என வகைப்படுத்துவர்.**

144) கூற்று: இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட விக்டோரிய நாடக மரபினைப் பின்பற்றிப் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் மக்களிடையே செல்வக்குப் பெற்றன.

காரணம்: உரைநடை, வசனம், மேடையமைப்பு, ஒளி அமைப்பு போன்ற அரங்கக்கூறுகள் இணைக்கப்பட்டது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட விக்டோரிய நாடக மரபினைப் பின்பற்றிப் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் மக்களிடையே செல்வக்குப் பெற்றன. உரைநடை, வசனம், மேடையமைப்பு, ஒளி அமைப்பு போன்ற அரங்கக்கூறுகள் இணைக்கப்பட்டதால் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றன.**

145) கட்டியக்காரன் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) ந.முத்துசாமி**

B) இந்திரா பார்த்தசாரதி

C) சே.இராமானுஜம்

D) மு.இராமாசாமி

**விளக்கம்: ந.முத்துசாமி எழுதிய நாடகங்கள்:**

**1. காலம் காலமாக**

**2. நாற்காலிக்காரர்**

**3. அப்பாவும் பிள்ளையும்**

**4. இங்கிலாந்து**

**5. சுவரொட்டிகள்**

**6. உந்திச்சுழி**

**7. கட்டியக்காரன்**

**8. விறகுவெட்டிகள்**

**9. வண்டிச்சோடை**

**10. நற்றுணையப்பன் அல்லது கடவுள்.**

146) கூற்று: முதல் மற்றும் இரண்டாம் வகை அரங்குகள் தம் செல்வாக்கை இழக்கத் தொடங்கின.

காரணம்: 19–ம் நூற்றாண்டின் இறுதியில் உலகெங்கிலும் மக்களின் சிந்தனையின் வளர்ச்சிக்கேற்ப நாடகங்கள் புதுவடிவம் பெற்றன.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: 19–ம் நூற்றாண்டின் இறுதியில் உலகெங்கிலும் மக்களின் சிந்தனையின் வளர்ச்சிக்கேற்ப நாடகங்கள் புதுவடிவம் பெற்றன. இதனால், முதல் மற்றும் இரண்டாம் வகை அரங்குகள் தம் செல்வாக்கை இழக்கத் தொடங்கின.**

147)பெண்ணிய அரங்கச் செயல்பாடுகளில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களாக குறிப்பிடப்படுபவர்களில் பொருந்தாதவர் யார்?

A) அ.மங்கை

B) மு.ஜீவா

C) பிரசன்னா ராமசாமி

**D) கே.ஏ.குணசேகரன்**

**விளக்கம்: பெண்ணிய அரங்கச் செயல்பாடுகளில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களாக அ.மங்கை, மு.ஜீவா, பிரசன்னா ராமசாமி ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். அ.மங்கை** என்பவர் **இன்குலாப் எழுதிய 'ஔவை', சே.இராமானுஜம் எழுதிய 'மௌனக்குறம்' ஆகிய நாடகங்களை மேடையேற்றினார்.**

148) எரியும் பனிக்காடு என்ற கதை பரதேசி என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்துள்ளது. இக்கதையை எழுதியவர் யார்?

A) கி.ராஜநாராயணன்

B) ஜெயமோகன்

C) பாஸ்கர் சக்தி

**D) பி.எச்.டேனியல்**

**விளக்கம்: கி.ராஜநாராயணன் – கிடை என்ற கதை ஒருத்தி என்ற திரைப்படமானது**

**ஜெயமோகன் – ஏழாம் உலகம் என்ற கதை நான் கடவுள் என்ற திரைப்படமானது**

**பாஸ்கர் சக்தி – அழகர்சாமியின் குதிரை என்ற கதை அழகர்சாமியின் குதிரை என்ற திரைப்படமானது**

**பி.எச்.டேனியல் – எரியும் பனிக்காடு என்ற கதை பரதேசி என்ற திரைப்படமானது**

149) கீழ்க்காணும் எந்த படத்திற்கு ஜெயகாந்தன் திரைக்கதை, வசனம் எழுதி இயக்கினார்?

A) ஏழாம் உலகம்

**B) யாருக்காக அழுதான்**

C) சில நேரங்களில் சில மனிதர்கள்

D) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

**விளக்கம்: மேற்காணும் நூல்கள் அனைத்தும் ஜெயகாந்தன் எழுதிய நூல்கள் ஆகும். இதில் சில நேரங்களில் சில மனிதர்கள் என்பது சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ஆகும். உன்னைப்போல் ஒருவன் படத்திற்கான திரைக்கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு என அனைத்தும் ஜெயகாந்தன் ஆகும். யாருக்காக அழுதான் என்ற படத்திற்குத் திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியும் இருக்கிறார்.**

150) எப்போது பெண்ணிய அரங்கம், தலித்திய அரங்கம், திருநங்கைகள் அரங்கம், சிறுவர் அரங்கம் போன்றவை தோன்றின?

A) 1970

B) 1980

**C) 1990**

D) 1960

**விளக்கம்: சமூக மாற்றத்திற்கேற்ப கலை–இலக்கிய வடிவங்களின் போக்குகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளால் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், திருநங்கைகள், சிறுவர் போன்றோர் பல்வேறு முறைகளில் ஒடுக்கப்படுவதால் அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை முன்னிறுத்தி விவாதிக்கும் போக்கு 1990–களின் தொடக்கத்தில் உருவானது. அதனால் நாடகத்துறையில் ஒடுக்கப்பட்டோர் அரங்கு உருவாவதற்கான சூழல் தோன்றியது. அந்த வகையில் பெண்ணிய அரங்கம், தலித்திய அரங்கம், திருநங்கைகள் அரங்கம், சிறுவர் அரங்கம் போன்றவை தோன்றின.**

151) திக்கற்ற பார்வதி என்னும் புதினம் திரைப்படமானது. இப்புதினம் யாருடையது?

A) ஜே.ஆர்.ரங்கராஜு

B) வடுவூர் துரைசாமி

C) கல்கி

**D) ராஜாஜி**

**விளக்கம்: ஜே.ஆர்.ரங்கராஜு– சவுக்கடி சந்திரகாந்தா**

**வடுவூர் துரைசாமி– மைனர் ராஜாமணி**

**கல்கி– தியாகபூமி**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

152) நாடகங்களைப் பார்க்க பார்வையாளர்கள் வரவேண்டும் என்பதற்குப் பதிலாக பார்வைகளை நோக்கி நாடகங்கள் செல்ல வேண்டும் என்ற கருத்து உருவானது. இதனை மூன்றாம் அரங்கம் என்பதாக அறிமுகப்படுத்தியவர் யார்?

**A) பாதல் சர்க்கார்**

B) விஜய் டெண்டுல்கர்

C) கிரிஷ் கர்னாட்

D) பெர்டோல்ட் பிரெகட்டின்

**விளக்கம்: நாடகங்களைப் பார்க்க பார்வையாளர்கள் வர வேண்டும் என்பதற்குப் பதிலாக பார்வைகளை நோக்கி நாடகங்கள் செல்ல வேண்டும் என்ற கருத்து உருவானது. இதனை மூன்றாம் அரங்கம் என்பதாக அறிமுகப்படுத்தியவர் பாதல் சர்க்கார் ஆவார்.**

153) பாதல் சர்க்கார் அறிமுகப்படுத்திய நாடக அரங்கின் வகைகளில் ஏழைகளின் அரங்கு என அழைக்கப்பட்ட அரங்கு வகை எது?

A) முதல் அரங்கு

B) இரண்டாrhம் அரங்கு

**C) மூன்றாம் அரங்கு**

D) நான்காம் அரங்கு

**விளக்கம்: அரங்க நிகழ்வுகள், பார்வையாளர்கள், பேசுபொருள் அடிப்படையில் மூவகை அரங்கை முன்வைத்தவர் வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் ஆவார்.**

**ஒப்பனை அரங்கை கைவிட்டு விட்டு நடிகனின் குரல், உடல் இவற்றை மையப்படுத்தும் அரங்கு, மூன்றாம் அரங்கு அல்லது ஏழைகளின் அரங்கு எனப்பட்டது.**

154) மக்களின் துயரங்களைப் போக்கும் விதமான பாத்திரங்களுக்காக அறியப்பட்டவர் யார்?

A) சிவாஜி கணேசன்

**B) எம்.ஜி.ஆர்**

C) ஜெமினி கணேசன்

D) ஜெய்சங்கர்

**விளக்கம்: உணர்ச்சிகரமான வசனத்திற்காக சிவாஜி கணேசனும், அதன் மறுதலையாக மக்களின் துயரங்களைப் போக்கும் விதமான பாத்திரங்களுக்காக எம்.ஜி.ஆர்–ம் அறியப்பட்டார்கள். இவ்விரு ஆளுமைகளும் ஒரே காலகட்டத்தில் நாயகர்களாக வலம் வந்தது தமிழ்த் திரைப்பட வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ஜெமினிகணேசன், ஜெய்சங்கர் போன்றோரும் அக்கால கட்டத்தில் நாயகர்களாக நன்கு அறியப்பட்டனர்.**

155) இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட நாடக மரபு எது?

A) பார்சி நாடகம்

**B) விக்டோரியா நாடகம்**

C) பாதல் நாடகம்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது. இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட விக்டோரியா நாடக மரபினைப் பின்பற்றிப் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் மக்களிடையே செல்வக்குப் பெற்றன.**

156) விடிய விடிய நடைபெற்ற நாடகங்களை மூன்று அல்லது நான்கு மணிநேர நிகழ்வாகச் சுருக்கிய நாடக மரபு எது?

A) விக்டோரியா நாடக மரபு

B) மேற்கத்திய நாடக மரபு

**C) பார்சி கம்பெனிகளின் நாடகம்**

D) பாதல் சர்க்கார் நாடகம்

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது. இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட விக்டோரியா நாடக மரபினைப் பின்பற்றிப் பார்சி**

**கம்பெனிகளின் நாடகங்கள் மக்களிடையே செல்வக்குப் பெற்றன. விடிய, விடிய நடைபெற்ற நாடகங்களை மூன்று அல்லது நான்கு மணிநேர நிகழ்வாகச் சுருக்கியது பார்சி நாடகங்கள்.**

157) கீழ்க்காணும் நூல்களில் ஜெயகாந்தன் எழுதாத நூல் எது?

A) உன்னைப்போல் ஒருவன்

B) யாருக்காக அழுதான்

C) சில நேரங்களில் சில மனிதர்கள்

**D) மலைக்கள்ளன்**

**விளக்கம்: ஜெயகாந்தன் எழுதிய நூல்கள் – உன்னைப் போல் ஒருவன், யாருக்காக அழுதான், சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்.**

**மலைக்கள்ளன் என்பது இராமலிங்கனாரின் புதினம் ஆகும்.**

158) அரங்க நிகழ்வுகள், பார்வையாளர்கள், பேசுபொருள் அடிப்படையில் அரங்கு எத்தனை வகை என வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் கூறியுள்ளார்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: அரங்க நிகழ்வுகள், பார்வையாளர்கள், பேசுபொருள் அடிப்படையில் மூவகை அரங்கை முன் வைத்தவர் வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் ஆவார்.**

159) எப்போதும் வசனங்களால் நிரப்பப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்த் திரைப்படத்தைக் காட்சிப் பூர்வமாக அணுகியவர்கள் யார்?

**A) பாலு மகேந்திரா**

B) ஜெயகாந்தன்

C) ராஜசேகரன்

D) ருத்ரய்யா

**விளக்கம்: 1970–களில் தமிழ்த் திரைப்படத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. எப்போதும் வசனங்களால் நிரப்பப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்த் திரைப்படத்தைக் காட்சிப் பூர்வமாக அணுகியவர்கள் மகேந்திரனும் பாலு மகேந்திராவும். அதற்கான களத்தை இலக்கியத்தில் இருந்து தேர்ந்தெடுத்தனர்.**

160) கீழ்க்காணும் நூல்களில் எந்த நூல் திரைப்படமாவதற்கு திரைக்கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு என அனைத்தும் ஜெயகாந்தனே எழுதினார்?

**A) உன்னைப்போல் ஒருவன்**

B) ஏழாம் உலகம்

C) சில நேரங்களில் சில மனிதர்கள்

D) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

**விளக்கம்: மேற்காணும் நூல்கள் அனைத்தும் ஜெயகாந்தன் எழுதிய நூல்கள் ஆகும். இதில் சில நேரங்களில் சில மனிதர்கள் என்பது சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ஆகும். உன்னைப்போல் ஒருவன் படத்திற்கான திரைக்கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு என அனைத்தும் ஜெயகாந்தன் ஆகும்.**

161) நிஜ நாடக இயக்கத்தை 1978–ஆம் ஆண்டு மதுரையில் தொடங்கியவர் யார்?

A) நா.முத்துசாமி

B) பாலு மகேந்திரா

C) பம்மல் சம்பந்தனார்

**D) மு.இராமசுவாமி**

**விளக்கம்: நிஜ நாடக இயக்கத்தை 1978–ஆம் ஆண்டு மதுரையில் மு.இராமசுவாமி தொடங்கினார். தொடக்கத்தில் எளிமையான திறந்தவெளி நாடகங்களை மட்டுமே நிகழ்த்திக் கொண்டிருந்த இவ்வியக்கம் பின்னாளில் மேடைகளில் தங்கள் நாடகங்களை அரங்கேற்றியது.**

162) 'பரீக்ஷா' என்னும் நாடகக்குழு யாரால் 1978–ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது?

A) நா.முத்துசாமி

B) மு.இராமசுவாமி

**C) ஞாநி**

D) அ.மங்கை

**விளக்கம்: 'பரீக்ஷா' என்னும் நாடகக்குழு ஞாநியால் 1978–ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. நவீன நாடகங்களில் சோதனை முயற்சிகளை மேற்கொண்டதால் இக்குழு 'பரீக்ஷா' என்னும் பெயரைப் பெற்றது.**

163) முட்டை என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) நா.முத்துசாமி

B) இந்திரா பார்த்தசாரதி

C) அம்பை

**D) பிரபஞ்சன்**

**விளக்கம்: நா.முத்துசாமி– நாற்காலிக்காரர்**

**இந்திரா பார்த்தசாரதி– போர்வை போரத்திய உடல்கள்**

**அம்பை– பயங்கள்**

**பிரபஞ்சன்– முட்டை**

164) நாஞ்சில் நாடனின் தலைகீழ் விகிதங்கள் என்ற நாவலை அடிப்படையாக கொண்டு தங்கர் பச்சான் உருவாக்கிய படம் எது?

A) பூ

**B) சொல்லமறந்த கதை**

C) அம்மாவின் கைப்பேசி

D) ஒன்பது ரூபாய் நோட்டு

**விளக்கம்: நாஞ்சில் நாடனின் நாவலான தலைகீழ் விகிதங்கள் என்ற கதையை அடிப்படையாக கொண்டு சொல்ல மறந்த கதை என்ற திரைப்படத்தை தங்கர் பச்சான் உருவாக்கினார்.**

165) எந்த ஆண்டு சிவாஜி கணேசன் தாதாசாகிப்பால்கே விருதை பெற்றுள்ளார்?

**A) 1996**

B) 1979

C) 2010

D) 1969

**விளக்கம்: இந்தியத் திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தோருக்காக இந்திய அரசால் ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படும். இந்தியத் திரைப்படத் துறையின் தந்தை எனக் கருதப்படும் தாதாசாகேப் பால்கே அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டான 1969–ஆம் ஆண்டு இவ்விருது வழங்கும் அமைப்பு நிறுவப்பட்டது. தேவிகா ராணி 1969–ஆம் ஆண்டு முதன்முதலில் இவ்விருதைப் பெற்றார். தமிழகத்தில் 1996–ஆம் ஆண்டு சிவாஜி கணேசனும், 2010ஆம் ஆண்டு கே.பாலசந்தரும் இவ்விருதினைப் பெற்றுள்ளனார்.**

166) எந்த ஆண்டு காளிதாஸ் என்ற திரைப்படம் வெளிவந்தது?

A) 1919

B) 1921

C) 1928

**D) 1931**

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழில் 'குறத்திப் பாட்டும் டான்ஸம்' என்ற நான்கு படச்சுருள் கொண்ட குறும்படம் வெளி வந்தது. அதே ஆண்டு எச்.எம்.ரெட்டி இயக்கிய முதல் முழுநீளத் தமிழ்ப் படமான 'காளிதாஸ்' வெளிவந்தது.**

167) பாவை விளக்கு என்னும் புதினத்தை எழுதியவர் யார்?

A) இராமலிங்கனார்

**B) அகிலன்**

C) இராஜாஜி

D) வடுவூர் துரைசாமி

**விளக்கம்: இராமலிங்கனார் – மலைக்கள்ளன்**

**அகிலன்– பாவை விளக்கு**

**இராஜாஜி– திக்கற்ற பார்வதி**

**வடுவூர் துரைசாமி – மைனர் ராஜாமணி**

168) ஜெயகாந்தன் எழுதிய எந்த நூல் சாகித்திய அகாதெமி விருது பெற்றது?

A) உன்னைப்போல் ஒருவன்

B) யாருக்காக அழுதான்

**C) சில நேரங்களில் சில மனிதர்கள்**

D) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

**விளக்கம்: மேற்காணும் நூல்கள் அனைத்தும் ஜெயகாந்தன் எழுதிய நூல்கள் ஆகும். இதில் சில நேரங்களில் சில மனிதர்கள் என்பது சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல் ஆகும்.**

169) சந்திரகுமாரின் எந்த கதை விசாரணை என்ற திரைப்படமாக வெளிவந்துள்ளது?

**A) லாக்கப்**

B) விசாரணை

C) காவல் நிலையம்

D) நீதிமன்றம்

**விளக்கம்: மு.சந்திரகுமாரின் லாக்கப் என்ற கதை விசாரணை என்ற பெயரில் திரைப்படமாக வெளிவந்துள்ளது.**

170) எந்த ஆண்டு தேசிய நாடகப் பள்ளியும் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகமும் சேர்ந்து நடத்திய 70 நாள் நாடகப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது?

A) 1977

**B) 1978**

C) 1979

D) 1980

**விளக்கம்: 1978–ஆம் ஆண்டு தேசிய நாடகப் பள்ளியும் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகமும் சேர்ந்து நடத்திய 70 நாள் நாடகப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.**

171) மூர்மார்க்கெட் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) அறந்தை நாராயணன்**

B) ஞாநி

C) அ.ராமசாமி

D) அ.மங்கை

**விளக்கம்: அறந்தை நாராயணன் – மூர் மார்க்கெட்**

**ஞாநி– பலூன், நாங்கள்**

**அ.ராமசாமி– பல்லக்குத்தூக்கிகள்**

**அ.மங்கை– மௌனக்குரல் குழுவை நடத்தியவர்.**

172) இராமலிங்கனார் எழுதிய எந்த புதினம் திரைப்படமாக வெளிவந்தது?

A) தியாகபூமி

B) திக்கற்ற பார்வதி

C) தில்லானா மோகனாம்மாள்

**D) மலைக்கள்ளன்**

**விளக்கம்: கல்கி– தியாக பூமி, பார்த்திபன் கனவு**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

**தில்லானா மோகனாம்மாள் – கொத்தமங்கலம் சுப்பு**

**மலைக்கள்ளன்– இராமலிங்கனார்**

173) எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளின் நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இதில் பொருந்தாதது எது?

A) பாதல் சர்க்கார்

B) விஜய் டெண்டுல்கர்

C) கிரிஷ் கர்னாட்

**D) பரீக்**

**விளக்கம்: எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம், இந்திரஜித் மற்றும் விஜய்**

**டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெகட்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.**

174) எந்த நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது?

A) 18

**B) 19**

C) 20

D) 17

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது. இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட விக்டோரியா நாடக மரபினைப் பின்பற்றிப் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் மக்களிடையே செல்வக்குப் பெற்றன.**

175) நாடகக்குழுக்கள் மற்றும் அதன் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

A) முத்ரா– சென்னை

B) தளிர் அரங்கு– காந்தி கிராமம்

C) துளிர்– தஞ்சை

**D) கூடம்– தஞ்சை**

**விளக்கம்: கூடம் – சென்னை**

176) மோகமுள் என்ற என்ற திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) பாலு மகேந்திரா

B) ருத்ரய்யா

C) மகேந்திரன்

**D) ஞான.ராஜசேகரன்**

**விளக்கம்: பாலு மகேந்திரா– சந்தியா ராகம், வீடு**

**ருத்ரய்யா– அவள் அப்படித்தான்**

**மகேந்திரன் – முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம்.**

**ஞான.ராஜசேகரன் – மோகமுள்.**

177) எந்த ஆண்டு தமிழ்த் திரைப்படத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன?

**A) 1970**

B) 1975

C) 1980

D) 1977

**விளக்கம்: 1970களில் தமிழ்த் திரைப்படத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன. எப்போதும் வசனங்களால் நிரப்பப்பட்டுக் கொண்டிருந்த தமிழ்த் திரைப்படத்தைக் காட்சிப் பூர்வமாக அணுகியவர்கள் மகேந்திரனும் பாலு மகேந்திராவும். அதற்கான களத்தை இலக்கியத்தில் இருந்து தேர்ந்தெடுத்தனர்.**

178) சென்னைக் கலைக்குழு கீழ்க்காணும் எதற்காக பிரளயனால் தொடங்கப்பட்டது?

A) பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்குதல்

B) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

C) பெண்களின் பல்வேறு பிரச்சனைகள்

**D) எழுத்தறிவு மற்றும் அறிவியல் பிரச்சார நாடகங்கள்**

**விளக்கம்: பல்கலைக்கழக மாணவர்களிடையே அரங்க ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் உருவாக்குதல்– பல்கலையரங்கம்**

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு– கூட்டுக்குரல்**

**பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் – மௌனக்குரல்**

**எழுத்தறிவு மற்றும் அறிவியல் பிரச்சார நாடகங்கள் – சென்னைக் கலைக்குழு.**

179) கூட்டுக்குழு என்ற நாடகக்குழுவை பாண்டிச்சேரியில் எப்போது அ.ராமசாமி ஆரம்பித்தார்?

**A) 1990**

B) 1970

C) 1980

D) 1997

**விளக்கம்: பாண்டிச்சேரியில் 1990களில் கூட்டுக்குரல் என்ற குழுவை ஆரம்பித்தவர் அ.ராமசாமி. இக்குழு 'நியாயங்கள்', 'திருப்பிக்கொடு', 'பல்லக்குத்தூக்கிகள்', 'சிற்பியின் நகரம்' முதலான நாடகங்களை நடத்தியுள்ளது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நாடகங்களையும் தலித்திய உள்ளடக்க நாடகங்களான 'தண்ணீர்', 'வார்த்தை மிருகம்' போன்றனவும் இக்குழுவின் முக்கியமான நாடகங்கள் ஆகும்.**

180) கமலா என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) பாதல் சர்க்கார்

**B) விஜய் டெண்டுல்கர்**

C) கிரிஷ் கர்னாட்

D) பெர்டோல்ட் பிரெகட்

**விளக்கம்: எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம் இந்திரஜித், விஜய் டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெகட்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.**

181) தியாக பூமி புதினத்தின் ஆசிரியர் யார்?

**A) கல்கி**

B) ராஜாஜி

C) இராமலிங்கனார்

D) வடுவூர் துரைசாமி

**விளக்கம்: கல்கி– தியாக பூமி, பார்த்திபன் கனவு**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

**தில்லானா மோகனாம்மாள் – கொத்தமங்கலம் சுப்பு**

**மலைக்கள்ளன்– இராமலிங்கனார்.**

182) இந்திய அரசால் நிகழ்த்துக் கலைகளுக்காக நிறுவப்பட்ட தேசியளவிலான அமைப்பு எது?

**A) சங்கீத நாடக அகாதெமி**

B) பாரதிய நாட்டிய சங்கம்

C) தேசிய நாடகப்பள்ளி

D) தேசிய இயல் இசை நாடகப் பள்ளி

**விளக்கம்: 'சங்கீத நாடக அகாதெமி' இந்திய அரசால் நிகழ்த்துக் கலைகளுக்காக நிறுவப்பட்ட தேசியளவிலான அமைப்பாகும். 1952–ஆம் ஆண்டு புதுடெல்லியில் உருவான இவ்வமைப்பு இந்தியக் கல்வி அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வந்தது. தற்போது இந்தியப் பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.**

183) வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் மூவகை அரங்கை முன் வைத்தவர் ஆவார். கீழ்க்காணும் எதன் அடிப்படையில் இவர் மூவகை அரங்கை வகைப்படுத்தவில்லை?

A) அரங்க நிகழ்வுகள்

B) பார்வையாளர்கள்

C) பேசுபொருள்

**D) ஒளி அமைப்பு**

**விளக்கம்: அரங்க நிகழ்வுகள், பார்வையாளர்கள், பேசுபொருள் அடிப்படையில் மூவகை அரங்கை முன் வைத்தவர் வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் ஆவார்.**

184) சென்னையில் எந்த ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சி திரையிடப்பட்டது?

A) 1895

B) 1896

**C) 1897**

D) 1898

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலிமையான காட்சி ஊடகம் திரைப்படம். 1895–இல் லூமியர் சகோதரரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் 1896–ஆம் ஆண்டு மும்பையில் முதல் சலனப்படம் திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897–ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார்.**

185) கொத்தமங்கலம் சுப்பு எழுதிய எந்த புதினம் திரைப்படமாக வெளிவந்தது?

A) தியாகபூமி

B) திக்கற்ற பார்வதி

**C) தில்லானா மோகனாம்மாள்**

D) மலைக்கள்ளன்

**விளக்கம்: கல்கி– தியாக பூமி, பார்த்திபன் கனவு**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

**தில்லானா மோகனாம்மாள் – கொத்தமங்கலம் சுப்பு**

**மலைக்கள்ளன் – இராமலிங்கனார்.**

186) இந்தியர் ஒருவரால் கட்டப்பட்ட தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு 'கெயிட்டி' ஆகும். இதனை கட்டியவர் யார்?

A) சுவாமிக்கண்ணு வின்சென்ட்

B) எட்வர்ட்

**C) வெங்கையா**

D) டுபாண்ட்

**விளக்கம்: 1914–ஆம் ஆண்டு சென்னையில் வெங்கையா என்பவரால் 'கெயிட்டி' திரையரங்கு கட்டப்பட்டது. இந்தியர் ஒருவரால் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட முதல் திரையரங்கு இதுவே ஆகும்.**

187) இந்தியர் ஒருவர் தயாரித்து வெளியிட்ட முதல் இந்தியத் திரைப்படம் எது?

**A) ராஜா ஹரிச்சந்திரா**

B) கீசகவதம்

C) ஆலம் ஆரா

D) காளிதாஸ்

**விளக்கம்: தாதா சாகேப் பால்கே தயாரித்து வெளியிட்ட 'ராஜா ஹரிச்சந்திரா' என்னும் மௌனப்படமே இந்தியர் ஒருவர் தயாரித்து வெளியிட்ட முதல் இந்தியத் திரைப்படம் ஆகும்.**

188) கூற்று: இந்தியாவில் திரைப்படம் தயாரிக்கும் ஆர்வம் எழுந்தது.

காரணம்: 1914–இல் சென்னையில் வெங்கையா என்பவரால் 'கெயிட்டி' திரையரங்கு கட்டப்பட்டது.

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**விளக்கம்: டுபாண்ட் என்பவர் ஏசுநாதரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் கதைப்படத்தைக் கொண்டு வந்து பம்பாயில் காட்டினார். அந்தப் படத்தின் பெயர் 'ஏசுவின் வாழ்க்கை'என்பதாகும். அந்த மௌனப்படம்தான் இந்தியாவில் காட்டப்பட்ட முதல் கதைப்படம் ஆகும். அதன்பின் பெரும்பாலும் மேலைநாட்டில் தயாரிக்கப்பட்ட கதைப்படங்களே இங்கு திரையிடப்பட்டன. இக்கதைப்படங்கள் வெளிவர ஆரம்பித்த பின், திரைப்படங்களுக்கு மக்களிடையே வரவேற்பு கூடியது. அதனால் இந்தியாவில் திரைப்படம் தயாரிக்கும் ஆர்வம் எழுந்தது**

189) எந்த ஆண்டு தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு சென்னை அண்ணாசாலையில் (மவுண்ட் ரோடு) கட்டப்பட்டது?

A) 1898

B) 1897

C) 1902

**D) 1900**

**விளக்கம்: 1900–இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, சென்னை அண்ணாசாலையில் (மவுண்ட் ரோடு) வார்விக் மேஜர் என்னும் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. இதன் பெயர் எலக்ட்ரிக் தியேட்டர் ஆகும்.**

190) கூட்டுக்குரல் என்ற குழுவை பாண்டிச்சேரியில் ஆரம்பித்தவர் யார்?

**A) அ.ராமசாமி**

B) அ.மங்கை

C) பிரளயன்

D) ஞாநி

**விளக்கம்: பாண்டிச்சேரியில் 1990களில் கூட்டுக்குரல் என்ற குழுவை ஆரம்பித்தவர் அ.ராமசாமி. இக்குழு 'நியாயங்கள்', 'திருப்பிக்கொடு', 'பல்லக்குத்தூக்கிகள்', 'சிற்பியின்நகரம்' முதலான நாடகங்களை**

**நடத்தியுள்ளது. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நாடகங்களையும் தலித்திய உள்ளடக்க நாடகங்களான 'தண்ணீர்', 'வார்த்தை மிருகம்' போன்றனவும் இக்குழுவின் முக்கியமான நாடகங்கள் ஆகும்.**

191) அம்மாவின் கைப்பேசி என்ற நாவல் அதே பெயரில் படமாக்கப்பட்டது. இந்த நாவலை எழுதியவர் யார்?

**A) தங்கர் பச்சான்**

B) நாஞ்சில் நாடன்

C) மகேந்திரன்

D) ஜெயகாந்தன்

**விளக்கம்: சிறுகதை, நாவல்களைப் படமாக்குவதில் தங்கர்பச்சான் காட்டிய அக்கறை அதிகம். ஒளிப்பதிவாளர், எழுத்தாளர், இயக்குநர், நடிகர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர் இவர். இவர் தாம் எழுதிய ஒன்பது ரூபாய் நோட்டு மற்றும் அம்மாவின் கைப்பேசி நாவல்களை அதேபெயரில் படமாக்கினார்.**

192)நாடகக்குழுக்கள் மற்றும் அதன் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

A) அரங்கம்– தஞ்சை

B) எது?– சென்னை

**C) சுதேசிகள்– மதுரை**

D) ஜவாலா– புதுவை

**விளக்கம்: ஜவாலா – மதுரை**

193) தழுவல் நாடகங்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தது 'துர்க்கிர அவலம்' ஆகும். இதனுடன் தொடர்புடையவர் யார்?

**A) மு.ராமசாமி**

B) அ.ராமசாமி

C) கே.ஏ.குணசேகரன்

D) சே.இராமானுஜம்

**விளக்கம்: மு.ராமசாமி மேடையேற்றிய 'துர்க்கிர அவலம்', சே.இராமானுஜத்தின் 'கறுப்புத் தெய்வத்தைத் தேடி' போன்றவை தழுவல் நாடகங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. தமிழ் நாடகங்களைவிடவும் மொழியாக்கம் செய்யப்பட்ட நாடகங்களே பெரும்பாலும் மேடையேறின.**

194) 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. சிலர் தலித்திய பெண்ணிய உள்ளடக்கங்களோடு நாடகங்களை மேடையேற்றினர். இதில் தொடர்பில்லாதவர் யார்?

A) அ.ராமசாமி

B) பிரேம்

C) இரா.ராஜு

**D) கே.ஏ.குணசேகரன்**

**விளக்கம்: 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. குறிப்பிடத்தக்க நாடக ஆசிரியராகவும் இயக்குநராகவும் இருந்தவர் கே.ஏ.குணசேகரன் ஆவார். அவரது 'பலி ஆடுகள்' முதல் தலித் நாடகமாகக் கருதப்படுகிறது. அ.ராமசாமி, பிரேம், இரா.ராஜு போன்றவர்கள் தலித்திய பெண்ணிய உள்ளடக்கங்களோடு நாடகங்களை மேடையேற்றினர்.**

195) நாடகக் கலை பயிற்சியளிக்க உருவாக்கப்பட்டது எது?

A) உலக நாடகக் கழகம்

**B) தேசிய நாடகப் பள்ளி**

C) உலக நாடகக் குழுமம்

D) சங்கீத நாடக அகாதெமி

**விளக்கம்: அகில இந்திய அளவில் பாரதீய நாட்டியகஸ் என்னும் நாடக அமைப்பு உருவாக்கப்பட்டு, யுனெஸ்கோவின் சர்வதேச நாடகக்கலை மையத்தோடு இணைக்கப்பட்டது. இந்திய அரசின் முயற்சியால் நிகழ்கலைகளின் வளர்ச்சிக்காக மத்திய சங்கீத நாடக அகாதெமியும் நாடகத்துறைக்கென்றே பயிற்சியளிக்க தேசிய நாடகப்பள்ளியும் உருவாக்கப்பட்டன. இதனையடுத்து உலக நாடகக் கழகமும் உருவாக்கப்பட்டது. இவ்வமைப்புகள் நவீன நாடகங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டன.**

196) திக்கற்ற பார்வதி என்னும் புதினம் திரைப்படமாக வெளிவந்தது. இப்புதினத்தை எழுதியவர் யார்?

A) கல்கி

**B) ராஜாஜி**

C) தில்லானா மோகனாம்மாள்

D) மலைக்கள்ளன்

**விளக்கம்: கல்கி– தியாக பூமி, பார்த்திபன் கனவு**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

**தில்லானா மோகனாம்மாள் – கொத்தமங்கலம் சுப்பு**

**மலைக்கள்ளன்– இராமலிங்கனார்.**

197) தமிழகத்தில் சீர்திருத்த நாடகங்கள் உருவாக அடித்தளமிட்டவர் யார்?

A) சங்கரதாஸ் சுவாமிகள்

B) பம்மல் சம்பந்தனார்

**C) தந்தை பெரியார்**

D) அறிஞர் அண்ணா

**விளக்கம்: தமிழில் சீர்திருத்த நாடகங்கள் உருவாக அடித்தளமாய் அமைந்தவை பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் திராவிட இயக்கமும் ஆகும்.**

198) தடயம் என்ற கதை அதே பெயரில் திரைப்படமாக வெளிவந்துள்ளது. இக்கதையை எழுதியவர் யார்?

**A) தமயந்தி**

B) மு.சந்திரகுமார்

C) பி.எச்.டேனியல்

D) பாஸ்கர் சக்தி

**விளக்கம்: தமயந்தியின் தடயம் என்ற கதை தடயம் என்ற பெயரிலேயே திரைப்படமாக வெளிவந்துள்ளது.**

199) எப்போது தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின?

A) எழுபது, எண்பதுகளில்

**B) எண்பது, தொண்ணூறுகளில்**

C) அறுபது, எழுபதுகளில்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம், இந்திரஜித் மற்றும் விஜய் டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெகட்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.**

200) பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின. இதில் திருவண்ணாமலையில் தோன்றிய நாடகக்குழு எது?

A) நாடகச் சங்கம்

B) தளிர்

C) சுதேசி

**D) தீட்சண்யா**

**விளக்கம்: சென்னை – ஆடுகளம், யவனிகா, பல்கலை அரங்கம், அரூபம்**

**மதுரை– சுதேசி.**

**பாண்டிச்சேரி– கூட்டுக்குரல், தலைக்கோல்,**

**தஞ்சை– அரங்கம்**

**காந்தி கிராமத்தில் – தளிர்.**

**திருச்சி– நாடகச் சங்கம்**

**திருவண்ணாமலை– தீட்சண்யா**

201) நாடகவியல் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) சங்ரதாச சுவாமிகள்

**B) பரிதிமாற்கலைஞர்**

C) பம்மல் சம்மபந்தனார்

D) மதுரகவி பாஸ்கரதாஸ்

**விளக்கம்: பரிதிமாற்கலைஞரின் நாடகவியல் என்னும் நூல் நாடகக்கலைக்கு இலக்கணம் வகுத்தது.**

202) எந்த படத்திற்குக் கதை வசனம் எழுதியதன் மூலம் அறிஞர் அண்ணா திரையுலகில் அறியப்பட்டார்?

A) மந்திரி குமாரி

**B) நல்லதம்பி**

C) வேலைக்காரி

D) பாவமன்னிப்பு

**விளக்கம்: பகுத்தறிவுக் கருத்துகளை உள்ளடக்கிய சில படங்கள் 1940களில் வெளிவந்தன. நாடக ஆசிரியர்களாகப் புகழ் பெற்ற திராவிட இயக்கத் தலைவர்கள் சிலர் திரைப்படத்துறையில் ஈடுபாடு கொண்டனர். 'நல்லதம்பி' படத்திற்குக் கதை வசனம் எழுதியதன் மூலம் அறிஞர் அண்ணா திரையுலகில் அறியப்பட்டார்.**

203) இந்தியாவில் மூன்றாம் அரங்கத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) விஜய் டெண்டுல்கர்

B) கிரிஷ் கர்னாட்

C) பெர்டோல்ட் பிரெக்ட்

**D) பாதல் சர்க்கார்**

**விளக்கம்: அரங்க நிகழ்வுகள், பார்வையாளர்கள், பேசும்பொருள் அடிப்படையில் மூவகை அரங்கை முன் வைத்தவர் வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் ஆவார்.**

204) பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க

A) சுத்துப்பட்டறை– ந.முத்துசாமி

**B) நிஜ நாடக இயக்கம்– இந்திரா பார்த்தசாரதி**

C) பரிஷா– ஞாநி

D) சென்னைக் கலைக்குழு – பிரளயன்

**விளக்கம்: நிஜ நாடக இயக்கம் – மு.இராமசுவாமி**

205) கூற்றுகளை ஆராய்க.

1. திரைப்படத்தின் நோக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் வசனங்களுக்கு இன்றியமையாத பங்குண்டு.

2. 'மந்திரி குமாரி' என்ற படத்திற்கு வசனம் எழுதியவர் மு.கருணாநிதி ஆவார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. திரைப்படத்தின் நோக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் வசனங்களுக்கு இன்றியமையாத பங்குண்டு.**

**2. 'மந்திரி குமாரி' என்ற படத்திற்கு வசனம் எழுதியவர் மு.கருணாநிதி ஆவார்.**

206) இந்தியாவின் பல்வேறு நகரங்களில் தொடர்ச்சியாக சர்வதேச திரைப்பட விழா நடைபெற்று வருகின்றன. இதற்கு பொருந்தாதது எது?

A) கோவா

B) திருவனந்தபுரம்

C) மும்பை

**D) சண்டிகர்**

**விளக்கம்: திரைப்பட ஆர்வலர்களுக்குத் திருவிழா என்பது ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாக்கள்தாம். இந்தியாவின் முதல் பிரதம மந்திரி ஆதரவுடன், 1952–ஆம் ஆண்டு மும்பையில் முதலில் நடைபெற்றது. அதன்பின் சென்னை, கல்கத்தா, திருவனந்தபுரம், கோவா போன்ற இந்திய நகரங்களில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.**

207) பார்த்திபன் கனவு என்னும் புதினம் திரைப்படமாக வெளிவந்தது. இப்புதினத்தை எழுதியவர் யார்?

**A) கல்கி**

B) ராஜாஜி

C) தில்லானா மோகனாம்மாள்

D) மலைக்கள்ளன்

**விளக்கம்: கல்கி– தியாக பூமி, பார்த்திபன் கனவு**

**ராஜாஜி– திக்கற்ற பார்வதி**

**தில்லானா மோகனாம்மாள் – கொத்தமங்கலம் சுப்பு**

**மலைக்கள்ளன்– இராமலிங்கனார்.**

208) அரவான் என்ற திரைப்படத்தை வசந்தபாலன் இயக்கியுள்ளார். இத்திரைப்படம் யாருடைய கதையை தழுவி திரைப்படமாக்கப்பட்டது?

A) கி.ராஜநாராயணன்

B) ஜெயமோகன்

C) ஷான் கருப்பசாமி

**D) சு.வெங்கடேசன்**

**விளக்கம்: வசந்தபாலன் இயக்கிய 'அரவான்' திரைப்படம் சு.வெங்கடேசனின் 'காவல் கோட்டம்' புதினத்தின் ஒரு பகுதியே ஆகும்.**

209) ஜெயகாந்தனால் எழுதப்படாத நூல் எது?

A) உன்னைப்போல் ஒருவன்

B) யாருக்காக அழுதான்

**C) தண்ணீர் தண்ணீர்**

D) சில நேரங்களில் சில மனிதர்கள்

**விளக்கம்: தண்ணீர் தண்ணீர் – கோமல் சுவாமிநாதன்.**

210) தமிழில் வெளிவந்த முதல் குறும்படம் எது?

**A) குறத்திப் பாட்டும் டான்ஸும்**

B) காளிதாஸ்

C) கீசகவதம்

D) ராஜா ஹரிசந்திரா

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழில் 'குறத்திப் பாட்டும் டான்ஸும்' என்ற நான்கு படச்சுருள் கொண்ட குறும்படம் வெளி வந்தது. அதே ஆண்டு எச்.எம்.ரெட்டி இயக்கிய முதல் முழுநீளத் தமிழ்ப் படமான 'காளிதாஸ்' வெளிவந்தது.**

211)சரியான இணையைத் தேர்ந்தெடுக்க

A) ஏழாம் உலகம்– அரவான்

B) எரியும் பனிக்காடு– நான் கடவுள்

C) காவல் கோட்டம்– பரதேசி

**D) லாக்கப்– விசாரணை**

**விளக்கம்: லாக்கப் – விசாரணை.**

212) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) 1895–இல் லூமியர் சகோதரரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது.

**B) இந்தியாவில் 1896–ஆம் ஆண்டு டெல்லியில் முதல் சலனப்படம் திரையிடப்பட்டது.**

C) சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897–ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார்.

D) சென்னையில் 'விக்டோரியா பப்ளிக் ஹால்' என்ற அரங்கில் இக்காட்சி காட்டப்பட்டதைத் தொடர்ந்து பல நகரும்படக் காட்சிகள் சென்னை நகரின் பல்வேறு இடங்களில் திரையிடப்பட்டன.

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலிமையான காட்சி ஊடகம் திரைப்படம். 1895–இல் லூமியர் சகோதரரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் 1896–ஆம் ஆண்டு மும்பையில் முதல் சலனப்படம் திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897–ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார். சென்னையில் 'விக்டோரியா பப்ளிக் ஹால்' என்ற அரங்கில் இக்காட்சி காட்டப்பட்டதைத் தொடர்ந்து பல நகரும்படக் காட்சிகள் சென்னை நகரின் பல்வேறு இடங்களில் திரையிடப்பட்டன. இவையே திரைப்படங்களுக்குத் தொடக்கமாக அமைந்தன.**

213) தியாகபூமி என்னும் புதினம் திரைப்படமாக வெளிவந்தது. இப்புதினத்தை எழுதியவர் யார்?

A) அறிஞர் அண்ணா

B) கே.ஆர்.ரங்கராஜு

C) வடுவூர் துரைசாமி

**D) கல்கி**

**விளக்கம்: அறிஞர் அண்ணா – வேலைக்காரி**

**கே.ஆர்.ரங்கராஜு– சவுக்கடி சந்திரகாந்தா**

**வடுவூர் துரைசாமி– மைனர் ராஜாமணி**

**கல்கி– தியாகபூமி.**

214) தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு எங்கு அமைக்கப்பட்டது?

A) ஹைதராபாத்

**B) சென்னை**

C) திருவனந்தபுரம்

D) பெங்களூர்

**விளக்கம்: 1900–இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, சென்னை அண்ணாசாலையில் (மவுண்ட் ரோடு) வார்விக் மேஜர் என்னும் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. இதன் பெயர் எலக்ட்ரிக் தியேட்டர்.**

215) தி ஜாஸ் சிங்கர் என்பது?

A) உலகின் முதல் மௌனப்படம்

**B) உலகின் முதல் பேசும்படம்**

C) இந்தியாவின் முதல் மௌனப்படம்

D) இந்தியாவின் முதல் பேசும்படம்

**விளக்கம்: 1926–இல் 'வார்னர்' சகோதரர்களால் தயாரிக்கப்பட்டு முதன் முதலாகப் பேச்சு, பாடல் இல்லாமல் வெறும் சப்தத்தை மட்டும் கொண்டு வெளிவந்த படம் 'டேன்ஜுன்'. அதன்பின் உரையாடலையும் பாடல்களையும் கொண்டு உலகில் முதல் பேசும்படமான 'தி ஜாஸ் சிங்கர்' வெளிவந்தது.**

216) கூற்று: தமிழ்த் திரைப்படங்களைத் தமிழகத்திலேயே தயாரித்து வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

காரணம்: ஏ.நாராயணன் என்பவர் ஜெனரல் பிக்சர்ஸ் கர்ப்பரேஷன் என்ற பட நிறுவனத்தை நிறுவி, பல வெற்றிப் படங்களைத் தயாரித்தார்.

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழில் 'குறத்திப் பாட்டும் டான்ஸும்' என்ற நான்கு படச்சுருள் கொண்ட குறும்படம் வெளி வந்தது. அதே ஆண்டு எச்.எம்.ரெட்டி இயக்கிய முதல் முழுநீளத் தமிழ்ப் படமான 'காளிதாஸ்' வெளிவந்தது. இதுவே தமிழில் வெளிவந்த முதல் பேசும் படம். 'காளிதாஸ்' படம் வெளிவந்ததும் தமிழ்த் திரைப்படங்களைத் தமிழகத்திலேயே தயாரித்து வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.**

217) இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் எந்த ஆண்டு அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது?

A) 1921

**B) 1931**

C) 1941

D) 1935

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது.**

218) கூற்றுகளை ஆராய்க.

1. மணிமேகலைக்குச் சோமையாஜுலுவும், சிவகவிக்கு இளங்கோவனும் வசனம் எழுதி, தமிழ்த் திரைப்படங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தனர்.

2. இதனைத் தொடர்ந்து வந்த படங்களில் இலக்கியத்தமிழ் கொண்ட வசனங்கள் முதன்மை பெற்று, வசனம் எழுதுபவர்கள் கவனம் பெற்றனர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் தவறு

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. மணிமேகலைக்குச் சோமையாஜுலுவும், சிவகவிக்கு இளங்கோவனும் வசனம் எழுதி, தமிழ்த் திரைப்படங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தனர்.**

**2. இதனைத் தொடர்ந்து வந்த படங்களில் இலக்கியத்தமிழ் கொண்ட வசனங்கள் முதன்மை பெற்று, வசனம் எழுதுபவர்கள் கவனம் பெற்றனர்.**

219) ஒளியின் வகை எத்தனை?

A) 4

**B) 2**

C) 3

D) 5

**விளக்கம்: ஒளியை இரண்டு வகையாகக் கொள்ளலாம். அவை, இயற்கை ஒளி, செயற்கை ஒளி. சூரிய ஒளி மட்டுமே இயற்கை ஒளி. ஏனைய எல்லாம் செயற்கை ஒளி. ஒளி ஒரு மொழியாகவே செயல்படுகிறது.**

220) தமிழில் வெளிவந்த முதல் பேசும் படம் எது?

**A) ஆலம் ஆரா**

B) கீசகவதம்

C) காளிதாஸ்

D) ராஜா ஹரிசந்திரா

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழில் 'குறத்திப் பாட்டும் டான்ஸ{ம்' என்ற நான்கு படச்சுருள் கொண்ட குறும்படம் வெளி வந்தது. அதே ஆண்டு எச்.எம்.ரெட்டி இயக்கிய முதல் முழுநீளத் தமிழ்ப் படமான 'காளிதாஸ்' வெளிவந்தது. இதுவே தமிழில் வெளிவந்த முதல் பேசும் படம். 'காளிதாஸ்' படம் வெளிவந்ததும் தமிழ்த் திரைப்படங்களைத் தமிழகத்திலேயே தயாரித்து வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.**

221) கூற்றுகளை ஆராய்க.

1. பகுத்தறிவுக் கருத்துக்களை உள்ளடக்கிய சில படங்கள்1940களில் வெளிவந்தன.

2. 'வேலைக்காரி' படம் அறிஞர் அண்ணாவிற்கு மேலும் புகழைப் பெற்றுத்தந்தது.

A) **1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: பகுத்தறிவுக் கருத்துகளை உள்ளடக்கிய சில படங்கள் 1940களில் வெளிவந்தன. நாடக ஆசிரியர்களாகப் புகழ் பெற்ற திராவிட இயக்கத் தலைவர்கள் சிலர் திரைப்படத்துறையில் ஈடுபாடு கொண்டனர். 'நல்லதம்பி' படத்திற்குக் கதை வசனம் எழுதியதன் மூலம் அறிஞர் அண்ணா திரையுலகில் அறியப்பட்டார்.**

222) எல்லிஸ்.ஆர்.டங்கன்–க்கு பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க.

A) தமிழ்த்திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தார்.

B) வெளிப்புறப் படப்பிடிப்பை அதிகம் பயன்படுத்தினார்.

C) ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப்படங்களில் அறிமுகப்படுத்தினார்.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: எல்லிஸ் ஆர்.டங்கன் தமிழ்த்திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தார். வெளிப்புறப் படப்பிடிப்பை அதிகம் பயன்படுத்தினார். ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப்படங்களில் அறிமுகப்படுத்தியவரும் இவரே.**

223) கட்டைக்கூத்து என்று அழைக்கப்படும் கலை எது?

A) ஒயிலாட்டம்

B) மரக்கால் ஆட்டம்

**C) தெருக்கூத்து**

D) தோல்பாவைக்கூத்து

**விளக்கம்: தமிழக மக்களின் வாழ்வியலோடு ஒன்றிய கலை தெருக்கூத்து, இதனைக் 'கட்டைக் கூத்து' என்றும் அழைப்பர். கதை சொல்லல், ஆடல், பாடல் என பலதரப்பட்ட கூறுகள் தெருக்கூத்தில்**

**கலந்திருக்கின்றன. பொதுவாக தொன்மம், நாட்டார் கதை, சீர்திருத்தக் கதை, விழிப்புணர்வுக் கதை முதலியனவற்றை மையமாகக் கொண்டு தெருக்கூத்து நிகழ்த்தப்படுகின்றது.**

224) நோட்டா என்ற திரைப்படம் வெட்டாட்டம் என்ற கதையை தழுவி திரைப்படமாக்கப்பட்டது. இக்கதையை எழுதியவர் யார்?

A) கி.ராஜநாராயணன்

B) ஜெயமோகன்

**C) ஷான் கருப்பசாமி**

D) சு.வெங்கடேசன்

**விளக்கம்: நோட்டா படம் ஷான் கருப்பசாமி எழுதிய வெட்டாட்டம் நூலை அடிப்படையாகக் கொண்டதுதான். வசந்தபாலன் இயக்கிய 'அரவான்' திரைப்படம் சு.வெங்கடேசனின் 'காவல் கோட்டம்' புதினத்தின் ஒரு பகுதியே ஆகும்.**

225) மைனர் ராஜாமணி என்னும் புதினம் திரைப்படமாக வெளிவந்தது. இப்புதினத்தை எழுதியவர் யார்?

A) அறிஞர் அண்ணா

B) கே.ஆர்.ரங்கராஜு

**C) வடுவூர் துரைசாமி**

D) கல்கி

**விளக்கம்: அறிஞர் அண்ணா – வேலைக்காரி**

**கே.ஆர்.ரங்கராஜு– சவுக்கடி சந்திரகாந்தா**

**வடுவூர் துரைசாமி– மைனர் ராஜாமணி**

**கல்கி– தியாகபூமி.**

226) கீழுள்ள கூற்றுகளுள் எவை சரியானவை?

கூற்று 1: சங்க இலக்கியங்களில் குடக்கூத்து எனக் குறிக்கப்படுவது கரகாட்டம்.

கூற்று 2: அலங்கரிக்கப்பட்ட கரகத்தைத் தலையில் வைத்து ஆடுவர்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: சங்க இலக்கியங்களில் குடக்கூத்து எனக் குறிக்கப்படுவது கரகாட்டம்.**

**அலங்கரிக்கப்பட்ட கரகத்தைத் தலையில் வைத்து ஆடுவர்**

227) 'ஔவை' என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) சே.இராமானுஜம்

**B) இன்குலாப்**

C) பிரசன்னா ராமசாமி

D) தி.க.சண்முகனார்

**விளக்கம்: பெண்ணிய அரங்கச் செயல்பாடுகளில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களாக அ.மங்கை, மு.ஜீவா, பிரசன்னா ராமசாமி ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். அ.மங்கை** என்பவர் **இன்குலாப் எழுதிய 'ஔவை', சே.இராமானுஜம் எழுதிய 'மௌனக்குறம்' ஆகிய நாடகங்களை மேடையேற்றினார்.**

228) பாதல் சர்க்கார் மூவகை அரங்கை முன்வைத்தார். இந்தியாவில் ஒவ்வொரு மாநிலங்களில் மரபுக்கேற்றவாறு அரங்கக்கலை வடிவம் பெற்றிருந்தது. இதனை எத்தனையாவது அரங்கு என குறிப்பிடுகிறார்?

**A) முதலாம் அரங்கு**

B) இரண்டாம் அரங்கு

C) மூன்றாம் அரங்கு

D) நான்காம் அரங்கு

**விளக்கம்: இந்தியாவில் ஒவ்வொரு மாநிலங்களில் மரபுக்கேற்றவாறு அரங்கக்கலை வடிவம் பெற்றிருந்தது. கதகளி, யட்சகானம், ஜாக்ரா, பங்காரா, தமாஷா, தெருக்கூத்து என ஒவ்வொரு மாநிலச் சூழலுக்கேற்பப் பெயர் பெற்றிருந்த இக்கலைகளை முதலாம் அரங்கு என பாதல் சர்க்கார் வகைப்படுத்துகிறார். இம்முதல் வகை அரங்கு புராண, இதிகாச, வரலாற்றுப் பாத்திரங்களின் மூலம் மக்களின் பண்பாடு, வாழ்வியல், சடங்குகள் போன்றவற்றை வெளிப்படுத்தியது. பார்வையாளர்களின் சுதந்திரத்தையும் நெருக்கத்தையும் தன்னகத்தைக் கொண்டதாக முதல் வகை அரங்கு உள்ளது என்பார் பாதல் சர்க்கார்.**

229) எந்த நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது?

A) 17

B) 18

**C) 19**

D) 20

**விளக்கம்: 19ஆம் நூற்றாண்டில் இந்திய மேடை நாடகங்களில் மேற்கத்திய நாடகத்தின் தாக்கம் இருந்தது. இந்திய நவீன நாடகத்தின் தொடக்கமாகக் கருதப்பட்ட விக்டோரியா நாடக மரபினைப் பின்பற்றிப் பார்சி கம்பெனிகளின் நாடகங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றன.**

230) நாடகக்குழுக்கள் மற்றும் அதன் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

A) பல்கலை அரங்கம் – சென்னை

B) ஆப்டிஸ்ட்– புதுவை

C) ஆழி– புதுவை

**D) கூடம்– புதுவை**

**விளக்கம்: கூடம் – சென்னை.**

**கூட்டுக்குரல்– புதுவை.**

231) பெண்சிசுக் கொலை நிகழும் தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் 'பச்ச மண்ணு' என்னும் விவாதக்கள வீதி அரங்க நிகழ்வை நிகழ்த்திய குழு எது?

**A) மௌனக்குரல்**

B) கூட்டுக்குரல்

C) சென்னைக் கலைக்குழு

D) பல்கலையரங்கம்

**விளக்கம்: மௌனக்குரலை நடத்தியவர் அ.மங்கை. இது பெண்களின் பல்வேறு பிரச்சினைகளைப் பேசும் நாடகங்களில் கவனம் செலுத்தியது. 'காலக்கனவு', 'ஔவை', 'குறிஞ்சிப்பாட்டு', 'மணிமேகலை' முதலான நாடகங்களை மேடையேற்றியுள்ளது. 'பெண் சிசுக் கொலை' நிகழும் தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் இக்குழு 'பச்ச மண்ணு' என்னும் விவாதக்கள வீதி அரங்க நிகழ்வை நிகழ்த்தியது.**

232) சங்கீத நாடக அகாதெமி' இந்திய அரசால் நிகழ்த்துக் கலைகளுக்காக நிறுவப்பட்ட தேசியளவிலான அமைப்பாகும். இது எப்போது தொடங்கப்பட்டது?

A) 1957

**B) 1952**

C) 1955

D) 1956

**விளக்கம்: 'சங்கீத நாடக அகாதெமி' இந்திய அரசால் நிகழ்த்துக் கலைகளுக்காக நிறுவப்பட்ட தேசியளவிலான அமைப்பாகும். 1952–ஆம் ஆண்டு புதுடெல்லியில் உருவான இவ்வமைப்பு இந்தியக் கல்வி அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வந்தது. தற்போது இந்தியப் பண்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.**

233) ஆசிய அரங்க நிறுவனம் என்ற அமைப்பு எப்போது ஏற்படுத்தப்பட்டது?

A) 1952

**B) 1958**

C) 1956

D) 1954

**விளக்கம்: யுனெஸ்கோவின் உதவியோடு டில்லியில் இயங்கி வந்த 'பாரதிய நாட்டிய சங்கம்' என்ற அமைப்பு 1958–இல் 'ஆசிய அரங்க நிறுவனம்' என்ற அமைப்பை ஏற்படுத்தியது.**

234) அசையாத படங்களை வைத்து அசைவது போன்ற பிரமையை ஏற்படுத்துவது__________________எனப்படும்?

A) அசைவுப்படம்

**B) சலனப்படம்**

C) திரைப்படம்

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: அசையாத படங்களை வைத்து அசைவது போன்ற பிரமையை ஏற்படுத்துவது சலனப்படும் ஆகும். ஆங்கிலத்தில் இதனை மூவி என்பர்.**

235) இந்தியாவில் காட்டப்பட்ட முதல் கதைப்படம் எது?

A) அரிச்சந்திரா

**B) ஏசுவின் வாழ்க்கை**

C) ராஜா ஹரிச்சந்திரா

D) கீசகவதம்

**விளக்கம்: டுபாண்ட் என்பவர் ஏசுநாதரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் கதைப்படத்தைக் கொண்டு வந்து பம்பாயில் காட்டினார். அந்தப் படத்தின் பெயர் 'ஏசுவின் வாழ்க்கை' என்பதாகும். அந்த**

**மௌனப்படம்தான் இந்தியாவில் காட்டப்பட்ட முதல் கதைப்படம் ஆகும். அதன்பின் பெரும்பாலும் மேலைநாட்டில் தயாரிக்கப்பட்ட கதைப்படங்களே இங்கு திரையிடப்பட்டன. இக்கதைப்படங்கள் வெளிவர ஆரம்பித்த பின், திரைப்படங்களுக்கு மக்களிடையே வரவேற்பு கூடியது. அதனால் இந்தியாவில் திரைப்படம் தயாரிக்கும் ஆர்வம் எழுந்தது.**

236) தொடக்கக்காலத் தமிழப்படங்கள் எதனை அடிப்படையாகக் கொண்டு எடுக்கபட்டன?

A) அற இலக்கியங்கள்

B) சமூக சீர்திருத்தக் கதைகள்

C) எள்ளல் இலக்கிங்கள்

**D) புராணக்கதைகள்**

**விளக்கம்: தொடக்கக்காலத் தமிழ்ப்படங்கள் புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டன. அதிலும், கம்பெனி நாடகங்கள் மூலம் வரவேற்பு பெற்ற இராமாயண, மகாபாரத கதைகளே படமாக்கப்பட்டன.**

237) எப்போது முதல் சமூக சீர்த்திருத்த கருத்துகளைக் கதைகளாகக் கொண்டு படங்கள் வெளிவந்தன?

A) 1925

B) 1929

C) 1932

**D) 1935**

**விளக்கம்: 1935 முதல் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கதைகளாகக் கொண்ட படங்கள் வெளிவந்தன. கௌசல்யா என்ற திரைப்படம் இக்கதையமைப்பில் வெளிவந்த முதல் திரைப்படமாக அறியப்படுகிறது.**

238) டம்பாச்சாரி என்ற திரைப்படம் சமூக சீர்திருத்தக்கருத்துக்களை கதையாக கொண்டு வெளிவந்த திரைப்படம் ஆகும். இதனுடன் தொடர்புடையவர் யார்?

A) பம்மல் சம்பந்தனார்

B) வடுவூர் துரைசாமி

**C) காசி விஸ்வநாதர்**

D) இராஜாஜி

**விளக்கம்: வடுவூர் துரைசாமியின் மேனகா, காசி விஸ்வநாதரின் டம்பாச்சாரி ஆகிய படங்கள் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை கதைகளாகக் கொண்ட படங்கள் ஆகும்.**

239) ஆங்கிலேயரின் காலத்தில் காவல் ஆணையரின்கீழ் செயல்பட்ட தணிக்கைத்துறை கீழ்க்காணும் எதனால் தன் சட்டங்களைக் கடுமையாக்கியது?

A) ஜாலியன் வாலாபாக் படுகொலை

B) உப்புச்சத்தியா கிரகம்

C) சௌரி சௌரா நிகழ்வு

**D) ஒத்துழையாமை இயக்கம்**

**விளக்கம்: ஆங்கிலேயரின் காலத்தில் காவல் ஆணையரின்கீழ் செயல்பட்ட தணிக்கைத்துறை ஒத்துழையாமை இயக்கத்தால் தன் சட்டங்களைக் கடுமையாக்கியது. அதனால், சில படங்கள் தயாரிப்பு நிலையிலேயே கைவிடப்பட்டன.**

240) வெயிலோடு போய் என்ற சிறுகதையைச் சசி 'பூ' என்ற திரைப்படமாக்கினார். இச்சிறுகதையை எழுதியவர் யார்?

A) வசந்தபாலன்

B) சு.வெங்கடேசன்

C) கருப்பசாமி

**D) ச.தமிழ்ச்செல்வன்**

**விளக்கம்: ச.தமிழ்ச்செல்வன் எழுதிய 'வெயிலோடு போய்' என்ற சிறுகதையைச் சசி 'பூ' என்ற பெயரில் திரைப்படமாக்கினார். இக்கதை எளிமையான பெண்ணின் பேரன்பைப் பேசுகிறது.**

241) திரைப்படங்களில் வண்ணத்தாளைக் காட்டி படம்பிடிக்கும் முறை உள்ளது. இதில் பச்சை நிறத்திற்கு பொருந்தாதது எது?

A) செல்வம்

B) தாராளம்

C) அமைதி

**D) நெருப்பு**

**விளக்கம்: சிவப்பு – சினம், அபாயம், நெருப்பு**

**கருநீலம்– குளிர்ச்சி, களங்கமின்மை, பயபக்தி, அடிமை, வானம், கடல்**

**பச்சை–செல்வம், தாராளம், அமைதி, மகிழ்ச்சி, ஓய்வு**

**இளஞ்சிவப்பு– காதல், பாலுணர்வு**

242) திரைப்படத்தில் ஒலிப்பதிவு, எத்தனை வித ஒலிகளை முதன்மைப்படுத்துகிறது?

A) 2

B) 3

**C) 4**

D) 5

**விளக்கம்: திரைப்படத்தில் ஒலிப்பதிவு, நான்கு வித ஒலிகளை முதன்மைப்படுத்துகிறது.**

**1. உரையாடல்**

**2. பாடல்கள்**

**3. பின்னணி இசை**

**4. சிறப்பு ஒலிகள்.**

243) இந்தியாவில் முதன்முதலில் எந்த ஆண்டு சலனப்படம் திரையிடப்பட்டது?

A) 1895

**B) 1896**

C) 1897

D) 1898

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலிமையான காட்சி ஊடகம் திரைப்படம். 1895–இல் லூமியர் சகோதரரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் 1896–ஆம் ஆண்டு மும்பையில் முதல் சலனப்படம் திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார்.**

244) 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. முதல் தலித் நாடகமாக கருதப்படுவது எது?

**A) பலி ஆடுகள்**

B) துர்க்கிர அவலம்

C) கறுப்பத் தெய்வத்தை தேடி

D) மௌனக்குறம்

**விளக்கம்: 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. குறிப்பிடத்தக்க நாடக ஆசிரியராகவும் இயக்குநராகவும் இருந்தவர் கே.ஏ.குணசேகரன் ஆவார். அவரது 'பலி ஆடுகள்' முதல் தலித் நாடகமாகக் கருதப்படுகிறது. அ.ராமசாமி, பிரேம், இரா.ராஜு போன்றவர்கள் தலித்திய பெண்ணிய உள்ளடக்கங்களோடு நாடகங்களை மேடையேற்றினர்.**

245) தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு எப்போது கட்டப்பட்டது?

A) 1910

B) 1901

C) 1905

**D) 1914**

**விளக்கம்: 1914–ஆம் ஆண்டு சென்னையில் வெங்கையா என்பவரால் 'கெயிட்டி' திரையரங்கு கட்டப்பட்டது. இந்தியர் ஒருவரால் தென்னிந்தியாவில் கட்டப்பட்ட முதல் திரையரங்கு இதுவே ஆகும்.**

246) பகுத்தறிவுக் கருத்துக்களை உள்ளடக்கிய சில படங்கள் எப்போது வெளிவந்தன?

A) 1935

**B) 1940**

C) 1942

D) 1945

**விளக்கம்: பகுத்தறிவுக் கருத்துகளை உள்ளடக்கிய சில படங்கள் 1940களில் வெளிவந்தன. நாடக ஆசிரியர்களாகப் புகழ் பெற்ற திராவிட இயக்கத் தலைவர்கள் சிலர் திரைப்படத்துறையில் ஈடுபாடு கொண்டனர்.**

247) அவள் அப்படித்தான் என்ற திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) பாலு மகேந்திரா

**B) ருத்ரய்யா**

C) மகேந்திரன்

D) ஞான.ராஜசேகரன்

**விளக்கம்: பாலு மகேந்திரா – சந்தியா ராகம், வீடு**

**ருத்ரய்யா– அவள் அப்படித்தான்**

**மகேந்திரன் – முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள், பூட்டாத பூட்டுகள், சாசனம்.**

**ஞான.ராஜசேகரன் – மோகமுள்.**

248) 'மௌனக்குறம்' என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

**A) சே.இராமானுஜம்**

B) இன்குலாப்

C) பிரசன்னா ராமசாமி

D) தி.க.சண்முகனார்

**விளக்கம்: பெண்ணிய அரங்கச் செயல்பாடுகளில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களாக அ.மங்கை, மு.ஜீவா, பிரசன்னா ராமசாமி ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். அ.மங்கை** என்பவர் **இன்குலாப் எழுதிய 'ஔவை', சே.இராமானுஜம் எழுதிய 'மௌனக்குறம்' ஆகிய நாடகங்களை மேடையேற்றினார்.**

249) நாடகக்குழுக்கள் மற்றும் அதன் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

A) கூட்டுக்குரல்– புதுவை

B) தலைக்கோல்– புதுவை

C) தியேட்டர் லெப்ட்– மதுரை

**D) ஒத்திகை– திருச்சி**

**விளக்கம்: ஒத்திசை– மதுரை**

**திருச்சி நாடகச் சங்கம்– திருச்சி.**

250) பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின. இதில் திருச்சியில் தோன்றிய நாடகக்குழு எது?

**A) நாடகச் சங்கம்**

B) தளிர்

C) சுதேசி

D) தீட்சண்யா

**விளக்கம்: சென்னை – ஆடுகளம், யவனிகா, பல்கலை அரங்கம், அரூபம்**

**மதுரை– சுதேசி.**

**பாண்டிச்சேரி– கூட்டுக்குரல், தலைக்கோல்,**

**தஞ்சை– அரங்கம்**

**காந்தி கிராமத்தில்– தளிர்.**

**திருச்சி– நாடகச் சங்கம்**

**திருவண்ணாமலை– தீட்சண்யா.**

251) ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப்படங்களில் அறிமுகப்படுத்தியவர் யார்?

A) வடுவூர் துரைசாமி

B) காசி விஸ்வநாதர்

C) நடராஜர்

**D) எல்லிஸ் ஆர்.டங்கன்**

**விளக்கம்: எல்லிஸ் ஆர்.டங்கன் தமிழ்த்திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தார். வெளிப்புறப் படப்பிடிப்பை அதிகம் பயன்படுத்தினார். ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப்படங்களில் அறிமுகப்படுத்தியவரும் இவரே.**

252) மேனகா என்ற திரைப்படம் சமூக சீர்திருத்தக்கருத்துக்களை கதையாக கொண்டு வெளிவந்த திரைப்படம் ஆகும். இதனுடன் தொடர்புடையவர் யார்?

A) பம்மல் சம்பந்தனார்

**B) வடுவூர் துரைசாமி**

C) காசி விஸ்வநாதர்

D) இராஜாஜி

**விளக்கம்: வடுவூர் துரைசாமியின் மேனகா, காசி விஸ்வநாதரின் டம்பாச்சாரி ஆகிய படங்கள் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை கதைகளாக் கொண்ட படங்கள் ஆகும்.**

253) சமூக சீர்திருத்தக்கருத்துகளைக் கதைகளாகக் கொண்டு வெளிவந்த முதல் திரைப்படம் எது?

A) ராஜா ஹரிச்சந்திரா

**B) கௌசல்யா**

C) மேனகா

D) டம்பாச்சாரி

**விளக்கம்: தொடக்கக்காலத் தமிழ்ப்படங்கள் புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டன. அதிலும், கம்பெனி நாடகங்கள் மூலம் வரவேற்பு பெற்ற இராமாயண, மகாபாரத கதைகளே படமாக்கப்பட்டன. 1935 முதல் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கதைகளாகக் கொண்ட படங்கள் வெளிவந்தன. கௌசல்யா என்ற திரைப்படம் இக்கதையமைப்பில் வெளிவந்த முதல் திரைப்படமாக அறியப்படுகிறது.**

254) பல்வேறு நாடகக் குழுக்களில் நடிகையாகச் செயல்பட்டதோடு ஐரோப்பிய பெண்ணிய நாடகங்களிலிருந்து சில பகுதிகளைக் காட்சிகளாக நிகழ்த்திக் காட்டியவர் யார்?

**A) மு.ஜீவா**

B) இன்குலாப்

C) பிரசன்னா ராமசாமி

D) தி.க.சண்முகனார்

**விளக்கம்: பெண்ணிய அரங்கச் செயல்பாடுகளில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களாக அ.மங்கை, மு.ஜீவா, பிரசன்னா ராமசாமி ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். அ.மங்கை** என்பவர் **இன்குலாப் எழுதிய 'ஔவை', சே.இராமானுஜம் எழுதிய 'மௌனக்குறம்' ஆகிய நாடகங்களை மேடையேற்றினார். மு.ஜீவா பல்வேறு நாடகக் குழுக்களில் நடிகையாகச் செயல்பட்டதோடு ஐரோப்பிய பெண்ணிய நாடகங்களிலிருந்து சில பகுதிகளைக் காட்சிகளாக நிகழ்த்திக் காட்டியுள்ளார்.**

255) ஐக்யா என்ற நாடகக்குழு எங்கு தொடங்கப்பட்டது?

A) புதுவை

B) திருச்சி

**C) சென்னை**

D) தஞ்சை

**விளக்கம்: ஐக்யா – சென்னை**

256) கூத்துப்பட்டறை தொன்மையான தெருக்கூத்துக் கலையை நவீனமாக்கி, மேம்படுத்தும் நோக்கத்தோடு சென்னையில் எப்போது ந.முத்துசாமியால் உருவாக்கப்பட்டது?

**A) 1977**

B) 1978

C) 1979

D) 1980

**விளக்கம்: கூத்துப்பட்டறை தொன்மையான தெருக்கூத்துக் கலையை நவீனமாக்கி, மேம்படுத்தும் நோக்கத்தோடு சென்னையில் 1977–ஆம் ஆண்டு ந.முத்துசாமியால் உருவாக்கப்பட்டது. இந்திய அரசின் கலாச்சார அமைச்சகம், யுனெஸ்கோ ஃபோர்ட் அறக்கட்டளை, அலயன்ஸ் பிரான்சே, ஜெர்மனியின் மேக்ஸ்முல்லர் பவன் போன்ற அமைப்புகளின் ஆதரவில் இவ்வமைப்பு அரங்கச் செயல்பாடுகளை முன்னெடுத்தது.**

257) சுவாமிக்கண்ணு என்பவர் எங்கு ரெயின்போ டாக்கீஸைக் கட்டிப் பல படங்களைத் தயாரிக்க செய்தார்?

A) திருச்சி

B) சென்னை

**C) கோயம்புத்தூர்**

D) தஞ்சை

**விளக்கம்: சுவாமிக்கண்ணு என்பவர் கோயம்புத்தூரில் ரெயின்போ டாக்கீஸைக் கட்டிப் பல படங்களைத் தயாரிக்கவும் செய்தார்.**

258) தென்னிந்தியாவின் முதல் 'டூரிங் டாக்கீஸ்' எது?

A) ரெயின்போ டாக்கீஸ்

**B) எடிசன் சினிமட்டோ கிராப்**

C) எட்வர்ட் சினிமட்டோ கிராப்

D) விக்டோரியா பப்ளிக் ஹால்

**விளக்கம்: 1905–இல் திருச்சியில் சுவாமிக்கண்ணு வின்செண்ட் என்பவர் 'எடிசன் சினிமட்டோ கிராப்' என்ற திரைப்படம் காட்டும் நிறுவனத்தைத் தொடங்கினார். தென்னிந்தியாவின் முதல் 'டூரிங் டாக்கீஸ்' இதுவே.**

259) யுனெஸ்கோவின் உதவியோடு டில்லியில் இயங்கி வந்த ______________________________ என்ற அமைப்பு 1958–இல் 'ஆசிய அரங்க நிறுவனம்' என்ற அமைப்பை ஏற்படுத்தியது.

**A) பாரதிய நாட்டிய சங்கம்**

B) சங்கீத நாடக அமைப்பு

C) தேசிய நாடகப் பள்ளி

D) தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம்

**விளக்கம்: யுனெஸ்கோவின் உதவியோடு டில்லியில் இயங்கி வந்த 'பாரதிய நாட்டிய சங்கம்' என்ற அமைப்பு 1958–இல் 'ஆசிய அரங்க நிறுவனம்' என்ற அமைப்பை ஏற்படுத்தியது.**

260) ஆசிய அரங்க நிறுவனம் எந்த ஆண்டு மைய அரசின் சங்கீத நாடக அமைப்போடு இணைக்கபட்டு 'தேசிய நாடகப் பள்ளி' என்று பெயர் மாற்றம் பெற்றது?

A) 1952

B) 1956

C) 1958

**D) 1959**

**விளக்கம்: யுனெஸ்கோவின் உதவியோடு டில்லியில் இயங்கி வந்த 'பாரதிய நாட்டிய சங்கம்' என்ற அமைப்பு 1958–இல் 'ஆசிய அரங்க நிறுவனம்' என்ற அமைப்பை ஏற்படுத்தியது. பின்னர் 1959–இல் இந்த**

**நிறுவனம் மைய அரசின் சங்கீத நாடக அமைப்போடு இணைக்கப்பட்டு 'தேசிய நாடகப்பள்ளி' என்று பெயர் மாற்றம் பெற்றது. இப்பள்ளி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த இனம், மொழி பேசும் மக்கள் நாடகக்கல்வியை முறையாகப் பயில வழிவகுத்தது.**

261) தமிழ்நாடு இயலிசை நாடக மன்றம் பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) இது மத்திய சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காக மாநில அரசால் உருவாக்கப்பட்ட அமைப்பு.

B) இது ஒரு தன்னாட்சி பெற்ற ஒரு கலை நிறுவனம்

C) இது தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாத்து மேம்படுத்தி வருகிறது.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: இது மத்திய சங்கீத நாடக அகாதெமியின் நோக்கங்களை மாநில அளவில் நிறைவேற்றுவதற்காக மாநில அரசால் உருவாக்கப்பட்ட அமைப்பு.**

**இது ஒரு தன்னாட்சி பெற்ற ஒரு கலை நிறுவனம்**

**இது தொன்மை வாய்ந்த தமிழகக் கலைகளைப் போற்றிப் பாதுகாத்து மேம்படுத்தி வருகிறது.**

262) எப்போது லூமியர் சகோதரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது?

**A) 1895**

B) 1896

C) 1897

D) 1898

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலிமையான காட்சி ஊடகம் திரைப்படம். 1895–இல் லூமியர் சகோதரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் 1896–ஆம் ஆண்டு மும்பையில் முதல் சலனப்படம் திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897–ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார்.**

263) கூற்றுகளை ஆராய்க.

1. 1895–இல் லூமியர் சகோதரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது.

2. 1914–இல் சென்னையில் வெங்கையா என்பவரால் 'கெயிட்டி' திரையரங்கு கட்டப்பட்டது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. 1895இல் லூமியர் சகோதரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது.**

**2. 1914–இல் சென்னையில் வெங்கையா என்பவரால் 'கெயிட்டி' திரையரங்கு கட்டப்பட்டது.**

264) டுபாண்ட் என்பவர் ஏசுநாதரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் கதைப்படத்தைக் கொண்டு வந்து எங்கு காட்டினார்?

A) சென்னை

**B) பம்பாய்**

C) கொல்கத்தா

D) டெல்லி

**விளக்கம்: டுபாண்ட் என்பவர் ஏசுநாதரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் கதைப்படத்தைக் கொண்டு வந்து பம்பாயில் காட்டினார். அந்தப் படத்தின் பெயர் 'ஏசுவின் வாழ்க்கை'என்பதாகும். அந்த மௌனப்படம்தான் இந்தியாவில் காட்டப்பட்ட முதல் கதைப்படம் ஆகும். அதன்பின் பெரும்பாலும் மேலைநாட்டில் தயாரிக்கப்பட்ட கதைப்படங்களே இங்கு திரையிடப்பட்டன. இக்கதைப்படங்கள் வெளிவர ஆரம்பித்த பின், திரைப்படங்களுக்கு மக்களிடையே வரவேற்பு கூடியது. அதனால் இந்தியாவில் திரைப்படம் தயாரிக்கும் ஆர்வம் எழுந்தது.**

265) 'ராஜா ஹரிச்சந்திரா' என்னும் மௌனப்படமே இந்தியர் ஒருவர் தயாரித்து வெளியிட்ட முதல் இந்தியத் திரைப்படம் ஆகும். இதனைத் தயாரித்தவர் யார்?

A) ஏ.நாராயணன்

B) எச்.எம்.ரெட்டி

**C) தாதா சாகேப் பால்கே**

D) வெங்கையா

**விளக்கம்: தாதா சாகேப் பால்கே தயாரித்து வெளியிட்ட 'ராஜா ஹரிச்சந்திரா' என்னும் மௌனப்படமே இந்தியர் ஒருவர் தயாரித்து வெளியிட்ட முதல் இந்தியத் திரைப்படம் ஆகும்.**

266) பொருத்துக.

அ. சிவப்பு– 1. பாலுணர்வு

ஆ. கருநீலம்– 2. சினம்

இ. பச்சை– 3. செல்வம்

ஈ. இளஞ்சிவப்பு– 4. குளிர்ச்சி

A) 3, 1, 2, 4

B) 4, 2, 1, 3

C) 1, 3, 4, 2

**D) 2, 4, 3, 1**

**விளக்கம்: சிவப்பு– சினம், அபாயம், நெருப்பு**

**கருநீலம்–குளிர்ச்சி, களங்கமின்மை, பயபக்தி, அடிமை, வானம், கடல்**

**பச்சை– செல்வம், தாராளம், அமைதி, மகிழ்ச்சி, ஓய்வு**

**இளஞ்சிவப்பு– காதல், பாலுணர்வு.**

267) திரைப்படங்களில் வண்ணத்தாளைக் காட்டி படம்பிடிக்கும் முறை உள்ளது. இதில் கருநீல நிறத்திற்கு பொருந்தாதது எது?

A) குளிர்ச்சி

B) பயபக்தி

C) அடிமை

**D) ஓய்வு**

**விளக்கம்: சிவப்பு – சினம், அபாயம், நெருப்பு**

**கருநீலம்– குளிர்ச்சி, களங்கமின்மை, பயபக்தி, அடிமை, வானம், கடல்**

**பச்சை– செல்வம், தாராளம், அமைதி, மகிழ்ச்சி, ஓய்வு**

**இளஞ்சிவப்பு– காதல், பாலுணர்வு.**

268) கூற்று: சில படங்கள் தயாரிப்பு நிலையிலேயே கைவிடப்பட்டன.

காரணம்: ஆங்கிலேயரின் காலத்தில் காவல் ஆணையரின்கீழ் செயல்பட்ட தணிக்கைத்துறை ஒத்துழையாமை இயக்கத்தால் தன் சட்டங்களைக் கடுமையாக்கியது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.

**D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: ஆங்கிலேயரின் காலத்தில் காவல் ஆணையரின்கீழ் செயல்பட்ட தணிக்கைத்துறை ஒத்துழையாமை இயக்கத்தால் தன் சட்டங்களைக் கடுமையாக்கியது. அதனால், சில படங்கள் தயாரிப்பு நிலையிலேயே கைவிடப்பட்டன.**

269) தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் எது?

A) ராஜா ஹரிச்சந்திரா

B) ஆலம் ஆரா

**C) கீசகவதம்**

D) காளிதாஸ்

**விளக்கம்: மும்பையில் தயாரான 'ராஜா ஹரிச்சந்திரா' போன்ற புராணப் படங்கள் சென்னையில் திரையிடப்பட்டன. புராணப் படங்களின் வரவேற்பைக் கண்ட நடராஜர் என்பவர் கீழ்ப்பாக்கத்தில், 'இந்தியா பிலிம் கம்பெனி' என்ற நிறுவனத்தை நிறுவி, 1916இல் 'கீசகவதம்' என்ற மௌனப் படத்தைத் தயாரித்**தார். **தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் இதுதான்.**

270) கூற்று: திரைப்படங்களில் புராணக்கதைகளும், மாயாஜாலக் கதைகளுமே பெரிதும் தயாரிக்கப்பட்டன.

காரணம்: ஆங்கிலேயரின் காலத்தில் காவல் ஆணையரின்கீழ் செயல்பட்ட தணிக்கைத்துறை ஒத்துழையாமை இயக்கத்தால் தன் சட்டங்களைக் கடுமையாக்கியது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.

**D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: ஆங்கிலேயரின் காலத்தில் காவல் ஆணையரின்கீழ் செயல்பட்ட தணிக்கைத்துறை ஒத்துழையாமை இயக்கத்தால் தன் சட்டங்களைக் கடுமையாக்கியது. அதனால், சில படங்கள் தயாரிப்பு நிலையிலேயே கைவிடப்பட்டன. தேசியக் கருத்துக்களையோ, காந்திய சமூக சீர்திருத்தங்களையோ ஆதரிக்கும் காட்சிகள் வெட்டப்பட்டன. எனவே, புராணக்கதைகளும், மாயாஜாலக் கதைகளுமே பெரிதும் தயாரிக்கப்பட்டன.**

271) ஜெனரல் பிக்சர்ஸ் கார்ப்பரேஷன் என்ற பட நிறுவனத்தை நிறுவி, பல வெற்றிப் படங்களைத் தயாரித்தவர் யார்?

**A) ஏ.நாராயணன்**

B) எச்.எம்.ரெட்டி

C) தாதா சாகேப் பால்கே

D) நடராஜர்

**விளக்கம்: ஏ.நாராயணன் எனபவர் ஜெனரல் பிக்சர்ஸ் கார்ப்பரேஷன் என்ற பட நிறுவனத்தை நிறுவி, பல வெற்றிப் படங்களை தயாரித்தார். அதே காலகட்டத்தில் சென்னையில் நூற்றுக்கும் மேற்பட்ட மௌனப்படங்கள் தயாரிக்கப்பட்டன.**

272) கூற்றுகளை ஆராய்க.

1. திரையரங்குளில் மௌனப்படம் ஓடிக்கொண்டிருக்கும்போது, இடையே படத்தை நிறுத்தி, வெள்ளைத் திரைக்கு முன் அமைந்த மேடையில் மல்யுத்தம், நடனங்கள் முதலியவற்றை நடத்துவதும் ஒரு வழக்கமாக இருந்தது.

2. இக்காலத்தில் 'கதைசொல்லிகள்' என்னும் ஒருவகைக் கலைஞர்கள் உருவாயினர்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. திரையரங்குளில் மௌனப்படம் ஓடிக்கொண்டிருக்கும்போது, இடையே படத்தை நிறுத்தி, வெள்ளைத் திரைக்கு முன் அமைந்த மேடையில் மல்யுத்தம், நடனங்கள் முதலியவற்றை நடத்துவதும் ஒரு வழக்கமாக இருந்தது.**

**2. இக்காலத்தில் 'கதைசொல்லிகள்' என்னும் ஒருவகைக் கலைஞர்கள் உருவாயினர்.**

273) கூற்று: 1918–ஆம் ஆண்டில் இந்திய திரைப்படத் தணிக்கைச் சட்டத்தின் மூலம் தணிக்கைத் துறையை செயல்படுத்தியது.

காரணம்: திரைப்படக் காட்சிகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றதைக் கண்ட ஆங்கில அரசு இந்த வெகுசனத் தொடர்புச் சாதனத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிவு செய்தது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.

**D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: திரைப்படக் காட்சிகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றதைக் கண்ட ஆங்கில அரசு இந்த வெகுசனத் தொடர்புச் சாதனத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிவு செய்தது. தொடர்ந்து இந்திய திரைப்படத் தணிக்கைச் சட்டத்தின் மூலம் தணிக்கைத் துறையை 1918–ஆம் ஆண்டில் செயல்படுத்தியது.**

275) 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. முதல் தலித் நாடகமாக கருதப்படுவது 'பலி ஆடுகள்' ஆகும். இதனுடன் தொடர்புடையவர் யார்?

**A) கே.ஏ.குணசேகரன்**

B) அ.ராமசாமி

C) பிரேம்

D) இரா.ராஜு

**விளக்கம்: 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. குறிப்பிடத்தக்க நாடக ஆசிரியராகவும் இயக்குநராகவும் இருந்தவர் கே.ஏ.குணசேகரன் ஆவார். அவரது 'பலி ஆடுகள்' முதல் தலித் நாடகமாகக் கருதப்படுகிறது. அ.ராமசாமி, பிரேம், இரா.ராஜு போன்றவர்கள் தலித்திய பெண்ணிய உள்ளடக்கங்களோடு நாடகங்களை மேடையேற்றினர்.**

276) கூற்று: பெண்கள், தாழ்த்தப்பட்டோர், திருநங்கைகள், சிறுவர் போன்றோர் பல்வேறு முறைகளில் ஒடுக்கப்படுவதால் அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை முன்னிறுத்தி விவாதிக்கும் போக்கு 1990களின் தொடக்கத்தில் உருவானது.

காரணம்: சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.

**D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: சமூக மாற்றத்திற்கேற்ப கலை–இலக்கிய வடிவங்களின் போக்குகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளால் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், திருநங்கைகள், சிறுவர் போன்றோர் பல்வேறு முறைகளில் ஒடுக்கப்படுவதால் அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை முன்னிறுத்தி விவாதிக்கும் போக்கு 1990களின் தொடக்கத்தில் உருவானது. அதனால் நாடகத்துறையில் ஒடுக்கப்பட்டோர் அரங்கு உருவாவதற்கான சூழல் தோன்றியது.**

277) பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின. இதில் காந்தி கிராமத்தில் தோன்றிய நாடகக்குழு எது?

A) நாடகச் சங்கம்

**B) தளிர்**

C) சுதேசி

D) தீட்சண்யா

**விளக்கம்: சென்னை– ஆடுகளம், யவனிகா, பல்கலை அரங்கம், அரூபம்**

**மதுரை– சுதேசி.**

**பாண்டிச்சேரி– கூட்டுக்குரல், தலைக்கோல்,**

**தஞ்சை– அரங்கம்**

**காந்தி கிராமத்தில்– தளிர்.**

**திருச்சி– நாடகச் சங்கம்.**

**திருவண்ணாமலை– தீட்சண்யா**

278) 1900–இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, சென்னை அண்ணாசாலையில் (மவுண்ட் ரோடு) வார்விக் மேஜர் என்னும் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. இதன் பெயர் என்ன?

**A) எலக்ட்ரிக் தியேட்டர்**

B) எடிசன் தியேட்டர்

C) வார்விக் தியேட்டர்

D) எட்வர்டு தியேட்டர்

**விளக்கம்: 1900–இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, சென்னை அண்ணாசாலையில் (மவுண்ட் ரோடு) வார்விக் மேஜர் என்னும் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. இதன் பெயர் எலக்ட்ரிக் தியேட்டர் ஆகும்.**

279) எந்த ஆண்டு திருச்சியில் சுவாமிக்கண்ணு வின்சென்ட் என்பவர் 'எடிசன் சினிமாட்டோ கிராப்' என்ற திரைப்படம் காட்டும் நிறுவனத்தைத் தொடங்கினார்?

A) 1897

B) 1898

C) 1900

**D) 1905**

**விளக்கம்: 1905இல் திருச்சியில் சுவாமிக்கண்ணு வின்சென்ட் என்பவர் 'எடிசன் சினிமட்டோ கிராப்' என்ற திரைப்படம் காட்டும் நிறுவனத்தைத் தொடங்கினார். தென்னிந்தியாவின் முதல் 'டூரிங் டாக்கீஸ்' இதுவே.**

280) கூற்று: நடராஜர் என்பவர் கீழ்ப்பாக்கத்தில், 'இந்தியா பிலிம் கம்பெனி' என்ற நிறுவனத்தை நிறுவினார்.

காரணம்: புராணப் படங்களின் வரவேற்பு.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.

**D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.**

**விளக்கம்: மும்பையில் தயாரான 'ராஜா ஹரிச்சந்திரா' போன்ற புராணப் படங்கள் சென்னையில் திரையிடப்பட்டன. புராணப் படங்களின் வரவேற்பைக் கண்ட நடராஜர் என்பவர் கீழ்ப்பாக்கத்தில், 'இந்தியா பிலிம் கம்பெனி' என்ற நிறுவனத்தை நிறுவினார். இது 1916–இல் 'கீசகவதம்' என்ற மௌனப் படத்தைத் தயாரித்தது. தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் இதுதான்.**

281) மௌனக்குரல் என்ற குழுவை நடத்தியவர் யார்?

A) அறந்தை நாராயணன்

B) ஞாநி

C) அ.ராமசாமி

**D) அ.மங்கை**

**விளக்கம்: அறந்தை நாராயணன் – மூர் மார்க்கெட்**

**ஞாநி– பலூன், நாங்கள்**

**அ.ராமசாமி– பல்லக்குத்தூக்கிகள்**

**அ.மங்கை– மௌனக்குரல் குழுவை நடத்தியவர்.**

282) திரைப்படங்களில் வண்ணத்தாளைக் காட்டி படம்பிடிக்கும் முறை உள்ளது. இதில் கருப்பு நிறத்திற்கு பொருந்தாதது எது?

A) துக்கம்

B) பயம்

C) பரிதாபம்

**D) கடல்**

**விளக்கம்: கருப்பு – துக்கம், பயம், பரிதாபம், கள்ளம், கவலை.**

283) உணர்ச்சிகரமான வசனத்திற்காக அறியப்பட்டவர் யார்?

**A) சிவாஜி கணேசன்**

B) எம்.ஜி.ஆர்

C) ஜெமினி கணேசன்

D) ஜெய்சங்கர்

**விளக்கம்: உணர்ச்சிகரமான வசனத்திற்காக சிவாஜி கணேசனும், அதன் மறுதலையாக மக்களின் துயரங்களைப் போக்கும் விதமான பாத்திரங்களுக்காக எம்.ஜி.ஆர்–ம் அறியப்பட்டார்கள். இவ்விரு ஆளுமைகளும் ஒரே காலகட்டத்தில் நாயகர்களாக வலம் வந்தது தமிழ்த் திரைப்பட வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. ஜெமினிகணேசன், ஜெய்சங்கர் போன்றோரும் அக்கால கட்டத்தில் நாயகர்களாக நன்கு அறியப்பட்டனர்.**

284) சரஸ்வதி சபதம் படத்தின் மூலம் சிறந்த புராணப்பட இயக்குநர் என்ற பெயரைப் பெற்றுப் பல படங்களை இயக்கியவர் யார்?

A) ஸ்ரீதர்

B) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

C) பீம்சிங்

**D) ஏ.பிநாகராஜன்**

**விளக்கம்: ஏ.பி.நாகராஜன் 'சரஸ்வதி சபதம்' படத்தின் மூலம் சிறந்த புராணப்பட இயக்குநர் என்ற பெயரைப் பெற்றுப் பல படங்களை இயக்கினார்.**

285) கூற்று: எழுத்துக்களை விட திரைப்படங்கள் கலைத்தன்மை வாய்ந்தவையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

காரணம்: எழுத்துக்களால் வெளிப்படுத்த முடியாத எதார்த்த உலகத்தைக் காட்சிகளால் எளிதில் காட்ட முடியும்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: கற்பனைக் கதையைத் திரைக்கதையாக மாற்றுவதாக இருந்தாலும், புதினம் ஒன்றைத் திரைக்கதையாக மாற்றுவதாக இருந்தாலும் எழுத்துக்களால் வெளிப்படுத்த முடியாத எதார்த்த உலகத்தைக் காட்சிகளால் எளிதில் காட்ட முடியும். எழுத்துக்களுக்கு இல்லாத ஒரு வசதி காட்சிகளுக்கு உண்டு. எனவே திரைப்படங்கள் கலைத்தன்மை வாய்ந்தவையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.**

286) மேடை நாடக ஆசிரியராகத் திகழ்ந்த கே.பாலசந்தர் எந்த படத்தின் மூலம் தமிழ்த் திரைப்பட இயக்குநராகப் புகழ் பெற்றார்?

A) கற்பகம்

B) உன்னைப்போல் ஒருவன்

C) காதலிக்க நேரமில்லை

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: மேடை நாடக ஆசிரியராகத் திகழ்ந்த கே.பாலசந்தர் 'நீர்க்குமிழி' படத்தின் மூலம் தமிழ்த் திரைப்பட இயக்குநராகப் புகழ் பெற்றார்.**

287) சென்னையில் எங்கு திரைப்படக் கல்லூரி தொடங்கப்பட்டது?

**A) அடையாறு**

B) சாந்தோம்

C) வேளச்சேரி

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: சென்னை அடையாறில் திரைப்படக் கல்லூரி தொடங்கப்பட்டது. இதன் மூலம் திரைப்படக் கல்லூரி மாணவர்களின் புதிய பாணி தமிழ்த் திரைபடத்தில் வெளிப்படத் தொடங்கியது.**

288) கூற்றுகளை ஆராய்க.

1. மகேந்திரன், பாலுமகேந்திரா ஆகியோர் எதார்த்த பாணியில் அமைந்த திரைப்படங்களை இயக்கினர்.

2. பாரதிராஜா வெளிப்புறப் படப்பிடிப்பை முதன்மையாக்கிக் கிராமியப் படங்களை உருவாக்கினார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. மகேந்திரன், பாலுமகேந்திரா ஆகியோர்** எதார்த்**த பாணியில் அமைந்த திரைப்படங்களை இயக்கினர்.**

**2. பாரதிராஜா வெளிப்புறப் படப்பிடிப்பை முதன்மையாக்கிக் கிராமியப் படங்களை உருவாக்கினார்.**

289) இளையராஜா எந்த படத்திற்கு அமைத்த இசை மக்களால் பெரிதும் பேசப்பட்டது?

A) மௌனராகம்

**B) அன்னக்கிளி**

C) நீர்க்குமிழி

D) கற்பகம்

**விளக்கம்: கிராமிய இசையினை எதார்த்தப் பாணியில் கொண்டுவந்து தமிழ்த் திரையில் ஒலிக்கச் செய்தார். 'அன்னக்கிளி' படத்திற்கு அமைத்த இசை மக்களால் பெரிதும் பேசப்பட்டது.**

290) இந்தியாவில் வர்த்தகரீதியில் முதல் இடத்தில் இருப்பது எம்மொழித்திரைப்படங்கள்?

A) தெலுங்கு

B) தமிழ்

**C) இந்தி**

D) ஆங்கிலம்

**விளக்கம்: எண்பதுகளின் தொடக்கத்தில் தமிழ்ப் படத் தயாரிப்பு, முன்பில்லாத அளவு அதிகரித்தது. இந்தியாவில் வர்த்தகரீதியில் இந்தித் திரைப்படங்களுக்கு அடுத்தபடியாக இராண்டாமிடத்தில் இருப்பது தமிழ்த் திரைப்படங்கள்தான்.**

291) 'மௌனராகம்' என்னும் திரைப்படம் சிறந்த தமிழ்ப் படத்திற்கான விருதைப் பெற்றது. இத்திரைப்படம் கீழ்க்காணும் யாருடன் தொடர்புடையது?

A) பாக்யராஜ்

**B) மணிரத்தினம்**

C) கே.பாலசந்தர்

D) ஸ்ரீதர்

**விளக்கம்: எண்பதுகளின் குறிப்பிடத்தக்க மற்றுமோர் இயக்குநராகக் கருதப்படுபவர் மணிரத்னம். அவரது 'மௌனராகம்' சிறந்த தமிழ்ப் படத்திற்கான விருதைப் பெற்றது.**

292) திரைப்படத்தில் ஆரஞ்சு என்னும் வண்ணம் கீழ்க்காணும் எதைக் குறிக்கவில்லை?

A) வேடிக்கை

B) விளையாட்டு

C) செழிப்பு

**D) நம்பிக்கை**

**விளக்கம்: ஆரஞ்சு– வேடிக்கை, விளையாட்டு, செழிப்பு, நகைச்சுவை.**

**ஊதா– பெருமை, பிரகாசம், பயபக்தி, கடவுள், நம்பிக்கை.**

293) கூற்று: இந்திய அரங்கில் தமிழ் நாடகத்திற்கு ஓர் அடையாளம் கிடைத்துள்ளது.

காரணம்: மு.இராமசுவாமி என்பவர் துர்க்கிர அவலம் என்னும் நாடகத்தை பெங்களூரில் நடந்த தென் மண்டல நாடக விழாவிலும், டெல்லியில் நடந்த தேசிய விழாவிலும் அரங்கேற்றினார்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: தேசிய சங்கீத நாடக அகாதெமி நடத்திய போட்டியில் மு.இராமசுவாமி, துர்க்கிர அவலம் என்னும் நாடகத்தை அரங்கேற்றினார். பின்னர் பெங்களூரில் நடந்த தென் மண்டல நாடகவிழாவிலும், டெல்லியில் நடந்த தேசிய விழாவிலும் இதனை நிகழ்த்திக் காட்டினார். இதனால் இந்திய அரங்கில் தமிழ் நாடகத்திற்கு ஓர் அடையாளம் கிடைத்தது.**

294) நாட்டார் அரங்கக் கலைகள் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

A) இக்கலை மனிதர்களின் வாழ்க்கைச் சூழல், தெய்வ வழிபாடு, அன்றாட வாழ்க்கைச் சிக்கல் இவற்றின் கூட்டுப்படைப்பாக வெளிப்படுகின்றன.

B) இவை வட்டாரத் தன்மை கொண்டவை.

**C) இக்கலைகள் 4 வகைப்படும்**

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: தமிழகம் முழுவதும் பரவலாக நிகழ்த்தப்படும் நாட்டார் அரங்கக் கலைகள் அதன் தன்மைக்கேற்ப,**

**1. சடங்குசார் கலைகள்**

**2. பாடல்சார் கலைகள்**

**3. கருவிசார் கலைகள்**

**என வகைப்படுத்துவர்.**

295) கூற்றுகளை ஆராய்க.

1. பொன்னர் சங்கர் கதைப்பாடல் என்பது இடைக்காலத்தில் வாழ்ந்த பொன்னர் சங்கர் என்ற சகோதரர்களின் வரலாற்றினைக் கதைப்பாடலாக நிகழ்த்திக் காட்டுவதாகும்.

2. திருச்சி, சேலம், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் இக்கதைப்பாடல் நிகழ்த்தப்படுகிறது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பொன்னர் சங்கர் கதைப்பாடல் என்பது இடைக்காலத்தில் வாழ்ந்த பொன்னர் சங்கர் என்ற சகோதரர்களின் வரலாற்றினைக் கதைப்பாடலாக நிகழ்த்திக் காட்டுவதாகும்.**

**2. திருச்சி, சேலம், கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் இக்கதைப்பாடல் நிகழ்த்தப்படுகிறது.**

296) தென்னிந்தியாவின் முதல் ஒலிப்பதிவுக் கூடம் எங்கு நிறுவப்பட்டது?

A) மும்பை

B) ஹைதராபாத்

C) திருவனந்தபுரம்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: முதல் நான்கு ஆண்டுகள் வரை சென்னையில் ஒலிப்பதிவுத் தொழில் நுட்ப வசதிகள் ஏதும் இல்லாததால் தமிழத் திரைப்படங்கள் மும்பையிலும், கல்கத்தாவிலுமே தயாரிக்கப்பட்டன. 1934ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலேயே சென்னையில் முதல் ஒலிப்பதிவுக் கூடம் நிறுவப்பட்டது.**

297) பாவமன்னிப்பு, பார்த்தால் பசி தீரும் போன்ற படங்களை இயக்கி புகழுடன் விளங்கியவர் யார்?

A) ஏ.பி.நாகராஜன்

B) ஸ்ரீதர்

**C) பீம்சிங்**

D) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

**விளக்கம்: பீம்சிங்– பாவ மன்னிப்பு, பார்த்தால் பசி தீரும்.**

**ஏ.பி.நாகராஜன்– சரஸ்வதி சபதம்**

**ஸ்ரீதர் – கல்யாணப் பரிசு, நெஞ்சில் ஓர் ஆலயம், காதலிக்க நேரமில்லை**

**கே.எஸ்கோபாலகிருஷ்ணன் – கற்பகம்.**

298) நாடகக்குழுக்கள் மற்றும் அதன் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க?

A) கூத்துப்பட்டறை– சென்னை

B) நிஜநாடக இயக்கம்– மதுரை

**C) பரீக்ஷா– சென்னை**

D) வீதி– தஞ்சை

**விளக்கம்: வீதி – சென்னை**

299) எந்த ஆண்டு தணிக்கைத்துறை செயல்படுத்தப்பட்டது?

A) 1902

B) 1904

C) 1914

**D) 1918**

**விளக்கம்: திரைப்படக் காட்சிகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றதைக் கண்ட ஆங்கில அரசு இந்த வெகுசனத் தொடர்புச் சாதனத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிவு செய்தது. இந்திய திரைப்படத் தணிக்கைச் சட்டத்தின் மூலம் தணிக்கைத் துறை 1918ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது.**

300) எந்த ஆண்டு சுகுண விலாச சபையை பம்மல் சம்பந்தனார் நிறுவினார்?

A) 1890

**B) 1891**

C) 1892

D) 1893

**விளக்கம்: 1891–ஆம் ஆண்டு சுகுண விலாச சபையை நிறுவிய பம்மல் சம்பந்தனார் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேடைகளில் பல புதுமைகளைக் கையாண்டார்.**

301) பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின. இதில் மதுரையில் தோன்றிய நாடகக்குழு எது?

A) நாடகச் சங்கம்

B) தளிர்

**C) சுதேசி**

D) தீட்சண்யா

**விளக்கம்: சென்னை – ஆடுகளம், யவனிகா, பல்கலை அரங்கம், அரூபம்**

**மதுரை– சுதேசி.**

**பாண்டிச்சேரி– கூட்டுக்குரல், தலைக்கோல்,**

**தஞ்சை– அரங்கம்**

**காந்தி கிராமத்தில்– தளிர்.**

**திருச்சி– நாடகச் சங்கம்**

**திருவண்ணாமலை– தீட்சண்யா.**

302) கூற்று: தமிழ்த்திரைப்படங்கள் இசைக்கும், பாட்டுக்மே முதன்மை அளித்து வந்த நிலையை மாற்றிப் பாத்திரப் பேச்சுக்கு முக்கியத்துவம் தந்தன.

காரணம்: ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப்படங்களில் அறிமுகப்படுத்தியவர் எல்லிஸ்.ஆர்.டங்கன்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப்படங்களில் அறிமுகப்படுத்தியவர் எல்லிஸ்.ஆர்.டங்கன் ஆவார். இம்முறையைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட தமிழ்த்திரைபடங்கள் இசைக்கும், பாட்டுக்குமே முதன்மை அளித்து வந்த நிலையை மாற்றிப் பாத்திரப் பேச்சுக்கு முக்கியத்துவம் தந்தன.**

303) கூற்றுகளை ஆராய்க.

1. தெய்வ வழிபாட்டிற்கு ஆடும் கரகம் – ஆட்டக்கரகம்

2. தொழில்முறைக் கரகம் – சக்திக்கரகம்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: தெய்வ வழிபாட்டிற்கு ஆடும் கரகம் – சக்திக்கரகம்**

**தொழில்முறைக் கரகம் – ஆட்டக்கரகம்.**

304) தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் 'கீசகவதம்' ஆகும். இத்திரைப்படம் யாரால் தயாரிக்கப்பட்டது?

A) தாதா சகேப் பால்கே

B) ஏ.நாராயணன்

C) சுப்பையா

**D) நடராஜர்**

**விளக்கம்: மும்பையில் தயாரான 'ராஜா ஹறிச்சந்திரா' போன்ற புராணப் படங்கள் சென்னையில் திரையிடப்பட்டன. புராணப் படங்களின் வரவேற்பைக் கண்ட நடராஜர் என்பவர் கீழ்ப்பாக்கத்தில், 'இந்தியா பிலிம் கம்பெனி' என்ற நிறுவனத்தை நிறுவினார், இது 1916இல் 'கீசகவதம்' என்ற மௌனப் படத்தைத் தயாரித்தது. தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் இதுதான்.**

305) 1900–இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, சென்னை அண்ணாசாலையில் (மவுண்ட் ரோடு) கீழ்க்காணும் யாரால் கட்டப்பட்டது?

A) லுமியர் சகோதரர்கள்

B) எட்வர்டு

C) வெங்கய்யா

**D) வார்விக் மேஜர்**

**விளக்கம்: 1900–இல் தென்னிந்தியாவின் முதல் திரையரங்கு, சென்னை அண்ணாசாலையில் (மவுண்ட் ரோடு) வார்விக் மேஜர் என்னும் ஆங்கிலேயரால் கட்டப்பட்டது. இதன் பெயர் எலக்ட்ரிக் தியேட்டர் ஆகும்.**

306) தமிழ் நாடகங்களில் பாடல்களின் கருத்துகளைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் உரைநடையில் இடம்பெறச் செய்தவர் யார்?

**A) சங்கரதாஸ் சுவாமிகள்**

B) பம்மல் சம்பந்தனார்

C) பரிதிமாற்கலைஞர்

D) தி.க.சண்முகனார்

**விளக்கம்: நாடகத்துறையின் புதிய பரிணாமத்திற்குக் காரணமாக அமைந்தவர்களாகச் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், பரிதிமாற்கலைஞர் ஆகியோரைக் குறிப்பிடலாம். சங்கரதாஸ் சுவாமிகள் கூத்திற்குப் புதிய வடிவம் தந்ததுடன், மேலைநாட்டு உத்திகளையும் இணைத்துப் புதிய போக்கினை உருவாக்கித் தந்தார். தமிழ் நாடகங்களில் பாடல்களின் கருத்துகளைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் உரைநடையில் இடம்பெறச் செய்தார்.**

307) இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'.இப்படத்தின் இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர் யார்?

A) ஏ.நாராயணன்

**B) அர்தெஷிர் இரானி**

C) எச்.எம்.ரெட்டி

D) தாதா சாகேப் பால்கே

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது.**

308) கூற்றுகளை ஆராய்க.

1. 1935 முதல் சமூக சீர்திருத்தக் கருத்துகளைக் கதைகளாக் கொண்ட படங்கள் வெளிவந்தன.

2. கௌசல்யா என்ற திரைப்படம் இக்கதையமைப்பில் வெளிவந்த முதல் திரைப்படமாக அறியப்படுகிறது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. 1935 முதல் சமூக சீர்திருத்தக் கருத்துகளைக் கதைகளாக் கொண்ட படங்கள் வெளிவந்தன.**

**2. கௌசல்யா என்ற திரைப்படம் இக்கதையமைப்பில் வெளிவந்த முதல் திரைப்படமாக அறியப்படுகிறது.**

309) கூற்று: ஒத்துழையாமை இயக்க காலத்தில் புராணக் கதைகளும், மாயாஜாலக் கதைகளுமே பெரிதும் தயாரிக்கப்பட்டன.

காரணம்: தேசியக் கருத்துகளையோ, காந்திய சமூக சீர்த்திருத்தங்களையோ ஆதரிக்கும் காட்சிகள் திரைப்படங்களிலிருந்து வெட்டப்பட்டன.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: ஆங்கிலேயரின் காலத்தில் காவல் ஆணையரின்கீழ் செயல்பட்ட தணிக்கைத் துறை ஒத்துழையாமை இயக்கத்தால் தன் சட்டங்களைக் கடுமையாக்கியது. அதனால், சில படங்கள் தயாரிப்பு நிலையிலேயே கைவிடப்பட்டன. தேசியக் கருத்துகளையோ, காந்திய சமூக சீர்திருத்தங்களையோ ஆதரிக்கும் காட்சிகள் வெட்டப்பட்டன. எனவே, புராணக்கதைகளும், மாயாஜாலக் கதைகளுமே பெரிதும் தயாரிக்கப்பட்டன.**

310) கூற்று: தமிழ் நாடகங்களில் இருந்த பாடத் தெரிந்த நடிகர்கள், வசனகர்த்தாக்கள், இசையமைப்பாளர்கள் முதலிய கலைஞர்கள் திரைப்படங்களை நாடினர்.

காரணம்: தமிழ்நாட்டில் பேசும்படம் தோன்றியது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: தமிழ்நாட்டில் பேசும்படம் தோன்றியதும் தமிழ் நாடகங்களில் இருந்த பாடத் தெரிந்த நடிகர்கள், வசனகர்த்தாக்கள், இசையமைப்பாளர்கள் முதலிய கலைஞர்கள் திரைப்படங்களை நாடினர்.**

311) கூற்றுகளை ஆராய்க.

1. பாட்டும், இசையும் தொடக்க காலத் திரைப்படங்களின் முதன்மை கூறுகளாக விளங்கின.

2. ஒரே படத்தில் 50, 60 பாடல்கள் இருப்பது சிறப்பான நிலையாகக் கருதப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: தமிழ்நாட்டில் பேசும்படம் தோன்றியதும் தமிழ் நாடகங்களில் இருந்த பாடத் தெரிந்த நடிகர்கள், வசனகர்த்தாக்கள், இசையமைப்பாளர்கள் முதலிய கலைஞர்கள் திரைப்படங்களை நாடினர். அக்காலகட்டத்தில் வெளிவந்த திரைப்படங்களில் பெரும்பாலும் மேடை நாடகத் தன்மையே மேலோங்கியிருந்தது. பாட்டும், இசையும் தொடக்க காலத் திரைப்படங்களின் முதன்மை கூறுகளாக விளங்கின. ஒரே படத்தில் 50, 60 பாடல்கள் இருப்பது சிறப்பான நிலையாகக் கருதப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது.**

312) முதன் முதலாகப் பேச்சு, பாடல் இல்லாமல் வெறும் சப்தத்தை மட்டும் கொண்டு வெளிவந்த படம் 'டேன்ஜுன்' ஆகும். இதனை தயாரித்தவர் யார்?

A) அர்தேஷிர் இரானி

B) டுபாண்ட்

C) லூமியர் சகோதரர்கள்

**D) வார்னர் சகோதரர்கள்**

**விளக்கம்: 1926–இல் 'வார்னர்' சகோதரர்களால் தயாரிக்கப்பட்டு முதன் முதலாகப் பேச்சு, பாடல் இல்லாமல் வெறும் சப்தத்தை மட்டும் கொண்டு வெளிவந்த படம் 'டேன்ஜுன்'. அதன்பின் உரையாடலையும் பாடல்களையும் கொண்டு உலகில் முதல் பேசும்படமான 'தி ஜாஸ் சிங்கர்' வெளிவந்தது.**

313) கூற்று: தமிழ்த்திரைப்படங்களில் இலக்கியத்தமிழ் கொண்ட வசனங்கள் முதன்மை பெற்று, வசனம் எழுதுபவர்கள் கவனம் பெற்றனர்.

காரணம்: மணிமேகலைக்குச் சோமையாஜுலுவும், சிவகவிக்கு இளங்கோவனும் வசனம் எழுதி, தமிழ்த்திரைப்படங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தனர்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: மணிமேகலைக்குச் சோமையாஜுலுவும், சிவகவிக்கு இளங்கோவனும் வசனம் எழுதி, தமிழ்த்திரைப்படங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தனர். தமிழ்த்திரைப்படங்களில் இலக்கியத்தமிழ் கொண்ட வசனங்கள் முதன்மை பெற்று, வசனம் எழுதுபவர்கள் கவனம் பெற்றனர்.**

314) 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. குறிப்பிடத்தக்க நாடக ஆசிரியராகவும் இயக்குநராகவும் இருந்தவர் யார்?

**A) கே.ஏ.குணசேகரன்**

B) அ.ராமசாமி

C) பிரேம்

D) இரா.ராஜு

**விளக்கம்: 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. குறிப்பிடத்தக்க நாடக ஆசிரியராகவும் இயக்குநராகவும் இருந்தவர் கே.ஏ.குணசேகரன் ஆவார். அவரது 'பலி ஆடுகள்' முதல் தலித் நாடகமாகக் கருதப்படுகிறது. அ.ராமசாமி, பிரேம், இரா.ராஜு போன்றவர்கள் தலித்திய பெண்ணிய உள்ளடக்கங்களோடு நாடகங்களை மேடையேற்றினர்.**

315) கூற்றுகளை ஆராய்க.

1. படம் ஓடிக்கொண்டிருக்கும்போது, இருட்டில் திரையோரமாக நின்றவாறே ஒலிப்பெருக்குக் குழாய் மூலமாக உரத்த குரலில் காட்சிச் சூழலை வருணித்தும், தேவையான இடங்களில் சுவையான வசனத்தையும் பேசிக் கதை கூறுபவர்களே கதைசொல்லிகள்.

2. திரைப்படக் காட்சிகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றதைக் கண்ட ஆங்கில அரசு இந்த வெகுசனத் தொடர்புச் சாதனத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிவு செய்தது. தொடர்ந்து இந்திய திரைப்படத் தணிக்கைச் சட்டத்தின் மூலம் தணிக்கைத் துறையை 1918–ஆம் ஆண்டில் செயல்படுத்தியது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. படம் ஓடிக்கொண்டிருக்கும்போது, இருட்டில் திரையோரமாக நின்றவாறே ஒலிப்பெருக்குக் குழாய் மூலமாக உரத்த குரலில் காட்சிச் சூழலை வருணித்தும், தேவையான இடங்களில் சுவையான வசனத்தையும் பேசிக் கதை கூறுபவர்களே கதைசொல்லிகள்.**

**2. திரைப்படக் காட்சிகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றதைக் கண்ட ஆங்கில அரசு இந்த வெகுசனத் தொடர்புச் சாதனத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடிவு செய்தது. தொடர்ந்து இந்திய திரைப்படத் தணிக்கைச் சட்டத்தின் மூலம் தணிக்கைத் துறையை 1918ஆம் ஆண்டில் செயல்படுத்தியது.**

316) பெண்கள், தாழ்த்தப்பட்டோர், திருநங்கைகள், சிறுவர் போன்றோர் பல்வேறு முறைகளில் ஒடுக்கப்படுவதால் அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை முன்னிறுத்தி விவாதிக்கும் போக்கு எப்போது உருவானது?

A) 1970

B) 1980

**C) 1990**

D) 1960

**விளக்கம்: சமூக மாற்றத்திற்கேற்ப கலை–இலக்கிய வடிவங்களின் போக்குகளிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளால் பெண்கள், தாழ்த்தப்பட்டோர், திருநங்கைகள், சிறுவர் போன்றோர் பல்வேறு முறைகளில் ஒடுக்கப்படுவதால் அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை முன்னிறுத்தி விவாதிக்கும் போக்கு 1990களின் தொடக்கத்தில் உருவானது.**

317) இந்தியத் திரைப்பட மேதை சத்யஜித் ரேயின் உலகப் புகழ்பெற்ற திரைப்படங்கள் பெரும்பாலும் எதனை அடிப்படையாகக் கொண்டவை?

**A) சிறுகதைகள்**

B) நாடகங்கள்

C) இலக்கியம்

D) வாசனகவிதைகள்

**விளக்கம்: இந்தியத் திரைப்பட வரலாற்றில் சிறுகதை அல்லது புதினத்தின் கதையைத் திரைமொழிக்கேற்ப வடிவ மாற்றம் செய்து திரைப்படங்களாக்கினர். இந்தியத் திரைப்பட மேதை சத்யஜித் ரேயின் உலகப் புகழ்பெற்ற திரைப்படங்கள் பெரும்பாலும் புதினங்களையும், சிறுகதைகளையும் அடிப்படையாகக்கொண்டவை ஆகும்.**

318) எந்த நூற்றாண்டில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, கீர்த்தனை, நாட்டார் நாடகங்கள் எனப் பல்வேறு நாடக வகைமைகள் தோன்றின?

**A) 17, 18**

B) 16, 17

C) 18, 19

D) 20, 21

**விளக்கம்: 17, 18ஆம் நூற்றாண்டில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, கீர்த்தனை, நாட்டார் நாடகங்கள் எனப் பல்வேறு நாடக வகைமைகள் தோன்றின.**

319) கூத்திற்குப் புதிய வடிவம் தந்ததுடன், மேலைநாட்டு உத்திகளையும் உருவாக்கித் தந்தவர் யார்?

**A) சங்கரதாஸ் சுவாமிகள்**

B) பம்மல் சம்பந்தனார்

C) பரிதிமாற்கலைஞர்

D) தி.க.சண்முகனார்

**விளக்கம்: நாடகத்துறையின் புதிய பரிணாமத்திற்குக் காரணமாக அமைந்தவர்களாகச் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்தனார், பரிதிமாற்கலைஞர் ஆகியோரைக் குறிப்பிடலாம். சங்கரதாஸ் சுவாமிகள் கூத்திற்குப் புதிய வடிவம் தந்ததுடன், மேலைநாட்டு உத்திகளையும் இணைத்துப் புதிய போக்கினை உருவாக்கித் தந்தார்.**

320) கூற்றுகளை ஆராய்க.

1. இராஜாஜி முதல்வராக இருந்த காலத்தில் தணிக்கை முறை விலக்கி வைக்கப்பட்டது.

2. எல்லிஸ் ஆர்.டங்கன் தமிழ்த்திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இராஜாஜி முதல்வராக இருந்த காலத்தில் தணிக்கை முறை விலக்கி வைக்கப்பட்டது.**

**2. எல்லிஸ் ஆர்.டங்கன் தமிழ்த்திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தார்.**

321) இந்தியாவில் முதல் பேசும்படம் எந்த மொழியில் தயாரிக்கப்பட்டது?

A) தெலுங்கு

B) ஆங்கிலம்

C) மலையாளம்

**D) இந்தி**

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது.**

322) சென்னையில் முதல் சலனப்படக் காட்சி எங்கு திரையிடப்பட்டது?

A) சென்னை பல்கலைக்கழகம்

B) சென்னை சென்ட்ரல்

**C) விக்டோரியா பப்ளிக் ஹால்**

D) செயின்ட் ஜார்ஜ் கோட்டை

**விளக்கம்: இந்தியாவில் 1896–ஆம் ஆண்டு மும்பையில் முதல் சலனப்படம் திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897–ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார். சென்னையில் 'விக்டோரியா பப்ளிக் ஹால்' என்ற அரங்கில் இக்காட்சி காட்டப்பட்டதைத் தொடர்ந்து பல நகரும்படக் காட்சிகள் சென்னை நகரின் பல்வேறு இடங்களில் திரையிடப்பட்டன. இவையே திரைப்படங்களுக்குத் தொடக்கமாக அமைந்தன.**

323) சலனப்படத்தை முதலில் கண்டுபிடித்தவர் யார்?

A) அலெக்சாண்டர் பிளம்மிங்

B) எட்வர்ட்

**C)லூமியர் சகோதரர்கள்**

D) சர் தாமஸ் மன்றோ

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலிமையான காட்சி ஊடகம் திரைப்படம். 1895–இல் லூமியர் சகோதரரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் 1896–ஆம் ஆண்டு மும்பையில் முதல் சலனப்படம் திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897–ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார்.**

324) பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின. இதில் தஞ்சையில் தோன்றிய நாடகக்குழு எது?

A) ஆடுகளம்

B) யவனிகா

C) அரூபம்

**D) அரங்கம்**

**விளக்கம்: சென்னை – ஆடுகளம், யவனிகா, பல்கலை அரங்கம், அரூபம்**

**மதுரை–சுதேசி.**

**பாண்டிச்சேரி– கூட்டுக்குரல், தலைக்கோல்,**

**தஞ்சை– அரங்கம்**

**காந்தி கிராமத்தில்– தளிர்.**

**திருச்சி– நாடகச் சங்கம்**

**திருவண்ணாமலை– தீட்சண்யா**

325) அரங்கம் மற்றும் அரங்க நிகழ்வுகள் குறித்து கூறும் நூல் எது?

**A) சிலப்பதிகாரம்**

B) மணிமேகலை

C) வளையாபதி

D) குண்டலகேசி

**விளக்கம்: அரங்கம் மற்றும் அரங்க நிகழ்வுகள் குறித்துத் தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியல் வழியாகவும் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதை வழியாகவும் விரிவான செய்திகளை அறிய முடிகிறது. பிற்காலச் சோழ, பாண்டிய மன்னர்கள் நாடகக்கலை வளர உறுதுணையாக இருந்தனர்.**

326) தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் 'கீசகவதம்' என்னும் மௌனப்படம் ஆகும். இது எந்த ஆண்டு தயாரிக்கப்பட்டது?

**A) 1916**

B) 1914

C) 1919

D) 1921

**விளக்கம்: மும்பையில் தயாரான 'ராஜா ஹரிச்சந்திரா' போன்ற புராணப் படங்கள் சென்னையில் திரையிடப்பட்டன. புராணப் படங்களின் வரவேற்பைக் கண்ட நடராஜர் என்பவர் கீழ்ப்பாக்கத்தில், 'இந்தியா பிலிம் கம்பெனி' என்ற நிறுவனத்தை நிறுவினார், இது 1916இல் 'கீசகவதம்' என்ற மௌனப் படத்தைத் தயாரித்தது. தென்னிந்தியாவின் முதல் திரைப்படம் இதுதான்.**

327) தமிழ்த் திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தவர் யார்?

A) வடுவூர் துரைசாமி

B) காசி விஸ்வநாதர்

C) நடராஜர்

**D) எல்லிஸ் ஆர்.டங்கன்**

**விளக்கம்: எல்லிஸ் ஆர்.டங்கன் தமிழ்த்திரைப்படங்களில் 50, 60 பாடல்கள் என்றிருந்த நிலையை மாற்றி ஆறு அல்லது எட்டுப் பாடல்களாகக் குறைத்தார். வெளிப்புறப் படப்பிடிப்பை அதிகம் பயன்படுத்தினார். ஹாலிவுட் பாணியில் கதைகூறும் முறையைத் தமிழ்ப்படங்களில் அறிமுகப்படுத்தியவரும் இவரே.**

328) யார் முதலமைச்சராக இருந்தபோது தணிக்கை முறை விலக்கி வைக்கப்பட்டது?

A) காமராசர்

**B) இராஜாஜி**

C) ஓமந்தூர் ராமசாமி

D) கக்கன்

**விளக்கம்: நாடக மேடைகளில் சுதந்திர வேட்கை கொழுந்துவிட்டு எரிந்த சூழலில், திரைப்படக் கதாபாத்திரங்கள் பேசும் வசனங்களின்மீதும் கவனம் செலுத்**தியது. **இராஜாஜி முதல்வராக இருந்த இக்காலத்தில் தணிக்கை முறை விலக்கி வைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில்தான் தியாகபூமி, மாத்ரூபூமி, விமோசனம், தேச முன்னேற்றம் போன்ற நாட்டுப்பற்றைப் போற்றும் தமிழ்த் திரைப்படங்கள் வெளிவந்தன.**

329) கூற்று: பாட்டும், இசையும் தொடக்க காலத் திரைப்படங்களின் முதன்மை கூறுகளாக விளங்கின.

காரணம்: ஒரே படத்தில் 50, 60 பாடல்கள் இருப்பது சிறப்பான நிலையாகக் கருதப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: தமிழ்நாட்டில் பேசும்படம் தோன்றியதும் தமிழ் நாடகங்களில் இருந்த பாடத் தெரிந்த நடிகர்கள், வசனகர்த்தாக்கள், இசையமைப்பாளர்கள் முதலிய கலைஞர்கள் திரைப்படங்களை நாடினர். அக்காலகட்டத்தில் வெளிவந்த திரைப்படங்களில் பெரும்பாலும் மேடை நாடகத் தன்மையே மேலோங்கியிருந்தது. பாட்டும், இசையும் தொடக்க காலத் திரைப்படங்களின் முதன்மை கூறுகளாக விளங்கின. ஒரே படத்தில் 50, 60 பாடல்கள் இருப்பது சிறப்பான நிலையாகக் கருதப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டது.**

330) எந்த ஆண்டு முதன் முதலாகப் பேச்சு, பாடல் இல்லாமல் வெறும் சப்தத்தை மட்டும் கொண்டு 'டேன்ஜுன்' என்ற படம் வெளிவந்தது?

A) 1918

B) 1921

**C) 1926**

D) 1928

**விளக்கம்: 1926–இல் 'வார்னர்' சகோதரர்களால் தயாரிக்கப்பட்டு முதன்முதலாகப் பேச்சு, பாடல் இல்லாமல் வெறும் சப்தத்தை மட்டும் கொண்டு வெளிவந்த படம் 'டோன்ஜுன்' ஆகும். அதன்பின் உரையாடலையும் பாடல்களையும் கொண்டு உலகில் முதல் பேசும்படமான 'தி ஜாஸ் சிங்கர்' வெளிவந்தது.**

331) சென்னையில் ____________________ என்ற ஆங்கிலேயர் 1897–ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார்.

A) அலெக்சாண்டர் பிளம்மிங்

**B) எட்வர்ட்**

C) லுமியர் சகோதரர்கள்

D) சர் தாமஸ் மன்ரோ

**விளக்கம்: 19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய வலிமையான காட்சி ஊடகம் திரைப்படம். 1895–இல் லூமியர் சகோதரரர்களால் சலனப்படம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தியாவில் 1896–ஆம் ஆண்டு மும்பையில் முதல் சலனப்படம் திரையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் எட்வர்டு என்ற ஆங்கிலேயர் 1897–ஆம் ஆண்டு சில நிமிடங்களே ஓடக்கூடிய முதல் சலனப்படக் காட்சியைத் திரையிட்டுக் காட்டினார்.**

332) 2000–க்குப் பிறகு விளிம்புநிலைக் கருத்துக்களோடு மேடை ஏறிய நாடகங்களான ஆஷா பாரதியின் நாடகங்கள் கீழக்காணும் யாரைப் பற்றி பேசின?

A) தாழ்த்தப்பட்டோர்

B) பெண்கள்

**C) திருநங்கைகள்**

D) மேற்காணும் அனைவரும்

**விளக்கம்: 2000–க்குப் பிறகு விளிம்புநிலைக் கருத்துக்களோடு மேடை ஏறிய நாடகங்களான ஆஷா பாரதியின் நாடகங்கள் திருநங்கைகள் குறித்துப் பேசின. அதற்கெனவே 'கண்ணாடிக் கலைக்குழு' நாடக அமைப்பு செயல்பட்டது.**

333) போர், சாதி, சுற்றுச்சூழல், நகரமயமாதல் போன்றவற்றில் பெண்கள் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பதை மேடைகளில் நிகழ்த்திக் காட்டியவர் யார்?

A) மு.ஜீவா

B) இன்குலாப்

**C) பிரசன்னா ராமசாமி**

D) தி.க.சண்முகனார்

**விளக்கம்: பெண்ணிய அரங்கச் செயல்பாடுகளில் இயங்கியவர்களில் முக்கியமானவர்களாக அ.மங்கை, மு.ஜீவா, பிரசன்னா ராமசாமி ஆகிய மூவரையும் குறிப்பிடலாம். அ.மங்கை** என்பவர் **இன்குலாப் எழுதிய 'ஔவை', சே.இராமானுஜம் எழுதிய 'மௌனக்குறம்' ஆகிய நாடகங்களை மேடையேற்றினார். மு.ஜீவா பல்வேறு நாடகக் குழுக்களில் நடிகையாகச் செயல்பட்டதோடு ஐரோப்பிய பெண்ணிய நாடகங்களிலிருந்து சில பகுதிகளைக் காட்சிகளாக நிகழ்த்திக் காட்டியுள்ளார். மற்றொரு பெண் நாடக இயக்குநரான பிரசன்னா ராமசாமி போர், சாதி, சுற்றுச்சூழல், நகரமயமாதல் போன்றவற்றில் பெண்கள் கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பதை மேடைகளில் நிகழ்த்திக் காட்டினார்.**

334) ________________களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது?

A) 80

B) 70

**C) 90**

D) 60

**விளக்கம்: 90களின் தொடக்கத்தில் தலித்திய அரங்கம் கவனம் பெற்றது. குறிப்பிடத்தக்க நாடக ஆசிரியராகவும் இயக்குநராகவும் இருந்தவர் கே.ஏ.குணசேகரன் ஆவார். அவரது 'பலி ஆடுகள்' முதல் தலித் நாடகமாகக் கருதப்படுகிறது. அ.ராமசாமி, பிரேம், இரா.ராஜு போன்றவர்கள் தலித்திய பெண்ணிய உள்ளடக்கங்களோடு நாடகங்களை மேடையேற்றினர்.**

335) வெள்ளை வட்டம் என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

A) பாதல் சர்க்கார்

B) விஜய் டெண்டுல்கர்

C) கிரிஷ் கர்னாட்

**D) பெர்டோல்ட் பிரெகட்**

**விளக்கம்: எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் தழுவல் நாடகங்களும் மொழிபெயர்ப்பு நாடகங்களும் ஏராளமாகப் பெருகின. பிற மொழிப்படைப்பாளிகளான பாதல் சர்க்காரின் ஏவம் மற்றும் இந்திரஜித், விஜய் டெண்டுல்கரின் கமலா, கிரிஷ் கர்னாட்டின் துக்ளக், பெர்டோல்ட் பிரெகட்டின் வெள்ளை வட்டம் போன்ற நாடகங்கள் தமிழில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.**

336) பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின. இதில் சென்னைக்கு பொருந்தாதது எது?

A) ஆடுகளம்

B) யவனிகா

C) அரூபம்

**D) அரங்கம்**

**விளக்கம்: சென்னை – ஆடுகளம், யவனிகா, பல்கலை அரங்கம், அரூபம்**

**மதுரை– சுதேசி.**

**பாண்டிச்சேரி– கூட்டுக்குரல், தலைக்கோல், தஞ்சை – அரங்கம்**

**காந்தி கிராமத்தில்– தளிர்.**

**திருச்சி– நாடகச் சங்கம்**

**திருவண்ணாமலை– தீட்சண்யா.**

337) எந்த ஆண்டுகளின் தஞ்சை, புதுவை, மதுரை முதலான பல்கலைக்கழகங்களில் நாடகத்துறைகள் தொடங்கப்பட்டன?

A) 1990

B) 1980

**C) 1970**

D) 1960

**விளக்கம்: 1970–களில் தஞ்சை, புதுவை, மதுரை முதலான பல்கலைகழகங்களில் நாடகத்துறைகள் தொடங்கப்பட்டன. முதுகலைப்பாடத்தில் நாடகம் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டது. பல்கலைக்கழகங்களில் நாடகத்துறை தோன்றியதன் விளைவாகப் பல நவீன நாடகக்குழுக்கள் தோன்றின.**

338) 1990 ஜுலையில் ரெங்கராஜனால் நாடகத்திற்கெனத் தொடங்கப்பெற்ற _______________ என்னும் இதழ் பத்து ஆண்டுகளில் நாற்பது இதழ்களை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது?

A) நாடகவியல்

**B) நாடகவெளி**

C) நாடககூத்து

D) நாடகத் தமிழ்

**விளக்கம்: 1990 ஜுலையில் ரெங்கராஜனால் நாடகத்திற்கெனத் தொடங்கப்பெற்ற நாடகவெளி என்னும் இதழ் பத்து ஆண்டுகளில் நாற்பது இதழ்களை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.**

339) அரங்கம் மற்றும் அரங்க நிகழ்வுகள் குறித்து எந்த நூலின் மெய்ப்பாட்டியல் வழியாக விரிவான செய்திகளை அறிய முடிகிறது?

**A) தொல்காப்பியம்**

B) அகத்தியம்

C) நன்னூல்

D) தண்டியலங்காரம்

**விளக்கம்: அரங்கம் மற்றும் அரங்க நிகழ்வுகள் குறித்துத் தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியல் வழியாகவும் சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதை வழியாகவும் விரிவான செய்திகளை அறிய முடிகிறது. பிற்காலச் சோழ, பாண்டிய மன்னர்கள் நாடகக்கலை வளர உறுதுணையாக இருந்தனர்.**

340) எந்த காலகட்டத்தில் நாடகம் குறித்த கட்டுரைகளை வெளியிடுவதில் கொல்லிப்பாவை, வைகை, விழிகள், யாத்ரா போன்ற சிறுபத்திரிக்கைகள் குறிப்பிடத்தகுந்தவையாக அமைந்தன?

**A) 1980**

B) 1970

C) 1990

D) 1960

**விளக்கம்: 1980–களின் காலகட்டத்தில் நாடகம் குறித்த கட்டுரைகளை வெளியிடுவதில் கொல்லிப்பாவை, வைகை, விழிகள், யாத்ரா போன்ற சிறுபத்திரிக்கைகள் குறிப்பிடத்தகுந்தவையாக இருந்தன.**

**கணையாழியிலும் அவ்வப்போது நாடக நிகழ்வுகள் குறித்த செய்திகளும் விமரிசனக் குறிப்புகளும் வெளியிடப்பட்டன.**

341) திரைப்படத்தின் உயிர் என்று கருதப்படுவது எது?

A) ஒலியமைப்பு

B) இசை

**C) கதை**

D) நடிகர்கள்

**விளக்கம்: ஒரு நல்ல திரைப்படம் ஒரு கதையைச் சொல்ல வேண்டும். அதனால்தான் 'கதை' திரைப்படத்தின் உயிர் என்று கருதப்படுகிறது.**

342) 'நாட்' என்ற சொல்லின் சரியான தமிழ்ச்சொல்லை தேர்வு செய்க?

A) தவறு

B) எதிர்மறை

**C) முடிச்சு**

D) மேற்காணும் அனைத்தும்

**விளக்கம்: திரைக்கதையின் உயிர்மூச்சு முடிச்சு ஆகும். கதையின் விறுவிறுப்பு கதைமுடிச்சில் உள்ளது. இதனை ஆங்கிலத்தில் 'நாட்' என்பர். காப்பியம், புதினம் முதலிய எல்லாவகைக் கதை இலக்கியங்களுக்கும் இந்த முடிச்சு அடிப்படையானது. அதனால் ஒரு கதையில் முடிச்சு எது என்பதை அறிதல் வேண்டும்.**

343) கூற்றுகளை ஆராய்க.

1. சட்டகம் என்பது திரைப்படத்தின் அமைப்பு ரீதியான ஓர் அலகு ஆகும்.

2. காட்சித்துணிப்பு அண்மைக் காட்சி, இடைநிலைக் காட்சி, சேய்மைக் காட்சி, முழுக்காட்சி எனப் பலவகையாக அமையும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. சட்டகம் என்பது திரைப்படத்தின் அமைப்பு ரீதியான ஓர் அலகு ஆகும்.**

**2. காட்சித்துணிப்பு அண்மைக் காட்சி, இடைநிலைக் காட்சி, சேய்மைக் காட்சி, முழுக்காட்சி எனப் பலவகையாக அமையும்.**

344) கூற்றுகளை ஆராய்க.

1. எந்தப் பகுதியை மையப்படுத்துகிறமோ அதுமட்டும் தெளிவாகத் தெரியும் – அண்மைக்காட்சி

2. இடுப்புவரை எடுக்கப்படும் காட்சி – இடைநிலைக்காட்சி.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. எந்தப் பகுதியை மையப்படுத்துகிறமோ அதுமட்டும் தெளிவாகத் தெரியும் – அண்மைக்காட்சி**

**2. இடுப்புவரை எடுக்கப்படும் காட்சி – இடைநிலைக்காட்சி.**

345) துணிப்புகளின் தலைமையாக விளங்குவது எது?

A) அண்மைக்காட்சி

B) இடைநிலைக்காட்சி

**C) சேய்மைக்காட்சி**

D) முழுக்காட்சி

**விளக்கம்: துணிப்புகளின் தலைமையாக சேய்மைக்காட்சி விளங்குகிறது. நகரத்தையோ, நிலப்பகுதியையோ காண்பிப்பதற்கு ஏற்ற துணிப்பு இது. கதையில் வரும் கட்டடத் தொழிலாளர் தாங்கள் கட்டிய கட்டடங்களை நினைத்துப் பார்க்கும்போது, சேய்மைக்காட்சியில் அனைத்துக் கட்டடங்களையும் ஒருசேரக் காட்டலாம்.**

346) ஒரு காட்சியை எத்தனை விதக் கோணங்களின் மூலம் கொண்டுவர முடியும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: ஒரு காட்சியை மூன்றுவித கோணங்கள் மூலம் கொண்டுவர முடியும். இதனைப் புறநிலைக்கோணம், அகநிலைக்கோணம், பார்வையாளர் கோணம் என்று அழைப்பர். எந்தக் கோணத்தில் படமாக்க கருவியை வைக்கிறமோ அதுவே படபிடிப்புக் கருவி கோணம் என்கிறோம்.**

347) நல்ல படம் எனக் குறிப்பிடப்படுவது இரண்டு மேசைகளில் உருவாகிறது. ஒன்று கதை எழுதுபவரின் மேசை, மற்றொன்று எது?

**A) படத்தொகுப்பாளரின் மேசை**

B) இசையமைப்பாளரின் மேசை

C) இயக்குநரின் மேசை

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: நல்ல படம் எனக் குறிப்பிடப்படுவது இரண்டு மேசைகளில் உருவாகிறது. ஒன்று கதை எழுதுபவரின் மேசை. மற்றொன்று படத்தொகுப்பாளரின் மேசை.**

348) எந்த ஆண்டு சென்னையில் முதல் ஒலிப்பதிவுக் கூடம் நிறுவப்பட்டது?

A) 1931

B) 1932

C) 1933

**D) 1934**

**விளக்கம்: முதல் நான்கு ஆண்டுகள் வரை சென்னையில் ஒலிப்பதிவுத் தொழில் நுட்ப வசதிகள் ஏதும் இல்லாததால் தமிழ்த் திரைப்படங்கள் மும்பையிலும், கல்கத்தாவிலுமே தயாரிக்கப்பட்டன. 1934–ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலேயே சென்னையில் முதல் ஒலிப்பதிவுக் கூடம் நிறுவப்பட்டது.**

349) எந்த படம் வெளிவந்ததும் தமிழ்த் திரைப்படங்களைத் தமிழகத்திலேயே தயாரித்து வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது?

A) ஆலம் ஆரா

B) கீசகவதம்

**C) காளிதாஸ்**

D) ராஜா ஹரிசந்திரா

**விளக்கம்: இந்தியாவின் முதல் பேசும்படம் இந்தி மொழியில் தயாரிக்கப்பட்ட 'ஆலம் ஆரா'. இப்படம் 1931–இல் அர்தெஷிர் இரானி என்பவரால் இயக்கித் தயாரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழில் 'குறத்திப் பாட்டும் டான்ஸும்' என்ற நான்கு படச்சுருள் கொண்ட குறும்படம் வெளி வந்தது. அதே ஆண்டு எச்.எம்.ரெட்டி இயக்கிய முதல் முழுநீளத் தமிழ்ப் படமான 'காளிதாஸ்' வெளிவந்தது. இதுவே தமிழில் வெளிவந்த முதல் பேசும் படம். 'காளிதாஸ்' படம் வெளிவந்ததும் தமிழ்த் திரைப்படங்களைத் தமிழகத்திலேயே தயாரித்து வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.**

350) கூற்று: 1931 முதல் நான்கு ஆண்டுகள் தமிழ்த்திரைப்படங்கள் மும்பையிலும், கல்கத்தாவிலுமே தயாரிக்கப்பட்டன.

காரணம்: சென்னையில் ஒலிப்பதிவுத் தொழில் நுட்ப வசதிகள் ஏதும் இல்லை.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: முதல் நான்கு ஆண்டுகள் வரை சென்னையில் ஒலிப்பதிவுத் தொழில் நுட்ப வசதிகள் ஏதும் இல்லாததால் தமிழ்த் திரைப்படங்கள் மும்பையிலும், கல்கத்தாவிலுமே தயாரிக்கப்பட்டன. 1934–ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலேயே சென்னையில் முதல் ஒலிப்பதிவுக் கூடம் நிறுவப்பட்டது.**

351) 1934–ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலேயே சென்னையில் முதல் ஒலிப்பதிவுக் கூடம் நிறுவப்பட்டது. இதில் தயாரிக்கப்பட்ட முதல் திரைப்படம் எது?

**A) சீனிவாசக் கல்யாணம்**

B) காளிதாஸ்

C) ராஜா ஹரிசந்திரா

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: 1934–ஆம் ஆண்டில் தென்னிந்தியாவிலேயே சென்னையில் முதல் ஒலிப்பதிவுக் கூடம் நிறுவப்பட்டது. இதில் தயாரிக்கப்பட்ட முதல் தமிழ் பேசும்படம் 'சீனிவாசக் கல்யாணம்'. இப்படம் ஏ.நாராயணனால் இயக்கப்பட்டது. அதன் பின் பல ஒலிப்பதிவுக் கூடங்கள் சென்னையில் நிறுவப்பட்டன.**

## 12th Advanced Tamil Unit 3 Questions

## 3] ஊடகவியல்

1) Twitter – என்ற சொல்லின் தமிழாக்கம் என்ன?

A) அங்கவேகம்

B) சமிக்ஞை

**C) கீச்சகம்**

D) புலனம்

**விளக்கம்: அங்கவேகம் – Tempo**

**சமிக்ஞை**– Signal

**கீச்சகம்**– Twitter

**புலனம்**– Whatsapp.

2) எந்த ஆண்டு மார்க்கோனி கம்பில்லாத் தந்தி சேவை நிறுவனத்தைத் தொடங்கினார்?

**A) 1897**

B) 1887

C) 1893

D) 1894

**விளக்கம்: 1897ஆம் ஆண்டு மார்க்கோனி கம்பியில்லாத் தந்தி சேவை நிறுவனத்தை தொடங்கினார். ஒலிபரப்பிற்குத் தேவையான கருவிகளையும் அவரே உருவாக்கினார். அட்லாண்டிக் கடலின் குறுக்கே கார்ன்வாலில் இருந்து நியூபவுண்லாந்து வரை செய்திகளை அனுப்பினார். இவருக்கு 1909ஆம் ஆண்டு இயற்பியல் துறைக்கான நேபால் பரிசு வழங்கப்பட்டது.**

3) குலீல்மோ மர்க்கோனி வானொலியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதற்காகத் தன் வீட்டையே ஆராய்ச்சிக்கூடமாக மாற்றினார். நீண்ட நாள்களாக நடைபெற்ற ஆராய்ச்சியின் முடிவாகக் கம்பில்லாத் தந்தி முறையில் செய்திகளைத் தொலைதூரத்திற்கு அனுப்பும் முயற்சியில் வெற்றி பெற்றார். இக்கண்டுபிடிப்பை இங்கிலாந்து அறிவியல் கழகத்தில் பதிவு செய்தார். இவர் எந்த நாட்டு அறிஞர்?

A) ஜெர்மனி

**B) இத்தாலி**

C) பிரான்சு

D) அமெரிக்கா

**விளக்கம்: இத்தாலி நாட்டு அறிஞர் குலீல்மோ மர்க்கோனி வானொலியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதற்காகத் தன் வீட்டையே ஆராய்ச்சிக்கூடமாக மாற்றினார். நீண்ட நாள்களாக நடைபெற்ற ஆராய்ச்சியின் முடிவாகக் கம்பில்லாத் தந்தி முறையில் செய்திகளைத் தொலைதூரத்திற்கு அனுப்பும் முயற்சியில் வெற்றி பெற்றார். இக்கண்டுபிடிப்பை இங்கிலாந்து அறிவியல் கழகத்தில் பதிவு செய்தார்.**

4) எந்த ஆண்டு அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா என்ற கருவியை உருவாக்கியது?

A) 1957

**B) 1956**

C) 1952

D) 1974

**விளக்கம்: தொடக்க காலத்தில் படம்பிடிக்கும் கருவியின் முன் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு நேரடியாக ஒலிபரப்பப்பட்டன. 1956இல் அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா என்ற கருவியை உருவாக்கியது. அதன்பிறகு நவீனத் தொழில்நுட்பம் கொண்ட படப்பிடிப்புக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்காலத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் முழுமையாக எண்ணிம (Digital) வடிவத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன. இதனால் காட்சிகளைத் தெளிவாகவும் துல்லியமாகவும் காணமுடிகிறது.**

5) 1982ஆம் ஆண்டு வண்ணத் தொலைக்காட்சி இந்தியாவில் அறிமுகமானது. இவ்வண்ணத் தொலைக்காட்சியில் முதல் நிகழ்ச்சியாக அமைந்தது எது?

A) குடியரசு தின விழா

**B) சுதந்திர தின விழா**

C) காந்தி ஜெயந்தி விழா

D) ஆங்கிலப் புத்தாண்டு விழா

**விளக்கம்: இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி 1959–இல் புதுதில்லியில் தொடங்கப்பட்டது. முதலில் நிகழ்ச்சிகள் கருப்பு வெள்ளை நிறத்தில் ஒளிபரப்பாயின. பின்பு, 1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் வண்ணத் தொலைக்காட்சியாக வளர்ச்சி பெற்றது. இவ்வண்ணத் தொலைக்காட்சியில் இந்திரா காந்தி அம்மையாரின் சுந்திரதினவிழாப் பேருரையே முதல் நிகழ்ச்சியாக அமைந்தது.**

6) ஐ.நா.சபை1975ஆம் ஆண்டை எந்த ஆண்டாக அறிவித்தது?

A) உலக குழந்தைகள் ஆண்டு

**B) உலகப் பெண்கள் ஆண்டு**

C) உலக ஆண்கள் ஆண்டு

D) உலக வயது முதிர்ந்தோர் ஆண்டு

**விளக்கம்: ஐ.நா.அவை 1975 ஆம் ஆண்டை உலகப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது. அவ்வாண்டில் இந்திய வானொலி நிலையங்கள் அனைத்திலும் பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன.**

7) எப்போது இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது?

**A) 1997**

B) 1998

C) 1999

D) 2000

**விளக்கம்: இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI – Telecom Regulatory Authority of India).**

**இந்தியாவில் தொலைத் தொடர்புச் சேவைகளையும் கட்டணத்தையும் ஒழுங்குபடுத்த பாராளுமன்ற சட்டம் 1997இன் 3ஆவது பிரிவு வழிவகை செய்கிறது. அதன்படி 1997 பிப்ரவரி 20 அன்று இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது. தொலைத்தொடர்புச் சேவைகளையும் சுங்க வரி விதிப்புகளையும் இவ்வாணையம் மேற்பார்வை செய்துவருகிறது.**

8) ISBS என்ற சொல்லின் சரியான விரிவாக்கத்தை கண்டுபிடி.

**A) Indian State Broard casting Service**

B) Indian State Broad of Service

C) Indian Service of Broad casting Scheme

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை (Indian State Broard casting Service) தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது.**

9) கூற்றுகளை ஆராய்க.

1. இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது.

2. பின்னர் இது 1957–முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்பட்டது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் இது 1957–முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்பட்டது.**

10) இலக்கிய நிகழ்ச்சிகள் பற்றிய கூற்றுகளில் தவறானதை தேர்வு செய்க

A) இளம் கவிஞர்களுக்கான வெளிப்பாட்டுக் களங்கள் – கவியரங்கம்

B) இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்களைப் பன்முக நோக்கில் ஆராயும் களம் – பட்டிமன்றங்கள்

C) ஓர் இலக்கியம் படைக்கப்பட்டதற்கான கோணங்களில் இருவர் விவாதிக்கும் நிகழ்ச்சிகள் – வழக்காடு மன்றம்

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: இளம் கவிஞர்களுக்கான வெளிப்பாட்டுக் களங்கள் – கவியரங்கம்.**

**இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்களைப் பன்முக நோக்கில் ஆராயும் களம் – பட்டிமன்றங்கள்**

**ஓர் இலக்கியம் படைக்கப்பட்டதற்கான கோணங்களில் இருவர் விவாதிக்கும் நிகழ்ச்சிகள் – வழக்காடு மன்றம்.**

**சிறந்த மேடைப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் – சொற்பொழிவு**

11) யார் "ரேடியோ" என்ற சொல்லுக்குத் தமிழில் வானொலி என்ற சொல்லை முன்மொழிந்தார்?

A) மு.வரதராசனார்

**B) டி.கே.சிதம்பரனார்**

C) பாரதிதாசன்

D) கவிமணி

**விளக்கம்: டி.கே.சிதம்பரனார் "ரேடியோ" என்ற சொல்லுக்குத் தமிழில் வானொலி என்ற சொல்லை முன்மொழிந்தார். ஆல் இந்தியா ரேடியோ, ஆகாஷவாணி என்று முழங்கி வந்த நிலையில் முதன்முதலில் திருச்சி வானொலி நிலையம் 1959இல் திருச்சி வானொலி நிலையம் என்று அறிவித்தது. அதன்பிறகு வானொலி என்ற சொல்லை அனைவரும் பயன்படுத்தத் தொடங்கினர்.**

12) உலகத் தொலைக்காட்சி தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

**A) நவம்பர் 21**

B) நவம்பர் 12

C) மார்ச் 21

D) பிப்ரவரி 13

**விளக்கம்: நவம்பர் 21 – உலகத் தொலைக்காட்சி தினம்**

**நவம்பர் 12– பொது ஒலிபரப்பு நாள் கொண்டாடப்படும் தினம்**

**மார்ச் 21– உலக பொம்மலாட்ட தினம்**

**பிப்ரவரி 13– உலக வானொலி தினம்**

13) உஷா மேத்தா எப்போது வானொலி நிலையத்தை தொடங்கினார்?

**A) 1942 ஆகஸ்ட் 15**

B) 1940 ஆகஸ்ட் 15

C) 1947 ஆகஸ்ட் 15

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: 1920ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் பிறந்தவர் உஷா மேத்தா. இவர் தனது 22ஆம் வயதில் பாபுபாய் படேல் என்பவரின் உதவியுடன் 1942, ஆகஸ்ட் 14 அன்று ஒரு வானொலி நிலையத்தை உருவாக்கினார். தலைவர்களின் உரைகள், விடுதலைப் போராட்ட உத்திகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இதில் ஒலிபரப்பபட்டன. வானொலி நிலையம் தொடர்ந்து ஓரிடத்தில் இருந்து செயல்பட இயலவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை இடம்மாற்றப்பட்டது. 3 மாதங்கள் மட்டுமே இந்த வானொலி நிலையம் இயங்கியது.**

14) அலுவலக இரகசியங்கள் சட்டம் எப்போது கொண்டுவரப்பட்டது?

A) 1922

**B) 1923**

C) 1924

D) 1925

**விளக்கம்: ஊடகமானது நிகழ்வுகளை மக்களுக்கு வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடி என்ற நோக்கில் எல்லாவற்றையும் வெளியிடுதல் கூடாது. நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டுத் தொடர்பு, குற்றப்புலனாய்வு, அமைச்சரவை முடிவு போன்றவற்றை ரகசியமாக அறிந்து அவற்றை வெளியிடுவது பெரும் குற்றமாகும். இதைத் தடை செய்ய 1923ஆம் ஆண்டில் அலுவலக இரகசியங்கள் சட்டம் கொண்டுவரப்பட்டது.**

15) எந்த ஆண்டு குலீல்மோ மார்க்கோனிக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது?

A) 1906

**B) 1909**

C) 1913

D) 1907

**விளக்கம்: 1897ஆம் ஆண்டு மார்க்கோனி கம்பியில்லாத் தந்தி சேவை நிறுவனத்தை தொடங்கினார். ஒலிபரப்பிற்குத் தேவையான கருவிகளையும் அவரே உருவாக்கினார். அட்லாண்டிக் கடலின் குறுக்கே கார்ன்வாலில் இருந்து நியூபவுண்லாந்து வரை செய்திகளை அனுப்பினார். இவருக்கு 1909ஆம் ஆண்டு இயற்பியல் துறைக்கான** நோபல் **பரிசு வழங்கப்பட்டது**

16) குலீல்மோ மார்க்கோனி 1897ஆம் ஆண்டு மார்க்கோனி கம்பியில்லாத் தந்தி சேவை நிறுவனத்தை தொடங்கினார். ஒலிபரப்பிற்குத் தேவையான கருவிகளையும் அவரே உருவாக்கினார். தனது அடுத்த முயற்சியின் விளைவாக எத்தனை மைல் தொலைவிற்குச் செய்திகளை அனுப்பி வெற்றிகண்டார்?

A) 1400

**B) 1800**

C) 2700

D) 1200

**விளக்கம்: 1897ஆம் ஆண்டு மார்க்கோனி கம்பியில்லாத் தந்தி சேவை நிறுவனத்தை தொடங்கினார். ஒலிபரப்பிற்குத் தேவையான கருவிகளையும் அவரே உருவாக்கினார். அட்லாண்டிக் கடலின் குறுக்கே கார்ன்வாலில் இருந்து நியூபவுண்லாந்து வரை செய்திகளை அனுப்பினார். இவருக்கு 1909ஆம் ஆண்டு இயற்பியல் துறைக்கான** நோபல் **பரிசு வழங்கப்பட்டது. தமது அடுத்த முயற்சியின் விளைவாக 1800 மைல் தொலைவிற்குச் செய்திகளை அனுப்பி வெற்றிகண்டார்.**

17) உலகத்தின் முதல் வானொலி நிலையம் எங்கு தொடங்கப்பட்டது?

**A) பீட்ஸ்பர்க் நகர்**

B) பீட்டர்மரிட்ஸ் பர்க் நகர்

C) வாஷிங்டன்

D) இலண்டன்

**விளக்கம்: உலகத்தின் முதல் வானொலி நிலையம் 1920ஆம் ஆண்டு அமெரிக்காவின் பீட்ஸ்பர்க் நகரில் தொடங்கப்பட்டது. "அமெரிக்க ஜனாதிபதியாக ஹார்டிங்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்" என்பதே இதில் ஒளிபரப்பப்பட்ட முதல் செய்தியாகும்.**

18) 1952 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின்படி குற்றங்கள் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன?

**A) 2**

B) 3

C) 4

D) 5

**விளக்கம்: 1952 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின்படி குற்றங்கள் உரிமையியல், குற்றவியல் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. நீதிமன்ற ஆணைகளுக்கும் தீர்ப்புகளுக்கும் கட்டுப்பட மறுப்பது உரிமையியல் வழக்காகவும் ஊடகங்களில் தவறான செய்திகளைப் பரப்புவது குற்றவியல் வழக்காகவும் பதிவு செய்யப்படும். குற்றம் உறுதிசெய்யப்பட்டால் ஆறுமாதம் சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படும்.**

19) எந்த ஆண்டு இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி புதுதில்லியில் தொடங்கப்பட்டது?

A) 1956

B) 1958

C) 1950

**D) 1959**

**விளக்கம்: இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி 1959-இல் புதுதில்லியில் தொடங்கப்பட்டது. முதலில் நிகழ்ச்சிகள் கருப்பு வெள்ளை நிறத்தில் ஒளிபரப்பாயின. பின்பு, 1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் வண்ணத் தொலைக்காட்சியாக வளர்ச்சி பெற்றது. இவ்வண்ணத் தொலைக்காட்சியில் இந்திரா காந்தி அம்மையாரின் சுந்திரதினவிழாப் பேருரையே முதல் நிகழ்ச்சியாக அமைந்தது.**

20) இந்தியக் குற்றவியல் சட்டத்தில் சில பிரிவுகள் எவை எவை ஆபாசம் எனப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன. இதில் பொருந்தாதது எது?

**A) 291**

B) 292

C) 293

D) 294

**விளக்கம்: இந்தியக் குற்றவில் சட்டத்தில் 292, 293, 294 முதலானப் பிரிவுகள் எவை எவை ஆபாசம் எனப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.**

21) யார் இயற்றிய சிலப்பத்திகார நாடகநூல் 'நுபுர் க ஸ்வர்' என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புதுதில்லி வானொலியில் ஒலிபரப்பானது?

A) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

B) ரா.அய்யாசாமி

**C) வெ.நல்லதம்பி**

D) முத்துக்கூத்தன்

**விளக்கம்: வெ.நல்லத்தம்பி சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகியவற்றை நாடக வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது சிலப்பதிகார நாடகநூல் 'நுபுர் க ஸ்வர்' என் பெயரில் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புதுதில்லி வானொலியில் ஒலிபரப்பானது.**

22) கூற்றுகளை ஆராய்க.

1. ஐ.நா.அவை1975ஆம் ஆண்டை உலகப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது.

2. 1983இல் இன்சாட் 1பி என்ற தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் ஏவப்பட்டதன் காரணமாக நாட்டில் மண்டல ஒளிபரப்புகள் தொடங்கப்பட்டன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஐ.நா.அவை 1975ஆம் ஆண்டை உலகப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது.**

**2. 1983இல் இன்சாட் 1பி என்ற தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் ஏவப்பட்டதன் காரணமாக நாட்டில் மண்டல ஒளிபரப்புகள் தொடங்கப்பட்டன.**

23) இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன் எந்த மொழிகளில் தன் வானொலி ஒளிபரப்பைத் தொடங்கியது?

A) ஆங்கிலம்

**B) இந்திய மொழி**

C) உருது

D) தமிழ்

**விளக்கம்: இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது.**

24) தவறான கூற்றை தெரிவு செய்க.

A) இந்தியக் குற்றவியல் சட்டம் 499ஆம் பிரிவு அவமதிப்பு மற்றும் விதிவிலக்குகள் பற்றி கூறுகிறது.

**B) 1959ஆம் ஆண்டு நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்டத்தின்படி நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தீய நோக்கில் வெளியிட்டன என உறுதி செய்யப்பட்டால் தண்டனை வழங்கலாம்.**

C) 1973ஆம் ஆண்டின் வழக்குத்தொடர்விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும்.

D) 1952ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின்படி குற்றங்கள் உரிமையியல், குற்றவியல் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

**விளக்கம்: 1956ஆம் ஆண்டு நாடாளுமன்ற நடவடிக்கைகள் சட்டத்தின்படி நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் தீய நோக்கில் வெளியிட்டன என உறுதி செய்யப்பட்டால் தண்டனை வழங்கலாம்.**

25) இரண்டாவது, ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடுகளில் பிற நாட்டுத் தமிழறிஞர்களிடம் நேர்காணல் நிகழ்ச்சி நடத்தி அதனைப் படத்துடன் ஆவணப்படுத்தியுள்ளவர் யார்?

A) முத்துக்கூத்தன்

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) ர.அய்யாசாமி

**D) நல்லதம்பி**

**விளக்கம்: இரண்டாவது, ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடுகளில் பிற நாட்டுத் தமிழறிஞர்களிடம் நேர்காணல் நிகழ்ச்சி நடத்தி அதனைப் படத்துடன் ஆவணப்படுத்தியுள்ளவர் நல்லதம்பி ஆவார்.**

26) சென்னை வானொலியில் பாலராமாயணத்துடன் மோனக காந்தி என்னும் நிகழ்ச்சியையும் வழங்கி வானொலிக்குப் பெருமை சேர்த்தவர் யார்?

**A) ர.அய்யாசாமி**

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) வெ.நல்லதம்பி

D) முத்துக்கூத்தன்

**விளக்கம்: ர.அய்யாசாமி என்பவர் சென்னை வானொலியில் பாலராமாயணத்துடன் மோகன காந்தி என்னும் நிகழ்ச்சியையும் வழங்கி வானொலிக்குப் பெருமை சேர்த்தார். இவரது நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு நிகழ்ச்சிகளாக ஒலிபரப்பப்பட்டன.**

27) உலக பொம்மலாட்டத்தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

A) நவம்பர் 21

B) நவம்பர் 12

**C) மார்ச் 21**

D) பிப்ரவரி 13

**விளக்கம்: நவம்பர் 21 – உலகத் தொலைக்காட்சி தினம்**

**நவம்பர் 12– பொது ஒலிபரப்பு நாள் கொண்டாடப்படும் தினம்**

**மார்ச் 21– உலக பொம்மலாட்ட தினம்**

**பிப்ரவரி 13– உலக வானொலி தினம்**

28) கல்வியைத் தரமானதாகவும் பரவலாக்கவும் கிராம மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும் தொலைக்காட்சி ஒரு சிறந்த ஊடகமாக அறியப்படுகிறது. எந்த ஆண்டின் நிறைவுற்ற சைட் திட்டம் இதற்கான ஆய்வு உறுதிகளை வழங்கியது?

**A) 1976**

B) 1984

C) 1970

D) 1956

**விளக்கம்: கல்வியைத் தரமானதாகவும் பரவலாக்கவும் கிராம மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும் தொலைக்காட்சி ஒரு சிறந்த ஊடகமாக அறியப்படுகிறது. 1976ஆம் ஆண்டு நிறைவுற்ற சைட் திட்டம் இதற்கான ஆய்வு உறுதிகளை வழங்கியது. இதனால் ஊக்கம் பெற்ற இந்தியக் கல்வியாளர்கள் தொலைக்காட்சியைக் கல்வி வளர்ச்சிக்கான ஓர் ஊடகமாக மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.**

29) சென்னைத் தொலைக்காட்சியில் 'கண்மணிப்பூங்கா' என்னும் நிகழ்ச்சியில் யாருடைய பொம்மலாட்டம் இடம்பெற்றது?

**A) முத்துக்கூத்தன்**

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) துகிலி.சுப்பிரமணியம்

D) நல்லத்தம்பி

**விளக்கம்: சென்னைத் தொலைக்காட்சியில் 'கண்மணிப்பூங்கா' என்னும் நிகழ்ச்சியில் முத்துக்கூத்தனின் பொம்மலாட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், சுகாதாரம், கல்வி, குடும்பநலம், இயற்கை, வேளாண்மை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்கிய விழிப்புணர்வுக் கதைகள் பொம்மலாட்டங்களில் நிகழ்த்தப்பட்டன.**

30) கூற்றுகளை ஆராய்க.

1. 1809ஆம் ஆண்டு மார்க்கோனி கம்பியில்லாத் தந்தி சேவை நிறுவனத்தைத் தொடங்கினார்.

2. இத்தாலி நாட்டு அறிஞர் குலீல்மோ மர்க்கோனிக்கு 1909ஆம் ஆண்டு இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

A) 1 மட்டும் சரி

**B) 2 மட்டும் சரி**

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1897ஆம் ஆண்டு மார்க்கோனி கம்பியில்லாத் தந்தி சேவை நிறுவனத்தை தொடங்கினார். ஒலிபரப்பிற்குத் தேவையான கருவிகளையும் அவரே உருவாக்கினார். அட்லாண்டிக் கடலின் குறுக்கே கார்ன்வாலில் இருந்து நியூபவுண்லாந்து வரை செய்திகளை அனுப்பினார். இவருக்கு 1909ஆம் ஆண்டு இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது**

31) கூற்று: குலீல்மோ மார்க்கோனி என்பவர் வானொலியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

காரணம்: 1800 மைல் தொலைவிற்குச் செய்திகளை அனுப்பி வெற்றிகண்டார்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: மார்க்கோனி 1800 மைல் தொலைவிற்குச் செய்திகைள அனுப்பி வெற்றிகண்டார். இதனால் இவர் வானொலியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.**

32) 1909ஆம் ஆண்டு இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு குலீல்மோ மார்க்கோனிக்கு வழங்கப்பட்டது. இவருடன் இணைந்து அப்பரிசை பெற்றவர் யார்?

**A) பெர்டினாண்ட் பிரவுன்**

B) ஹார்டிங்கஸ்

C) ஜான்லெகி பெயர்டு

D) அலெக்சாண்டர் பிளம்மிங்

**விளக்கம்: இத்தாலி நாட்டு அறிஞர் குலீல்மோ மார்க்கோனி என்பவர் வானொலியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இவருக்கு 1909 ஆம் ஆண்டு நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஏற்கனவே இந்த ஆய்வில் ஈடுபட்டிருந்த பெர்டினாண்ட் பிரவுன் என்ற ஜெர்மானிய அறிஞரும் இவருடன் இணைந்து இப்பரிசைப் பகிர்ந்து கொண்டார்.**

33) வெ.நல்லதம்பி என்பவர் சில காப்பியங்களை நாடக வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார். இதில் பொருந்தாதது எது?

A) சிலப்பதிகாரம்

B) மணிமேகலை

C) சீவக சிந்தாமணி

**D) வளையாபதி**

**விளக்கம்: வெ.நல்லத்தம்பி சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகியவற்றை நாடக வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது சிலப்பதிகார நாடகநூல் 'நுபுர் க ஸ்வர்' என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புதுதில்லி வானொலியில் ஒலிபரப்பானது.**

34) கூற்று 1: இந்தியா விடுதலை பெற்ற பிறகு இந்திய வளத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வளர்ச்சிப் பணிகளுக்கென நிதிகள் ஒதுக்கப்பட்டன

கூற்று 2: இதில் வானொலிச் சேவையினை விரிவுபடுத்தும் பணிக்காக ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் புதிய வானொலி நிலையங்களும் ஒலிபரப்புக் கோபுரங்களும் அமைக்கப்பட்டன.

A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**C) இரண்டு கூற்றும் சரி**

D) இரண்டும் கூற்றும் தவறு

**விளக்கம்: இந்தியா விடுதலை பெற்ற பிறகு இந்திய வளத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வகையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வளர்ச்சிப் பணிகளுக்கென நிதிகள் ஒதுக்கப்பட்டன. இதில் வானொலிச் சேவையினை விரிவுபடுத்தும் பணிக்காக ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுப் புதிய வானொலி நிலையங்களும் ஒலிபரப்புக் கோபுரங்களும் அமைக்கப்பட்டன**

35) இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் பயன்படுத்தப்படுவது எது?

A) பண்பலை

B) ஹாம் வானொலி

C) அமச்சூர் வானொலி

**D) B மற்றும் C**

**விளக்கம்: இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் ஹாம் வானொலி அல்லது அமெச்சூர் வானொலி பயன்படுத்தப்படுகிறது. இந்த ஹாம் வானொலியில் தகவல்களைப் பெறவும் ஒலிபரப்பவும் முடியும். இயற்கைப் பேரிடர்க் காலங்களில் தொலைத்தொடர்புச் சாதனங்கள் அறவே செயலற்றுவிடுகின்றன. அச்சூழலில் நமக்குக் கை கொடுத்து உதவுவது, ஹாம் வானொலிகள் மட்டுமே. இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இயற்கைச் சீற்றங்களை இவர்களால் எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.**

36) கூற்று: தற்காலத்தில் தொலைகாட்சியில் காட்சிகளைத் தெளிவாகவும் துல்லியமாகவும் காணமுடிகிறது.

காரணம்: தொலைக்காட்சி ஒளிபரப்புகள் முழுமையாக எண்ணிம (Digital) வடிவத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: தொடக்க காலத்தில் படம்பிடிக்கும் கருவியின் முன் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு நேரடியாக ஒலிபரப்பப்பட்டன. 1956இல் அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா என்ற கருவியை உருவாக்கியது. அதன்பிறகு நவீனத் தொழில்நுட்பம் கொண்ட படப்பிடிப்புக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்காலத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் முழுமையாக எண்ணிம (Digital) வடிவத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன. இதனால் காட்சிகளைத் தெளிவாகவும் துல்லியமாகவும் காணமுடிகிறது.**

37) உஷா மேத்தா எப்போது பிறந்தார்?

**A) 1920 மார்ச் 24**

B) 1921 மார்ச் 24

C) 1922 மார்ச் 24

D) 1923 மார்ச் 24

**விளக்கம்: 1920ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் பிறந்தவர் உஷா மேத்தா. இவர் தனது 22ஆம் வயதில் பாபுபாய் படேல் என்பவரின் உதவியுடன் 1942, ஆகஸ்ட் 14 அன்று ஒரு வானொலி நிலையத்தை உருவாக்கினார். தலைவர்களின் உரைகள், விடுதலைப் போராட்ட உத்திகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இதில் ஒலிபரப்பபட்டன. வானொலி நிலையம் தொடர்ந்து ஒரிடத்தில் இருந்து செயல்பட இயலவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை இடம்மாற்றப்பட்டது. 3 மாதங்கள் மட்டுமே இந்த வானொலி நிலையம் இயங்கியது.**

38) சிறுவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் பாலஇராமாயணத்தை இயற்றி, இசை வடிவில் வானொலியின் மூலம் கொண்டு சேர்த்தவர், ர.அய்யாசாமி ஆவார். இதற்கு இசையமைத்தவர் யார்?

A) விஸ்வநாதன்

B) ராமமூர்த்தி

**C) மல்லிக்**

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வகையில் பாலராமாயணம் இயற்றி இசைவடிவில் வானொலியின் மூலம் கொண்டு சேர்த்தவர் ர.அய்யாசாமி ஆவார். இதற்கு இசையமைத்தவர் மல்லிக் என்பவர் ஆவார்.**

39) கூற்றுகளை ஆராய்க.

1. கல்வியைத் தரமானதாகவும் பரவலாக்கவும் கிராம மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும் தொலைக்காட்சி ஒரு சிறந்த ஊடகமாக அறியப்படுகிறது. 1976ஆம் ஆண்டு நிறைவுற்ற சைட் திட்டம் இதற்கான ஆய்வு உறுதிகளை வழங்கியது.

2. 1956ஆம் ஆண்டு அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா என்ற கருவியை உருவாக்கியது

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. கல்வியைத் தரமானதாகவும் பரவலாக்கவும் கிராம மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும் தொலைக்காட்சி ஒரு சிறந்த ஊடகமாக அறியப்படுகிறது. 1976ஆம் ஆண்டு நிறைவுற்ற சைட் திட்டம் இதற்கான ஆய்வு உறுதிகளை வழங்கியது..**

**2. 1956ஆம் ஆண்டு அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா என்ற கருவியை உருவாக்கியது.**

40) இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி எங்கு தொடங்கப்பட்டது?

A) கொல்கத்தா

**B) புதுடெல்லி**

C) மும்பை

D) பெங்களூரு

**விளக்கம்: இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி 1959–இல் புதுதில்லியில் தொடங்கப்பட்டது. முதலில் நிகழ்ச்சிகள் கருப்பு வெள்ளை நிறத்தில் ஒளிபரப்பாயின. பின்பு, 1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் வண்ணத் தொலைக்காட்சியாக வளர்ச்சி பெற்றது. இவ்வண்ணத் தொலைக்காட்சியில் இந்திரா காந்தி அம்மையாரின் சுந்திரதினவிழாப் பேருரையே முதல் நிகழ்ச்சியாக அமைந்தது.**

41) 1973–ஆம் ஆண்டின் வழக்குத்தொடரின் விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். ஆனால் இதில் விதிவிலக்காக அரசு வழக்குரைஞர் சிலருக்காக வழக்கு தொடுக்கலாம். இதில் பொருந்தாதவர் யார்?

A) குடியரசுத்தலைவர்

B) குடியரசுத் துணைத்தலைவர்

C) மத்திய மாநில அமைச்சர்கள்

**D)பாராளுமன்ற உறுப்பினர்கள்**

**விளக்கம்: 1973–ஆம் ஆண்டின் வழக்குத்தொடரின் விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். ஆனால் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், மாநில ஆளுநர், மத்திய மாநில அமைச்சர்கள் ஆகியோர் அவமதிப்புக்கு ஆளானால் அவர்கள் சார்பில் அரசு வழக்குரைஞர் வழக்கு தொடுக்கலாம்.**

42) ர.அய்யாசாமி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) இவர் வானொலி அண்ணா என்று அழைக்கப்படுகிறது

B) இவர் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாட்சிக்கு அருகில் உள்ள கல்லாபுரம் என்னும் ஊரில் பிறந்தவர்.

**C) கல்லூரி படிப்பிற்குப் பிறகு 'இந்தியா' நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.**

D) 1944ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையத்தில் பணியேற்றார்.

**விளக்கம்: கல்லூரி படிப்பிற்குப் பிறகு 'தமிழ்நாடு' நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.**

43) இந்தியாவின் முதல் வானொலி நிலையம் எப்போது தொடங்கப்பட்டது?

A) 1909

B) 1920

C) 1924

**D) 1927**

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் 1957–முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.**

44) உலகத்தின் முதல் வானொலி நிலையம் எந்த ஆண்டு அமெரிக்காவின் பீட்ஸ்பர்க் நகரில் தொடங்கப்பட்டது?

A) 1909

B) 1913

C) 1918

**D) 1920**

**விளக்கம்: உலகத்தின் முதல் வானொலி நிலையம் 1920ஆம் ஆண்டு அமெரிக்காவின் பீட்ஸ்பர்க் நகரில் தொடங்கப்பட்டது. "அமெரிக்க ஜனாதிபதியாக ஹார்டிங்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்" என்பதே இதில் ஒளிபரப்பப்பட்ட முதல் செய்தியாகும்.**

45) கூற்று: 1975ஆம் ஆண்டில் இந்திய வானொலி நிலையங்கள் அனைத்திலும் பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன.

காரணம்: ஐ.நா.அவை 1975ஆம் ஆண்டை உலகப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: ஐ.நா.அவை 1975ஆம் ஆண்டை உலகப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது. அவ்வாண்டில் இந்திய வானொலி நிலையங்கள் அனைத்திலும் பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன.**

46) TRAI என்ற சொல்லின் விரிவாக்கம் என்ன?

A) Telecommunication Regulatory Authority of India

**B) Telecom Regulatory Authority of India**

C) Telecom Regulation Authority of India

D) Telecommunication Regulatory Authority of India

**விளக்கம்: இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI – Telecom Regulatory Authority of India).**

**இந்தியாவில் தொலைத் தொடர்புச் சேவைகளையும் கட்டணத்தையும் ஒழுங்குபடுத்த பாராளுமன்ற சட்டம் 1997இன் 3ஆவது பிரிவு வழிவகை செய்கிறது. அதன்படி 1997 பிப்ரவரி 20 அன்று இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது. தொலைத்தொடர்புச் சேவைகளையும் சுங்க வரி விதிப்புகளையும் இவ்வாணையம் மேற்பார்வை செய்துவருகிறது.**

47) கூற்று: பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது.

காரணம்: இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது.**

48) ர.அய்யாசாமி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க

A) இவர் சிறுவர்களுக்கான 'பாப்பா மலர்' மற்றும் 'முத்துக்குவியல்' நிகழ்ச்சியின் மூலம் மக்கள் மனத்தில் இடம்பிடித்தார். இந்நிகழ்ச்சி தொடர்ந்து 12 ஆண்டுகள் ஒலிபரப்பாயிற்று

B) கவிமணியின் கனவை நிறைவேற்றும் வகையில் பாலராமாயணம் இயற்றினார்.

C) இவரின் பாலராமாயணத்திற்கு மல்லிக் என்பவர் இசையமைத்துள்ளார்.

**D) இரண்டாவது, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடுகளில் பிற நாட்டுத் தமிழறிஞர்களிடம் நேர்காணல் நடத்தி அதனைப் படத்துடன் ஆவணப்படுத்தினார்.**

**விளக்கம்: இரண்டாவது, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடுகளில் பிற நாட்டுத் தமிழறிஞர்களிடம் நேர்காணல் நடத்தி அதனைப் படத்துடன் ஆவணப்படுத்தியவர் நல்லத்தம்பி ஆவார்.**

49) கூற்றுகளை ஆராய்க.

1. கையுறை பொம்மலாட்டம் என்று அழைக்கப்படுவது பாவைக்கூத்து, பொம்மலாட்டம் ஆகும்

2. தமிழில் பொம்மலாட்டக் கலைக்குப் பெருமை சேர்த்தவர் முத்துக்கூத்தன் ஆவார்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: பாவைக்கூத்து என்றும் பொம்மலாட்டம் என்றும் சொல்லப்படும் கையுறை பொம்மலாட்டம் இன்று உலகம் முழுவதும் பல்வேறு வடிவங்களில் பரவியுள்ளது.**

**தமிழில் பொம்மலாட்டக் கலைக்குப் பெருமை சேர்த்தவர் முத்துக்கூத்தன் ஆவார்.**

50) சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வண்ணம் எளிய நடையில் பாலஇராமாயணத்தை இயற்றி அதனை இசைவடிவில் வானொலி மூலம் கொண்டு சேர்த்தவர் யார்?

A) சோமசுந்தரபாரதியார்

B) கவிமணி

C) கண்ணதாசன்

**D) ர.அய்யாசாமி**

**விளக்கம்: கவிமணி தேசிய விநாயகனார் "ராமாயணக்கதையினைத் தமிழகத்துச் சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வண்ணம் இனிய எளிய நடையில் ஒரு தொடர்நிலைச் செய்யுளாகப் பாடுமாறு நான் தமிழக் கவிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார். கவிமணியின் கனவை நிறைவேற்றும் வகையில் ர.அய்யாசாமி பாலராமாயணம் இயற்றினார். இதனை இசை வடிவில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு வானொலியில் கொண்டு சென்றார்.**

51) சென்னைத் தொலைக்காட்சியின் 'எதிரொலி' நிகழ்ச்சியின் மூலம் புகழ்பெற்று விளங்கியவர் யார்?

A) முத்துக்கூத்தன்

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) ர.அய்யாசாமி

**D) நல்லத்தம்பி**

**விளக்கம்: சென்னைத் தொலைக்காட்சியின் 'எதிரொலி' நிகழ்ச்சி மூலம் புகழ்பெற்று 'எதிரொலி நல்லதம்பி' என்று அழைக்கப்படுபவர் முனைவர் வெ.நல்லத்தம்பி. இவர் பள்ளிப் படிப்பை மணப்பாறையிலும், பட்டப்படிப்பினை சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் முடித்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.**

52) பொது ஒலிபரப்புநாள் எப்போது கொண்டாடப்படுகிறது?

A) நவம்பர் 21

**B) நவம்பர் 12**

C) மார்ச் 21

D) பிப்ரவரி 13

**விளக்கம்: நவம்பர் 21 – உலகத் தொலைக்காட்சி தினம்**

**நவம்பர் 12– பொது ஒலிபரப்புநாள் கொண்டாடப்படும் தினம்**

**மார்ச் 21– உலக பொம்மாலாட்ட தினம்**

**பிப்ரவரி 13– உலக வானொலி தினம்**

53) தமிழில் மட்டுமின்றி விஜயவாடாவில் தெலுங்கிலும், கோழிக்கோட்டில் மலையாளத்திலும் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளை வழங்கியவர் யார்?

**A) ர.அய்யாசாமி**

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) வெ.நல்லதம்பி

D) முத்துக்கூத்தன்

**விளக்கம்: ர.அய்யாசாமி என்பவர் தமிழில் மட்டுமின்றி விஜயவாடாவில் தெலுங்கிலும் கோழிக்கோட்டில் மலையாளத்திலும் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.**

54) 2008ஆம் ஆண்டு கீழ்க்காணும் யாருக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டது?

**A) சரோஜ் நாராயணசுவாமி**

B) துகிலி.சுப்பிரமணியம்

C) ர.அய்யாசாமி

D) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

**விளக்கம்: 'ஆகாசவாணி, செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசுவாமி' என்ற குரலை வானொலியில் கேட்காத தமிழர்கள் இருக்க முடியாது. 40 ஆண்டுகாலம் ஒலிபரப்புத் துறையில் சிறப்பாகச் செய்தி வாசித்தமைக்காகத் தமிழக அரசு இவருக்கு 2008ஆம் ஆண்டு கலைமாமணி விருது வழங்கிப் பாராட்டியுள்ளது. இதுவே செய்தி வாசிப்பாளருக்காக வழங்கப்பட்ட முதல் கலைமாமணி விருதாகும்.**

55) எந்தெந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர்?

A) சீனா, ரஷ்யா

B) பிரிட்டன், பிரான்ஸ்

**C) அமெரிக்கா, ஜப்பான்**

D) வடகொரியா, தென்கொரியா

**விளக்கம்: இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் ஹாம் வானொலி அல்லது அமெச்சூர் வானொலி பயன்படுத்தப்படுகிறது. இந்த ஹாம் வானொலியில் தகவல்களைப் பெறவும் ஒலிபரப்பவும் முடியும். இயற்கைப் பேரிடர்க் காலங்களில் தொலைத்தொடர்புச் சாதனங்கள் அறவே செயலற்றுவிடுகின்றன. அச்சூழலில் நமக்குக் கை கொடுத்து உதவுவது, ஹாம் வானொலிகள் மட்டுமே. இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப்பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இயற்கைச் சீற்றங்களை இவர்களால் எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.**

56) இந்தியாவின் முதல் வானொலி நிலையம் எங்கு தொடங்கப்பட்டது?

A) கொல்கத்தா

B) சென்னை

**C) மும்பை**

D) டெல்லி

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார்**

**நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் இது 1957–முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்படுகிறது.**

57) கூற்றுகளை ஆராய்க.

1. 1956இல் அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா என்ற கருவியை உருவாக்கியது.

2. தற்காலத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் முழுமையாக எண்ணிம (Digital) வடிவத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன. இதனால் காட்சிகளைத் தெளிவாகவும் துல்லியமாகவும் காணமுடிகிறது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: தொடக்க காலத்தில் படம்பிடிக்கும் கருவியின் முன் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு நேரடியாக ஒலிபரப்பப்பட்டன. 1956இல் அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா என்ற கருவியை உருவாக்கியது. அதன்பிறகு நவீனத் தொழில்நுட்பம் கொண்ட படப்பிடிப்புக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்காலத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் முழுமையாக எண்ணிம (Digial) வடிவத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன. இதனால் காட்சிகளைத் தெளிவாகவும் துல்லியமாகவும் காணமுடிகிறது.**

58) கூற்று: தொலைக்காட்சியை கல்விக்கான ஓர் ஊடகமாக மாற்றும் முயற்சிகளில் இந்தியக் கல்வியாளர்கள் ஈடுபட்டனர்.

காரணம்: 1976ஆம் ஆண்டு நிறைவுற்ற சைட் திட்டம்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது

**விளக்கம்: கல்வியைத் தரமானதாகவும் பரவலாக்கவும் கிராம மற்றும் நகர்ப்புறங்களுக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவும் தொலைக்காட்சி ஒரு சிறந்த ஊடகமாக அறியப்படுகிறது. 1976ஆம் ஆண்டு நிறைவுற்ற சைட் திட்டம் இதற்கான ஆய்வு உறுதிகளை வழங்கியது. இதனால் ஊக்கம் பெற்ற இந்தியக் கல்வியாளர்கள் தொலைக்காட்சியைக் கல்வி வளர்ச்சிக்கான ஓர் ஊடகமாக மாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டனர்.**

59) ஓர் இலக்கியம் படைக்கப்பட்டதற்கான கோணங்களில் இருவர் விவாதிக்கும் நிகழ்ச்சி ________________எனப்படும்.

A) கவியரங்கம்

B) பட்டிமன்றம்

**C) வழக்காடு மன்றம்**

D) சொற்பொழிவு

**விளக்கம்: இளம் கவிஞர்களுக்கான வெளிப்பாட்டுக் களங்கள் – கவியரங்கம்.**

**இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்களைப் பன்முக நோக்கில் ஆராயும் களம் – பட்டிமன்றங்கள்**

**ஓர் இலக்கியம் படைக்கப்பட்டதற்கான கோணங்களில் இருவர் விவாதிக்கும் நிகழ்ச்சிகள் – வழக்காடு மன்றம்.**

**சிறந்த மேடைப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் – சொற்பொழிவு**

60) 1920ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் பிறந்த உஷா மேத்தா தனது எத்தனையாவது வயதில் வானொலி நிலையத்தை உருவாக்கினார்?

A) 24

B) 28

**C) 22**

D) 29

**விளக்கம்: 1920ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் பிறந்தவர் உஷா மேத்தா. இவர் தனது 22ஆம் வயதில் பாபுபாய் படேல் என்பவரின் உதவியுடன் 1942, ஆகஸ்ட் 14 அன்று ஒரு வானொலி நிலையத்தை உருவாக்கினார். தலைவர்களின் உரைகள், விடுதலைப் போராட்ட உத்திகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இதல் ஒலிபரப்பபட்டன. வானொலி நிலையம் தொடர்ந்து ஓரிடத்தில் இருந்து செயல்பட இயலவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை இடம்மாற்றப்பட்டது. 3 மாதங்கள் மட்டுமே இந்த வானொலி நிலையம் இயங்கியது.**

61) பிபிசி–யில் தமிழ் ஒலிபரப்பு எப்போது தொடங்கப்பட்டது?

A) 1941 மே 3

B) 1942 மே 2

C) 1941 மே 2

**D) 1942 மே 3**

**விளக்கம்: இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது.**

62) இந்தியாவில் தொலைத் தொடர்புச் சேவைகளையும் கட்டணத்தையும் ஒழுங்குபடுத்த பாராளுமன்ற சட்டம் ____________________இன் __________________ஆவது பிரிவு வழிவகை செய்கிறது.

A) 1997, 2

B) 1996, 2

**C) 1997, 3**

D) 1996, 3

**விளக்கம்: இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் ((TRAI – Telecom Regulatory Authority of India).**

**இந்தியாவில் தொலைத் தொடர்புச் சேவைகளையும் கட்டணத்தையும் ஒழுங்குபடுத்த பாராளுமன்ற சட்டம் 1997இன் 3ஆவது பிரிவு வழிவகை செய்கிறது. அதன்படி 1997 பிப்ரவரி 20 அன்று இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது. தொலைத்தொடர்புச் சேவைகளையும் சுங்க வரி விதிப்புகளையும் இவ்வாணையம் மேற்பார்வை செய்துவருகிறது.**

63) இந்திய குற்றவியல் சட்டத்தின் எத்தனையாவது பிரிவு அவமதிப்புக்கான தண்டனைகள் பற்றி கூறுகிறது?

A) 498

B) 499

**C) 500**

D) 501

**விளக்கம்: ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுவதோ, எழுதுவதோ அல்லது சைகைகள் மற்றும் குறியீடுகளால் வெளிப்படுத்துவதோ அவமதிப்புக் குற்றத்தின் கீழ் வரும். இந்தியக் குற்றவியல் சட்டம் 499ஆம், பிரிவு அவமதிப்பு மற்றும் விதிவிலக்குகள் பற்றியும், 500ஆம் பிரிவு தண்டனைகள் பற்றியும் விளக்குகிறது.**

64) எந்த ஆண்டின் வழக்குத்தொடரின் விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும்?

A) 1977

B) 1981

C) 1972

**D) 1973**

**விளக்கம்: 1973 ஆண்டின் வழக்குத்தொடரின் விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். ஆனால் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், மாநில ஆளுநர், மத்திய மாநில அமைச்சர்கள் ஆகியோர் அவமதிப்பு ஆளானால் அவர்கள் சார்பில் அரசு வழக்குரைஞர் வழக்கு தொடுக்கலாம்.**

65) யாருடைய கனவை நிறைவேற்றும் வகையில் ர.அய்யசாமி பாலராமாயணத்தை இயற்றினார்?

A) பாரதிதாசன்

B) கவியோகி

**C) கவிமணி**

D) வாணிதாசன்

**விளக்கம்: கவிமணி தேசிய விநாயகனார் "ராமாயணக்கதையினைத் தமிழகத்துச் சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வண்ணம் இனிய எளிய நடையில் ஒரு தொடர்நிலைச் செய்யுளாகப் பாடுமாறு நான் தமிழ்க் கவிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார். கவிமணியின் கனவை நிறைவேற்றும் வகையில் இவர் பாலராமாயணத்தை இயற்றினார்**

66) தவறான கூற்றை தேர்வு செய்க.

A) இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 500ஆம் பிரிவு ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுபவருக்கான தண்டனைகள் பற்றி விளக்குகிறது

B) இந்தியக் குற்றவியல் சட்டத்தில் 292, 293, 294 முதலான பிரிவுகள் எவை எவை ஆபாசம் எனப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.

C) 1956–இல் இளைஞர்களைக் கெடுக்கும் வெளியீடுகள் தடைச்சட்டம் அரசால் நிறைவேற்றப்பட்டது.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 500ஆம் பிரிவு ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுபவருக்கான தண்டனைகள் பற்றி விளக்குகிறது**

**இந்தியக் குற்றவியல் சட்டத்தில் 292, 293, 294 முதலான பிரிவுகள் எவை எவை ஆபாசம் எனப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.**

**1956–இல் இளைஞர்களைக் கெடுக்கும் வெளியீடுகள் தடைச்சட்டம் அரசால் நிறைவேற்றப்பட்டது.**

67) வானொலி தொழில்நுட்பத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி நிலை எது?

**A) பண்பலை**

B) இணையத்தள வானொலி

C) தொலைக்காட்சி

D) திரையரங்கம்

**விளக்கம்: வானொலி தொழில்நுட்பத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி நிலை பண்பலை (FM). பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை மையப்படுத்தித் தொடங்கப்பட்டவையே பண்பலைகள். இவை வானொலி வருணனையாளர்களை (ரேடியோ ஜாக்கி) முதன்மையாகக் கொண்டு இயங்கி வருகின்றன. அரசு பண்பலை நிலையங்களும் முறையான உரிமம் பெற்ற தனியார் பண்பலை நிலையங்களும் உலகெங்கிலும் தமது ஒலிபரப்புச் சேவையினைச் சிறப்பாகச் செய்துவருகின்றன.**

68) கூற்று: இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் ஹாம் வானொலி அல்லது அமெச்சூர் வானொலி பயன்படுத்தப்படுகிறது..

காரணம்: இந்த வானொலி விரைவாகவும், சத்தமாகவும் தகவல்களை வழங்கும்.

**A) கூற்று சரி, காரணம் தவறு**

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று மற்றும் காரணம் இரண்டும், மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் ஹாம் வானொலி அல்லது அமெச்சூர் வானொலி பயன்படுத்தப்படுகிறது. இந்த ஹாம் வானொலியில் தகவல்களைப் பெறவும் ஒலிபரப்பவும் முடியும். இயற்கைப் பேரிடர்க் காலங்களில் தொலைத்தொடர்புச் சாதனங்கள் அறவே செயலற்றுவிடுகின்றன. அச்சூழலில் நமக்குக் கை கொடுத்து உதவுவது, ஹாம் வானொலிகள் மட்டுமே. இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இயற்கைச் சீற்றங்களை இவர்களால் எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.**

69) இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. இதில் கீழக்காணும் எது நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது?

**A) சென்னை மாநில வானொலிக் குழு**

B) மும்பை மாநில வானொலிக் குழு

C) பெங்களுரு மாநில வானொலிக் குழு

D) டெல்லி மாநில வானொலிக் குழு

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ்**

**கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் இது 1957–முதல் ஆகாசவாணி என்றும்அழைக்கப்படுகிறது.**

70) எந்த ஆண்டு ரேடியோ என்ற சொல்லை மாற்றி வானொலி என்ற சொல் பயன்படுத்தப்படுவதாக, திருச்சி வானொலி நிலையம் என்று அறிவித்தது?

A) 1956

B) 1957

C) 1958

**D) 1959**

**விளக்கம்: டி.கே.சிதம்பரனார் "ரேடியோ" என்ற சொல்லுக்குத் தமிழில் வானொலி என்ற சொல்லை முன்மொழிந்தார். ஆல் இந்தியா ரேடியோ, ஆகாஷவாணி என்று முழங்கி வந்த நிலையில் முதன்முதலில் திருச்சி வானொலி நிலையம் 1959இல் திருச்சி வானொலி நிலையம் என்று அறிவித்தது. அதன்பிறகு வானொலி என்ற சொல்லை அனைவரும் பயன்படுத்தத் தொடங்கினர்.**

71) எந்த ஆண்டு இளைஞர்களைக் கெடுக்கும் வெளியீடுகள் தடைச்சட்டம் அரசால் நிறைவேற்றப்பட்டது?

A) 1955

**B) 1956**

C) 1957

D) 1958

**விளக்கம்: 1956இல் இளைஞர்களைக் கெடுக்கும் வெளியீடுகள் தடைச்சட்டம் அரசால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, குற்றங்களைத் தூண்டுகின்ற நிகழ்ச்சி, வன்முறையைத் தூண்டும் நிகழ்ச்சி, அச்சத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சி, இளைஞர்களைக் கெடுக்கும் விளம்பர நிகழ்ச்சி இவையெல்லாம் ஒளிபரப்பத் தடை செய்யப்பட்டுள்ளது.**

72) 'டெலிவிஷன்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான 'தொலைக்காட்சி' என்னும் தமிழ்ச்சொல்லை உருவாக்கியவர் யார்?

A) ர.அய்யாசாமி

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

**C) வெ.நல்லதம்பி**

D) முத்துக்கூத்தன்

**விளக்கம்: 'டெலிவிஷன்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல்லை உருவாக்க முயன்றபோது பலரும் பல சொற்களை உருவாக்கியளித்தனர். இருப்பினும் வெ.நல்லத்தம்பி அவர்கள் முன்மொழிந்த 'தொலைக்காட்சி' என்ற சொல்லே அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றும் பயன்பாட்டில் உள்ளது.**

73) கீழ்க்காணும் யாருடைய கல்விப் பணியினைப் பாராட்டி 'மால்கம் ஆதிசேஷய்யா' என்னும் விருது வழங்கியுள்ளனர்?

A) ர.அய்யாசாமி

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

**C) வெ.நல்லதம்பி**

D) முத்துக்கூத்தன்

**விளக்கம்: வெ.நல்லதம்பி என்பவர் ஓய்வுக்குப் பின் தமிழக அரசு பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் உள்ள கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தில் சிறப்பு அலுவலராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மேலும், இவரது கல்விப் பணியினைப் பாராட்டி 'மால்கம் ஆதிசேஷய்யா' என்னும் விருது வழங்கியுள்ளனர்.**

74) கூற்று: வானொலி நிகழ்ச்சிகளுக்கு எழுதுவதை விட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு எழுதுவது எளிதான செயலாகும்.

காரணம்: தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் எழுத்துக்கலையைவிட நடிப்புக்கலை முதன்மை இடத்தைப் பெறுகின்றது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி.

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி, மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: வானொலி நிகழ்ச்சிகளுக்கு எழுதுவதை விட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு எழுதுவது எளிதான செயலாகும். தொலைக்காட்சியில் காட்சிகளின் மூலம் கதாப்பாத்திரங்கள், சூழல், மெய்ப்பாடுகள் முதலானவற்றை வெளிப்படுத்த முடியும். இதில் எழுத்துக்கலையைவிட நடிப்புக்கலை முதன்மை இடத்தைப் பெறுகின்றது.**

75) தவறான கூற்றை ஆராய்க.

A) நிலையத்திற்கு வெளியே நடக்கும் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தொலைக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பும் சிற்றுந்துகளையே 'நடமாடும் ஒளிபரப்புக்கூடம்' என்று அழைக்கிறோம்.

B) நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்தே நிகழ்ச்சிகளை நேரலையாக ஒளிபரப்புவதுவெளிப்புற ஒலி–ஒளிபரப்பு வாகனம்

C) 24 மணி நேரமும் செய்திகளை ஒளிபரப்பி வரும் தொலைக்காட்சி நிலையங்களில் பயன்படுத்தப்படும் வாகனம் – மின்னனு செய்தி சேகரிப்பு வாகனம்.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: நிலையத்திற்கு வெளியே நடக்கும் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தொலைகக்காட்சி நிலையத்திலிருந்து ஒளிபரப்பும் சிற்றுந்துகளையே 'நடமாடும் ஒளிபரப்புக்கூடம்' என்று அழைக்கிறோம்.**

**நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்தே நிகழ்ச்சிகளை நேரலையாக ஒளிபரப்புவது – வெளிப்புற ஒலி–ஒளிபரப்பு வாகனம்**

**24 மணி நேரமும் செய்திகளை ஒளிபரப்பி வரும் தொலைக்காட்சி நிலையங்களில் பயன்படுத்தப்படும் வாகனம் – மின்னனு செய்தி சேகரிப்பு வாகனம்.**

76) "பிரசார் பாரதி" என்னும் அமைப்பு எப்போது நிறுவப்பட்டது?

A) 1990

B) 1993

C) 1996

**D) 1997**

**விளக்கம்: "பிரசார் பாரதி" என்னும் அமைப்பு 1997ஆம் ஆண்டு இந்திய நடுவண் அரசால் நிறுவப்பட்ட அமைப்பு. வானொலியும் தொலைக்காட்சியும் இந்த அமைப்பின்கீழ்தான் இயங்கி வருகின்றன.**

77) கூற்றுகளை ஆராய்க.

1. அகாசவாணி என்னும் வானொலியும் தூர்தர்சன் என்னும் தொலைக்காட்சியும் மத்திய தகவல் மற்றும் ஒளி–ஒலிபரப்பு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.

2. "தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களில் நிர்வாகப் பிரிவு, நிகழ்ச்சிப் பிரிவு, எந்திரப் பிரிவு" என மூன்று பிரிவுகள் உள்ளன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. ஆகாசவாணி என்னும் வானொலியும் தூர்தர்சன் என்னும் தொலைக்காட்சியும் மத்திய தகவல் மற்றும் ஒளி–ஒலிபரப்பு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.**

**2. "தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களில் நிர்வாகப் பிரிவு, நிகழ்ச்சிப் பிரிவு, எந்திரப் பிரிவு" என மூன்று பிரிவுகள் உள்ளன.**

78) உலக வானொலி தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

A) நவம்பர் 21

B) நவம்பர் 12

C) மார்ச் 21

**D) பிப்ரவரி 13**

**விளக்கம்: நவம்பர் 21 – உலகத் தொலைக்காட்சி தினம்**

**நவம்பர் 12– பொது ஒலிபரப்புநாள் கொண்டாடப்படும் தினம்**

**மார்ச் 21– உலக பொம்மாலாட்ட தினம்**

**பிப்ரவரி 13– உலக வானொலி தினம்**

79) கூற்று: 1927இல் மும்பையில் தொடங்கப்பட்ட வானொலி நிலையம் 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

காரணம்: தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

C) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**D) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் இது 1957–முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்பட்டது.**

80) கூற்றுகளை ஆராய்க.

1. 2.6 கிகா கெட்சு (2500–2690 கிகா கெட்சு) என்றழைக்கப்படும் அலைநீளம் உலக வானொலி மன்றத்தால் 2000 ஆம் ஆண்டு தரைவழி அலைபேசிப் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

2. ஒரு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் ஒரு விளம்பரம் அல்லது தொடரினைப் பார்த்து ரசித்த இலக்கு பார்வையாளர்களின் மதிப்பீட்டுப் புள்ளிகளின் கூட்டுத்தொகை ஆகும். இதனை அளவிடும் கருவி "மக்கள் கருவி" என அழைக்கப்படும்

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. 2.6 கிகா கெட்சு(2500–2690 கிகா கெட்சு) என்றழைக்கப்படும் அலைநீளம் உலக வானொலி மன்றத்தால் 2000 ஆம் ஆண்டு தரைவழி அலைபேசிப் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.**

**2. ஒரு தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் ஒரு விளம்பரம் அல்லது தொடரினைப் பார்த்து ரசித்த இலக்கு பார்வையாளர்களின் மதிப்பீட்டுப் புள்ளிகளின் கூட்டுத்தொகை ஆகும். இதனை அளவிடும் கருவி "மக்கள் கருவி" என அழைக்கப்படும்.**

81) VTR என்ற சொல்லின் விரிவாக்கம் என்ன?

**A) Video Tape Recorder**

B) Voice Tape Recorder

C) voice Tied Recorder

D) Video Tied Recorder

**விளக்கம்: தொடக்க காலத்தில் படம்பிடிக்கும் கருவியின் முன் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு நேரடியாக ஒலிபரப்பப்பட்டன. 1956இல் அமெரிக்காவின் 'ஆம்பெக்ஸ்' நிறுவனம் நிகழ்ச்சிகளைப் பதிவுசெய்து, தேவைப்படும்போது காட்சிப்படுத்தும் ஒளிப்பதிவு நாடா என்ற கருவியை உருவாக்கியது. அதன்பிறகு நவீனத் தொழில்நுட்பம் கொண்ட படப்பிடிக்குக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. தற்காலத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்புகள் முழுமையாக எண்ணிம (Digital) வடிவத்திற்கு மாற்றப்பட்டுவிட்டன. இதனால் காட்சிகளைத் தெளிவாகவும் துல்லியமாகவும் காணமுடிகிறது.**

82) தொலைக்காட்சியின் தோற்றத்துடன் தொடர்புடையவர் யார்?

A) பெர்டினாண்ட் பிரவுன்

B) ஹார்டிங்கஸ்

C) **ஜான்லெகி பெயர்டு**

D) அலெக்சாண்டர் பிளம்மிங்

**விளக்கம்: இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ஜான்லெகி பெயர்டு காட்சி ஒலிபரப்பு பற்றி அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவர் கம்பியில்லாத் தந்திக் கருவி மற்றும் சில மின்கலன்களுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவ்வாய்வின் விளைவாக ஒரு பொம்மையின் உருவத்தை ஓர் அறையிலிருந்து மற்றோர் அறைக்கு அனுப்பி வெற்றி கண்டார். ஒரு சிறுவனைத் தமது படம் பிடிக்கும் கருவி முன் நிறுத்தி, அவனது கை, கால்களை அசைக்க வைத்து அக்காட்சியினை ஒளிபரப்பி மகிழ்ந்தார். தனது இந்த அரிய கண்டுபிடிப்பை இலண்டனில் உள்ள ராயல் குழுமத்தில் பதிவு செய்துகொண்டார்.**

83) கூற்று: இரண்டாம் உலகப்போரின் போது வானொலி உரைச்சித்திரங்கள் முதன்முதலாக ஒலிபரப்பாயின.

காரணம்: மக்களுக்கு உண்மை நிலையினை உணர்த்தி நம்பிக்கை ஊட்டுவதற்காக

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும், மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: இரண்டாம் உலகப்போரின் போது மக்களுக்கு உண்மை நிலையினை உணர்த்தி நம்பிக்கை ஊட்டுவதற்காக, வானொலி உரைச்சித்திரங்கள் முதன்முதலாக ஒலிபரப்பாயின. தேசிய நெருக்கடிக் காலங்களில் மக்களிடையே ஒற்றுமையையும் நம்பிக்கையையும் வளர்க்கும் விதமாக உரைச்சித்திரங்கள் நிகழ்த்தப்பட்டன.**

84) இந்தியக் குற்றவியல் சட்டத்தின் எத்தனையாவது பிரிவு அவமதிப்பு மற்றும் விதிவிலக்குகள் பற்றி கூறுகிறது?

A) 498

B) 499

**C) 500**

D) 501

**விளக்கம்: ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுவதோ, எழுதுவதோ அல்லது சைகைகள் மற்றும் குறியீடுகளால் வெளிப்படுத்துவதோ அவமதிப்புக் குற்றத்தின் கீழ் வரும். இந்தியக் குற்றவியல் சட்டம் 499ஆம், பிரிவு அவமதிப்பு மற்றும் விதிவிலக்குள் பற்றியும், 500ஆம் பிரிவு தண்டனைகள் பற்றியும் விளக்குகிறது.**

85) இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது. இந்நிழ்ச்சிக்கு தொடக்கத்தில் ___________________எனப் பெயரிட்டிருந்தார்கள்.

**A) தமிழோசை**

B) செய்தி மடல்

C) தமிழ் மடல்

D) வானொலி மடல்

**விளக்கம்: இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள். 1948–இல் இந்நிகழ்ச்சிக்கு 'தமிழோசை' என சிவபாத சுந்தரம் பெயரிட்டார்.**

86) கூற்றுகளை ஆராய்க.

1. வெ.நல்லதம்பி என்பவர் ஓய்வுக்குப் பின் தமிழக அரசு பள்ளிக் கல்வித் துறையில், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் உள்ள கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தில் சிறப்பு அலுவலராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

2.இவரது கல்விப் பணியினைப் பாராட்டி 'மால்கம் ஆதிசேஷய்யா' என்னும் விருது வழங்கியுள்ளனர்.

A) 1 மட்டும் சரி

winmeen.com

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: வெ.நல்லதம்பி என்பவர் ஓய்வுக்குப் பின் தமிழக அரசு பள்ளிக் கல்வித் துறையில், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் உள்ள கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தில் சிறப்பு அலுவலராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். மேலும், இவரது கல்விப் பணியினைப் பாராட்டி 'மால்கம் ஆதிசேஷய்யா' என்னும் விருது வழங்கியுள்ளனர்.**

87) "ராமாயணக்கதையினைத் தமிழகத்துச் சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வண்ணம் இனிய எளிய நடையில் ஒரு தொடர்நிலைச் செய்யுளாகப் பாடுமாறு நான் தமிழ்க் கவிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியவர் யார்?

A) பாரதிதாசன்

B) வாணிதாசன்

**C) கவிமணி**

D) பாரதியார்

**விளக்கம்: கவிமணி தேசிய விநாயகனார் "ராமாயணக்கதையினைத் தமிழகத்துச் சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வண்ணம் இனிய எளிய நடையில் ஒரு தொடர்நிலைச் செய்யுளாகப் பாடுமாறு நான் தமிழ்க் கவிஞர்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.**

88) கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு 'தமிழ்நாடு' நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார் வானொலி அறிஞர் ர.அய்யாசாமி. இவர் எந்த ஆண்டு திருச்சி வானொலி நிலையத்தில் பணியேற்றார்?

A) 1942

**B) 1944**

C) 1947

D) 1950

**விளக்கம்: கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு 'தமிழ்நாடு' நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார் வானொலி அறிஞர் ர.அய்யாசாமி. 1944ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையத்தில் பணியேற்றார். இவர் சிறுவர்களுக்கான 'பாப்பா மலர்' மற்றும் 'முத்துக்குவியல்' நிகழ்ச்சியின் மூலம் மக்கள் மனத்தில் இடம்பிடித்தார். இந்நிகழ்ச்சி 12 ஆண்டுகள் ஒலிபரப்பாயிற்று.**

89) அகில இந்திய வானொலியின் பொன்மொழி எது?

A) பகுஜன் ஹம்யா

B) பகுஜன் ஹிதயா

C) பகுஜன் சுகயா

**D) B மற்றும் C**

**விளக்கம்: வானொலி அதிர்வெண்ணைக் கண்டுபிடித்தவர் – ஹெய்ன்ரீச் ருடேல்ஃப் ஹெட்ஸ்**

**பண்பலை வானொலி ஒளிபரப்பு முறையைக் கண்டுபிடித்தவர் – எட்வின் எச்.ஆம்ஸ்ட்ராங்.**

**அகில இந்திய வானொலியின் பொன்மொழி –பகுஜன் ஹிதயா, பகுஜன் சுகயா.**

90) கூற்று: இயற்கைச் சீற்றங்களை அமெரிக்கா, ஜப்பான் எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.

காரணம்: இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர்

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும், மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் ஹாம் வானொலி அல்லது அமெச்சூர் வானொலி பயன்படுத்தப்படுகிறது. இந்த ஹாம் வானொலியில் தகவல்களைப் பெறவும் ஒலிபரப்பவும் முடியும். இயற்கைப் பேரிடர்க் காலங்களில் தொலைத்தொடர்புச் சாதனங்கள் அறவே செயலற்றுவிடுகின்றன. அச்சூழலில் நமக்குக் கை கொடுத்து உதவுவது, ஹாம் வானொலிகள் மட்டுமே. இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இயற்கைச் சீற்றங்களை இவர்களால் எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.**

91) 1927இல் மும்பையில் தொடங்கப்பட்ட வானொலி நிலையம் எப்போது முதல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது?

**A) 1936**

B) 1947

C) 1950

D) 1957

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் 1957-முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்படுகிறது.**

92) 1963 முதல் 1965 வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தவர் யார்?

A) முத்துக்கூத்தன்

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) ர.அய்யாசாமி

**D) நல்லத்தம்பி**

**விளக்கம்: 1963 முதல் 1965 வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தவர் நல்லத்தம்பி ஆவார்.**

93) எஸ் பாண்ட் அலைக்கற்றை என்பது 2 முதல் 5 கிகா கெட்சு வரை உள்ள ரேடியோ அலையளவைக் குறிப்பதாகும். இதில் 2.6 கிகா கெட்சு (2500-2690 கிகா கெட்சு) என்றழைக்கப்படும் அலைநீளம் உலக வானொலி மன்றத்தால் எந்த ஆண்டு தரைவழி அலைபேசிப் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது?

A) 1999

**B) 2000**

C) 2004

D) 2010

**விளக்கம்: எஸ் பாண்ட் அலைக்கற்றை என்பது 2 முதல் 5 கிகா கெட்சு வரை உள்ள ரேடியோ அலையளவைக் குறிப்பதாகும். இது அலைபேசித் தொலைதொடர்புக்கும், ராடார் இயக்கத்துக்கும், தரைவழித் தொலைத்தொடர்புக்கும் பயன்படுகிறது. இதில் 2.6 கிகா கெட்சு (2500–2690 கிகா கெட்சு) என்றழைக்கப்படும் அலைநீளம் உலக வானொலி மன்றத்தால் 2000–ஆம் ஆண்டு தரைவழி அலைபேசிப் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.**

94) உஷா மேத்தா என்பவர் எந்த மாநிலத்தைச் சார்ந்தவர்?

A) மேற்கு வங்காளம்

**B) குஜராத்**

C) மத்தியப் பிரதேசம்

D) மஹாராஷ்டிரா

**விளக்கம்: 1920ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் பிறந்தவர் உஷா மேத்தா. இவர் தனது 22ஆம் வயதில் பாபுபாய் படேல் என்பவரின் உதவியுடன் 1942, ஆகஸ்ட் 14 அன்று ஒரு வானொலி நிலையத்தை உருவாக்கினார். தலைவர்களின் உரைகள், விடுதலைப் போராட்ட உத்திகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இதில் ஒலிபரப்பபட்டன. வானொலி நிலையம் தொடர்ந்து ஓரிடத்தில் இருந்து செயல்பட இயலவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை இடம்மாற்றப்பட்டது. 3 மாதங்கள் மட்டுமே இந்த வானொலி நிலையம் இயங்கியது.**

95) வெ.நல்லதம்பி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க

A) சென்னைத் தொலைக்காட்சியின் 'எதிரொலி' நிகழ்ச்சி மூலம் புகழ்பெற்று 'எதிரொலி நல்லதம்பி' என்று அழைக்கப்படுபவர் வெ. நல்லதம்பி.

**B) 1961 முதல் 1963 வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தார்.**

C) பிறகு வாசிங்டனில் உள்ள 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார்.

D) பிறகு சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தயாரிப்பாளராகவும் நிலைய உதவி இயக்குநராகவும் பணியாற்றினார்

**விளக்கம்: 1963 முதல் 1965 வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தார்.**

96) கூற்று: செயற்கைகோள்கள் மூலம் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பபடுகின்றன.

காரணம்: ஒலி–ஒளி அலைகள் எப்போதும் நேர்க்கோட்டில் செல்லும் தன்மையுடையது.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும், மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: ஒலி–ஒளி அலைகள் எப்போதும் நேர்க்கோட்டில் செல்லும் தன்மைகொண்டவை. பூமியானது கோளவடிவில் இருப்பதால் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொலைதூரத்திற்குப் பரப்புவது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. இச்சூழலில் செயற்கைக்கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டு**

**விண்ணில் செலுத்தப்பட்டன. அதன் பயனாக இன்று உலகெங்கும் நடக்கும் நிகழ்வுகளை எளிதாக வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றின் வழியாக நாம் கண்டும் கேட்டும் மகிழ்கிறோம்.**

97) வாஷிங்டனில் உள்ள 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர் யார்?

A) முத்துக்கூத்தன்

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) ர.அய்யாசாமி

**D) நல்லத்தம்பி**

**விளக்கம்: 1963 முதல் 1965 வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தார் வெ.நல்லதம்பி. பிறகு வாசிங்டனில் உள்ள 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார். அதன் பிறகு சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தயாரிப்பாளராகவும் நிலைய உதவி இயக்குநராகவும் பணியாற்றினார்.**

98) முதன்முதலாகப் பொதுமக்கள் கண்டுகளிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எந்த நாட்டிலிருந்து ஒளிபரப்பட்டது?

A) பிரான்ஸ்

B) அமெரிக்கா

C) இத்தாலி

**D) இங்கிலாந்து**

**விளக்கம்: முதன்முதலாகப் பொதுமக்கள் கண்டுகளிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டனில் ஒளிபரப்பட்டது. அதில் கருப்பு, வெள்ளை நிறக் காட்சி ஒளிபரப்பானது. பின்னர், அமெரிக்காவில் வண்ணநிற ஒளிபரப்பு தொடங்கப்பட்டது.**

99) தொலைக்காட்சி சேவைகளைக் காண்பதற்கு எத்தனை கருவிகள் வேண்டும்?

A) 2

**B) 3**

C) 4

D) 5

**விளக்கம்: தொலைக்காட்சி சேவைகளைக் காண்பதற்கு உதவும் மூன்று கருவிகள்:**

**1. படப்பிடிப்புக் கருவி (Camera)**

**2. பிடிக்கப்பட்டப் படத்தினை மின்னலைகளாக மாற்றி தொலைதூரத்திற்கு அனுப்பும் கோபுரம் (Transmitting Tower).**

**3. அனுப்பப்பட்ட மின்னலைகளை வாங்கி, அவற்றைப் படமாகவும் ஒலியாகவும் மாற்றித்தரும் தொலைக்காட்சிப் பெட்டி.**

100) எந்த இணையத்தளங்கள் இணைய வானொலியைத் தொடங்குவதற்கான வசதிகளை வழங்குகின்றன?

A) பாட்காஸ்ட்

**B) ஸ்பிரிக்கர்**

C) ஹாம்

D) அமெச்சூர்

**விளக்கம்: வானொலி இசைப்பிரியர்களுக்கென பாட்காஸ்ட் போன்ற இணையத்தள சேவைகள் உள்ளன. இவைகளுடன் ஸ்பிரிக்கர் போன்ற இணையத்தளங்கள் இணைய வானொலியைத் தொடங்குவதற்கான வசதிகளை வழங்குகின்றன. இவ்விணையதளத்தில் வானொலி சேவையினைத் தொடங்க தங்களை உறுப்பினராக இணைத்துக்கொள்ள வேண்டும். இங்கு வானொலி நடத்துபவர்களுக்கெனத் தனிப்பக்கமும் ஒதுக்கப்படுகிறது.**

101) பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள். எப்போது இந்நிகழ்ச்சிக்கு 'தமிழோசை' என சிவபாத சுந்தரம் பெயரிட்டார்.

A) 1941

B) 1945

C) 1947

**D) 1948**

**விளக்கம்: இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள். 1948–இல் இந்நிகழ்ச்சிக்கு 'தமிழோசை' என சிவபாத சுந்தரம் பெயரிட்டார்.**

102) கூற்றுகளை ஆராய்க.

1. இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி 1956–இல் புதுதில்லியில் தொடங்கப்பட்டது.

2. 1980ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் வண்ணத் தொலைக்காட்சியாக வளர்ச்சி பெற்றது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

**D) இரண்டும் தவறு**

**விளக்கம்: இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி 1959–இல் புதுதில்லியில் தொடங்கப்பட்டது. முதலில் நிகழ்ச்சிகள் கருப்பு வெள்ளை நிறத்தில் ஒளிபரப்பாயின. பின்பு, 1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் வண்ணத் தொலைக்காட்சியாக வளர்ச்சி பெற்றது. இவ்வண்ணத் தொலைக்காட்சியில் இந்திரா காந்தி அம்மையாரின் சுந்திரதினவிழாப் பேருரையே முதல் நிகழ்ச்சியாக அமைந்தது.**

103) இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. இது எப்போது முதல் ஆகாசவாணி என்று அழைக்கப்படுகிறது?

A) 1927

B) 1936

C) 1950

**D) 1957**

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார்**



winmeen.com

**நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் இது 1957–முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்பட்டது.**

104) கூற்று: வானொலியின் அடுத்த கட்ட வளர்ச்சி நிலை பண்பலை ஆகும்.

காரணம்: பொழுபோக்கு நிகழ்ச்சிகளை மையப்படுத்தி தொடங்கப்பட்டவையே பண்பலைகள் ஆகும்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று மற்றும் காரணம் இரண்டும், மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: வானொலி தொழில்நுட்பத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி நிலை பண்பலை (FM) பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை மையப்படுத்தித் தொடங்கப்பட்டவையே பண்பலைகள். இவை வானொலி வருணணையாளர்களை (ரேடியோ ஜாக்கி) முதன்மையாகக் கொண்டு இயங்கி வருகின்றன. அரசு பண்பலை நிலையங்களும் முறையான உரிமம் பெற்ற தனியார் பண்பலை நிலையங்களும் உலகெங்கிலும் தமது ஒலிபரப்புச் சேவையினைச் சிறப்பாகச் செய்துவருகின்றன.**

105) தென்கச்சி கோ.சுவாமிநாதன் பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) அரியலூர் மாவட்டம் தென்கச்சி பெருமாள் நத்தம் என்னும் கிராமத்தில் பிறந்தவர் கோ.சுவாமிநாதன்.

B) வானொலியில் 'இன்று ஒரு தகவல்' என்ற நிகழ்ச்சியின் மூலம் நன்னெறிக் கதைகளை நகைச்சுவையுடன் கூறி மக்களை மகிழ்வித்தவர்

C) தமிழ்நாடு அரசுப் பணியில் விவசாய அலுவலராகப் பணியில் சேர்ந்தார். சிறிதுகாலத்திற்குப் பிறகு திருநெல்வேலி வானொலியில் பண்ணை இல்லப் பிரிவில் அறிவிப்பாளராகப் பணியேற்றார்.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: அரியலூர் மாவட்டம் தென்கச்சி பெருமாள் நத்தம் என்னும் கிராமத்தில் பிறந்தவர் கோ.சுவாமிநாதன்.**

**வானொலியில் 'இன்று ஒரு தகவல்' என்ற நிகழ்ச்சியின் மூலம் நன்னெறிக் கதைகளை நகைச்சுவையுடன் கூறி மக்களை மகிழ்வித்தவர்**

**தமிழ்நாடு அரசுப் பணியில் விவசாய அலுவலராகப் பணியில் சேர்ந்தார். சிறிதுகாலத்திற்குப் பிறகு திருநெல்வேலி வானொலியில் பண்ணை இல்லப் பிரிவில் அறிவிப்பாளராகப் பணியேற்றார்.**

106) தென்கச்சி கோ.சுவாமிநாதன் பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் வேளாண் பிரிவு இயக்குநரான இருந்தபோது 'வீடும் வயலும்' என்னும் நிகழ்ச்சியை இவரே தொகுத்து வழங்கினார்.

B) தொலைக்காட்சியில் 'இந்த நாள் இனிய நாள்' என்ற நிகழ்ச்சியின் மூலம் மக்களுக்கு நீதிநெறிகளை வழங்கி வந்தார்.

C) இவருக்கு தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் வேளாண் பிரிவு இயக்குநரான இருந்தபோது 'வீடும் வயலும்' என்னும் நிகழ்ச்சியை இவரே தொகுத்து வழங்கினார்.**

**தொலைக்காட்சியில் 'இந்த நாள் இனிய நாள்' என்ற நிகழ்ச்சியின் மூலம் மக்களுக்கு நீதிநெறிகளை வழங்கி வந்தார்.**

**இவருக்கு தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.**

107) வானொலி அண்ணா என்று அழைக்கப்பட்ட ர.அய்யாசாமி எந்த நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்?

A) இந்தியா

**B) தமிழ்நாடு**

C) தேசபக்தன்

D) நவசக்தி

**விளக்கம்: கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு 'தமிழ்நாடு' நாளிதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார் வானொலி அறிஞர் ர.அய்யாசாமி. 1944ஆம் ஆண்டு திருச்சி வானொலி நிலையத்தில் பணியேற்றார். இவர் சிறுவர்களுக்கான 'பாப்பா மலர்' மற்றும் 'முத்துக்குவியல்' நிகழ்ச்சியின் மூலம் மக்கள் மனத்தில் இடம்பிடித்தார். இந்நிகழ்ச்சி 12 ஆண்டுகள் ஒலிபரப்பாயிற்று.**

108) வெ.நல்லதம்பி பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

**A) இவர் சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி ஆகியவற்றை நாடக வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார்.**

B) இவரது சிலப்பதிகார நாடக நூல் 'நூபுர க ஸ்வர்' என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புதுதில்லி வானொலியில் ஒலிபரப்பானது குறிப்பிடத்தக்கது.

C) 'டெலிவிஷன்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல்லை உருவாக்க முயன்றபோது பலரும்பல சொற்களை உருவாக்கியளித்தனர். இருப்பினும் இவர் முன்மொழிந்த 'தொலைக்காட்சி' என்னும் சொல்லே அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றும் பயன்பாட்டில் உள்ளது.

D) தொலைக்காட்சியிலும் வானொலியிலும் செய்தி வாசிப்பவர்களுக்கும் நிகழ்ச்சி அறிவிப்பாளர்களுக்கும் தமிழ் மொழியினை உச்சரிப்புப் பிழையின்றிப் பேச இவர் பயிற்சியளித்துள்ளார்.

**விளக்கம்: சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகியவற்றை நாடக வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார்.**

109) தவறான கூற்றை தேர்வு செய்க

**A) இரண்டாவது, நான்காவது உலகத் தமிழ் மாநாடுகளில் பிற நாட்டுத் தமிழறிஞர்களிடம் நேர்காணல் நிகழ்த்தி அதனைப் படத்துடன் ஆவணப்படுத்தியவர் – வெ.நல்லதம்பி**

B) சென்னைத் தொலைக்காட்சியில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று மதுவிலக்குப் பற்றிய விழிப்புணர்வு பொம்மலாட்டத்தை முத்துக்கூத்தன் நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

C) கிராம மக்களுக்குப் பயன்படும் கல்வி, உடல்நலம், தனிமனித ஒழுக்கம் போன்றவற்றை வலியுறுத்தும் நிகழ்ச்சிகளை முத்துக்கூத்தன் நடத்தினார்.

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: இரண்டாவது, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடுகளில் பிற நாட்டுத் தமிழறிஞர்களிடம் நேர்காணல் நிகழ்த்தி அதனைப் படத்துடன் ஆவணப்படுத்தியவர் – வெ.நல்லதம்பி.**

110) முதன்முதலாகப் பொதுமக்கள் கண்டுகளிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வண்ணநிற ஒளிபரப்பாக எங்கு தொடங்கப்பட்டது?

A) பிரான்ஸ்

winmeen.com

B) அமெரிக்கா

C) இத்தாலி

**D) இங்கிலாந்து**

**விளக்கம்: முதன்முதலாகப் பொதுமக்கள் கண்டுகளிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டனில் ஒளிபரப்பட்டது. அதில் கருப்பு, வெள்ளை நிறக் காட்சி ஒளிபரப்பானது. பின்னர், அமெரிக்காவில் வண்ணநிற ஒளிபரப்பு தொடங்கப்பட்டது.**

111) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

A) நவம்பர் 21– உலகத் தொலைக்காட்சி தினம்

B) நவம்பர் 12– பொது ஒலிபரப்புநாள் கொண்டாடப்படும் தினம்

**C) மார்ச் 23– உலக பொம்மலாட்ட தினம்**

D) பிப்ரவரி 13– உலக வானொலி தினம்

**விளக்கம்: நவம்பர் 21 – உலகத் தொலைக்காட்சி தினம்**

**நவம்பர் 12– பொது ஒலிபரப்புநாள் கொண்டாடப்படும் தினம்**

**மார்ச் 21– உலக பொம்மலாட்ட தினம்**

**பிப்ரவரி 13– உலக வானொலி தினம்.**

112) இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்களைப் பன்முக நோக்கில் ஆராயும் களங்களாக திகழ்வது எது?

A) கவியரங்கம்

**B) பட்டிமன்றம்**

C) வழக்காடு மன்றம்

D) சொற்பொழிவு

**விளக்கம்: இளம் கவிஞர்களுக்கான வெளிப்பாட்டுக் களங்கள் – கவியரங்கங்கள்.**

**இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்களைப் பன்முக நோக்கில் ஆராயும் களம் – பட்டிமன்றங்கள்**

**ஓர் இலக்கியம் படைக்கப்பட்டதற்கான கோணங்களில் இருவர் விவாதிக்கும் நிகழ்ச்சிகள் – வழக்காடு மன்றம்.**

**சிறந்த மேடைப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் – சொற்பொழிவு**

113) எப்போது வானொலி உரைச்சித்திரங்கள் முதன்முதலாக ஒலிபரப்பாயின?

A) இந்தியா சுதந்திரம் அடையும் போது

B) இந்தியாவின் முதல் தேர்தல் நடைபெறும் போது

**C) இரண்டாம் உலகப்போரின் போது**

D) வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது

**விளக்கம்: இரண்டாம் உலகப்போரின் போது மக்களுக்கு உண்மை நிலையினை உணர்த்தி நம்பிக்கை ஊட்டுவதற்காக, வானொலி உரைச்சித்திரங்கள் முதன்முதலாக ஒலிபரப்பாயின. தேசிய நெருக்கடிக் காலங்களில் மக்களிடையே ஒற்றுமையையும் நம்பிக்கையையும் வளர்க்கும் விதமாக உரைச்சித்திரங்கள் நிகழ்த்தப்பட்டன.**

114) கூற்றுகளை ஆராய்க.

1. இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் ஹாம் வானொலி அல்லது அமெச்சூர் வானொலி பயன்படுத்தப்படுகிறது.

2. வானொலி தொழில்நுட்பத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி நிலை பண்பலை(FM).

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இயற்கைப் பேரிடர்க் காலங்களில் மக்கள் தகவல்களைப் பெறுவதற்கும் தெரிவிப்பதற்கும் ஹாம் வானொலி அல்லது அமெச்சூர் வானொலி பயன்படுத்தப்படுகிறது.**

**2. வானொலி தொழில்நுட்பத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி நிலை பண்பலை(FM).பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை மையப்படுத்தித் தொடங்கப்பட்டவையே பண்பலைகள்.**

115) கூற்றுகளை ஆராய்க.

1. இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது.

2. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு மும்பையில் தொடங்கப்பட்டது. சென்னை மாநில வானொலிக் குழு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பத் தொடங்கியது. தனியார் நிறுவனத்திடமிருந்த ஒலிபரப்புச் சேவையை இந்திய அரசு ஒலிபரப்புத்துறை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தது. இது 1936இல் அகில இந்திய வானொலி எனப் பெயர்மாற்றம் பெற்றது. பின்னர் இது 1957–முதல் ஆகாசவாணி என்றும் அழைக்கப்படுகிறது.**

116) கூற்றுகளை ஆராய்க.

1. 1973 ஆண்டின் வழக்குத்தொடரின் விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும்.

2. ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுவதோ, எழுதுவதோ அல்லது சைகைகள் மற்றும் குறியீடுகளால் வெளிப்படுத்துவதோ அவமதிப்புக் குற்றத்தின் கீழ் வரும். இந்தியக் குற்றவியல் சட்டம் 499ஆம் பிரிவு அவமதிப்பு மற்றும் விதிவிலக்குகள் பற்றி கூறுகிறது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1973 ஆண்டின் வழக்குத்தொடரின் விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். ஆனால் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், மாநில ஆளுநர், மத்திய மாநில அமைச்சர்கள் ஆகியோர் அவமதிப்பு ஆளானால் அவர்கள் சார்பில் அரசு வழக்குரைஞர் வழக்கு தொடுக்கலாம்.**

**ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுவதோ, எழுதுவதோ அல்லது சைகைகள் மற்றும் குறியீடுகளால் வெளிப்படுத்துவதோ அவமதிப்புக் குற்றத்தின் கீழ் வரும். இந்தியக் குற்றவியல் சட்டம் 499ஆம் பிரிவு அவமதிப்பு மற்றும் விதிவிலக்குகள் பற்றியும், 500ஆம் பிரிவு தண்டனைகள் பற்றியும் விளக்குகிறது.**

117) சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தயாரிப்பாளராகவும் நிலைய உதவி இயக்குநராகவும் பணியாற்றியவர் யார்?

A) முத்துக்கூத்தன்

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) ர.அய்யாசாமி

**D) நல்லத்தம்பி**

**விளக்கம்: 1963 முதல் 1965 வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தார் வெ.நல்லதம்பி. பிறகு வாசிங்டனில் உள்ள 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார். அதன் பிறகு சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தயாரிப்பாளராகவும் நிலைய உதவி இயக்குநராகவும் பணியாற்றினார்.**

118) வானொலி அண்ணா என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

**B) ர.அய்யாசாமி**

C) வெ.நல்லதம்பி

D) முத்துக்கூத்தன்

**விளக்கம்: வானொலி அண்ணா என்று அழைக்கப்பட்டவர் ர.அய்யாசாமி ஆவார். இவர் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாட்சிக்கு அருகில் உள்ள கல்லாபுரம் என்னும் ஊரில் பிறந்தவர். இளம் வயதிலேயே பாடல் எழுதும் ஆற்றல் பெற்று விளங்கினார்.**

119) பண்பலை வானொலி ஒளிபரப்பு முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

A) ஹெய்ன்ரீச் ருடோல்ஃப் ஹெட்ஸ்

B) பகுஜன் ஹிதயா

**C) எட்வின் எச்.ஆம்ஸ்ட்ராங்**

D) பகுஜன் சுகயா

**விளக்கம்: வானொலி அதிர்வெண்ணைக் கண்டுபிடித்தவர் – ஹெய்ன்ரீச் ருடேல்ஃப் ஹெட்ஸ்**

**பண்பலை வானொலி ஒளிபரப்பு முறையைக் கண்டுபிடித்தவர் – எட்வின் எச்.ஆம்ஸ்ட்ராங்.**

**அகில இந்திய வானொலியின் பொன்மொழி –பகுஜன் ஹிதயா, பகுஜன் சுகயா.**

120) பாட்காஸ்ட் என்பது கீழ்க்காணும் எதனுடன் தொடர்புடையது?

A) நாடகம்

B) திரைப்படம்

**C) இசை**

D) பண்பலை

**விளக்கம்: வானொலி இசைப்பிரியர்களுக்கென பாட்காஸ்ட் போன்ற இணையத்தள சேவைகள் உள்ளன. இவைகளுடன் ஸ்பிரிக்கர் போன்ற இணையத்தளங்கள் இணைய வானொலியைத் தொடங்குவதற்கான வசதிகளை வழங்குகின்றன. இவ்விணையதளத்தில் வானொலி சேவையினைத் தொடங்க தங்களை உறுப்பினராக இணைத்துக்கொள்ள வேண்டும். இங்கு வானொலி நடத்துபவர்களுக்கெனத் தனிப்பக்கமும் ஒதுக்கப்படுகிறது.**

121) கூற்றுகளை ஆராய்க (தென்கச்சி கோ.சுவாமிநாதன்)

1. இவர் தொலைகாட்சியில் 'இந்த நாள் இனிய நாள்' என்ற நிகழ்ச்சியின் மூலம் மக்களுக்கு நீதிநெறிகளை வழங்கிவந்தார்.

2. இவருக்கு தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இவர் தொலைகாட்சியில் 'இந்த நாள் இனிய நாள்' என்ற நிகழ்ச்சியின் மூலம் மக்களுக்கு நீதிநெறிகளை வழங்கிவந்தார்.**

**2. இவருக்கு தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.**

122) எந்த ஆண்டு தொலைக்காட்சி, இந்தியாவில் வண்ணத் தொலைக்காட்சியாக வளர்ச்சி பெற்றது?

A) 1959

**B) 1982**

C) 1967

D) 1998

**விளக்கம்: இந்தியாவில் முதன்முதலில் தொலைக்காட்சி 1959–இல் புதுதில்லியில் தொடங்கப்பட்டது. முதலில் நிகழ்ச்சிகள் கருப்பு வெள்ளை நிறத்தில் ஒளிபரப்பாயின. பின்பு, 1982ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் வண்ணத் தொலைக்காட்சியாக வளர்ச்சி பெற்றது. இவ்வண்ணத் தொலைக்காட்சியில் இந்திரா காந்தி அம்மையாரின் சுந்திரதினவிழாப் பேருரையே முதல் நிகழ்ச்சியாக அமைந்தது.**

123) கூற்றுகளை ஆராய்.

1. இணையத்தள வானொலியினை யார்வேண்டுமானலும் தொடங்கி நடத்திட முடியாது.

2. இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இயற்கைச் சீற்றங்களை இவர்களால் எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இணையத்தள வானொலியினை யார்வேண்டுமானலும் தொடங்கி நடத்திட முடியாது.**

**2. இன்று அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் அனைத்து வீடுகளிலும், ஹாம் வானொலி உரிமம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இயற்கைச் சீற்றங்களை இவர்களால் எளிதாக எதிர்கொள்ள முடிகிறது.**

124) உஷா மேத்தா தன்னுடைய 22 வயதில் வானொலி நிலையத்தை யாருடைய உதவியுடன் உருவாக்கினார்?

**A) பாபுபாய் படேல்**

B) பண்டிட் ரவி சங்கர்

C) ஆம்ஸ்ட்ராங்க

D) மேற்காணும் யாருமில்லை

**விளக்கம்: 1920ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் பிறந்தவர் உஷா மேத்தா. இவர் தனது 22ஆம் வயதில் பாபுபாய் படேல் என்பவரின் உதவியுடன் 1942, ஆகஸ்ட் 14 அன்று ஒரு வானொலி நிலையத்தை உருவாக்கினார். தலைவர்களின் உரைகள், விடுதலைப் போராட்ட உத்திகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இதில் ஒலிபரப்பபட்டன. வானொலி நிலையம் தொடர்ந்து ஓரிடத்தில் இருந்து செயல்பட இயலவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை இடம்மாற்றப்பட்டது. 3 மாதங்கள் மட்டுமே இந்த வானொலி நிலையம் இயங்கியது.**

125) சென்னைத் தொலைக்காட்சியில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று மதுவிலக்குப் பற்றிய விழிப்புணர்வு பொம்மலாட்டத்தை நிகழ்த்தியவர் யார்?

**A) முத்துக்கூத்தன்**

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

C) ர.அய்யாசாமி

D) நல்லத்தம்பி

**விளக்கம்: முத்துக்கூத்தன் சென்னைத் தொலைக்காட்சியில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளன்று மதுவிலக்குப் பற்றிய விழிப்புணர்வு பொம்மலாட்டத்தை நிகழ்த்தினார்.**

126) கூற்றுகளை ஆராய்க (துகிலி.சுப்பிரமணியம்)

1. பாமரமக்களிடமும் எளிமையான முறையில் நேர்காணல் நிகழ்த்தி நுட்பமான தகவல்களைச் சேகரிப்பதில் வல்லவர்.

2. இவர் பயிர்களின் இடையில் மறைந்திருக்கும் பூச்சிகளையும் மிகவும் தெளிவாகப் படம் எடுத்துவிடுவார். இவரால் எடுக்கப்பட்ட பூச்சிகளின் புகைப்படங்கள் இன்று பல ஆய்வுக்கூடங்களிலும் வேளாண் அலுவலகங்களிலும் ஆவணமாக வைத்துப் பராமரிக்கப்படுகின்றன.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பாமரமக்களிடமும் எளிமையான முறையில் நேர்காணல் நிகழ்த்தி நுட்பமான தகவல்களைச் சேகரிப்பதில் வல்லவர்.**

**2. இவர் பயிர்களின் இடையில் மறைந்திருக்கும் பூச்சிகளையும் மிகவும் தெளிவாகப் படம் எடுத்துவிடுவார். இவரால் எடுக்கப்பட்ட பூச்சிகளின் புகைப்படங்கள் இன்று பல ஆய்வுக்கூடங்களிலும் வேளாண் அலுவலகங்களிலும் ஆவணமாக வைத்துப் பராமரிக்கப்படுகின்றன.**

127) கூற்றுகளை ஆராய்க.

1. இத்தாலி நாட்டு அறிஞர் குலீல்மோ மார்க்கோனி என்பவர் வானொலியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

2. நீண்ட நாள்களாக நடைபெற்ற ஆராய்ச்சியின் முடியவாகக் கம்பியில்லாத் தந்தி முறையில் செய்திகளைத் தொலைதூரத்திற்கு அனுப்பும் முயற்சியில் வெற்றி பெற்றார். இக்கண்டுபிடிப்பை இத்தாலி அறிவியல் கழகத்தில் பதிவு செய்தார்

**A) 1 மட்டும் சரி**

B) 2 மட்டும் சரி

C) இரண்டும் சரி

D) இரண்டும் தவறு

**விளக்கம்: இத்தாலி நாட்டு அறிஞர் குலீல்மோ மர்க்கோனி வானொலியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதற்காகத் தன் வீட்டையே ஆராய்ச்சிக்கூடமாக மாற்றினார். நீண்ட நாள்களாக நடைபெற்ற ஆராய்ச்சியின் முடிவாகக் கம்பில்லாத் தந்தி முறையில் செய்திகளைத் தொலைதூரத்திற்கு அனுப்பும் முயற்சியில் வெற்றி பெற்றார். இக்கண்டுபிடிப்பை இங்கிலாந்து அறிவியல் கழகத்தில் பதிவு செய்தார்.**

128) எஸ் பாண்ட் அலைக்கற்றை என்பது ____________ முதல் _____________ கிகா கெட்சு வரை உள்ள ரேடியோ அலையளவைக் குறிப்பதாகும்.

A) 1 முதல் 4

**B) 2 முதல் 5**

C) 5 முதல் 10

D) 20 முதல் 200000

**விளக்கம்: எஸ் பாண்ட் அலைக்கற்றை என்பது 2 முதல் 5 கிகா கெட்சு வரை உள்ள ரேடியோ அலையளவைக் குறிப்பதாகும். இது அலைபேசித் தொலைதொடர்புக்கும், ராடார் இயக்கத்துக்கும், தரைவழித் தொலைத்தொடர்புக்கும் பயன்படுகிறது. இதில் 2.6 கிகா கெட்சு (2500–2690 கிகா கெட்சு) என்றழைக்கப்படும் அலைநீளம் உலக வானொலி மன்றத்தால் 2000–ஆம் ஆண்டு தரைவழி அலைபேசிப் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.**

129) இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள். பிறகு எவ்வாறு அழைத்தார்கள்?

A) வானொலி மடல்

B) தமிழிசை

**C) தமிழோசை**

D) தமிழின்பம்

**விளக்கம்: இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள். 1948–இல் இந்நிகழ்ச்சிக்கு 'தமிழோசை' என சிவபாத சுந்தரம் பெயரிட்டார்.**

130) பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு நாள்தோறும் ஒரு மணி நேரம் உயர் கல்வி நிகழ்ச்சிகள் வழங்கும் ________________________________ என்னும் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தூர்தர்சனுடன் இணைந்து வழங்கத் தொடங்கியது?

**A) நாடெங்கும் கல்லூரி வகுப்பு**

B) நாடெங்கும் கல்வி

C) நாடெங்கும் உயர்கல்வி

D) நாடெங்கும் இலவச கல்வி

விளக்கம்: பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு நாள்தோறும் ஒரு மணி நேரம் உயர் கல்வி நிகழ்ச்சிகள் வழங்கும் 'நாடெங்கும் கல்லூரி வகுப்பு' என்னும் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தூர்தர்சனுடன் இணைந்து வழங்கத் தொடங்கியது. இத்திட்டம் 1984 ஆகஸ்ட் 15 ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. விடுமுறை தினங்கள் தவிர ஏனைய நாள்களில் மதியம் 1 மணி முதல் 2 மணி வரை இக்கல்வி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. மாலையில் 4 மணிமுதல் 5 மணி வரை மறு ஒளிபரப்பும் செய்யப்பட்டது.

131) தமிழக அரசு கல்வி ஒளிபரப்பிற்கென எப்போது முதல் தொலைக்காட்சி நிலையம் ஒன்றைத் தொடங்கி, நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது?

**A) 2019 சனவரி 21**

B) 2018 சனவரி 1

C) 2020 சனவரி 11

D) 2019 ஜுலை 15

**விளக்கம்: தமிழக அரசு கல்வி ஒளிபரப்பிற்கென 2019ஆம் ஆண்டு சனவரி 21ஆம் நாள் தொலைக்காட்சி நிலையம் ஒன்றைத் தொடங்கி, நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகிறது. இதன் மூலம் அனைத்து தரப்பு மக்களும் கல்வி தொடர்பான தங்களது ஐயங்களைக் கேட்டுத் தெளிவுபெறலாம். பள்ளிக் கல்வித்துறையின் செயல்பாடுகள், போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அரசின் நலத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் இதில் ஒளிபரப்பாகின்றன.**

132) ஐ.நா.அவை எந்த ஆண்டை உலகப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது?

**A) 1975**

B) 1977

C) 1979

D) 1980

**விளக்கம்: ஐ.நா.அவை 1975 ஆம் ஆண்டை உலகப் பெண்கள் ஆண்டாக அறிவித்தது. அவ்வாண்டில் இந்திய வானொலி நிலையங்கள் அனைத்திலும் பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன.**

133) வானொலியில் பண்ணை இல்லம் நிகழ்ச்சியின் மூலம் அறிமுகமானவர் யார்?

A) முத்துக்கூத்தன்

B) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

**C) துகிலி.சுப்பிரமணியம்**

D) நல்லதம்பி

**விளக்கம்: துகிலி.சுப்பிரமணியம் வானொலியில் பண்ணை இல்லம் நிகழ்ச்சியின் மூலம் அறிமுகமானவர் ஆவார். இவர் தஞ்சாவூர் மாவட்டம் துகிலி என்னும் கிராமத்தில் உள்ள ஒரு நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர் ஆவார்.**

134) கீழ்க்காணும் கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க

A) தமிழில் பொம்மலாட்டக் கலைக்குப் பெருமை சேர்த்தவர் முத்துக்கூத்தன் ஆவார்.

**B) சென்னைத் தொலைக்காட்சியில் 'பண்ணை இல்லம்' என்னும் நிகழ்ச்சியில் முத்துக்கூத்தனின் பொம்மலாட்டம் இடம்பெற்றது.**

C) விவசாயத்தை உயிரெனக் கருதி அவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் துகிலி.சுப்பிரமணியம் ஆவார்

D) தமிழக அரசின் ஊரக வளர்ச்சித் துறையில் கிராம நல அலுவலராகப் பணியாற்றியவர் துகிலி.சுப்பிரமணியம் ஆவார்.

**விளக்கம்: சென்னைத் தொலைக்காட்சியில் 'கண்மணிப்பூங்கா' என்னும் நிகழ்ச்சியில் முத்துக்கூத்தனின் பொம்மலாட்டம் இடம்பெற்றது.**

135) 1997 பிப்ரவரி 20 அன்று இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது. இது கீழ்க்காணும் எதனை மேற்பார்வை செய்து வருகிறது?

**A) சுங்க வரி விதிப்பு**

B) கலால் வரி விதிப்பு

C) தொழில் வரி விதிப்பு

D) மேற்காணும் எதுவுமில்லை

**விளக்கம்: இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்** (TRAI – Telecom Regulatory Authority of India).

**இந்தியாவில் தொலைத் தொடர்புச் சேவைகளையும் கட்டணத்தையும் ஒழுங்குபடுத்த பாராளுமன்ற சட்டம் 1997இன் 3ஆவது பிரிவு வழிவகை செய்கிறது. அதன்படி 1997 பிப்ரவரி 20 அன்று இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது. தொலைத்தொடர்புச் சேவைகளையும் சுங்க வரி விதிப்புகளையும் இவ்வாணையம் மேற்பார்வை செய்துவருகிறது.**

136) கூற்றுகளை ஆராய்க.

1. அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். ஆனால் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், மாநில ஆளுநர், மத்திய மாநில அமைச்சர்கள் ஆகியோர் அவமதிப்பு ஆளானால் அவர்கள் சார்பில் அரசு வழக்குரைஞர் வழக்கு தொடுக்கலாம்.

2. ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுவதோ, எழுதுவதோ அல்லது சைகைகள் மற்றும் குறியீடுகளால் வெளிப்படுத்துவதோ அவமதிப்புக் குற்றத்தின் கீழ் வரும். இந்தியக் குற்றவியல் சட்டம் 500ஆம் பிரிவு தண்டனைகள் பற்றி கூறுகிறது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1973 ஆண்டின் வழக்குத்தொடரின் விதிப்படி 199(1) அவமதிப்புக்கு உள்ளானவர்கள் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். ஆனால் குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், மாநில**

**ஆளுநர், மத்திய மாநில அமைச்சர்கள் ஆகியோர் அவமதிப்பு ஆளானால் அவர்கள் சார்பில் அரசு வழக்குரைஞர் வழக்கு தொடுக்கலாம்.**

**ஒருவரை அவமதிக்கும் நோக்கத்தோடு பேசுவதோ, எழுதுவதோ அல்லது சைகைகள் மற்றும் குறியீடுகளால் வெளிப்படுத்துவதோ அவமதிப்புக் குற்றத்தின் கீழ் வரும். இந்தியக் குற்றவியல் சட்டம் 499ஆம் பிரிவு அவமதிப்பு மற்றும் விதிவிலக்குகள் பற்றியும், 500ஆம் பிரிவு தண்டனைகள் பற்றியும் விளக்குகிறது.**

137) எந்த ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின்படி குற்றங்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டன?

A) 1951

**B) 1952**

C) 1953

D) 1954

**விளக்கம்: 1952 ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தின்படி குற்றங்கள் உரிமையியல், குற்றவியல் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. நீதிமன்ற ஆணைகளுக்கும் தீர்ப்புகளுக்கும் கட்டுப்பட மறுப்பது உரிமையியல் வழக்காகவும் ஊடகங்களில் தவறான செய்திகளைப் பரப்புவது குற்றவியல் வழக்காகவும் பதிவு செய்யப்படும். குற்றம் உறுதிசெய்யப்பட்டால் ஆறுமாதம் சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படும்.**

138) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகியவற்றை நாடக வடிவில் எழுதி வெளியிட்டவர் யார்?

A) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

B) ரா.அய்யாசாமி

**C) வெ.நல்லதம்பி**

D) முத்துக்கூத்தன்

**விளக்கம்: வெ.நல்லத்தம்பி சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகியவற்றை நாடக வடிவில் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது சிலப்பதிகார நாடகநூல் 'நுபுர் க ஸ்வர்' என்ற பெயரில் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டுப் புதுதில்லி வானொலியில் ஒலிபரப்பானது.**

139) தென்கச்சி கோ.சுவாமிநாதன் பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) இவர் தமிழ்நாடு அரசுப் பணியில் விவசாய அலுவலராகப் பணியில் சேர்ந்தார்

B) சிறிது காலத்திற்குப் பிறகு திருநெல்வேலி வானொலியில் பண்ணை இல்லப்பிரிவில் அறிவிப்பாளராகப் பணியேற்றார்.

C) சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் வேளாண் பிரிவு இயக்குநராக இருந்தபோது 'வீடும் வயலும்' என்னும் நிகழ்ச்சியை இவரே தொகுத்து வழங்கினார்.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: இவர் தமிழ்நாடு அரசுப் பணியில் விவசாய அலுவலராகப் பணியில் சேர்ந்தார்**

**சிறிது காலத்திற்குப் பிறகு திருநெல்வேலி வானொலியில் பண்ணை இல்லப்பிரிவில் அறிவிப்பாளராகப் பணியேற்றார்.**

**சென்னை அகில இந்திய வானொலி நிலையத்தில் வேளாண் பிரிவு இயக்குநராக இருந்தபோது 'வீடும் வயலும்' என்னும் நிகழ்ச்சியை இவரே தொகுத்து வழங்கினார்.**

140) கூற்று: நாட்டில் மண்டல ஒளிபரப்புகள் 1983–க்கு பிறகு தொடங்கப்பட்டன.

காரணம்: 1983இல் இன்சாட் 1பி என்ற தொலைதொடர்பு செயற்கைக்கோள் ஏவப்பட்டது

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று தவறு, காரணம் சரி

**C) கூற்று, காரணம் இரண்டும் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது**

D) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

**விளக்கம்: 1983இல் இன்சாட் 1பி என்ற தொலைதொடர்பு செயற்கைக்கோள் ஏவப்பட்டதன் காரணமாக நாட்டில் மண்டல ஒளிபரப்புகள் தொடங்கப்பட்டன. அனைத்துத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. இதன் காரணமாக இவ்வசதிகளைப் பயன்படுத்தி நாடெங்குமுள்ள கல்லூரி மாணவர்களுக்குப் பொதுவான கல்வி நிகழ்ச்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டது.**

141) கூற்றுகளை ஆராய்க.

1. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு நாள்தோறும் ஒரு மணி நேரம் உயர் கல்வி நிகழ்ச்சிகள் வழங்கும் 'நாடெங்கும் கல்லூரி வகுப்பு' என்னும் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தூர்தர்சனுடன் இணைந்து வழங்கத் தொடங்கியது.

2. இத்திட்டம் 1984 ஆகஸ்ட் 15 ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு நாள்தோறும் ஒரு மணி நேரம் உயர் கல்வி நிகழ்ச்சிகள் வழங்கும் 'நாடெங்கும் கல்லூரி வகுப்பு' என்னும் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தூர்தர்சனுடன் இணைந்து வழங்கத் தொடங்கியது.**

**2. இத்திட்டம் 1984 ஆகஸ்ட் 15 ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது.**

142) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) Antenna– ஒலி வாங்கி

B) Blogspot– வலைப்பூ

C) Channel– அலைவரிசை

D) Disk– தட்டு

விளக்கம்: Disk– வட்டு

143) பொருத்துக.

அ. நவம்பர் 21– 1. உலக வானொலி தினம்

ஆ.நவம்பர் 12– 2. உலக பொம்மலாட்ட தினம்

இ. மார்ச் 21– 3.உலகத் தொலைக்காட்சி தினம்

ஈ.பிப்ரவரி 13– 4. பொது ஒலிபரப்புநாள் கொண்டாடப்படும் தினம்

A) 3, 4, 2, 1

B) 4, 3, 1, 2

C) 1, 2, 4, 3

D) 3, 4, 1, 2

**விளக்கம்: நவம்பர் 21 – உலகத் தொலைக்காட்சி தினம்**

**நவம்பர் 12– பொது ஒலிபரப்புநாள் கொண்டாடப்படும் தினம்**

**மார்ச் 21– உலக பொம்மலாட்ட தினம்**

**பிப்ரவரி 13– உலக வானொலி தினம்**

144) மக்களவைத் தொலைக்காட்சி தொடங்கப்பட்ட ஆண்டு எது?

**A) 2004**

B) 2009

C) 2007

D) 2005

**விளக்கம்: மக்களவைத் தொலைக்காட்சி தொடங்கப்பட்ட ஆண்டு 2004.**

145) அகில இந்திய வானொலியின் தலைப்பு இசையை அமைத்தவர் யார்?

A) எம்.எஸ்.சுப்புலட்சுமி

**B) பண்டிட் ரவி சங்கர்**

C) ஏ.ஆர்.ரகுமான்

D) மேற்காணும் எவருமில்லை

**விளக்கம்: அகில இந்திய வானொலியின் தலைப்பு இசையை அமைத்தவர் – பண்டிட் ரவி சங்கர் ஆவார்.**

146) தூர்தர்சனின் பொன்மொழியுடன் தொடர்புடையது?

A) சத்தியம் பிரியம் சுந்தரம்

**B) சத்தியம் வாய்மை சுந்தரம்**

C) கொள்கை வாய்மை சுந்தரம்

D) சத்தியம் கொள்கை சுந்தரம்

**விளக்கம்: தூர்தர்சனின் பொன்மொழி – சத்தியம் பிரியம் சுந்தரம்**

147) அகில இந்திய வானொலியின் தலைமையிடம் எது?

A) மும்பை

B) புனே

**C) புதுடெல்லி**

D) ஆக்ரா

**விளக்கம்: அகில இந்திய வானொலியின் தலைமையிடம் – ஆகாஷ்வாணி பவன், புதுடெல்லி**

148) இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI – Telecom Regulatory Authority of India) பற்றிய கூற்றுகளில் தவறான ஒன்றை தெரிவு செய்க.

A) இந்தியாவில் தொலைத் தொடர்புச் சேவைகளையும் கட்டணத்தையும் ஒழுங்குபடுத்த பாராளுமன்ற சட்டம் 1997இன் 3ஆவது பிரிவு வழிவகை செய்கிறது

B) அதன்படி 1997 பிப்ரவரி 20 அன்று இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது.

C) தொலைத்தொடர்புச் சேவைகளையும் சுங்க வரி விதிப்புகளையும் இவ்வாணையம் மேற்பார்வை செய்துவருகிறது.

**D) மேற்காணும் எதுவுமில்லை**

**விளக்கம்: இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம்** (TRAI – Telecom Regulatory Authority of India).

**இந்தியாவில் தொலைத் தொடர்புச் சேவைகளையும் கட்டணத்தையும் ஒழுங்குபடுத்த பாராளுமன்ற சட்டம் 1997இன் 3ஆவது பிரிவு வழிவகை செய்கிறது. அதன்படி 1997 பிப்ரவரி 20 அன்று இந்தியாவின் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) நிறுவப்பட்டது. தொலைத்தொடர்புச் சேவைகளையும் சுங்க வரி விதிப்புகளையும் இவ்வாணையம் மேற்பார்வை செய்துவருகிறது.**

149) இளம் கவிஞர்களுக்கான வெளிப்பாட்டுக் களங்களாக திகழ்பவை எது?

**A) கவியரங்கம்**

B) பட்டிமன்றம்

C) வழக்காடு மன்றம்

D) சொற்பொழிவு

**விளக்கம்: இளம் கவிஞர்களுக்கான வெளிப்பாட்டுக் களங்கள் – கவியரங்கம்.**

**இலக்கியங்களில் பொதிந்துள்ள கருத்துக்களைப் பன்முக நோக்கில் ஆராயும் களம் – பட்டிமன்றங்கள்**

**ஓர் இலக்கியம் படைக்கப்பட்டதற்கான கோணங்களில் இருவர் விவாதிக்கும் நிகழ்ச்சிகள் – வழக்காடு மன்றம்.**

**சிறந்த மேடைப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகள் – சொற்பொழிவு.**

150) வானொலி அதிர்வெண்ணைக் கண்டுபிடித்தவர் யார்?

**A) ஹெய்ன்ரீச் ருடோல்ஃப் ஹெட்ஸ்**

B) பகுஜன் ஹிதயா

C) எட்வின் எச்.ஆம்ஸ்ட்ராங்

D) பகுஜன் சுகயா

**விளக்கம்: வானொலி அதிர்வெண்ணைக் கண்டுபிடித்தவர் – ஹெய்ன்ரீச் ருடேல்ஃப் ஹெட்ஸ்**

**பண்பலை வானொலி ஒளிபரப்பு முறையைக் கண்டுபிடித்தவர் – எட்வின் எச்.ஆம்ஸ்ட்ராங்.**

**அகில இந்திய வானொலியின் பொன்மொழி –பகுஜன் ஹிதயா, பகுஜன் சுகயா.**

151) 'நாடெங்கும் கல்லூரி வகுப்பு' என்னும் கல்வி தொலைக்காட்சி திட்டம் எப்போது தொடங்கி வைக்கப்பட்டது?

**A) 1984 ஆகஸ்ட் 15**

B) 1984 ஜனவரி 26

C) 1984 செப்டம்பர் 5

D) 1984 அக்டோபர் 2

**விளக்கம்: பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு நாள்தோறும் ஒரு மணி நேரம் உயர் கல்வி நிகழ்ச்சிகள் வழங்கும் 'நாடெங்கும் கல்லூரி வகுப்பு' என்னும் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சியை தூர்தர்சனுடன் இணைந்து வழங்கத் தொடங்கியது. இத்திட்டம் 1984 ஆகஸ்ட் 15 ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது.**

152) பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள். 1948–இல் இந்நிகழ்ச்சிக்கு 'தமிழோசை' என பெயரிட்டவர் யார்?

A) தமிழன்பன்

B) பண்டிட் ரவிசங்கர்

**C) சிவபாத சுந்தரம்**

D) ர.அய்யாச்சாமி

**விளக்கம்: இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது. அதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது. அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள். 1948–இல் இந்நிகழ்ச்சிக்கு 'தமிழோசை' என சிவபாத சுந்தரம் பெயரிட்டார்.**

153) செய்தி வாசிப்பாளருக்காக வழங்கப்பட்ட முதல் கலைமாமணி விருது கீழ்க்காணும் யாருக்காக வழங்கப்பட்டது??

**A) சரோஜ் நாராயணசுவாமி**

B) துகிலி.சுப்பிரமணியம்

C) ர.அய்யாசாமி

D) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

**விளக்கம்: 'ஆகாசவாணி, செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசுவாமி' என்ற குரலை வானொலியில் கேட்காத தமிழர்கள் இருக்க முடியாது. 40 ஆண்டுகாலம் ஒலிபரப்புத் துறையில் சிறப்பாகச் செய்தி வாசித்தமைக்காகத் தமிழக அரசு இவருக்கு 2008ஆம் ஆண்டு கலைமாமணி விருது வழங்கிப் பாராட்டியுள்ளது. இதுவே செய்தி வாசிப்பாளருக்காக வழங்கப்பட்ட முதல் கலைமாமணி விருதாகும்.**

154) கூற்றுகளை ஆராய்க.

1. தொடக்கத்தில் வாரம் ஒருநாள் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்த பிபிசி தமிழோசையின் நிகழ்ச்சிசகள் 80களின் தொடக்கத்தில் வாரம் ஐந்து முறை என விரிவுபடுத்தப்பட்டது.

2. 80களின் இறுதியில் வாரத்தின் அனைத்து நாள்களிலும் தனது ஒலிபரப்பைத் தொடங்கியது

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. தொடக்கத்தில் வாரம் ஒருநாள் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்த பிபிசி தமிழோசையின் நிகழ்ச்சிசகள் 80களின் தொடக்கத்தில் வாரம் ஐந்து முறை என விரிவுபடுத்தப்பட்டது.**

**2. 80களின் இறுதியில் வாரத்தின் அனைத்து நாள்களிலும் தனது ஒலிபரப்பைத் தொடங்கியது.**

155) எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் வெ.நல்லதம்பி பணிபுரிந்தார்?

A) 1961–1963

B) 1962–1964

**C) 1963–1965**

D) 1964–1966

**விளக்கம்: 1963 முதல் 1965 வரை திருநெல்வேலியிலும் திருச்சியிலும் அகில இந்திய வானொலி நிலையங்களில் நிகழ்ச்சி அறிவிப்பாளராகப் பணிபுரிந்தார் வெ.நல்லதம்பி. பிறகு வாசிங்டனில் உள்ள 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' வானொலி நிலையத்தில் அறிவிப்பாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றினார். அதன் பிறகு சென்னைத் தொலைக்காட்சி நிலையத் தயாரிப்பாளராகவும் நிலைய உதவி இயக்குநராகவும் பணியாற்றினார்.**

156) வானொலியில் 'இன்று ஒரு தகவல்' என்ற நிகழ்ச்சியின் மூலம் நன்னெறிக் கதைகளை நகைச்சுவையுடன் கூறி மக்களை மகிழ்வித்தவர் யார்?

**A) தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

B) ரா.அய்யாசாமி

C) வெ.நல்லதம்பி

D) முத்துக்கூத்தன்

**விளக்கம்: வானொலியில் 'இன்று ஒரு தகவல்' என்ற நிகழ்ச்சியின் மூலம் நன்னெறிக் கதைகளை நகைச்சுவையுடன் கூறி மக்களை மகிழ்வித்தவர் தென்கச்சி கோ.சுவாமிநாதன்ஆவார். வானொலியில் இவரது பேச்சைக் கேட்பதற்காகவே பெருமளவிலான மக்கள் காத்திருந்தனர்.**

157)Head setஎன்ற சொல்லின் தமிழாக்கம் என்ன?

A) காதணி கேட்பி

B) தலையணி பேசி

C) கம்பியில்லா பேசி

D) ஒலி செலுத்தி

**விளக்கம்: Head set என்பதன் தமிழாக்கம் காதணி கேட்பி.**

158) Whatsapp – என்ற சொல்லின் தமிழாக்கம் என்ன?

A) அங்கவேகம்

B) சமிக்ஞை

C) கீச்சகம்

**D) புலனம்**

**விளக்கம்: அங்கவேகம் – Tempo**

**சமிக்ஞை– Signal**

**கீச்சகம்– Twitter**

**புலனம்– Whatsapp**

159) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க.

A) Loudspeaker– ஒலிபெருக்கி

B) Multimedia– பல்லூடகம்

C) Mass media– பெரிய ஊடகம்

D) Radio Jockey– வானொலி வருணனையாளர்

**விளக்கம்: Loudspeaker– ஒலிபெருக்கி**

**Multi media– பல்லூடகம்**

**Mass media– மக்கள் ஊடகம்**

**Radio Jockey– வானொலி வருணனையாளர்.**

160) உஷா மேத்தா பற்றிய கூற்றுகளில் தவறான கூற்றை தேர்க.

A) 1920ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் பிறந்தவர் உஷா மேத்தா.

**B) இவர் தனது 25ஆம் வயதில் பாபுபாய் படேல் என்பவரின் உதவியுடன் 1942, ஆகஸ்ட் 14 அன்று ஒரு வானொலி நிலையத்தை உருவாக்கினார்.**

C) தலைவர்களின் உரைகள், விடுதலைப் போராட்ட உத்திகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இதில் ஒலிபரப்பபட்டன.

D) வானொலி நிலையம் தொடர்ந்து ஓரிடத்தில் இருந்து செயல்பட இயலவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை இடம்மாற்றப்பட்டது.

**விளக்கம்: 1920ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் குஜராத் மாநிலத்தில் பிறந்தவர் உஷா மேத்தா. இவர் தனது 22ஆம் வயதில் பாபுபாய் படேல் என்பவரின் உதவியுடன் 1942, ஆகஸ்ட் 14 அன்று ஒரு வானொலி நிலையத்தை உருவாக்கினார். தலைவர்களின் உரைகள், விடுதலைப் போராட்ட உத்திகள் போன்ற பல நிகழ்ச்சிகள் இத்ல் ஒலிபரப்பபட்டன. வானொலி நிலையம் தொடர்ந்து ஓரிடத்தில் இருந்து செயல்பட இயலவில்லை. 15 நாட்களுக்கு ஒரு முறை இடம்மாற்றப்பட்டது. 3 மாதங்கள் மட்டுமே இந்த வானொலி நிலையம் இயங்கியது.**

161) தமிழ்நாட்டில் எந்த ஆண்டு வரை தூர்தர்சன் என்ற ஒரே அரசுத் தொலைக்காட்சி நிறுவனம் மட்டுமே இருந்தது?

A) 1991

B) 1992

C) 1990

**D) 1993**

**விளக்கம்: தமிழ்நாட்டில் 1993ஆம் ஆண்டிற்கு முன்னர் தூர்தர்சன் என்ற ஒரே அரசுத் தொலைக்காட்சி நிறுவனம் மட்டுமே இருந்தது. இதில் வெள்ளிக்கிழமையில் இரவு நேரத்தில் ஒளியும் ஒலியும் என்ற தலைப்பில் திரைப்படப் பாடல்கள் ஒளிபரப்பப்படும். ஞாயிறு மாலையில் ஒரு தமிழ்த் திரைப்படம் ஒளிப்பரப்பாகும்.**

162) கூற்றுகளை ஆராய்க.

1. இலக்கு அளவீட்டுப் புள்ளி என்பது மொத்த பார்வையாளர்களுள் எத்தனை பார்வையாளர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள் என்பதன் மதிப்பீட்டளவாகும்.

2. எஸ் பாண்ட் அலைக்கற்றை என்பது 2 முதல் 5 கிகா கெட்சு வரை உள்ள ரேடியோ அலையளவைக் குறிப்பதாகும்.

A) 1 மட்டும் சரி

B) 2 மட்டும் சரி

**C) இரண்டும் சரி**

D) இரண்டும் தவறு

**விளக்கம்: 1. இலக்கு அளவீட்டுப் புள்ளி என்பது மொத்த பார்வையாளர்களுள் எத்தனை பார்வையாளர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள் என்பதன் மதிப்பீட்டளவாகும்.**

**2. எஸ் பாண்ட் அலைக்கற்றை என்பது 2 முதல் 5 கிகா கெட்சு வரை உள்ள ரேடியோ அலையளவைக் குறிப்பதாகும்.**

163) பிபிசி தமிழோசை பற்றிய கூற்றுகளில் தவறான கூற்றை தெரிவு செய்க.

A) இரண்டாம் உலகப்போர் நடைபெற்றபோது பிரிட்டன், இந்திய மொழிகளில் தன் வானொலி ஒலிபரப்பைத் தொடங்கியது.

**B) இதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941–ஆம் ஆண்டு மே திங்கள் 2–ஆம் நாள் தொடங்கப்பட்டது.**

C) அந்நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் 'செய்தி மடல்' எனப் பெயரிட்டிருந்தார்கள்.

D) 1948–இல் இந்நிகழ்ச்சிக்கு 'தமிழோசை' என சிவபாத சுந்தரம் பெயரிட்டார்.

**விளக்கம்: இதன் விளைவாக பிபிசி–இல், தமிழ் ஒலிபரப்பு 1941–ஆம் ஆண்டு மே திங்கள் 3–ஆம் நாள் தொடங்கப்பட்டது.**

164) தென்கச்சி கோ.சுவாமிநாதன் என்பவர் எந்த மாவட்டத்தை சார்ந்தவர்?

A) பெரம்பலூர்

B) சிவகங்கை

**C) அரியலூர்**

D) இராமநாதபுரம்

**விளக்கம்: அரியலூர் மாவட்டம், தென்கச்சி பெருமாள் நத்தம் என்னும் கிராமத்தில் பிறந்தவர் கோ.சுவாமிநாதன். இவர் தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரிலும், கல்லூரிக் கல்வியைக் கும்பகோணத்திலும் வேளாண் கல்வியைக் கோயம்புத்தூரிலும் பயின்றார்.**

165) வெளிநாட்டுச் சேவையான பிபிசி, 'வோர்ல்ட் சர்வீஸ்' என்ற பெயரில் எத்தனை மொழிகளில் ஒலிபரப்புகின்றனர்?

A) 22

**B) 33**

C) 30

D) 27

**விளக்கம்: வெளிநாட்டுச் சேவையான பிபிசி, 'வோர்ல்ட் சர்வீஸ்' என்ற பெயரில் 33 மொழிகளில் ஒலிபரப்புகின்றனர். இதில் தமிழும் அடங்கும். உலகத் தமிழர்கள் இங்கிலாந்திலிருந்து வரும் தமிழோசை நிகழ்ச்சியைத் தங்கள் மொழிக்குக் கிடைத்த பெருமையாகவே கருதும் நிலை ஏற்பட்டுள்ளது.**

166) செய்தி வாசிப்பாளருக்காக வழங்கப்பட்ட முதல் கலைமாமணி விருது கீழ்க்காணும் யாருக்காக வழங்கப்பட்டது??

**A) சரோஜ் நாராயணசுவாமி**

B) துகிலி.சுப்பிரமணியம்

C) ர.அய்யாசாமி

D) தென்கச்சி கோ.சுவாமிநாதன்

**விளக்கம்: 'ஆகாசவாணி, செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணசுவாமி' என்ற குரலை வானொலியில் கேட்காத தமிழர்கள் இருக்க முடியாது. 40 ஆண்டுகாலம் ஒலிபரப்புத் துறையில் சிறப்பாகச் செய்தி**

winmeen.com

**வாசித்தமைக்காகத் தமிழக அரசு இவருக்கு 2008ஆம் ஆண்டு கலைமாமணி விருது வழங்கிப் பாராட்டியுள்ளது. இதுவே செய்தி வாசிப்பாளருக்காக வழங்கப்பட்ட முதல் கலைமாமணி விருதாகும்.**

167) தவறாக பொருந்தியுள்ளதை தேர்வு செய்க

A) Intercom– தகவல் சாதனம்

B) Anchor– தொகுப்பாளர்

**C) Audiozone– ஒலியலை**

D) Bandwidth– அலைத்தொகுப்பு

**விளக்கம்: Audiozone– ஒலி மையம்**

**Audiowave – ஒலியலை**

winmeen.com